எல். இ. அபால்கின்

# சோவியத் ஒன்றியத்தில் பொருளாதார வளர்ச்சியின் செயல்திட்டம்

விசேஷ தமிழ் பதிப்பு

எல். இ. அபால்கின்

# சோவியத் ஒன்றியத்தில் பொருளாதார வளர்ச்சியின் செயல்திட்டம்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்:
டாக்டர் இரா. பாஸ்கரன்

**Л. И. Абалкин**

СССР:
СТРАТЕГИЯ ЭКОНОМИЧЕСКОГО РАЗВИТИЯ

*на тамильском языке*

**L. I. Abalkin**

THE STRATEGY
OF ECONOMIC DEVELOPMENT IN THE USSR

*in Tamil*

சோவியத்-இந்தியப் பொருளாதார உறவுகள் பற்றிய தனி அத்தியாயம் தமிழ் வாசகர்களுக்காக பிரபல சோவியத் இந்தியவியலர் கிளேப் இவாஷென்த்சோவால் விசேஷமாக எழுதப்பட்டது.

© Политиздат, 1986
© திருத்தங்கள், பிற்சேர்க்கையுடனான தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1989

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

A $\frac{0605010000-222}{014(01)-89}$ 316—89

**ISBN 5-01-001475-0**

## பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . . 5

அத்தியாயம் ஒன்று

துரிதப்படுத்தும் செயல்திட்டம்: சாரமும் லட்சியங்களும் . . . . 13

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நீண்ட காலக் கொள்கை 14

துரிதப்படுத்தலின் அவசியம் . . 23

துரிதப்படுத்தலில் அடங்கியுள்ள அம்சங்கள் . . . . . . . . . 36

அத்தியாயம் இரண்டு

தீவிரப்படுத்தலை நோக்கிய திருப்புமுனை . . . . . . . . 54

தீவிரப்படுத்தலின் சாரம் . . . 56

துரிதப்படுத்தலின் மூல ஊற்றுகள் 80

உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகபட்சம் உயர்த்துதல் . . . 89

அத்தியாயம் மூன்று

பொருளாதாரக் கொள்கையின் அடிப்படைப் பிரச்சினை . . . . 98

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றக் கொள்கை . . . . . 100

இயந்திரக் கட்டுமான இணையம் 112
சமூகக் கடமைகளின் நிறைவேற்றத்திற்கான திறவுகோல் . . . 120

அத்தியாயம் நான்கு
பொருளாதார நிர்வாகத்தைச் சீரமைத்தல் . . . . . . . . . 134

லெனினிய நிர்வாகக் கோட்பாடுகள் . . . . . . . . . . 136
திட்டமிடலின் லட்சியங்கள் . . 156
முழு அடக்கக் கணக்கீட்டு முறையை நோக்கி . . . . . . . . . 171

அத்தியாயம் ஐந்து
அனைத்து மக்களின் லட்சியம் 199
மானுடக் காரணியின் முக்கியத்துவம் . . . . . . . . . . 200
நிர்வாகத்தில் மக்கள் திரளினரின் பங்கேற்பு . . . . . . . 207
நவீன சிந்தனை . . . . . . 223
கடினமான ஆனால் யதார்த்தமான பாதை (முடிவுரைக்குப் பதிலாக) . . . . . . . . . . 233

பிற்சேர்க்கை
சோவியத்-இந்திய ஒத்துழைப்பில் புதிய அம்சங்கள் . . . 239

# முன்னுரை

சோவியத் நாட்டில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி இன்று பல்வேறு நாடுகளில் நிறைய பேசப்படுகிறது, எழுதப்படுகிறது. ஏராளமான நண்பர்கள் உண்மையான ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர். சோவியத் மக்களின் நடவடிக்கைகளில் வரலாற்று ரீதியான நன்னம்பிக்கையும் கம்யூனிச லட்சியங்கள் வெற்றியடையும் என்ற உறுதியும் ஊடுருவி நிற்கின்றன. இந்த நடவடிக்கைகள் முற்போக்குச் சிந்தனையுள்ளவர்கள் அனைவரிடையேயும் புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்துகின்றன. வெளிப்படையான எதிரிகளிடையேயும் மறைமுகமான விரோதிகளிடையேயும் ஆழ்ந்த வெறுப்பலைய்யும் பொய்யும் வெட்கங்கெட்ட பொய்யூகங்களும் எழுகின்றன. சோவியத் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து விட்டதாயும் சோஷலிச லட்சியங்கள் ''பொய்த்துப் போனதாயும்'' அவர்கள் பிரகடனப்படுத்துவது இது எத்தனையாவது முறையோ! காரணம் என்ன?

நாம் கம்யூனிஸ்டுகள். நாம் எப்போதுமே உண்மையை நேருக்கு நேர் சொல்லிப்ப்பபழக்கட்வர்கள். நாம் சுய விமர்சனத்

தில் ஊறி வளர்ந்தவர்கள். இதுதான் நம் பலம்.

சோவியத் நாட்டின் திட்டங்கள் அனைத்தும் யதார்த்தத்தைப் பற்றிய ஆழ்ந்த, பன்முக ரீதியான பகுப்பாய்வின் அடிப்படையிலானவை.

1986 பிப்ரவரி — மார்ச்சில் நடந்த சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயம் கட்சியின் அரசியல் வரலாற்றில் விசேஷ இடத்தை வகிக்கும் என்பது வெள்ளிடை மலையாகி வருகிறது. இப்பேராயம் முன்வைத்த பிரம்மாண்டமான கடமைகளை நிறைவேற்றுவது என்பது சாதாரணக் காரியமல்ல. இக்கடமைகளின் சாரம் என்ன, இவற்றை நிறைவேற்ற எம்மாதிரியான வழிகளும் சாதனங்களும் பின்பற்றப்படும் ஆகியவற்றை இந்நூல் எடுத்துரைக்கிறது.

சமுதாய முன்னேற்றத்தின் மாற்ற முடியாத போக்கு சோஷலிச நாடுகளின் முன் புதிய பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது, புதிய—பெரிய மற்றும் சிறிய—கடமைகளை முன்வைக்கிறது. இவற்றில் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதை விட வேறொரு முக்கியக் கடமை இன்று கிடையாது. சோவியத் ஒன்றியத்தின் வளர்ச்சியும், சோஷலிசத்தின் செல்வாக்கும் சர்வதேசத் தாக்கமும் இக்கடமையின் நிறைவேற்றத்தைப் பொறுத்தவையாகும்.

சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரி

தப்படுத்தும் செயல்திட்டத்தை முன்வைத்த தன் மூலம் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் ஏப்ரல் மாத (1985) முழுப் பேரவை ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றியது. கட்சியின் 27ஆவது பேராயத்தில் இது மேற்கொண்டு ஆக்கபூர்வமாக வளர்க்கப்பட்டது. இப்பேராயத்தில் கட்சியின் பொதுச் செயலர் மி. செ. கர்பச்சோவ் சமர்ப்பித்த மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கையிலும், இதில் ஏற்கப்பட்ட கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பிலும், "1986—1990ஆம் ஆண்டுகளுக்கும் 2000 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கும் சோவியத் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசையமைவுகளிலும்'' மற்ற ஆவணங்களிலும் இச்செயல் திட்டம் நன்கு விளக்கப்பட்டிருந்தது.

துரிதப்படுத்தும் செயல்திட்டமானது வாழ்க்கை முன்வைத்த மிகக் கடினமான, உடனடி கேள்விகளுக்குப் பதிலளித்தது, சோவியத் மக்களின், எல்லா சமூகப் பிரிவினர், குழுக்களின் அடிப்படை நலன்களைப் பிரதிபலித்தது, உழைக்கும் மாமக்களுக்கு விஞ்ஞான அடிப்படையிலான, யதார்த்தமான நடவடிக்கைத் திட்டத்தையளித்தது. இதற்கு சோவியத் மக்களின் முழு ஆமோதிப்பும் ஆதரவும் கிட்டின, உலகெங்கும் இதைப் பற்றி பேரார்வம் எழுந்தது.

சோவியத் சமுதாய வாழ்க்கையின்

எல்லா அம்சங்களையும் குணாம்ச ரீதியாக மாற்றியமைப்பதுதான் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் செயல் திட்டத்தின் நோக்கமாகும். சமுதாய வளர்ச்சியில் நவீன கட்டத்தின் அடிப்படை சிறப்பியல்புகளும் கடமைகளும் இக்கொள்கையில் ஒன்று திரண்டு நிற்கின்றன.

அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய எழுபது ஆண்டு காலத்தில் சோவியத் ஒன்றியம் மிகப் பெரும் புகழ்மிகு பாதையைக் கடந்து வந்துள்ளது, அளவிலும் முக்கியத்துவத்திலும் வரலாற்று ரீதியான சாதனைகளை அடைந்துள்ளது. கடந்து வந்த பாதையைப் பின்னோக்கிப் பார்க்கையில் சோவியத் ஒன்றியம் பெருமிதம் அடையலாம். ஆனால் வாழ்க்கை தொடருகிறது, புதிய பிரச்சினைகள் தோன்றுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்கான குறிப்பிட்ட மூல ஊற்றுகளையும் சமூக கடமைகளின் நிறைவேற்றத்திற்கான குறிப்பிட்ட முறைகளையும் கொண்டிருந்த ஒரு முழு வரலாற்று வளர்ச்சிக் கட்டம் முடிவடைந்து விட்டது அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், முடிவடைந்து கொண்டிருக்கிறது என்பது இன்று மேன்மேலும் தெளிவாகி வருகிறது.

சோவியத் ஒன்றியம் ஒரு பெரும் திருப்பு முனையில் இருக்கிறது. ''நாம் கடந்து கொண்டிருக்கும் காலத்தைப் பரந்த நோக்கில், லெனினிய முறையில் பகுப்பாய்வு

செய்ய வேண்டும், யதார்த்தமான, பன்முக நோக்கில் சீர்தூக்கிப் பார்க்கப்பட்ட செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும், இதில் லட்சியங்களின் மேன்மையும் வாய்ப்புகளின் யதார்த்தமும் இயல்பாக இணைய வேண் டும், இது கட்சியின் திட்டங்களை ஒவ் வொரு மனிதனின் நம்பிக்கைகளுடனும் அபிலாஷைகளுடனும் இணைக்க வேண்டும், இதுதான் நம் கடமை'' என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயத்தில் கட்சியின் அரசியல் அறிக்கை யில் குறிப்பிடப்பட்டது.* பேராயம் எடுத்த முடிவுகள்தான், அடுத்து வரும் பல ஆண்டு களுக்கும் பத்தாண்டுகளுக்கும் வளர்ச்சியின் தன்மையையும் வேகங்களையும் நிர்ணயிக் கும் செயல்திட்டமாகும்.

பொருளாதாரப் போட்டியில் விட்டுக் கொடுக்க வர்க்க எதிரி தயாராயில்லை என் பதையும் மறக்கக் கூடாது. இந்த எதிரி வலிமையானவன், விஞ்ஞான கண்டுபிடிப்பு களைக் கிரகிப்பதிலும் இவற்றைத் தொழில் நுட்ப ரீதியாகப் பயன்படுத்துவதிலும் உற் பத்தியைத் தீவிரப்படுத்துவதிலும் இவன் கணிசமாக முன்சென்று விட்டான். உழைப் பின் உற்பத்தித் திறனிலும் பொருட்களின் தரத்திலும் செயல்வன்மையிலும் முன்ன

* Mikhail Gorbachev, *Political Report of the CPSU Central Committee to the 27th Party Congress*, Moscow, Novosti Press Agency Publishing House, 1986, p. 3.

ணிக்கு வர சோவியத் ஒன்றியத்திற்கு ஒரே ஒரு வழி மட்டுமே உண்டு: பொருளாதார, சமூக வளர்ச்சியை அடிப்படை ரீதியில் துரிதப்படுத்துவதுதான் அவ்வழியாகும்.

இந்த செயல்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஆழ்ந்த பொருளாதார மாற்றங்களும் உற்பத்திச் சக்திகளை குணாம்ச ரீதியாக மாற்றுவதும் உற்பத்தி உறவுகளை இதற்கேற்றபடி மேம்படுத்துவதும் தீர்மானகரமான பங்காற்றும். ஆனால் துரிதப்படுத்தும் கொள்கையானது பொருளாதாரத் துறை மாற்றங்களுடன் நின்றுவிடுவதில்லை. இது ஆக்கபூர்வமான சமூகக் கொள்கையையும் சோஷலிச நீதியைத் தொடர்ச்சியாக நிலைநாட்டுவதையும் குறிக்கிறது. துரிதப்படுத்தும் செயல்திட்டமானது சமுதாய உறவுகளை வளர்ப்பதையும், அரசியல், சித்தாந்த நிறுவனங்களின் வேலை வடிவங்களையும் முறைகளையும் புதுப்பிப்பதையும் சோஷலிச ஜனநாயகத்தை வளர்ப்பதையும் சடத்துவம், தேக்கம், பழமைவாதம் ஆகியவற்றை, அதாவது சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள அனைத்தையும் உறுதியோடு அகற்றுவதையும் முன்னனுமானிக்கிறது.

சுருங்கக் கூறின், சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது

என்பது உடனடிக் கடமைகள், எதிர்கால பிரச்சினைகள், பொருளாதார, சமூக, அரசியல், சித்தாந்த பிரச்சினைகள், உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினைகள் ஆகிய எல்லாவற்றிற்கும் தீர்வைத் தரும். சோவியத் சமுதாயத்தின் குணாம்ச ரீதியில் புதிய நிலையை இப்படித்தான் அடைய முடியும், இப்படித்தான் அடைய வேண்டும்.

துரிதப்படுத்தும் செயல்திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது இதன் நிறைவேற்றப் போக்கில் தோன்றும் இடர்ப்பாடுகளைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த, இன்று வேலை செய்வதை விடச் சிறப்பாக நாளை வேலை செய்தால் மட்டும் போதாது. தொழில் முறை, தொழில்நுட்பம், உழைப்பு ஒழுங்கமைப்பு, உழைப்புச் சூழல், நிர்வாக வடிவங்கள், முறைகள், வேலையின் பாலான உறவு முறை, பொருளாதார சிந்தனா முறை ஆகியவற்றில் ஆழ்ந்த, குணாம்ச ரீதியான மாற்றங்கள் வேண்டும்.

சிந்தனையில் தெளிவில்லாவிடில் காரியத்தில் வெற்றி கிட்டாது என்ற பழைய உண்மையும் சரியானதே. துரிதப்படுத்தல் என்பது வெற்றுக் கோஷமோ அறைகூவலோ அல்லது ஒழுங்குபடுத்தப்படாத கருத்து நிலைகளின் ஒட்டுமொத்தமோ அல்ல. இது ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட, முழுமையான கருத்தமைப்பாகும்; ஆழ்ந்த தத்துவார்த்த பொதுக் கருத்துகளின் அடிப்

படையில் உருவான இது நன்கு சீரிசைவான நடவடிக்கைகளின் மூலம் வெளிப்படுகிறது.

சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் கொள்கையின் உள் அம் சங்கள் இந்நூலில் ஆராயப்படுகின்றன. இதில் பொருளாதார அம்சங்கள் மீது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சோவியத் மக்களின் சிந்தனைகள், செயல் களைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள இந்நூல் உதவினால், ஆசிரியர் தன் பணி நிறைவேறியதாகக் கருதுவார்.

## அத்தியாயம் ஒன்று

# துரிதப்படுத்தும் செயல்திட்டம்: சாரமும் லட்சியங்களும்

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயத்தில் கட்சி வேலைத் திட்டத்தின் புதிய பதிப்பு ஏற்கப்பட்டது. 1961ஆம் ஆண்டு கட்சியின் 22ஆவது பேராயத்தில் ஏற்கப்பட்ட வேலைத்திட்டத்தின் அடிப்படை அம்சங்கள் இதில் அப்படியே உள்ளன. இது சோஷலிசத்தைத் திட்டமிட்ட ரீதியில், பன்முக நோக்கில் மேம்படுத்தி, சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதன் அடிப்படையில் கம்யூனிசத்தை நோக்கிய திசையில் சோவியத் சமுதாயத்தை இட்டுச் செல்லும் செயல்திட்டமாகும். இது சமாதானம், சமூக முன்னேற்றத்திற்கான போராட்டத் திட்டம்.

வேலைத்திட்ட லட்சியங்களை செயல்படுத்துவதானது சோவியத் சமுதாயத்தை குணாம்ச ரீதியாகப் புதிய மட்டத்திற்கு இட்டுச் செல்லும், எல்லாத் துறைகளிலும் சோஷலிச அமைப்பின் வரலாற்று மேம்பாடுகளை முழுமையாக வெளிப்படுத்த உதவும். இதனால் கம்யூனிசத்தின் உயர் கட்டத்தை நோக்கிய திசையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முன்னடி எடுத்து வைக்கப்படும்.

## சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நீண்ட காலக் கொள்கை

விஞ்ஞான அடிப்படையிலான செயல்திட்டத்தையும் செயல்முறையையும் உருவாக்கி செயல்படுத்துவதன் மூலமாகத்தான் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி சமுதாய வளர்ச்சிக்குத் தலைமை தாங்கி வழிநடத்துகிறது. இதில் கட்சி, சமுதாய வளர்ச்சியின் நியதிகளை ஆழமாக, மார்க்சிய-லெனினியக் கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்கிறது, சமுதாயத்தின், அதன் எல்லா சமூகப் பிரிவினர், குழுக்களின் நலன்களை ஒட்டுமொத்தமாகக் கவனத்தில் கொள்கிறது, நாட்டு வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்திலும் சர்வதேச நிலவரத்தின் மாற்றங்களிலும் உள்ள சிறப்பியல்புகளைப் பன்முக ரீதியில் கணக்கில் கொள்கிறது.

மார்க்சிய-லெனினியப் போதனையை நெறி பிறழாது பின்பற்றுவதும் அனுபவத்தின் அடிப்படையில் இதை ஆக்கபூர்வமாக வளர்ப்பதும் அரசியல் கொள்கையின் விஞ்ஞானத் தன்மைக்கும் யதார்த்தத்திற்கும் அவசியமான நிபந்தனையாகும். மார்க்சிய-லெனினியம் எப்போதும் வளரக் கூடியது, புதிய விவரங்கள், புலப்பாடுகள், புரட்சிப் போராட்ட அனுபவங்கள், சமூக மாற்றங்களை ஆக்கபூர்வமாகப் பொதுமைப்படுத்த வல்லது. கட்சியின் 27ஆவது பேராயத்தில் அரசியல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்

பட்டபடி, இதுதான் சமுதாய வளர்ச்சியைப் பற்றிய உண்மையான விஞ்ஞானத் தத்துவத்தின் பலமாகும். இத்தத்துவத்தை ஒரு வறட்டுச் சூத்திரமாக்கி, எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற பொரிசுகளின் தொகுப்பாக மாற்றச் செய்யப்படும் எந்த ஒரு முயற்சியும் மார்க்சிய-லெனினியத்தின் சாரத்திற்கும் தன்மைக்கும் முழுக்க முழுக்க முரண்பாடானது.

மேற்கூறிய செயல்திட்டத்தில் மானுட நடவடிக்கையின் முக்கியக் களமாகிய பொருளாதாரத் துறையின் வளர்ச்சி மீது பிரதான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது, பொருளாயத உற்பத்திதான் சமுதாய வாழ்க்கையின் அடிப்படை என்ற முக்கிய மார்க்சியக் கருத்திற்கு ஏற்றது.

நவீன பொருளாதாரச் செயல்திட்டக் கொள்கை, தேசியப் பொருளாதாரத்தை முற்றிலும் புதிய விஞ்ஞான, தொழில்நுட்ப, ஸ்தாபன மட்டத்திற்கு உயர்த்தவும், இதைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வரவும் திட்டமிடுகிறது. இதன் மூலம், உயர்வாக ஒழுங்கமைக்கப்பட்ட, நல்ல செயல்வன்மையை உடைய, பன்முக ரீதியில் வளர்ச்சியடைந்த உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் நிலவக் கூடிய, நன்கு சீரமைக்கப்பட்ட நிர்வாக முறையை உடைய பொருளாதாரத்திற்கு மாற முடியும்.

மக்களின் பொருளாயத, ஆன்மீக வாழ்க்கை மட்டத்தை இடையறாது உயர்த்துவது தான் பொருளாதாரச் செயல்திட்டத்தின் உயர் லட்சியமாக இருந்தது, இருக்கிறது. இப்போது பொருளாதார வளர்ச்சியின் சமூகத் திசையமைவு வலுப்பட்டு வருகிறது; தனிநபரின் பன்முக வளர்ச்சிக்கான சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதன் மீதும், சமூக நீதி, கூட்டு மனப்பாங்கு, தோழமை ரீதியான பரஸ்பர உறவு ஆகியவற்றின் அடிப்படையிலான சோஷலிச வாழ்க்கை முறையை ஸ்திரப்படுத்துவதன் மீதும் மேன்மேலும் அதிகமான கவனம் செலுத்தப் படுகிறது.

பொருளாதார மாற்றங்கள் எவ்வளவு தான் முக்கியமானவையாக இருந்தாலும் சமூக நிகழ்ச்சிப் போக்குகளுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் எல்லாக் காரணிகளும் இவற்றில் அடங்கியுள்ளன என்று கூற முடியாது. பொருளாயத உற்பத்தியின் தீர்மான கரமான பங்கைக் குறிப்பிடும் மார்க்சியம், சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்களின் சிக்கலான தன்மையையும் உண்மையான பரஸ்பரச் செயலாக்கத்தையும் கவனத்தில் கொள்கிறது. வி. இ. லெனின் கோடிட்டுக் காட்டியபடி, ''பொருள்முதல் வாதிகள்தான் (மார்க்சிஸ்டுகள்தான்) பொருளாதார அம்சத்தை மட்டுமின்றி, சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் பகுப்பாய்வு செய்ய வேண்டியதன்

அவசியத்தை முன்வைத்த முதல் சோஷலிஸ்டுகளாவார்கள்....''*

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டத்தில் பொருளாதார, சமூக, அரசியல், ஆன்மீகத் துறைகள் சம்பந்தமாக ஒத்திசைவிக்கப்பட்ட, சீரிசைவான நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றின் நிறைவேற்றம், சோவியத் சமுதாயத்தை குணாம்ச ரீதியாகப் புதிய மட்டத்திற்கு உயர்த்த உதவும். இதன் தொடர்பில், கோட்பாட்டு முக்கியத்துவமுடைய இரண்டு கருத்துகளைக் குறிப்பிட வேண்டும்.

முதல் கருத்து. பொருளாதார முன்னேற்றம், அதாவது உற்பத்திச் சக்திகளில் ஏற்படும் குணாம்ச ரீதியான மாற்றங்களும் இதற்கேற்றபடி உற்பத்தி உறவுகளில் ஏற்படும் மாற்றங்களும்தான் சமூக, அரசியல், ஆன்மீக முன்னேற்றத்திற்கான முன்நிபந்தனையாகும். ஆனால், பொருளாதாரத்துறையில் ஏற்படும் மாற்றங்களையடுத்து மேற்கூறிய துறைகளில் தாமாகவே மாற்றங்கள் ஏற்படும் என்று பொருளாகாது. மேற்கூறிய துறைகள் ஒவ்வொன்றிற்கும் ஒப்பீட்டளவு சுதந்திரம் உண்டு, இவை ஒவ்வொன்றையும் மேம்படுத்த செயல்முனைப்பான நடவடிக்கைகளின் தொகுப்பு வேண்டும்.

இரண்டாவது கருத்து. பொருளாதாரத்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 1, Moscow, Progress Publishers, 1977, p. 161.

தைத் தீவிரப்படுத்துவதும் சமூக உழைப்பின் உற்பத்தித் திறனை அடிப்படையிலேயே உயர்த்துவதும் சமூக, அரசியல், ஆன்மீகத் துறைகளின் மேம்பாட்டிற்குத் தாமாகவே இட்டுச் செல்லா; அது மட்டுமல்ல, நிர் வாகத்தில் ஜனநாயக அம்சங்களை வளர்க் காமல், மக்களாட்சிக் கோட்பாடுகளைத் தொடர்ச்சியாகப் பின்பற்றாமல், சமூக உணர்வை மாற்றாமல் அதை அடையவும் முடியாது. சமூக வாழ்க்கை நிகழ்ச்சிப் போக்குகளின் உண்மையான பரஸ்பரத் தொடர்பு இப்படிப்பட்டதுதான். எனவே சமூக, அரசியல், ஆன்மீக முன்னேற்றம் என்பது பொருளாதார மாற்றங்களின் விளைபயன் மட்டுமல்ல, இவற்றிற்கான முன்தேவையுமாகும்.

பன்முக அணுகுமுறை, சமுதாய வாழ்க் கையின் எல்லாத் துறைகளையும் திட்ட மிட்ட வகையில், பன்முக ரீதியில் மேம் படுத்தும் போக்கு சோவியத் ஒன்றியக் கம் யூனிஸ்டுக் கட்சியின் இன்றைய கொள்கை யின் குறிப்பிடத்தக்க அம்சம், இதன் விஞ் ஞானத் தன்மைக்கான சான்று. எதிலும் ஒரு மைய அம்சம் உண்டு அல்லவா. அது தான் பொருளாதாரக் கொள்கையாகும்.

இதில் எதிர்காலக் கடமைகளும் உட னடிக் கடமைகளும் அங்கக ரீதியாக இணைந் துள்ளன. பொருளாதாரச் செயல்திட்டத் தின் மிகச் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்றா கிய கால வரையறுப்பும் இதிலடங்கும்.

அடுத்த 15 ஆண்டுகளில் சோவியத் ஒன்றியம் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டுள்ளன. இவை கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் இடம் பெற்றுள்ளன; ''1986—1990ஆம் ஆண்டுகளுக்கும் 2000 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கும் சோவியத் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசையமைவுகளில்'' நன்கு விளக்கமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

கட்சியின் 27ஆவது பேராயத்தில் சுட்டிக் காட்டப்பட்டபடி, சோவியத் நாட்டின் முன்நிற்கும் கடமைகளின் பிரம்மாண்டமான அளவும் சிக்கலான தன்மையும்தான் 15 ஆண்டு கால வரம்பைத் தேர்ந்தெடுக்கக் காரணமாகும்; இக்கடமைகளை நிறைவேற்ற ஒன்றிரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் போதா. மேலும், விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் நவீன கட்டத்தின் முக்கிய சாதனைகள் முழுமையாகப் பயன் படுத்தப்பட ஏற்ற சாலச்சிறந்த காலகட்டம் இதுதான். சமூக, பொருளாதாரத் துறைகளில் அடைய வேண்டியவற்றின் குணாம்ச சாரத்தை மட்டுமின்றி, அளவுநிலைக் குறியீடுகளையும் துல்லியமாக வரையறுக்க இது வாய்ப்பளிக்கிறது.

உடனடிக் கடமைகளின் நிறைவேற்றமானது, பன்முக விசேஷ திட்டங்கள்—இவற்றில் பல 2000ஆம் ஆண்டு வரை

யிலானவை—நிர்ணயித்த முக்கியப் பொருளாதாரக் கடமைகளைச் செயல்படுத்துவதற்கான பாதைகளை நன்கு முடிவு செய்வதன் அடிப்படையில் அமையும். உணவுப் பொருள் செயல்திட்டம், எரிபொருள்-எரி சக்தி செயல்திட்டம், இயந்திரக் கட்டுமான வளர்ச்சிச் செயல்திட்டம், தேசியப் பொருளாதாரத்தை இரசாயனமயப்படுத்தும் செயல்திட்டம், நுகர்வுப் பண்ட உற்பத்தி மற்றும் சேவைகளை வளர்க்கும் செயல் திட்டம் ஆகியவை மேற்கூறிய விசேஷ திட்டங்களில் அடங்கும்.

செயல்திட்டக் கடமைகளின் நிறைவேற்றத்தில் 12ஆவது ஐந்தாண்டுத் திட்டம் முக்கிய இடத்தை வகிக்கும். விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப் படுத்தி, அதன் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவதில் இந்த ஐந்தாண்டுத் திட்டம் ஒரு முக்கிய நடவடிக்கையாகத் திகழும். சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி ஜூன் மாத (1986) முழுப் பேரவைக் கூட்டத்தில் மி.செ.கர்பச் சோவ் குறிப்பிட்டபடி, ''பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒரு விசேஷப் பங்குண்டு. தேசியப் பொருளாதாரத்தில் அடிப்படை மாற்றங்களைச் செய்யவும், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தவும் இந்த ஆண்டுகளில் எவ்வித அடித்தளத்தை இடுகின்

றோமோ அதைப் பொறுத்துதான் சமூக பொருளாதார வளர்ச்சி வேகங்களும் மக்களின் வாழ்க்கைத் தரமும் அமையும்.''
உடனடிக் கடமைகள் துல்லியமான குணாம்ச மற்றும் அளவுநிலைக் குறியீடுகளைப் பெற்று, தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள், பொருளாதாரப் பிரதேசங்களின் பணிகளுக்கேற்ற திட்டவட்டமான கோரிக்கைகளாக நிற்கின்றன. இதில் 12ஆவது ஐந்தாண்டுத் திட்டம், சமூக பொருளாதார வளர்ச்சியின் எல்லாத் திசைகளிலும் ஒரு திருப்புமுனையாகிறது.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துதல், இயந்திரங்களைப் புதுப்பித்தல், உற்பத்தியை சீரமைத்தல், தோற்றுவிக்கப்பட்ட உற்பத்தி உள்ளாற்றலைத் தீவிரமாகப் பயன்படுத்தல், நிர்வாக அமைப்பை, பொருளாதார முறையை மேம்படுத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகங்களையும் செயல்வன்மையையும் உயர்த்துவது, இதன் அடிப்படையில் சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்பதுதான் 12ஆவது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கியக் கடமையாகும்.

சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது என்பதை சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி நீண்ட கால செயல்திட்டக் கொள்கையாக நிர்ணயித்துள்ளது. இது பல உடனடிப் பிரச்சினைகளுக்க்

கும் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கும் தீர்வையளிக்கும். சோவியத் சமூக வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் குணாம்ச ரீதியாக மாற்றியமைப்பதுதான் இதன் நோக்கமாகும்: விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளின் அடிப்படையில் சமுதாயத்தின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளம் முற்றிலுமாகப் புதுப்பிக்கப் படும், சமுதாய உறவுகள், முதலாவதாகப் பொருளாதார உறவுகள் மேம்படுத்தப் படும், உழைப்பின் சாரத்திலும் தன்மையிலும் ஆழ்ந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்படும், சோவியத் மக்களின் பொருளாயத, ஆன்மீக வாழ்க்கைச் சூழ்நிலைகள் மேம்படும், அரசியல், சமூக, சித்தாந்த நிறுவனங்கள் அனைத்தும் முடுக்கிவிடப்படும்.

இந்த நோக்கங்களை அடைவதற்கான வழிகள் துரிதப்படுத்தும் கொள்கையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன; அரசு மற்றும் பொருளாதார உறுப்புகள், சமூக ஸ்தாபனங்களின் செயற்பாட்டில் சீரிசைவிற்கு வகை செய்யும் பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்ப, சமூக நடவடிக்கைகள் ஒத்திசைவிக்கப்பட்ட வடிவத்தில் இக்கொள்கையில் அடங்கியுள்ளன.

இக்கொள்கையை செயல்படுத்தவல்ல சமூக சக்திகளும் முறைகளும் வரையறுக் கப்பட்டுள்ளன; எந்த ஒரு செயல்திட்டத் திற்கும் இந்த அம்சம் மிக முக்கியமாகும்.

எனவேதான், ஏதோ தனிப்பட்ட சில

நடவடிக்கைகளைப் பற்றி பேசப்படவில்லை, மாறாக பொருளாதார, சமூக வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் செயல்திட்டத்தைப் பற்றி பேசப்படுகிறது, இது இன்றைய கட்டத்தில் கட்சியின் நீண்ட கால கொள்கையைப் பிரதிபலிக்கிறது என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஏப்ரல் மாத (1985) மத்தியக் கமிட்டி முழுப் பேரவைக் கூட்டத்திலிருந்தே தொடர்ச்சியாகக் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

எந்த மாதிரியான உள்நாட்டு, வெளி நாட்டுச் சூழ்நிலைகள் சோவியத் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்தும் கொள்கையின் அவசியத்தை நிர்ணயிக்கின்றன?

## துரிதப்படுத்தலின் அவசியம்

மேற்கூறிய கேள்விக்குப் பதிலளிக்க, சோவியத் நாட்டின் வளர்ச்சியில் இன்றைய கட்டத்தின் சிறப்பியல்புகளையும், பொருளாதார வளர்ச்சியின் புதிய, மாற்றமடைந்த சூழ்நிலைகளையும், சர்வதேச அரங்கில் இன்று நடைபெறும் சிக்கலான, பல நேரங்களில் முரண்பாடான நிகழ்ச்சிப் போக்குகளையும் பன்முக ரீதியில் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

துரிதப்படுத்தல் அவசியமாக முக்கியக் காரணம் உற்பத்தியின் அளவுகள் அதிகரித்துள்ளதும் பொருளாதார வளர்ச்சியின் சூழ்

நிலைகள் மாறியுள்ளதுமாகும். கடந்த கால் நூற்றாண்டில், அதாவது 1960ஆம் ஆண்டு டன் ஒப்பிடும் பொழுது பொருளாதார, சமூக வளர்ச்சியின் எல்லாத் திசைகளிலும் சோவியத் ஒன்றியம் முன்னேறியுள்ளது. 1960ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1985இல் தேசிய வருமானம் கிட்டத்தட்ட 4 மடங்கும், தொழிற்துறை பொருட்களின் உற்பத்தி கிட்டத்தட்ட 5 மடங்கும், விவ சாயப் பொருட்களின் உற்பத்தி 1.7 மடங் கும் அதிகரித்தன. நபர் ஒருவருக்கான உண்மை வருமானங்கள் இதே காலகட்டத் தில் 2.6 மடங்கு கூடின. 54 மில்லியன் பிளாட்டுகள் கட்டப்பட்டன. நிலையான உற் பத்திச் சொத்துகள் பன்மடங்கு பெருகின, விஞ்ஞான தொழில்நுட்ப உள்ளாற்றல் வலு வடைந்தது, தொழிலாளர்களின் பொதுக் கல்வியும் தொழிற்துறை தேர்ச்சியும் கணிச மாக அதிகரித்தன.

சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரம் கணிசமாக உயர்ந்தது மட்டுமல்ல, இதில் குணாம்ச ரீதியான மாற்றங்களும் நிகழ்ந் தன, பெருமளவில் புதிய நுகர்வுக் கட் டமைப்பை நோக்கிய மாற்றம் ஏற்பட்டது. 1960இல் தொலைக்காட்சிப் பெட்டிகள் நூற்றிற்கு 8 குடும்பங்களில் மட்டுமே இருந் தன என்றால், இன்று நூற்றிற்கு 97 குடும் பங்களில் இவை இருக்கின்றன. 1960இல் குளிர்ப்பதனப் பெட்டி 25 குடும்பங்களில் ஒரு குடும்பத்தில் மட்டுமே இருந்ததெனில்

இன்று 9/10 குடும்பங்களில் இது இருக்கிறது. உணவுப் பொருட்களின் நுகர்வும் கணிசமாகக் கூடியுள்ளது.

சமூக, தேசிய இன உறவுகளிலும், ஜனநாயகத்தை மேற்கொண்டு வளர்ப்பதிலும் இக்காலகட்டத்தில் ஆழ்ந்த முற்போக்கு மாற்றங்கள் ஏற்பட்டன.

இந்த வெற்றிகள் எல்லாம் தாமாகவே வரவில்லை என்பது சொல்லாமலேயே அமையும். இவையனைத்தும் சோஷலிச அமைப்பின் பெரும் அனுகூலங்கள், சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்முனைப்பான கொள்கை, சோவியத் மக்களின் தன்னலமற்ற உழைப்பு ஆகியவற்றின் விளைபயன்களாகும். ஆனால் நமது பகுப்பாய்வில், பிரச்சினையின் இன்னொரு அம்சத்தின் மீது கவனம் செலுத்துவதும் மிக அவசியமாகும். விஷயம் என்னவெனில், எந்த வெற்றியும் ஒவ்வொரு முறையும் புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தும். அளவுநிலை மாற்றம் பண்புநிலை மாற்றமாகிறது என்று சாதாரணமாக கூறப்படுகிறதே அது நடைபெறுகிறது.

அதுவும், புதிய கடமைகள், முந்தைய காலகட்டத்தில் நிறைவேற்றப்பட்டவற்றுடன் ஒப்பிடுகையில் அதிகச் சிக்கலானவையாக இருக்கின்றன. இது சமூக முன்னேற்றத்திற்கான ஒரு பொது நியதியாகும். வி. இ. லெனின் இதைப் பற்றிக் குறிப்பிட்டார். ''எல்லா சந்தர்ப்ப சூழல்களின் கீழும்

சாமான்யமானதில் இருந்து மேலும் கஷ்டமான பணிகளை நோக்கி முன்னேற வேண்டும்.... இல்லாவிடில் எத்தகைய முன்னேற்றமும் சாத்தியமல்ல, குறிப்பாயும் சோஷலிஸ்டு நிர்மாணத்தில் முன்னேற்றம் எதுவும் சாத்தியமல்ல.''*

புதிய கடமைகளை நிறைவேற்ற புதிய முறைகள் தேவையென்பது இயற்கையே. உற்பத்தி அளவுகளின் அதிகரிப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சியின் தாக்கத்தினால் விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் ஏற்படும் புரட்சிகர மாற்றங்கள், பொருளாதார உறவுகள் கணிசமாகச் சிக்கலானது ஆகியவை உற்பத்தி ஒழுங்கமைப்பு வடிவங்களை மேம்படுத்தி, அதிகம் நெகிழ்வுத் தன்மையை உடையவையாக ஆக்குவதையும் செயல்வன்மை மிக்க திட்ட நிர்வாக முறைகளைத் தேர்ந்தெடுப்பதையும் அவசியமாக்குகின்றன. சோவியத் நாட்டின் வளர்ச்சியின் முந்தைய கட்டத்தில் உருவான நிர்வாக முறையால் பொருளாதார, சமூக வளர்ச்சியின் உயரிய வேகங்களுக்கு வகை செய்ய முடியாது. இதை அடிப்படையிலேயே சீரமைக்கும் அவசியம் முதிர்ச்சியடைந்தது.

இது ஒரு புறமிருக்க, சோவியத் மக்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 8, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1981, பக்கம் 320.

களின் உண்மை வருமானங்கள் உயர்வானவையாக இருந்ததால் நுகர்வுகள் அதிகரித்தன, அவை தொழில்நுட்ப புதினங்கள், மோஸ்தருக்கேற்ப விரைவாக மாறலாயின.

இவையெல்லாம் ஒன்று சேர்ந்து பொருளாதார, சமூக வளர்ச்சியின் இயக்க வேகத்தை அதிகரித்தன, நேரத்தின் மதிப்பை உயர்த்தின, விரைவான, சுறுசுறுப்பான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் அவசியமாக்கின. துரிதப்படுத்தலின் புறவய ரீதியான அவசியம் இதிலிருந்துதான் பிறக்கிறது.

பொருளாதார வளர்ச்சியின் மாறிய சூழ்நிலைகளும் இதே திசையில் செயல்படுகின்றன. இவற்றில், பெரும்பாலான வழக்கமான, முற்றிலும் இடப்பரப்புக் காரணிகள் தீர்ந்து போனதைக் குறிப்பிட வேண்டும்.

கிட்டத்தட்ட சோஷலிசக் கட்டுமானக் காலகட்டம் பூராவும் சோவியத் நாடு, உழைப்புச் சக்தியின் கணிசமான அதிகரிப்பின் அடிப்படையில்தான் வளர்ந்து வந்தது. பின்வரும் புள்ளி விவரம் இதைக் காட்டுகிறது. சோவியத் நாட்டின் தேசியப் பொருளாதாரத்தில் தொழிலாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் ஆண்டு சராசரி எண்ணிக்கை(மில்லியன் நபர்கள்): 1928—11.4, 1940—33.9, 1960—62.0, 1985—117.8.

கடந்த 25 ஆண்டுகளில் மட்டும் தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்களின் எண்ணிக்கை 55.8 மில்லியன் கூடியது. இது

மாபெரும் தேசபக்த யுத்த (1941—1945) ஆரம்பத்தில் இருந்த எண்ணிக்கையை விட 1.6 மடங்கு அதிகம். இப்போது நிலைமை முற்றிலுமாக மாறி வருகிறது. அடுத்த 15 ஆண்டுகளில், குறிப்பிட்ட துறையில் பணி புரிபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக் காமலேயே பொருளாயத உற்பத்தியின் எல்லாத் துறைகளின் உற்பத்தியும் தேசிய வருமானமும் அதிகரிக்கப்படும்.

பல வழக்கமான மூலப்பொருட்கள், எரிசக்தி வளங்களின் எண்ணிக்கை அதிகரிப் பிற்கு ஒரு வரம்பு உண்டு. சோவியத் நாடு இவற்றைக் குறைவாக எடுக்கிறது அல்லது உற்பத்தி செய்கிறது என்பதல்ல விஷ யம். ''அதிகம்'', ''குறைவு'' என்ற கருத்து கள் ஒப்பீட்டளவிலானவை. ஒரு விதமான பயன்படுத்தலில் வளங்கள் போதாமலிருக்க லாம், இவற்றையே அதிக செயல்வன்மை யோடு வேறு விதமாகப் பயன்படுத்தும் போது உற்பத்தியின் சீரிசைவான வளர்ச் சிக்கு அவை முற்றிலும் போதுமானவை யாக இருக்கலாம்.

இன்று பல்வேறு தொழிற்துறை பொருட் களின் உற்பத்தியில் சோவியத் ஒன்றி யம் உலகில் முதலிடத்தை வகிக்கிறது. கடந்த சில பத்தாண்டுகளில் இச்சாதனை அடையப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட் டுடன் ஒப்பிடும்பொழுது (%இல்) சோவியத் நாட்டில் ஒரு சில தொழிற்துறை பொருட் களின் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள்:

| | 1960 | 1985 |
|---|---|---|
| எஃகு | 71 | 191 |
| எண்ணெய் | 42 | 136 |
| இயற்கை வாயு | 12 | 124 |
| இரசாயன உரங்கள் | 43 | 158 |
| சிமெண்ட் | 81 | 170 |

இவையெல்லாம் சோவியத் நாட்டின் சந்தேகத்திற்கிடமற்ற பெரும் சாதனைகள் தான். ஆனால் இவை புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன, பொருளாதார வளர்ச்சியின் சூழ்நிலைகளை மாற்றுகின்றன. உதாரணமாக, முந்தைய ஆண்டுகளில், எரிபொருள், எரிசக்தி, மூலப்பொருள், மற்ற பொருட்களின் தேவை கூடிய பொழுது அத் தேவை பெரும்பாலும் இவற்றின் உற்பத்தி அதிகரிப்பால் பூர்த்தி செய்யப்பட்டது; இன்று பொருளாதாரம் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாறும் பொழுது இத்தேவை அதிகரிப்பானது, பெரும்பாலும் அவை சிக்கனப்படுத்தப்படுவதால் பூர்த்தி செய்யப் பட வேண்டும். 2000ஆம் ஆண்டு வாக்கில் தேசிய வருமானம் இரு மடங்கு அதிகரிக்கும் பொழுது, உலோக நுகர்வை இரு மடங்கு குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1970ஆம் ஆண்டுகளின் இறுதியில், 1980ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் தென் பட்ட தீய போக்குகளை அகற்றும் அவசியம்

தான் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் கொள்கையை நிர்ணயித்த முக்கியக் காரணம் ஆகும். வளர்ச்சி வேகங்கள் குறைந்ததில் இது நன்கு வெளிப்பட்டது; 1981—1982இல் இவை 2—3% ஆக இருந்தன, இக்குறியீடுகள்தான் சோவியத் ஆட்சிக் காலத்திலேயே—உள்நாட்டு யுத்தம் (1918—1920), மாபெரும் தேசபக்த யுத்தத்தை (1941—1945) தவிர்த்து — மிகக் குறைவான குறியீடுகளாகும். தேசியப் பொருளாதாரத்தில் பல சீரிசைவின்மைகள் தோன்றி கூர்மையடைந்தன.

இடர்ப்பாடுகள் அதிகரித்ததானது, சமூகத் துறையில் பல்வேறு முக்கிய பிரச்சினைகளின் தீர்வைப் பாதித்தது. உதாரணமாக, 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1981—1985) இரண்டாமாண்டில் மக்களுடைய உண்மை வருமானங்கள் அதிகரிப்பது கிட்டத்தட்ட நின்று போனது. விஞ்ஞானம், கல்வி, மருத்துவம், கலாசார, சேவை துறை ஆகியவற்றின் பொருளாயத அடித்தளம் பின்தங்குமாறு விடப்பட்டது.

இந்தத் தீய போக்குகளுக்கான காரணங்கள் என்ன என்ற கேள்விக்குப் பதில் கண்டுபிடித்தாக வேண்டும். ஏனெனில் சோவியத் நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு இப்பதில் கோட்பாட்டு ரீதியான முக்கியத்துவமுடையது. இந்தப் பதில்—விஞ்ஞான ரீதியான, நன்கு சீர்தூக்கிப் பார்க்கப்பட்ட, நேர்மையான பதில்—சோவியத் ஒன்றியக் கம்யூ

னிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயத்தில் தரப்பட்டது. நம்மைப் பொறுத்திராத சில காரணிகளின் தாக்கம் இருந்த போதிலும் அவை முக்கியமானவையாக இல்லை.

மத்திய கமிட்டியின் அரசியல் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:''முக்கியமானது என்னவெனில், பொருளாதார நிலவரத்தில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றி உரிய நேரத்தில் நாம் அரசியல் மதிப்பீட்டைத் தரவில்லை, பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவதும்,விஞ்ஞான தொழில்நுமுப ட்ன்னேற்றத்தின் சாதனைகளைத் தேசியப் பொருளாதாரத்தில் தீவிரமாகப் பயன்படுத்துவதும் எவ்வளவு முக்கியமான, உடனடிக் கடமை என்பதை உரிய தருணத்தில் நாம் உணரவில்லை. இதைப் பற்றி நிறைய பேசப்பட்டது, ஏராளமான அறைகூவல்கள் விடப்பட்டன, ஆனால் காரியமோ கிட்டத்தட்ட இருந்த இடத்திலேயே நின்றது.... சமீப காலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்ட போதிலும் நிலவரத்தை முழுமையாகச் சீர்படுத்த முடியவில்லை.''*

பல ஆண்டுகளாகக் கட்சி, அரசு உறுப்புகளின் நடைமுறை நடவடிக்கைகள் காலத்தின், வாழ்க்கையின் கோரிக்கைகளிலிருந்து பின்தங்கியிருந்தன. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதை விட அதிக வேகமாக

* Mikhail Gorbachev, *Political Report...*, p. 28.

பிரச்சினைகள் குவிந்தன. சடத்துவம், நிர்வாக வடிவங்கள் மற்றும் முறைகளின் தேக்கம், வேலையில் இயல்பாற்றலின் வீழ்ச்சி, அலுவலக சடங்கு மனப்பாங்கின் அதிகரிப்பு ஆகியவை காரியத்தைக் கணிசமாகப் பாதித்தன.

சமூக உற்பத்தியில் சேர்ந்து அதிகரித்து வந்த தீவிரமான, ஆழ்ந்த முரண்பாடுகள்—இவை உரிய நேரத்தில் தீர்க்கப்படவில்லை—சமுதாய வாழ்க்கையின் தீய புலப்பாடுகளில் பிரதிபலித்தன. வளர்ச்சி வேகங்களின் வீழ்ச்சியும், விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளை உற்பத்தியில் புகுத்துவதுடன் தொடர்புடைய நிகழ்ச்சிப் போக்குகள் சிக்கலானதும் திட்டவட்டமான நிர்வாக வடிவங்கள், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டத்திலிருந்தும், எதிர்கால வளர்ச்சிப் போக்குகளிலிருந்தும் பின்தங்கியதன் விளைவுகளாகும். எனவே சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, சோவியத் சமுதாயத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த பின்வருபவை அவசியமான முன்தேவைகளாகும்: உற்பத்தி உறவுகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்த வேண்டும், இவை வேகமாக வளர்ந்து வரும் உற்பத்திச் சக்திகளுக்கு எப்போதும் பொருந்தி வருமாறு செய்ய வேண்டும், இவற்றின் இடையில் தோன்றும் பகைமை தன்மையற்ற முரண்

பாடுகளை உரிய நேரத்தில் கண்டுபிடித்து தீர்க்க வேண்டும்.

சிக்கலான வெளிச் சூழலும் சர்வதேச நிலவரமும் துரிதப்படுத்தலை அவசியமான தாக ஆக்குகின்றன. உலக நிலவரம் கணிச மாக மாறியுள்ளது. பெரும் மூலதனத்தின், குறிப்பாக இராணுவ தொழிற்துறை இணை யத்தின் மிகப் பிற்போக்கான வட்டங்களின் நலன்களை நேரடியாகப் பிரதிபலிக்கும் சக்திகள் முக்கிய ஏகாதிபத்திய நாடுகளில் ஆட்சிக்கு வந்தன. இவை சச்சரவை வளர்த்து, சர்வதேசப் பதட்ட நிலையை முடுக்கி விடும் கொள்கையைப் பின்பற்ற லாயின.

அதி நவீன விஞ்ஞான சாதனைகள், நவீன தொழில்நுட்பம், தொழில் முறை ஆகியவற்றின் அடிப்படையில் இந்நாடுகள் சோஷலிசத்திற்கு அறைகூவல் விடுத்தன. ஆயுதப் போட்டியின் புதிய சுற்று ஆரம்ப மானதோடு இந்த அறைகூவல் முடிந்து விடவில்லை. பொருளாதாரத் துறையிலும் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் நவீன சாதனைகளை உற்பத்தியில் கிரகிப் பதுடன் தொடர்புடைய கடமைகளை நிறை வேற்றுவதிலும் உற்பத்தியின் செயல்வன் மையை உயர்த்துவதிலும் போட்டி மேன் மேலும் வலுத்து வருகிறது.

இத்துறைகளில் பலவற்றில் முதலாளித் துவம் பெரிதும் முன்னேறி சோவியத் நாட்டை விஞ்சி நிற்கிறது. இது யதார்த்தம்.

இதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். இந்த அறைகூவலை ஏற்ற சோவியத் ஒன்றியம், விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளைக் கிரகிப்பதைப் பெரிதும் துரிதப் படுத்துவதிலும், பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வருவதிலும், சமூக உழைப்பின் உற்பத்தித் திறனை வெறுமனே உயர்த்துவதுடன் நின்று விடாமல், அடியோடு மாற்றியமைப்பதிலும் அக்கறை கொண்டுள்ளது. வேறு பாதை கிடையாது. சோஷலிசத்தின் சர்வதேச செல்வாக்கும், இதன் கவர்ச்சியும், எதிர் காலமும் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதைப் பெரிதும் பொறுத்துள்ளன.

சர்வதேச நிலவரத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் மேற்கூறியவற்றுடன் முடிந்து விடவில்லை. சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பை மேற்கொண்டு வளர்ப்பதுடன் தொடர்புடைய கடமைகள் இன்று புது விதமாக முன்நிற்கின்றன. இவற்றின் எதிர்காலம் உற்பத்திக் கட்டமைவில் ஏற்படும் மாற்றங்களையும், தர ரீதியான, தீவிர காரணிகளை நோக்கி இது மாற்றப் படுவதையும், விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளைப் பயன்படுத்துவதில் ஏற்படும் வெற்றிகளையும் பெரிதும் பொறுத்துள்ளது.

இதன் அடிப்படையில் பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சிலின் உறுப்பு நாடு

கள், 2000ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பன்முக செயல்திட்டத்தை 1985 டிசம்பரில் தீட்டின. 5 முக்கியத் திசைகளில் கவுன்சிலின் வரம்புகளுக்குள் முயற்சிகளை அதிகப்படுத்தியும் நெருக்கமான பரஸ்பர ஒத்துழைப்பிற்கு ஏற்பாடு செய்தும், கோட்பாட்டு ரீதியில் முற்றிலும் புதிய இயந்திரங்களையும் தொழில்நுட்பத்தையும் தோற்றுவித்து பயன்படுத்த ஒத்திசைவான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று இந்நாடுகள் முடிவு செய்தன. அத்திசையமைவுகளாவன: தேசியப் பொருளாதாரத்தில் மின்னணு இயந்திரங்களைக் கொண்டு வருதல், பன்முக ரீதியிலான தானியங்கிமயப்படுத்தல், அணு எரிசக்தி, புதிய வகையான பொருட்களும் இவற்றை உற்பத்தி செய்து செறிவூட்டும் தொழில்நுட்பமும், உயிரியல் தொழில்நுட்பம்.

இத்திட்டத்தை நிறைவேற்ற ஒவ்வொரு கவுன்சில் நாட்டிடமிருந்தும் கணிசமான அளவு கூடுதல் முயற்சிகள் தேவைப்படும். சோவியத் ஒன்றியம் தனது சர்வதேச உறுதிமொழிகளையும் சர்வதேசியவாதக் கடமைகளையும் நிறைவேற்ற பொருளாதாரத்தில் குணாம்ச ரீதியான மாற்றங்கள் தேவை, உற்பத்தியைத் தீவிரப்படுத்துவதிலும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் வேகங்களைத் துரிதப்படுத்துவதிலும் புதிய மட்டங்களை அடைய வேண்டும். அதே

3*

நேரத்தில் சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பின் வளர்ச்சியானது முதிர்ச்சியடைந்த பொருளாதார, சமூக கடமைகளை நிறைவேற்ற உதவும்.

## துரிதப்படுத்தலில் அடங்கியுள்ள அம்சங்கள்

சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது என்பது பெரிதும் சிக்கலான, பன்முக நிகழ்ச்சிப் போக்கு. இதன் உள்ளடக்கத்தை எளிமையானதாக்கி, தனிப்பட்ட வெளிப்பாடுகளுடன் சுருக்கி விடக் கூடாது. துரிதப்படுத்தல் என்ற நிகழ்ச்சிப் போக்கைப் பன்முக ரீதியில் ஆராய்ந்தால், மூன்று முக்கிய உள் அம்சங்களைச் சுட்டிக் காட்டலாம்.

சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது என்பது வளர்ச்சி வேகங்களை அதிகப்படுத்துவதை முதலில் முன்னனுமானிக்கிறது. 12ஆவது ஐந்தாண்டிலேயே தேசிய வருமான அதிகரிப்பு வேகம், சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்வு, தொழிற்துறை, விவசாயப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பு, மக்களுடைய உண்மை வருமானங்களின் அதிகரிப்பு ஆகியவற்றை துரிதப்படுத்தியாக வேண்டும்.

11ஆவது, 12ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் முக்கியக் குறியீடுகளின் அதிகரிப்பு வேகங்களை ஒப்பிடுவோம் (% இல்):

| | 1981—1985 | 1986—1990 (இட்டம்) |
|---|---|---|
| நுகர்விற்கும் சேமிப்பிற்கும் பயன்படுத்தப்படும் தேசிய வருமானம் | 17 | 19—22 |
| சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் | 16.5 | 20—23 |
| தொழிற்துறைப் பொருட்கள் | 20 | 21—24 |
| விவசாயத் துறைப் பொருட்கள் (ஆண்டு சராசரி கணக்கில்) | 6 | 14—16 |
| நபர் ஒருவருக்கான உண்மை வருமானங்கள் | 11 | 13—15 |

முழுமுதல் வளர்ச்சியிலும் ஒவ்வொரு சதவிகிதத்தின் முக்கியத்துவத்திலும் ஒரு கணிசமான அதிகரிப்பு இருக்கும் என்பது இயற்கையே.

2000ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்திற்கு உயர்வான கடமைகள் முன் வைக்கப்பட்டுள்ளன. தேசிய வருமானத்தின் அளவும் தொழிற்துறை பொருட்களின் உற்பத்தியும் இரு மடங்கு அதிகரிக்கும்; நபர் ஒருவருக்கான உண்மை வருமானங்கள் 1.6—1.8 மடங்கு கூடும்; சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் 2.3—2.5 மடங்கு அதிகரிக்கும்.

பொருளாதார, சமூக வளர்ச்சி வேகங்களை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியமேயில்லை. இது சொல்லாமலே நன்கு விளங்கும். இக்கடமைகளின் யதார்த்தத்தையும் சிக்கலான தன்மையையும் மதிப்பிடுவது அதிக முக்கியமானது. இதற்குச் சில பகுப்பாய்வு புள்ளி விவரங்களைப் பயன்படுத்துவோம். இவை கடந்த மூன்று ஐந்தாண்டுகளிலும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்

முக்கிய தேசியப் பொருளாதாரக் குறியீடுகளின் சராசரி ஆண்டு அதிகரிப்பு, %

| | 1971—1975 | 1976—1980 | 1981—1985 | 1986—2000 (திட்டம்) |
|---|---|---|---|---|
| நுகர்விற்கும்சேமிப்பிற்கும் பயன்படுத்தப்படும் தேசிய வருமானம் | 5.1 | 3.9 | 3.1 | 4.7 |
| தொழிற்துறைப் பொருட்கள் | 7.4 | 4.4 | 3.7 | 4.7 |
| சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் | 4.6 | 3.2 | 3.1 | 5.7—6.3 |
| நபர் ஒருவருக்கான உண்மை வருமானங்கள் | 4.4 | 3.4 | 2.1 | 3.2—4.0 |

திலும் முக்கியக் குறியீடுகளின் மாற்றத்தைக் காட்டுகின்றன.

தேசிய வருமான அதிகரிப்பு, தொழிற் துறைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பு ஆகியவற்றில் 2000ஆம் ஆண்டு வரையிலான திட்டக் கடமைகளை 11ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1981—1985) நிலவிய வேகத்துடன் ஒப்பிட்டால், நடப்பு 15 ஆண்டுகளில் சராசரி ஆண்டு அதிகரிப்பு முறையே 1.5, 1.3 மடங்கு கூடுதலாயிருக்கும்; நபர் ஒருவருக்கான உண்மை வருமானங்களில் இந்த அதிகரிப்பு 1.5—1.9 மடங்காக இருக்கும். கடமைகள் சிக்கலானவை, கடினமானவை என்பது வெள்ளிடை மலை. ஆனால் இவை முற்றிலும் யதார்த்தமானவை. இதற்கு, மேற்கூறிய திட்ட வேகங்களை, சோவியத் நாட்டில் 1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலிருந்த (அதாவது சோவியத் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் தீய போக்குகள் தென்படும் வரை) வேகங்களுடன் ஒப்பிடுவதே போதும்.

சமூக உழைப்பின் உற்பத்தித் திறனைக் கூட்டும் விஷயத்தில் நிலவரம் சற்று வேறு மாதிரியாக உள்ளது. இங்கே திட்டக் குறியீடுகள் 11ஆவது ஐந்தாண்டுக் குறியீடுகளைக் கிட்டத்தட்ட இரு மடங்கு விஞ்சுகின்றன. 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ள குறியீடுகள் சோவியத் நாட்டில் 1970ஆம் ஆண்டுகளிலேயோ 1980ஆம் ஆண்டுகளின் முதல் பகுதியிலோ நிலவவில்லை. இங்கே

தர ரீதியான அடிப்படை மாற்றம் தேவை. தேசியப் பொருளாதாரத்தில் அடிப்படை தொழில்நுட்ப மாற்றங்களைச் செய்து உற்பத்தி ஒழுங்கமைப்பு மட்டத்தையும் நிர்வாக மட்டத்தையும் கணிசமாக உயர்த்தினால்தான் இது சாத்தியம்.

பொருளாதார வளர்ச்சி வேகங்களை அதிகரிப்பது எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் கொள்கையின் சாரம் இதில் மட்டும் அடங்கியிருக்கவில்லை. இந்தத் துரிதப்படுத்தல் எப்படி—இடப்பரப்புக் காரணிகளாலா அல்லது தீவிரமயப்படுத்தும் காரணிகளாலா—அடையப்படும் என்பதும் பெரிதும் முக்கியமாகும். சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயத்தில் அரசியல் அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டபடி, துரிதப்படுத்தலின் சாரம்''வளர்ச்சியின் புதிய பண்பில் அடங்கியுள்ளது. அதாவது, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் உற்பத்தியை சகலவிதங்களிலும் தீவிரப்படுத்துவதிலும், பொருளாதார கட்டமைப்பை மாற்றியமைப்பதிலும், செயல் வன்மை மிக்க நிர்வாக வடிவங்களையும் உழைப்பை ஒழுங்கமைத்து ஊக்குவிக்கும் முறைகளையும் புகுத்துவதிலும் இச்சாரம் அடங்கியுள்ளது.''*

பொருளாதார வளர்ச்சியின் புதிய

* Mikhail Gorbachev, *Political Report...*, p. 26.

பண்பு இவ்வளர்ச்சியின் காரணிகளின் மாற்றத்திலும், வளர்ச்சியின் விளைபயன்களை மதிப்பிடுவதன் பாலான புதிய அணுகுமுறையிலும் வெளிப்படுகிறது. இன்று தீவிர மயப்படுத்தும், குணாம்ச ரீதியான காரணிகள் தீர்மானகரமான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. 12ஆவது ஐந்தாண்டிலேயே தொழிற்துறை மற்றும் விவசாயப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பையும், இருப்புப் பாதையில் சரக்குப் போக்குவரத்து மற்றும் கட்டுமானப் பணிகளின் அதிகரிப்பையும் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பால் பெறத் திட்டமிடப்படுகிறது. எனவே பொருளாயத உற்பத்தியின் எல்லாத் துறைகளிலும் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையைப் பெருக்காமலேயே பொருளாதார வளர்ச்சி அடையப்படும். இவை குணாம்ச ரீதியில் புதிய நிபந்தனைகளாகும், இத்தகைய நிபந்தனைகள் இதற்கு முன் சோவியத் பொருளாதாரத்தில் எப்போதுமே நிலவியதில்லை.

இயற்கை வளங்களைச் சிக்கனப்படுத்துவதானது பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய மூல ஊற்றாகி வருகிறது. 2000ஆம் ஆண்டு வாக்கில் மூலப்பொருட்கள், துணைப்பொருட்கள், எரிபொருள்-எரிசக்தி வளம் ஆகியவற்றை சிக்கனப்படுத்துவதன் மூலம் இவற்றின் கூடுதல் தேவையில் 70—80% பூர்த்தி செய்யத் திட்டமிடப்படுகிறது. உற்பத்திப் பொருட்கள் மற்றும் வேலை

களின் அடக்க விலையைத் தொழிற்துறையில் 4—5%மும் கட்டுமானத் துறையில் 2—3%மும், விவசாயத் துறையில் (அரசுப் பண்ணைகள்) 5—7%மும் குறைக்க வேண்டும்.

புனருற்பத்திப் போக்குகளின் மாற்றங்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் இறுதி விளைவுகள் பற்றிய மதிப்பீடும் கணிசமாக மாறி வருகிறது. பொதுவான அளவு நிலைக் குறியீடுகளுக்கு முக்கியத்துவம் அளித்த நிலை மாறி, சமூகத் தேவைகள் எந்த அளவிற்குப் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் தேசியப் பொருளாதாரத்தின் இறுதி விளைபயன்களின் பொது மதிப்பீடாகத் திகழுகிறது.

எல்லா அங்கங்களிலும்—தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகள், துறைகள், பொருளாதாரப் பிரதேசங்கள் முதல் மொத்தமாக தேசியப் பொருளாதாரம் வரை—வேலையின் தரத்தை மதிப்பிடுவதற்கான குறியீடுகளை நிர்ணயிக்க இந்த அணுகுமுறை பெரிதும் முக்கியமானது. சமூகத் தேவைகள் எவ்வளவுக்கெவ்வளவு முழுமையாகப் பூர்த்தி செய்யப்படுகின்றனவோ தேசியப் பொருளாதாரத்தின் இறுதி விளைபயன்கள் அவ்வளவுக்கவ்வளவு உயர்வானவை.

இன்று, ''சமுதாயத்தின் தேவைகளை

அதிகபட்சம் முழுமையாகப் பூர்த்தி செய்வது என்ற உயரிய லட்சியத்தை அடைவதில் தேசியப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு அங்கத்தின் பங்கையும் அதிகரிப்பதுதான் நிர்வாக முறை முழுவதன் நோக்கமாக இருக்க வேண்டும்'' என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் கூறப்பட்டுள்ளது. ''சகலவிதமான வளங்களையும் குறைந்தபட்சம் பயன்படுத்தி, இப்பங்கை எல்லா விதங்களிலும் அதிகப்படுத்துவது என்பது சோஷலிச நிர்வாகத்தின் மறுக்க இயலா விதி, துறைகள், கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்களின், எல்லா உற்பத்தி அங்கங்களின் நடவடிக்கையை மதிப்பிடுவதற்கான அடிப்படைக் கருத்தினம் ஆகும்.''*

பொருளாதார வளர்ச்சித் தரத்தின் முக்கியக் குறியீடு என்ற வகையில் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதானது சமூக உற்பத்தியின், அதன் எல்லா அங்கங்களின் சமூகத் திசையமைவை வலுப்படுத்துகிறது.

தீவிரக் கட்டமைப்பு மாற்றங்கள், முக்கியமான திசைகளில் சக்திகள், வளங்களின் குவிப்பு ஆகியவைதான் சோவியத் நாட்டில் இன்றைய பொருளாதார வளர்ச்சியின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இன்று சோவியத் நாட்டில் நவீன இயந்திரங்கள்,

---

* *The Programme of the Communist Party of the Soviet Union. A New Edition*, Moscow, Novosti Press Agency Publishing House, 1986, p. 37.

நல்ல தேவையுள்ள பொருட்கள் ஆகியவற்றோடு கூட பழைய பொருட்களும் கணிசமாக உற்பத்தியாகின்றன. இந்த பழைய பொருட்கள் சோவியத் பொருளாதாரத்தின் கடந்த காலத்தைப் பிரதிபலிக்கின்றன. நன்கு சிந்தித்து பகுப்பாய்வு செய்யாமல், எல்லாவற்றின் உற்பத்தியையும் அதிகரிப்பது என்றால் பழையாகிப் போன கட்டமைப்பைப் புனருற்பத்தி செய்வது, அளவு நிலை வளர்ச்சியிருந்தாலும் இருந்த இடத்திலேயே இருப்பது என்று பொருள். துரிதமாக முன்னேற, பண்பு ரீதியான வளர்ச்சியை அடைய முற்போக்கான கட்டமைப்பு மாற்றங்கள் தேவை.

குணாம்ச ரீதியாகப் புதிய மட்டங்களை அடையவும் உற்பத்தியை நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப அடிப்படையில் மாற்றியமைக்கவும் உதவும் துறைகளும் உற்பத்திப் பிரிவுகளும் முன்னுரிமை பெற்று வளரும்; அதே சமயம் பழையதாகிப் போன இயந்திரங்களின் உற்பத்தி குறையும். மக்களின் தேவைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கும் கட்டமைப்பு மாற்றங்கள் மீது முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

கட்டமைப்பு மாற்றங்கள் பல முக்கிய தேசியப் பொருளாதார விகிதாச்சாரங்களை—தோண்டிடுக்கும் துறைக்கும் பதப்படுத்தும் துறைக்கும் இடையிலும், A பிரிவிற்கும் (உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்பவை) B பிரிவிற்கும் (நுகர்வுப் பொருட்

களை உற்பத்தி செய்பவை) இடையி லும் உள்ள விகிதாச்சாரங்களை—பாதிக் கின்றன. உதாரணமாக, 12ஆவது ஐந்தாண் டில் தொழிற்துறை பொருட்களின் மொத்த வளர்ச்சி 21—24%ஆக இருக்க, பதப்படுத் தும் தொழிற்துறையில் உற்பத்தியை 25—28%மும், எரிபொருள் துறையில் உற்பத்தி யை 11—13%மும் அதிகரிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

ஏற்கெனவே சோவியத் நாட்டில் உற் பத்தியின் கட்டமைப்பில் நடைபெறும் சில முற்போக்கு மாற்றங்கள் எதிர்காலத்தில் தொடரும். உதாரணமாக, 11ஆவது ஐந் தாண்டில் A பிரிவின் துறைகளை விட B பிரிவின் துறைகளில் உற்பத்தி விரைவாக அதிகரித்தது. 12ஆவது ஐந்தாண்டில் இப் போக்கைத் தொடர திட்டமிடப்பட்டுள் ளது.

நுகர்வுப் பண்ட உற்பத்தியை அதிக வேகமாக வளர்ப்பது எவ்வளவு அவசியம், இதன் சமூக முக்கியத்துவம் எவ்வளவு பெரியது என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. ஆனால் பொருளாதாரத்தைத் தொழில் நுட்ப ரீதியில் புதுப்பித்து இயந்திரக் கட்டு மானத்தைத் துரிதமாக வளர்க்கும் கொள் கையுடன் இது எந்த அளவிற்குப் பொருந்தி வரும் என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் தர்க்க ரீதியில் இது உற்பத்திச் சாதனங் களின் உற்பத்தி விரைவாகக் கூட வழி யமைக்க வேண்டும்.

இக்கேள்விக்குப் பதிலளிக்கும் போது, A பிரிவின் மிகச் சிக்கலான, பெரிதும் வெவ்வேறான உள்ளமைப்பைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பொருளாதாரச் செயற்பாட்டிலும் வளர்ச்சிப் போக்குகளிலும் முற்றிலும் வெவ்வேறான இரண்டு வகை பொருட்களின் உற்பத்தி இதில் நடைபெறுகிறது. அவைகளாவன: உழைப்புச் சாதனங்கள் (இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள்); உழைப்பின் ஆதாரப் பொருட்கள் (மூலப்பொருள், எரிபொருள், கட்டுமானப் பொருட்கள் போன்றவை). இக்காரணத்தால் A பிரிவு இரண்டு வெவ்வேறான போக்குகளால் பாதிக்கப்படுகிறது: ஒரு புறம் உழைப்புச் சாதனங்களின் உற்பத்தியைத் துரிதப்படுத்தும் போக்கு, மறுபுறம் உழைப்பின் ஆதாரப் பொருட்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் (சில சமயங்களில் ஸ்திரப் படுத்தும்) போக்கு.

எனவே கட்டமைப்பு மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்யும் பொழுது தொழிற் துறை உற்பத்தியின் மேற்கூறிய இரண்டு பிரிவுகளின் வளர்ச்சி வேகங்களையும் பங்குகளையும் ஒப்பிடுவதுடன் நின்று விடக் கூடாது. இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஏற்படும் முற்போக்குக் கட்டமைப்பு மாற்றங்களைப் பரிபூரணமாக கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

தொழிற்துறை வசதிகளைத் தீவிரமாக நவீனமயப்படுத்த் உழைப்புச் சாதனங்களின்

உற்பத்தியைத் துரிதப்படுத்த வேண்டும். இது தீவிர வகை சார்ந்த விரிவுபடுத்தப் பட்ட புனருற்பத்தியின் புறவய நியதியாகும். ஆனால் மொத்தமாக A பிரிவை எடுத்துக் கொண்டால் இப்படிக் கூற முடியாது; இப் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் பொருட் களில் 4/5 பகுதி உழைப்பின் ஆதாரப் பொருட்களாகும். இவற்றின் உற்பத்தி, மொத்தமாக தொழிற்துறைப் பொருட் களின் உற்பத்தியை விட கணிசமான அளவு குறைவாகவே அதிகரிக்க வேண்டும்.

உடனடியான காலகட்டத்திலும் ஒப்பீட் டளவில் நீண்ட எதிர்காலத்திலும் சோவியத் நாட்டில் உற்பத்தியைத் தீவிரமயப்படுத் துவதால் பொருளாதார வளர்ச்சியில் ஏற் படும் மாற்றங்களில் பின்வரும் போக்குகள் காணப்படலாம்:

— தேசியப் பொருளாதாரத்தைத் தொழில்நுட்ப ரீதியாகப் புதுப்பிப்பதில் தீர்மானகரமான பங்காற்றும் இயந்திரக் கட்டுமானத்தின் வளர்ச்சி வேகங்களைத் துரிதப்படுத்தல். 12ஆவது ஐந்தாண்டில் இயந்திரக் கட்டுமானத் துறை, உலோகங் களைப் பதப்படுத்தும் துறை ஆகியவற்றின் உற்பத்தி 40—45% கூடும், அதாவது மொத் தமாகத் தொழிற்துறையின் உற்பத்தியைக் கிட்டத்தட்ட இரு மடங்கு விஞ்சும்;

—உழைப்பின் ஆதாரப் பொருட்களை உற்பத்தி செய்யும் துறைகளின் ஒப்பீட்டள வில் குறைவான வளர்ச்சி வேகங்கள். கச்சாப்

பொருட்களை செறிவூட்டுவதை மேம் படுத்துவது, சிக்கனம் ஆகியவற்றின் மீது முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது;

—நுகர்வுப் பொருட்களின் (B பிரிவு) உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படும், இப்பிரிவின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி, பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். 12ஆவது ஐந்தாண்டில் உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி (A பிரிவு) 20—23% அதிகரிக்க, நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 22—25% கூடும்.

நவீன சூழ்நிலையில் பொருளாதார வளர்ச்சியின் புதிய பண்பு ரீதியான நிலையை விளக்கும் ஒரு சில சிறப்பு அம் சங்கள் இவைதான்.

இறுதியில், துரிதப்படுத்தலின் இன்னு மொரு உள் அம்சத்தைக் குறிப்பிடுவோம். புதிய விஞ்ஞான தொழில்நுட்பக் கருத்து களும் திட்டங்களும் தோன்றும் பொழுதும், நிரந்தரமாக மாறி வரும் சமூகத் தேவை களுக்கும் ஏற்றபடி உடனுக்குடன் விரைந்து செயல்படுவது இந்த அம்சமாகும். இதற்கு உற்பத்தியின் நெகிழ்வுத் திறனை அதிகப் படுத்த வேண்டும், உற்பத்தி செய்யும் பொருட்களின் பட்டியலை முறைப்படி புதுப்பிக்க வேண்டும், தொழிற்துறை வசதி களை நவீனமயப்படுத்த வேண்டும்.

சோவியத் ஒன்றியத்தில் சமீப காலம் வரை நிலையான உற்பத்திச் சாதனங்கள்

நவீனமயப்படுத்தப்படுவது மெதுவாகவே நடந்தது, இவற்றின் எண்ணிக்கையை அதிகப் படுத்தும் போக்கு மேலோங்கி நின்றது. பொதுவாகத் தொழிற்துறையில், அதுவும் குறிப்பாக இயந்திரக் கட்டுமானத் துறையில் நிலையான உற்பத்திச் சொத்துகளின் மொத்த மதிப்பிற்கும் மாற்றீடு செய்யப் பட்ட சொத்துகளுக்கும் இடையிலான விகிதம் மிகக் குறைவாயிருந்தது. துரிதப்படுத்தலின் முக்கியமான அம்சம் என்ற வகையில் நிலையான சாதனங்களை நவீனமயப் படுத்துவதைத் துரிதப்படுத்த, 12ஆவது ஐந்தாண்டில் இவற்றில் 1/3 பங்கிற்கும் அதிகமானதைப் புதுப்பிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

புதிய கட்டுமானம் அல்ல, மாறாக, ஏற்கெனவே இயங்கும் தொழில் நிறுவனங்களை நவீனமயப்படுத்தி, தொழில்நுட்ப ரீதியில் புதுமைப்படுத்துவதுதான் இன்று உற்பத்தியை விரிவுபடுத்துவதில் முக்கியப் போக்காக விளங்குகிறது. பழைய நிர்வாக முறைகளை எவ்வித ஊசலாட்டமும் இல்லாமல் கைவிடுவது இன்று மிகவும் முக்கியம். இந்தப் பழைய முறையில் புதிய கட்டுமானம் தான் உற்பத்தியை விரிவுபடுத்தும் முக்கிய வழியாகக் கருதப்பட்டது. அதே நேரத்தில் ஏற்கெனவே இயங்கி வந்த பல தொழில் நிறுவனங்கள் பல ஆண்டுகளாக நவீன மயப்படுத்தப்படவில்லை; இவற்றிலிருந்து இயன்ற அனைத்தும் பிழிந்தெடுக்கப்பட்

டதே தவிர, இவற்றின் வளர்ச்சி மீது குறை வான கவனம் மட்டுமே செலுத்தப்பட்டது.

ஏற்கெனவே இயங்கும் தொழில் நிறு வனங்களை நவீனமயப்படுத்தவும் சீரமைக்க வும் ஒதுக்கப்படும் முதலீடுகளின் பங்கு 12ஆவது ஐந்தாண்டிலேயே 1985இல் 37%லிருந்து 1990இல் 50% வரை உயரும். தொழிற்துறை வசதிகள் மிகவும் பழையன வாகவுள்ள துறைகளிலும் பிரதேசங்களி லும் இக்குறியீடு இன்னமும் அதிகமாயிருக் கும்.

நவீனமயப்படுத்தல், இயந்திரங்களைப் புதுப்பித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற் கொள்ளும் பொழுது அது அளவுநிலை நோக் கிலிருந்து பார்க்கையில் நிலையான உற் பத்திச் சாதனங்களின் வளர்ச்சி வேகங்கள் குறைய இட்டுச் செல்லும். ஆனால் செயல் வன்மை மிக்க நவீன இயந்திரங்களைப் புகுத்திபுதுப்பித்தலை நடத்தினால் அது விஞ் ஞான தொழில்நுட்ப, பொருளாதார, சமூக வளர்ச்சியின் உண்மையான துரிதப்படுத் தலைக் குறிக்கும்.

நுகர்வின் மட்டம் ஒப்பீட்டளவில் உயர் வானதாயிருக்கும் போது, மக்களின் வரு மானங்கள் வளர்ந்து வரும் போது நுகர்வு மற்றும் தேவைகளின் கட்டமைப்பில் கணிச மான மாற்றங்கள் ஏற்படுகின்றன. கல்வி மற்றும் தொழில் பயிற்சியின் கோரிக்கை களும் உழைப்பாளிகள் புதிய தொழில்நுட்ப முறைகளைக் கிரகிப்பதன் அவசியமும்

பெரிதும் அதிகரிக்கின்றன. சோவியத் சமுதாயத்தின் சமூகக் கட்டமைப்பும் மக்கள் இடம் விட்டு இடம் செல்வதும் அதிகம் நெகிழ்வுத் தன்மையைப் பெறுகின்றன.

காலத்தின் மதிப்பு அதிகரித்ததானது மேற்கூறிய பொருளாதார மற்றும் சமூக நிகழ்ச்சிப் போக்குகளுடன் நெருக்கமாகத் தொடர்புடையது. கட்டுமானக் காலக் கெடுக்களை இழுத்தடிப்பது, விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளைக் கிரகிப்பதில் தடைகள், புதிய உற்பத்தி வசதிகளை மெதுவாகப் பயன்படுத்துவது, உற்பத்தி செய்யும் பொருட்களின் பட்டியலைப் புதுப்பித்து மாற்றியமைப்பதில் ஏற்படும் தாமதம் ஆகியவை ஈடு செய்ய முடியா கால இழப்பிற்கு இட்டுச் செல்கின்றன. புதிய உற்பத்திப் பொருள் கூட பழையதாகிறது, புதிய கட்டுமானம் கடந்த காலத்தைப் பிரதிபலிக்கிறது. எனவேதான் நெகிழ்வுத் தன்மையும் செயல்வினையின் வேகமும் செயல்வன்மை மிக்க பொருளாதாரத்தின் அவசிய குறியீடுகளாகின்றன.

நடந்து கொண்டிருக்கும் அல்லது ஆரம்பமாகியுள்ள மாற்றங்களைத் தக்க தருணத்தில் கவனித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்பது சமுதாயத்தின் முன்னோக்கிய வளர்ச்சிக்கான முக்கிய முன் தேவையாகி வருகிறது.

பொருளாதார, சமூக வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது என்பது பரஸ்பரத்

தொடர்புடைய, பரஸ்பரம் ஒன்றையொன்று இட்டு நிரப்பக் கூடிய இரண்டு நிகழ்ச்சிப் போக்குகளை முன்னனுமானிக்கிறது. ஒரு புறம், பின்தங்கிய துறைகளை, இடங்களை முன்னுக்கு கொணர்தல், உள்ளதை விட உயர்வான வளர்ச்சி மட்டங்களை அடைதல். மறுபுறம், சமூக முன்னேற்றப் பாதையில் ஸ்திரமான, முன்னோக்கிய இயக்கம்.

வேகங்களைப் பற்றிய பிரச்சினையும் இங்கு வேறு விதமாகத் தென்படுகிறது. எங்கெல்லாம் பொருளாதார மாற்றங்களோடு சமூக மாற்றங்களும் ஒரே மாதிரியாக உயர்வான வேகத்தில் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் சமூக முன்னேற்றம் வெற்றிகரமாக நடைபெறுவதை அனுபவம் காட்டுகிறது. சோஷலிசத்தின் குன்றா வாய்ப்புகளும் அனுகூலங்களும் இப்படிப்பட்ட இயக்கத்தில்தான் தெட்டந் தெளிவாகத் தெரிகின்றன.

சோஷலிசம் சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் ''முற்றிலும் போதுமான, அன்றாடம் மேம்படக் கூடிய பொருளாயத வாழ்க்கைச் சூழலை அளிக்கிறது'', இது தவிர ''அவர்களின் உடற்கூறு ரீதியான திறமைகளும் ஆன்மீக ரீதியான திறமைகளும் முழுமையாக, சுதந்திரமாக வளர்ந்து பயன்படுத்தப்பட வழிகோலுகிறது'' என்று பி. எங்கெல்ஸ் எழுதினார்.* இந்த வாக்

* F. Engels, *Anti-Dühring*, Moscow, Progress Publishers, 1975, p. 335.

கியங்கள் அடிக்கடி மேற்கோள் காட்டப் படுகின்றன, விமர்சிக்கப்படுகின்றன. அதே நேரம் இவற்றில் பொதிந்துள்ள ஆழ்ந்த கருத்தின் மீது, அதாவது ''அன்றாடம்'' மேம்படும் வாழ்க்கைச் சூழ்நிலைகள் என்ப தன் மீது எப்போதும் கவனம் செலுத்து கின்றனர் என்று கூற முடியாது.

ஸ்திரமான, உயரிய வளர்ச்சிக்கான வாய்ப்பை ஏற்படுத்துவது என்பது சோஷ லிசப் பொருளாதார முறையின் மிகப் பெரும் அனுகூல்ங்களில் ஒன்றாகும். இத்தகைய அனுகூலங்களைக் கிரகித்து, இவை உழைப் பாளிகளுக்குச் சேவை புரியுமாறு செய்வது, சோஷலிச வாழ்க்கை முறையை மேற் கொண்டு வலுப்படுத்துவது — இதுதான் இன்று சோவியத் நாட்டில் சமூக பொருளா தார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற் காக நடக்கும் மக்கள் இயக்கத்தின் ஆழ்ந்த உட்பொருளாகும்.

## அத்தியாயம் இரண்டு

# தீவிரப்படுத்தலை நோக்கிய திருப்புமுனை

சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்துவது என்பது சோவியத் நாட்டின் தேசியப் பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவதுடன் இடையறாது தொடர்புடையது. உற்பத்தியைத் தீவிரப்படுத்துவதை நோக்கி அடியோடு திரும்பியாக வேண்டும், பொருளாதார வளர்ச்சியின் தரக் காரணிகளை ஒவ்வொரு தொழில் நிறுவனமும் ஒவ்வொரு துறையும் முழுமையாகவும் முக்கியமாயும் பயன்படுத்துமாறு செய்ய வேண்டும் என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் கூறப்பட்டுள்ளது.

சோவியத் நாட்டின் வளர்ச்சி, நன்கு வளர்ச்சியடைந்த, பெரும் பொருளாதாரம் தோற்றுவிக்கப்பட்டது, புனருற்பத்தி கட்டமைப்பு முழுவதிலும் ஏற்பட்ட ஆழ்ந்த மாற்றங்கள் ஆகியவைதான் இத்தகைய திருப்புமுனைக்கான அவசியத்தை ஏற்படுத்தின. ஒன்று, தீவிரப்படுத்தும் பாதையில் துரிதமாக முன்னோக்கி நடைபோட வேண்டும், அல்லது இருக்கும் இடத்திலேயே நிற்க வேண்டும் என்றுதான் பிரச்சினை முன்நிற்கிறது. வேறொரு மூன்றாவது வழி கிடையாது. கறாராகச் சொன்னால், இரண்டாவது வழி கூடக் கிடையாது, ஏனெனில்

இது சோவியத் நாட்டிற்கு ஏற்றதல்ல. எனவே தீவிரப்படுத்தலுக்கு வேறு எந்த ஒரு மாற்று வழியுமில்லை.

பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவது என்பது பெரும் முக்கியத்துவமுடைய சிக்கலான கடமையாகும். சோவியத் சமுதாயத்தை குணாம்ச ரீதியில் புதிய மட்டத்திற்கு உயர்த்த, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தைச் சீரமைக்க வேண்டும். சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயத்திற்கு மத்திய கமிட்டி சமர்ப்பித்த அரசியலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தபடி, மிகப் பெரும் விஞ்ஞான தொழில்நுட்ப, சமூக பொருளாதார மாற்றங்களை நிறைவேற்றியதில் சோவியத் ஒன்றியத்திற்கு பெரும் அனுபவம் உண்டு. வலிமையான தொழிற் துறையைத் தோற்றுவித்தது, சோவியத் கிராமத்தில் சோஷலிச மாற்றங்களைச் செய்தது, கலாசாரப் புரட்சியை நிறைவேற்றியது ஆகியவை இவற்றிலடங்கும். மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றதும் ஏழ்மை நிலையிலிருந்த, பெரும்பாலான மக்கள் எழுத்தறிவற்ற நிலையிலிருந்த ஒரு விவசாய நாட்டில், ஏகாதிபத்திய முதல் உலக யுத்தத்தாலும் (1914—1918) உள்நாட்டு யுத்தத்தாலும் (1918—1920) சீர்கேடடைந்த ஒரு நாட்டில் இவை நடந்தேறின. விண்வெளி ஆராய்ச்சி ஒரு

பெரும் விஞ்ஞான தொழில்நுட்ப சாதனையாகியுள்ளது. ஆனால் அவை எவ்வளவு முக்கியமானவையாக இருந்தாலும் அக்காலக் கடமைகளை அளவிலும் சிக்கலான தன்மையிலும் இன்று தேசியப் பொருளாதாரத்தைச் சீரமைப்பதில் நாட்டின் முன் நிற்கும் கடமைகளுடன் எவ்விதத்திலும் ஒப்பிட முடியாது.

இந்நூற்றாண்டின் இறுதியில் சோவியத் நாட்டில் உற்பத்தி உள்ளாற்றலை குணாம்ச ரீதியில் மாற்றியமைத்து அதை இரு மடங்கு பெருக்க வேண்டும். உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெருக்குவது, தேசிய வருமானத்தை அதிகரிப்பது, அதே சமயம் எரிசக்தி, உலோக நுகர்வைப் பெரிதும் குறைப்பது ஆகியவை சம்பந்தமாகத் திட்டமிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவது என்பது உற்பத்தியைத் தீவிரப்படுத்துவதை நோக்கிய திருப்புமுனையை, தரத்தையும் செயல்வன்மையையும் உயர்த்துவதைக் குறிக்கும். அதற்குப் பின் இந்த நிகழ்ச்சிப் போக்குகளை ஆழப்படுத்தி, அதன் அடிப்படையில் உயர்வாக ஒழுங்கமைக்கப்பட்ட, பெரும் செயல்வன்மை மிக்க பொருளாதாரத்தை நோக்கி மாறத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தீவிரப்படுத்தலின் சாரம்

தீவிரப்படுத்தல் என்பது மிகவும் சிக்கலான, பன்முக நிகழ்ச்சிப் போக்கு. இப்பாதையில்

வெற்றிகரமாக முன்னோக்கிச் செல்லவும் கடமைகளின் நடைமுறை நிறைவேற்றத்திற்கும் முழு தத்துவார்த்த தெளிவு வேண்டும். இது மிகவும் முக்கியம், ஏனெனில் பிரச்சினை பெரிதும் எளிமையாகப் புரிந்து கொள்ளப் படுவதையும், மாற்றங்களின் தன்மையை மேற்போக்காக வியாக்கியானப்படுத்துவதையும் பல நேரங்களில் காணலாம். அடிப்படை ரீதியிலான, தர ரீதியான மாற்றங்களின் அவசியம் எப்போதும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை; அதே சமயம் தீவிரப்படுத்தலை நோக்கிய ''திருப்புமுனையைப்'' பற்றி, தேசியப் பொருளாதாரத்தின் எல்லா அங்கங்களிலும் நடைபெறும் பணிகளின் ''திசையமைவு மாற்றத்தைப்'' பற்றி இங்கே பேசப்படுகிறது.

சோஷலிச அரசியல் பொருளாதாரத்திலும் விஞ்ஞான இலக்கியத்திலும் உற்பத்தியைத் தீவிரப்படுத்துவது என்பது முற்றிலும் வெவ்வேறான இரண்டு பொருட்களில் விளக்கப்படுகிறது. இவற்றை ஒன்றுடன் ஒன்று கலப்பதானது பல நேரங்களில் தேவையற்ற வாதங்களுக்கும், நவீன மற்றும் கடந்தகால பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய வெவ்வேறான மதிப்பீடுகளுக்கும் இட்டுச் செல்கிறது.

இந்தப் பொருட்களை சற்று விரிவாக வேறுபடுத்திப் பார்ப்போம். தீவிரப்படுத்தலின் முதல் பொருள் எளிமையானது, நன்கு புரியக் கூடியது. இதன்படி தீவிரமாக என்

றால் வலுவாக, முழுமையாக என்று பொருள்; தீவிரப்படுத்தல் (intensification) என்றால் முயற்சிகளை, வேகத்தை அதிகப் படுத்தல் என்று பொருள். எடுத்துக்காட் டாக உழைப்பைத் தீவிரப்படுத்தல் என் றால் ஒரு குறிப்பிட்ட அலகு நேரத் தில் உழைப்பின் அளவை அதிகப்படுத்தல், வேலை நாளை இழுத்துப் பிடித்தல், சகல வித நிறுத்தங்களையும் வேலை நேர இழப் பையும் தவிர்த்தல் என்று பொருள்படும். ஒரு குறிப்பிட்ட இயந்திரத்தைப் பயன் படுத்துவதைத் தீவிரப்படுத்த அதற்களிக் கும் வேலைப் பளுவையும் அது வேலை செய்யும் வேகத்தையும் அதிகப்படுத்த வேண்டும், ஷிப்டு வேலை முறையைக் கொண்டு வர வேண்டும்.

விவசாயத் துறையில் உற்பத்தியைத் தீவிரப்படுத்த (முதல் பொருளில்) இயந் திரங்கள், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்து கள் போன்றவற்றின் உதவியால் ஒரு அலகு சாகுபடி நிலத்திற்கான முதலீடுகளை அதி கரிக்க வேண்டும். பின்வரும் புள்ளி விவரங் கள் சோவியத் விவசாயத் துறையின் தீவிர வளர்ச்சிக்குச் சான்று பகர்கின்றன. 1986ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி ஒவ்வொரு 100 ஹெக்டேர் விவசாய நிலப்பரப்பிற்கும் 55,700 ரூபிள் நிலையான சொத்துகள் இருந்தன. இது 1940இல் இருந்ததை விட சுமார் 18 மடங்கும், 1970இல் இருந்ததை

விட மும்மடங்கிற்கு மேலாகவும் அதிக மானது.

ஆன்மீகத் துறையிலும் தீவிரப்படுத்தல் போக்குகள் நடைபெறுகின்றன. தகவல்களின் (செய்திகளின்) அளவு அதிகரிப்பதிலும், ஒரு அலகு நேரத்தில் மனிதன் கிரகிக்கும் விஷயங்களின் மொத்தம் கூடுவதிலும் இவை வெளிப்படுகின்றன.

எளிமையாகத் தோன்றும் இந்நிகழ்ச்சிப் போக்குகளின் பின் பெரிதும் சிக்கலான பிரச்சினைகள் உள்ளன. அதாவது, தீவிரப் படுத்தலால் கிட்டும் பயன்களைக் கவனத்தில் கொள்ளாமல் தீவிரப்படுத்தலைத் தனியே பார்த்தால் அது பெரிதும் செலவு மிக்கதாய்,வீணானதாய் இருக்கலாம்.எனவே தீவிரப்படுத்தலை ஒரு சுயமான நிகழ்ச்சிப் போக்காகப் பார்க்காமல் அதன் விளை பயன்களுடன் தொடர்புபடுத்தி, அதாவது உற்பத்தியின் செயல்வன்மையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இவையெல்லாம் வாழ்க்கையிலிருந்து விலகி நிற்கும் பொது கருத்துகள் அல்ல. மேற்கூறிய கருத்துநிலைகள் உண்மையான தத்துவார்த்த பொதுமைப்படுத்தல்களாகும், இவை வாழ்க்கையுடன் நேரடியாகத் தொடர்புடையவை. இவை உற்பத்தியை நவீனமயப்படுத்துவது, இதை ஸ்தாபன ரீதியில் மாற்றியமைப்பது, கூடுதல் முதலீடுகளை ஒதுக்குவது சம்பந்தமான பிரச்சினைகளின் தீர்வில் திட்ட மற்றும் பொருளா

தார உறுப்புகளுக்கும், உழைப்பாளர் கூட்டுகளுக்கும் வழிகாட்டிகளாக விளங்கு கின்றன.

உற்பத்தியைத் தீவிரப்படுத்துவது மற்றும் உற்பத்தியின் செயல்வன்மையைப் பற்றி தெளிவான கருத்தைக் கொண்டிருப்பதும் பெரிதும் முக்கியமாகும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகத் தொடர்புடையவை என்றாலும் இரண்டும் ஒன்றல்ல. இவை பொருளாதார வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்களை—ஒன்றுடன் ஒன்று பரஸ்பரத் தொடர்புடைய அம்சங்கள் என்றாலும்—பிரதிபலிக்கின்றன.

உற்பத்தியைத் தீவிரப்படுத்துவது என்பது உற்பத்தி வளர்ச்சியாகும், உற்பத்தியின் முன்னோக்கிய இயக்கமாகும்; இது வளர்ச்சியின் குணாம்ச ரீதியான காரணிகளைப் பயன்படுத்துவது, உற்பத்தியை நவீனமயப்படுத்துவது, இதன் கட்டமைப்பை மேம்படுத்துவது ஆகியவற்றின் அடிப்படையிலானது. தீவிரப்படுத்தலில் அடங்கியுள்ள அம்சங்கள் (விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம், சிக்கனம், கட்டமைப்பு மாற்றங்கள், இன்ன பிற) செயல்வன்மையை உயர்த்தும் காரணிகளாகும்.

செயல்வன்மை என்பது வளர்ச்சிப் போக்கின் முடிவாகும், இது அடையப்பட்ட (அல்லது எதிர்பார்க்கப்படும்) சாதனையைக் குறிக்கிறது. இது விளைபயன்களுக்கும் செலவுகள் அல்லது வளங்களுக்கும் இடையிலான

விகிதத்தைக் காட்டுகிறது. செயல்வன்மை அதிகரிப்பு என்றால் மிகக் குறைந்த செலவில் அதிகபட்ச விளைபயனை அடைவது என்று பொருளாகும். உழைப்பின் உற்பத்தித் திறன், சொத்துக்கும் உற்பத்திப் பொருளுக்கும் இடையிலான விகிதம், பொருட்களின் நுகர்வு, லாப விகிதம் போன்ற பல குறியீடுகளால் செயல்வன்மை அளக்கப்படுகிறது. பொருளாதார விளைபயன்களைக் கணக்கில் கொள்வதோடு கூட சமூக விளைபயன்களையும் கவனத்தில் கொள்வது, அதாவது உற்பத்தியின் சமூக பொருளாதாரச் செயல்வன்மையின் நோக்கிலிருந்து அணுகுவது மிக முக்கியமாகும்.

உயரிய இறுதி பயன்களை அடைவதுடன் தொடர்புடைய அதிகமான முயற்சிகள் என்ற வகையில் தீவிரப்படுத்தல் என்பது ஒரு தொடர்ச்சியான நிகழ்ச்சிப் போக்காகும். தொழில்நுட்ப முன்னேற்றம், உழைப்பு ஒழுங்கமைப்பையும் உற்பத்தியையும் மேம்படுத்துவது, சிக்கனம் ஆகியவை சோவியத் நாட்டில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் போதும், யுத்தத்திற்குப் பிந்தைய புனரமைப்புக் காலகட்டத்தின் போதும், பிந்தைய காலகட்டங்களிலும் நடந்தன. முன்னர் தீவிரப்படுத்தல் இருக்கவில்லை, இன்றுதான் தோன்றியது (அல்லது அவசியம் தேவை) என்று கூறுவதானது வரலாற்று உண்மைகளைத் திரித்துரைப்பதற்கு ஒப்பானது.

அப்படியென்றால், தீவிரப்படுத்தலுக்கு வேறு மாற்று வழி இல்லையென்று ஏன் இன்று கூறுகின்றோம்? தேசியப் பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்ற வேண்டும் என்று கூறுவதன் பொருள் என்ன? இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க, ''தீவிரப்படுத்தல்'' என்ற கருத்தின் இரண்டாவது, சிக்கலான பொருளைப் பார்க்க வேண்டும்.

இங்கே, தீவிரப்படுத்தல் என்றால், சமுதாய உற்பத்தியைப் பெரும்பாலும் இட வளர்ச்சிப் பாதையிலிருந்து தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவது என்று பொருள். இந்த இரண்டாவது அர்த்தத்தைத் தெளிவு படுத்த, விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியின் இரண்டு வகைகளை அல்லது பொருளாதார வளர்ச்சியின் இரண்டு வகைகளை —அதாவது இடப்பரப்பு வகையையும் தீவிர வகையையும் — வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இவை தனித்தனியே ஏட்டில் மட்டுமே நிலவுகின்றன, நடைமுறையிலோ இவை ஒன்றுடன் ஒன்று குறிப்பிட்ட அளவில் கலந்துள்ளன, எனவே பெரும்பாலும் இடப்பரப்பு வளர்ச்சியாகவோ அல்லது பெரும்பாலும் தீவிர வளர்ச்சியாகவோ விளங்குகின்றன.

இதில் முதல் வகையான பொருளாதார வளர்ச்சி, கார்ல் மார்க்சின் வார்த்தைகளில் சொன்னால், ''உற்பத்திக் களத்தை'' விரிவு படுத்துவதன் அடிப்படையிலானது. அதா

வது உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்திகள், பொருளாயத அம்சங்கள், இயற்கை வளங்களை எண்ணிக்கையில் அதிகரிக்க வேண்டும், வழக்கமான இயந்திரங்களையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்துவதை மேன்மேலும் அதிகரிக்க வேண்டும். இம்முறையில் புதிய கட்டுமானம் பெருமளவில் நடைபெறும். இரண்டாவது வகையான வளர்ச்சி, அதாவது தீவிர புனருற்பத்தி குணாம்ச ரீதியான வளர்ச்சிக் காரணிகளைப் பயன்படுத்துவதன் அடிப்படையிலானது; இங்கே உழைப்பாளர்களின் தேர்ச்சி உயர்த்தப்படும், உற்பத்தியின் விஞ்ஞான தொழில்நுட்ப வசதிகள் நவீனமயப்படுத்தப்படும், பொருளாதாரச் சுழற்சியினுள் ஈடுபடுத்தப்படும் பல்வேறு வளங்கள் முழுமையாகவும் சிக்கனமாயும் பயன்படுத்தப்படும்.

மேற்கூறிய வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளவும் தீவிரப்படுத்தலின் இரண்டாவது, அதிக சிக்கலான அர்த்தத்தின் சாரத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும் கா. மார்க்சின் பின்வரும் கருத்து பெரிதும் உதவும். **மூலதனம்** நூலின் இரண்டாவது தொகுதியில் கா. மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்: "...குறிப்பிட்ட இடைவேளைகளில் புனருற்பத்தி நடைபெறுகிறது, அதுவும் இதை சமூகக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் விரிவுபடுத்தப்பட்ட அளவிலான புனருற்பத்தி; உற்பத்திக் களம் மட்டும்

விரிவுபடுத்தப்பட்டால், அது இடப்பரப்பு ரீதியான விரிவுபடுத்தலாகும்; அதிக செயல் வன்மையான உற்பத்திச் சாதனங்கள் பயன் படுத்தப்பட்டால் தீவிரமான விரிவுபடுத்த லாகும்.''*

ஒரு வகையிலிருந்து இன்னொரு வகைக்கு மாறுவதற்கு, அதாவது இடப் பரப்பு வகையிலிருந்து தீவிர வகைக்கு மாறுவதற்கு குறிப்பிட்ட வரலாற்று வரம்பு களும், ஆரம்பமும் முடிவும் உண்டு. எனவே தான் இன்று சோவியத் நாட்டில் தேசியப் பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றும் கடமை முன்வைக்கப் படுகிறது.

இன்று சோவியத் நாட்டில் விரிவு படுத்தப்பட்ட சோஷலிச புனருற்பத்தி முறை முழுவதிலும் ஆழ்ந்த மாற்றங்கள் முதிர்ச்சி யடைந்துள்ளன. இவை புதிய வகையான பொருளாதார வளர்ச்சிக்கு மாறுவதுடன் தொடர்புடையவை. உற்பத்தியின் விஞ் ஞானத் தேவை நியதியாக அதிகரிக்கிறது, உற்பத்தி வசதிகளை வேகமாகப் புதுப்பிக் கும் தேவையும், சீரிசைவான கட்டமைப்பு மாற்றங்களின் தேவையும் கூடி வருகின்றன. சோவியத் பொருளாதார வளர்ச்சியின் சமூகத் திசையமைவு வலுப்பட்டு வருகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப, பொருளாதார,

---

* K. Marx, *Capital*, vol. 2, Moscow, Progress Publishers, 1974, p. 175.

சமூக முன்னேற்றத்தின் இன்றைய கட்டம் முன்வைக்கும் ஆழ்ந்த குணாம்ச ரீதியான மாற்றங்களின் ஒட்டுமொத்தத்தைக் குறிக்கவும் தீவிர பொருளாதார வளர்ச்சி என்றக கருத்து பயன்படுத்தப்படுகிறது.

இங்கே தீவிரப்படுத்தல் என்ற கருத்து, நவீன உற்பத்தியின் வளர்ச்சியில் ஏற்படும் ஏராளமான குணாம்ச ரீதியான மாற்றங்களைச் சுருக்கமாகத் தொகுத்துரைக்கும் சூத்திரமாக, ஒரு பன்முக கருத்தமைப்பாகத் திகழுகிறது.

பொருளாதாரத்தைத் தீவிரப்படுத்தல் என்பது சோவியத் சமுதாயத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கு முழுவதாலும் தயார் படுத்தப்பட்ட நியதியான நிகழ்ச்சிப் போக்காகும். ஒரு சில வரலாற்றுக் காரணங்களுக்காக சோவியத் ஒன்றியம் தன் உற்பத்தியை அளவுநிலை ரீதியில் பெருக்க வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் ஜாரிச ருஷ்யா பின்தங்கிய பொருளாதாரத்தை விட்டுச் சென்றது. உள்நாட்டு யுத்தம், அன்னிய ஏகாதிபத்தியத் தலையீடு (1918—1920), பின் மாபெரும் தேசபக்த யுத்தம் ஆகியவற்றால் பேரிழப்புகள் ஏற்பட்டன. அப்போதே கூட, உற்பத்தியை நவீனப்படுத்தும் கடமைகளும் உழைப்பையும் பொருளாயதச் சாதனங்களையும் சிக்கனப்படுத்தும் கடமைகளும் நாட்டின் முன் நின்றன. என்றாலும் கூடுதல் உழைப்புச் சக்தியை உற்பத்தியில் ஈடுபடுத்துவது, மூலப்பொருள்

## தொழிற்துறையின் அடிப்படைப் பிரிவுகளில் பொருளுற்பத்தியின் அளவுகள்

| | 1940 | 1960 | 1985 | 1985இல் உற்பத்தியளவு எவ்வளவு அதிகரித்துள்ளது: 1940ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் | 1960ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|---|
| மின்சக்தி, பில்லியன் கிலோவாட் மணி | 49.0 | 292.0 | 1,545.0 | 31.5 | 5.3 |
| எரிவாயுத் திரட்டையும் சேர்த்து எண்ணெய், மில்லியன் டன் | 31.1 | 147.9 | 595 | 19.1 | 4.0 |
| நிலக்கரி, மில்லியன் டன் | 165.8 | 509.6 | 726 | 4.4 | 1.4 |
| எரிவாயு, பில்லியன் கனமீ. | 3.2 | 45.3 | 643 | 200.9 | 14.2 |
| எஃகு, மில்லியன் டன் | 18.3 | 65.3 | 155 | 8.5 | 2.4 |
| இரசாயன உரங்கள், மில்லியன் டன் | 0.8 | 3.3 | 33.2 | 41.5 | 10.1 |

எடுப்பை அதிகரிப்பது, புதிய தொழில் நிறுவனங்களைக் கட்டுவது ஆகியவைதான் சோவியத் நாட்டிற்கு முக்கியமானவையாக இருந்தன. இடப்பரப்புக் காரணிகளின் பங்கு கணிசமானதாயும், இவற்றின் முக்கியத்துவம் விஞ்சியும் நின்றன.

பெரும் வளர்ச்சியடைந்த சோவியத் பொருளாதாரத்திற்கு உரித்தான வளர்ச்சிக் காரணிகள் வேறு மாதிரியானவையாக இருக்க வேண்டும். மிகப்பெரும் உற்பத்தி மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப உள்ளாற்றல் தோற்றுவிக்கப்பட்டுள்ள போது, மூலப் பொருளும் எரிபொருட்களும் ஏராளமாக எடுக்கப்படும் போது, இவற்றைச் சிக்கனமாக, அதிகபட்சம் செயல்வன்மையோடு பயன்படுத்துவதன் மீது கவனம் செலுத்துவது அவசியமாகிறது. அளவுநிலை மாற்றங்கள் பண்புநிலை மாற்றங்களாகின்றன. உற்பத்தியைத் தீவிரப்படுத்துவது இன்று முக்கியக் கடமையாகியுள்ளது.

இங்கே தரப்படும் புள்ளி விவரங்கள் உற்பத்தியின் பொருளாயத, தொழில்நுட்ப அடித்தளத்தில் ஏற்பட்டுள்ள அடிப்படை மாற்றங்களுக்கும், இதன் அளவுகளிலும் சோவியத் நாட்டின் உழைப்பாற்றலிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கும் சான்று பகர்கின்றன.

உற்பத்தி உள்ளாற்றலின் பொருளாயத அடிப்படையாகத் திகழும் நிலையான உற்பத்திச் சொத்துகள் 1985இல் 1,57,000

கோடி ரூபிள்களாக இருந்தன; இது 1940இல் இருந்ததை விட கிட்டத்தட்ட 22 மடங் கும் 1970இல் இருந்ததை விட மும்மடங் கும் அதிகம். விஞ்ஞானப் பணியாளர்களின் எண்ணிக்கை 1940இல் 98,300 நபர்களி லிருந்து 1985இல் கிட்டத்தட்ட 1.5 மில் லியன் வரை, அதாவது கிட்டத்தட்ட 16 மடங்கு கூடியுள்ளது. இன்று சோவியத் நாட் டில் உள்ள விஞ்ஞானப் பணியாளர்களின் எண்ணிக்கை உலகின் மொத்த விஞ்ஞானப் பணியாளர்களின் எண்ணிக்கையில் 1/4 பங் காகும். உயர் மற்றும் செகன்டரி கல்வி பயின்று தேசியப் பொருளாதாரத்தில் ஈடு பட்டுள்ள நிபுணர்களின் எண்ணிக்கை இதே ஆண்டுகளில் 2.4 மில்லியனிலிருந்து 33.9 மில்லியனாக, அதாவது 14 மடங்கிற்கும் மேலாகக் கூடியது.

இப்புள்ளி விவரங்களுக்கு வேறு விளக் கங்கள் தேவையில்லை. முந்தைய ஆண்டு களில் சோவியத் பொருளாதாரம் அடைந்த பெரும் வெற்றிகள் நாட்டில் முற்றிலுமாக ஒரு புதிய பொருளாதார நிலவரத்தை ஏற்படுத்தின, திசையமைவை அடியோடு மாற்றி, உற்பத்தியைப் பன்முக ரீதியில் தீவிரப்படுத்தும் கொள்கையை மேற்கொள் ளும் தேவை தோன்றியது.

ஏற்கெனவே கூறியபடி, பெருமளவிலான பொருளாதாரத்திற்கென்று தனி நியதி களும் வளர்ச்சிக் காரணிகளும் உண்டு. இதோ சில எடுத்துக்காட்டுகள்.

வலிமை மிகு உற்பத்தி உள்ளாற்றல் தோற்றுவிக்கப்பட்டதையடுத்து, பெருமளவில் உலோகம் சேர்ந்தது. குறிப்பாக, புதிய இயந்திரங்கள் வேகமாக உற்பத்தி செய்யப்படும் பொழுது பெருமளவு பழைய உலோகத்தைப் பொருளாதாரத்தில் பயன்படுத்தலாம். இவ்வாறாக, இரும்புத்தாது எடுப்பையும் வார்ப்பிரும்பு உற்பத்தியையும் பெரிதும் அல்லது முற்றிலும் அதிகரிக்காமல் புதிய இயந்திரங்களை மேன்மேலும் அதிகமாக உற்பத்தி செய்வது சாத்தியமாகிறது.

இவை ஏட்டு வாதங்கள் அல்ல என்பதை, 12ஆவது ஐந்தாண்டிற்கான திட்டவட்டமான கடப்பாடுகள் காட்டுகின்றன. வார்ப்பிரும்பு உற்பத்தியைக் கூட்டாமல், கோக் நிலக்கரி நுகர்வைக் கணிசமாகக் குறைத்து ரோலிங் உலோக உற்பத்தியை 116—119 மில்லியன் டன் வரை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

பரவலான நோக்கில் பார்த்தால் இரண்டாம் பட்ச மூலப்பொருட்களைப் பொருளாதாரச் சுழற்சியினுள் கொண்டு வருவதற்கான முற்றிலும் புதிய வாய்ப்புகள் ஆராயப்படுகின்றன. இவை பொருளாதார வளர்ச்சிக்கான பெரும் காரணிகளாகும். உக்ரேனில் 11ஆவது ஐந்தாண்டில் — இங்கே சிக்கனப்படுத்துவதில் நல்ல அனுபவம் கிட்டியுள்ளது—530 மில்லியன் டன்னுக்கும் மேலான இரண்டாம் பட்ச மூலப்பொருட்

களும் உற்பத்தியில் கிட்டிய கழிவுப் பொருட்களும் மீண்டும் பயன்படுத்தப்பட்டன. தொழில்நுட்ப அமைப்புகளில் அதே தண்ணீரை சுத்திகரித்து பயன்படுத்தியதானது தினேப்பர் என்ற பெரிய ஆற்றின் ஆண்டு நீரோட்டத்திற்குச் சமமானதாயிருந்தது.

பெருவீத பொருளாதாரத்தில் உற்பத்தியை வளர்த்து, தொழில்நுட்ப ரீதியாக நவீனப்படுத்துவதில் தேய்மான நிதியின் பங்கு அதிகரிக்கிறது; தொழிற்துறைமயப் படுத்தலின் ஆரம்பக் கட்டங்களில் இது சாத்தியமில்லை. இன்றே தேசியப் பொருளாதாரத்தில் தேய்மான நிதி முதலீடுகளில் பாதியை விஞ்சியுள்ளது. புதிய கட்டுமானங்களிலிருந்து, ஏற்கெனவே இயங்கும் தொழில் நிறுவனங்களை நவீனமயப்படுத்துவதன் மீது முக்கிய கவனத்தைத் திருப்பியதானது பொருளாதாரத்தைத் தீவிரமயப் படுத்துவதற்காக இந்த பெரும் வாய்ப்பைப் பயன்படுத்த உதவுகிறது.

சோவியத் பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்ற எல்லா காரணிகளையும் பன்முக ரீதியில் பயன்படுத்த வேண்டும்: ஜீவனுள்ள உழைப்பும் பருவடிவாக்கப்பட்ட உழைப்பும் நன்கு பயன்படுத்தப்பட வேண்டும், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டும், ஓர் அலகு பொருளுற்பத்திக்கான பொருட்களின் நுகர்வு குறைய வேண்டும், சொத்துக்கும் உற்பத்திப் பொருளுக்கும் இடையிலான

விகிதம் மேம்பட வேண்டும், முதலீடுகளின் செயல்வன்மை கூட வேண்டும், உற்பத்திப் பொருட்களின் தரம் மேம்பட வேண்டும். இவை எல்லாம் இருந்தால்தான் முழுமையான, சர்வாம்ச தீவிரப்படுத்தலைப் பற்றி கூற முடியும், தேசியப் பொருளாதாரம் உண்மையிலேயே தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாறி விட்டது என்ற முடிவிற்கு வர முடியும்.

இத்தகைய அணுகுமுறைதான் தேசியப் பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவது தொடர்பாக சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தீட்டிய நடவடிக்கைகளின் அடிப்படையாகத் திகழுகிறது. கட்சியின் 27ஆவது பேராயத்தில் குறிப்பிடப்பட்டபடி, தீவிரப்படுத்தல் பிரச்சினையைக் கட்சி பன்முக ரீதியில், பரந்த நோக்கில் அணுகுகிறது: ''சோவியத் பொருளாதாரம் விரைவாக வளரக் கூடிய ஒரு கட்டத்தை அடைந்துள்ளது. முன்னர் நடந்தது போல் மூலாதாரங்களை மேன்மேலும் பயன்படுத்துவதை விட்டு, உற்பத்தியை சகலவிதங்களிலும் தீவிரப்படுத்துவதன் மூலம் இவ்வளர்ச்சி அடையப்படலாம்... பொருளாதார, சமூக வளர்ச்சியைத் துரிதப்படுத்த இது ஒன்றுதான் சரியான வழி.''*

*Nikolai Ryzhkov, *Guidelines for the Economic and Social Development of the USSR for 1986—1990 and for the Period Ending in 2000,* Moscow, Novosti Press Agency Publishing House, 1986, pp. 15—16.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தக் கட்சியின் 27ஆவது பேராயம் பின்வரும் வழிகளைச் சுட்டிக் காட்டியது: ‘‘முதலில், எல்லாத் துறைகளிலும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு வழிகோலி, கைவசமுள்ள முதலீட்டை முக்கியத் துறைகளில் குவிக்க வேண்டும். இரண்டாவதாக, நம்பகரமான, நடைமுறையில் சோதிக்கப்பட்ட தொழில்நுட்ப புதினங்களைப் பெருமளவில் பயன்படுத்த வாய்ப்பேற்படுத்த வேண்டும்; இவை பழையவையாகும் முன் இவற்றை அதிகபட்சம் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். மூன்றாவதாக, முற்றிலும் புதிய இயந்திரங்களையும் தொழில்நுட்பத்தையும் தோற்றுவித்து, உழைப்பின் உற்பத்தித் திறனைப் பன்மடங்கு உயர்த்தக் கூடிய விஞ்ஞான, வடிவமைப்பு ஆராய்ச்சிகளை விரைவாகவும் செயல்முனைப்போடும் நடத்த வேண்டும். 12ஆவது ஐந்தாண்டில் இவை நடைமுறையில் அமலுக்கு வரும்.’’*

எப்போதும் பொருளாதாரக் கொள்கையின் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதே அதன் அங்கம் என்ற வகையில் முதலீட்டுக் கொள்கையின் பணியாகும். விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி உற்பத்தியைத் தீவிரப்

---

* Nikolai Ryshkov, *Guidelines...*, p. 27.

படுத்துவதை நோக்கி பொருளாதாரக் கொள்கை திரும்பும் போது முதலீட்டுக் கொள்கையிலும் உரிய மாற்றங்கள் தேவை.

துரிதப்படுத்தல் செயல்திட்டத்தின் அடிப்படையில், உற்பத்தித் துறையில் முதலீடுகளின் அதிகரிப்பு வேகங்களைக் கூட்டுவது சிறந்தது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. 11ஆவது ஐந்தாண்டில் இவை 16% அதிகரித்தன என்றால் 12ஆவது ஐந்தாண்டில் இவை 25% அதிகரிக்கும். இதற்குத் தேசிய வருமான வினியோக விகிதங்களை மாற்ற வேண்டும், குவிப்பு நிதியின் பங்கை உயர்த்த வேண்டும். உற்பத்திக் குவிப்பின் வேகங்கள் அதிகரிப்பதை ஒரு நிரந்தர நிகழ்ச்சிப் போக்காகக் கருதக் கூடாது. இது ஒரு முக்கியமான செயல்தந்திர நடவடிக்கையாகும்; இதன் அடிப்படையில் எதிர்காலத்தில் தேசிய வருமானத்தில் குவிப்பின் பங்கை ஸ்திரப்படுத்தி, சிறிது குறைக்கக் கூடச் செய்யலாம்.

பின்வரும் அம்சமும் கோட்பாட்டளவில் முக்கியமானது. உற்பத்திக் குவிப்புகளைச் செயல்வன்மையுடன் பயன்படுத்துவதானது தேசிய வருமான அதிகரிப்பு வேகங்களைத் துரிதப்படுத்த உதவும். இது நுகர்வு நிதியின் பங்கு ஒப்பீட்டளவில் குறையும் அதே சமயத்தில் இதன் மொத்த அளவை கணிசமாகக் கூட்ட உதவும். 11ஆவது ஐந்தாண்டில் 55 பில்லியன் ரூபிளாக இருந்த நுகர்வு நிதி அதிகரிப்பை 12ஆவது ஐந்தாண்

டில் 74 பில்லியன் ரூபிளாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

முதலீடுகளின் அளவு அதிகரிப்பதில் மட்டும் விஷயம் அடங்கியிருக்கவில்லை. இது ஆக்கபூர்வமான முதலீட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கான முன்தேவை, பொருளாயத நிபந்தனை மட்டுமே. முக்கியமானது என்னவெனில், பெரும் மூலாதாரங்களைச் செயல்வன்மையோடு பயன்படுத்த வகை செய்ய வேண்டும், துறை ரீதியிலும் புனருற்பத்தியிலும் நவீன முதலீட்டுக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும், பெருவீதக் கட்டுமானத்தை விவேகமாக ஒழுங்கமைக்க வேண்டும்.

இன்று சோவியத் நாட்டில் தேசியப் பொருளாதாரத்தைத் தொழில்நுட்ப ரீதியில் நவீனமயப்படுத்தும் துறைகளின் வளர்ச்சிக்கு முதலில் நிதி ஒதுக்கப்படுகிறது; இதுதான் நவீன முதலீட்டுக் கொள்கையின் முக்கியச் சிறப்பியல்பாகும். 12ஆவது ஐந்தாண்டில், இயந்திரக் கட்டுமானத்தின் வளர்ச்சிக்கான முதலீடுகள் 1.8 மடங்கு அதிகரிக்கும். இங்கும் இயந்திரக் கட்டுமானத்தின் தொழில்நுட்ப மட்டத்தில் பண்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தும் துறைகளின் மீது முக்கியக் கவனம் செலுத்தப்படுகிறது. தொழில்நுட்ப ரீதியில் நவீனமயப்படுத்தி உற்பத்தியைச் சீரமைக்கும் கொள்கை, இதற்காக ஒதுக்கப்படும் முதலீட்டின் பங்கை கணிசமாக அதிகரிக்கிறது.

முதலீட்டுக் கொள்கையின் முக்கியக் கடமைகளில் ஒன்று முதலீடுகள் சிதறுவதற்கு முடிவு கட்டி, கட்டுமானக் காலக் கெடுவைப் பெரிதும் குறைப்பதாகும். இன்று சோவியத் நாட்டில் ஒரே நேரத்தில் 3 லட்சம் பெரிய, சிறிய கட்டுமானங்கள் நடக்கின்றன. இப்படி சாதனங்கள் சிதறியிருக்கும் போது கட்டுமானக் காலக்கெடுவைக் குறைப்பதைப் பற்றிய பேச்சிற்கே இடமில்லை. அரசு ஒதுக்கும் பெரும் நிதிகள் பல ஆண்டுகளுக்கு முடங்கிப் போகின்றன, உரிய பயனைத் தருவதில்லை.

இப்படிப்பட்ட நிலையை மாற்ற, 1987ஆம் ஆண்டிலிருந்து, கறாரானக் காலக் கெடுக்களுக்கேற்ப திட்டமிட்டு கட்டுமானத்தை நிறைவேற்றும் முறைக்கு மாறுவதென்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி முடிவு செய்தது. கட்டு மான அளவைக் குறைக்க வேண்டும், கட்டுமானக் காலக்கெடுவைக் குறைந்தபட்சம் இரண்டு மடங்கு சுருக்க வேண்டும். கட்டுமானத்தின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தை வளர்ப்பது சம்பந்தமாக ஏற்கப்பட்ட தீர்மானம் பெரும் முக்கியத்துவமுடையது; கட்டுமானம் முழுவதையும் தொழிற்துறை அடிப்படைக்கு மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி, உற்பத்தியைத் தீவிரப் படுத்துவதில் கட்டமைப்புக் கொள்கை

பெரும் பங்காற்றுகிறது. எவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதென்று சரியாக முடிவு செய்வதும், துறைகளுக்கு உள்ளேயும் துறைகளுக்கு இடையேயும் சாலச்சிறந்த விகிதாச்சாரங்களை நிர்ணயிப்பதும் இங்கு மிக முக்கியமாகும். உயர்வான இறுதி விளைபயன்களை அடைவது, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் உயரிய வேகங்களுக்கும் சமூகக் கடமைகளின் நிறைவேற்றத்துக்கும் வகை செய்யும் துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பது, தொடர்ச்சியான சிக்கனம், நம்பகரமான பொருளாதார சீரிசைவிற்கு வகை செய்வது—இவைதான் இன்றைய காலகட்டத்தில் சோவியத் நாட்டில் கட்டமைப்புக் கொள்கையின் பொதுத் திசையமைவாகும்.

பன்முக விஞ்ஞான தொழில்நுட்ப, உற்பத்தி, சமூக பொருளாதார விசேஷ செயல் திட்டங்களின் நிறைவேற்றத்திற்குக் கட்டமைப்புக் கொள்கையில் முக்கிய இடம் உண்டு. அதே போல் பெரும் பல்துறை மற்றும் பிரதேச உற்பத்தி இணையங்களைத்*

---

* சோவியத் நாட்டில் பிரதேச உற்பத்தி இணையம் என்பது ஒரு ஐக்கிய தேசியப் பொருளாதார இணையத்தின் பகுதியாகும்; இது குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள பல்வேறு தொழிற்துறை, விவசாயத் துறை நிறுவனங்களின் ஒட்டுமொத்தம். இந்நிறுவனங்கள் பொருளாதார ரீதியில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை, இவை அப்பிரதேசத்தில் உள்ள இயற்கை வளங்

தோற்றுவித்து வளர்ப்பதும் முக்கியமான தாகும். இயந்திரக் கட்டுமான இணையம் மற்றும் சில பெரிய தேசியப் பொருளாதார இணையங்களின் வளர்ச்சியுடன் தொடர்புடைய கட்டமைப்புக் கொள்கையின் திட்டவட்டமான அம்சங்கள் மூன்றாவது அத்தியாயத்தில் ஆராயப்படுகின்றன.

தீவிரப்படுத்தல் மற்றும் உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்துதலின் முக்கியத் திசையமைவுகளில் ஒன்று பொருட்களின் தரத்தை அடிப்படையிலேயே உயர்த்துவதாகும். உற்பத்திக்குத் தேவையான பொருட்கள், நுகர்வுப் பொருட்கள் இரண்டின் தரத்தையும் உயர்த்த வேண்டும். சமீப ஆண்டுகளில் இத்திசையில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டாலும் பொருட்களின் தரம் சோவியத் பொருளாதாரத்தில் இன்னமும் பிரச்சினைக்குரிய விஷயமாகும்; இதனால் பல இடர்ப்பாடுகளும் பிரச்சினைகளும் தோன்றுகின்றன.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் பிரச்சினைகள் சம்பந்தமாக 1985 ஜூனில் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுங்காலை மி. செ. கர்பச்சோவ் பின்வருமாறு கூறினார்: ‘‘தரம் பற்றிய பிரச்சினையை

---

களையும் பொருளாதார சூழ்நிலைகளையும் பயன்படுத்துகின்றன.

ஒரே அடியில் தீர்க்க முடியாது. ஆனால் இப்பணியில் எந்தவித இழுபறிக்கும் இடமேயிருக்கக் கூடாது. யாருக்கும்—எந்த ஒரு தொழில் நிறுவனத்திற்கும், எந்த ஒரு கட்டமைப்பாளர், தொழில்நுட்ப நிபுணர், விஞ்ஞானி, தொழிலாளி, கூட்டுப் பண்ணை விவசாயிக்கும்—சுருங்கச் சொன்னால் எந்த ஒரு நேர்மையான உழைப்பாளிக்கும் இந்த விஷயத்தில் தள்ளி ஒரு பக்கமாக நிற்கும் உரிமை கிடையாது. சோவியத் பொருள் என்ற கௌரவத்திற்கான போராட்டத்திற்குக் கட்சி தீவிர ஆதரவளிக்கும், இதில் ஏனோதானோவென்று இருப்பவர்கள், இந்தக் கடுமையான பிரச்சினையின் தீர்விற்குத் தடையாக இருப்பவர்களைக் கட்சி நன்கு கண்டிக்கும்.''*

கட்சியின் 27ஆவது பேராயத்தில் பொருட்களின் தரத்தைப் பற்றி ஒளிவுமறைவற்று, கறாராகப் பேசப்பட்டது. தரத்தை முற்றிலுமாக மேம்படுத்தாமல் பொருட்களின் அளவைப் பற்றிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த முடியாது, எனவே துரிதப்படுத்தும் கடமையை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. இது புரிந்ததே. துரிதப்படுத்தல் என்றால் உழைப்பு மற்றும் பொருளாயத வளங்களைச்

---

* Mikhail Gorbachev, *Selected Speeches and Articles*, Moscow, Progress Publishers, 1986, p. 144.

சிக்கனமாகப் பயன்படுத்துவது என்று பொருள்; தரக் குறைவான பொருட்களின் உற்பத்தி என்பது இவ்வளங்களின் பயனற்ற செலவழிப்பாகும். தல்யாட்டி நகரத் தொழிலாளர்களைச் சந்தித்து உரையாடிய பொழுது மி. செ. கர்பச்சோவ் ஒரு நல்ல எடுத்துக்காட்டைத் தந்தார். நிபுணர்களின் மதிப்பீட்டின்படி, அன்றாடம் வீடுகளில் இயங்கும் மின்சாரக் கருவிகளை நவீனமயப்படுத்தினால் ஆண்டுதோறும் 20 பில்லியன் கிலோவாட் மணிக்கும் அதிகமான மின் சாரத்தைச் சிக்கனப்படுத்தலாம்.

இவ்வாறாக, பன்முக ரீதியில் தீவிரப் படுத்தும் கொள்கையில், சோவியத் பொருளாதாரத்தைக் குணாம்ச ரீதியில் மாற்றியமைக்கும் பல பரவலான நடவடிக்கைகள் அடங்கியுள்ளன. இது சோஷலிசத்தை மேம் படுத்தி, சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் செயல்திட்டத்தின் ஓர் அங்கமாகும். திட்டமிடப்பட்டுள்ள மாற்றங் களின் சாரம் இதுதான்: அளவுநிலைக் குறியீடுகளை விட்டு, தரக் குறியீடுகள், செயல் வன்மையைக் கணக்கில் கொள்ள வேண்டும்; இடைநிலை விளைபயன்களை விடுத்து இறுதி முடிவுகள் மீது கவனம் செலுத்த வேண்டும்; நிலையான உற்பத்திச் சொத்து களை விரிவுபடுத்தாமல், அவற்றை நவீன மயப்படுத்த வேண்டும்; எரிபொருள்-எரி சக்தி வளங்களைப் பெருக்காமல், அவற் றைப் பயன்படுத்துவதை மேம்படுத்த

வேண்டும்; விஞ்ஞானம் அதிகம் தேவைப்படும் துறைகளையும் உற்பத்தி மற்றும் சமூக உள்கட்டமைப்பையும் துரிதமாக வளர்க்க வேண்டும்.

இவ்வாறு திட்டமிடப்படும் மாற்றங்களின் அளவும் ஆழமும், இந்தத் துரிதப்படுத்தலின் மூல ஊற்றுகளை நிர்ணயிப்பதை அவசியமாக்குகின்றன.

### துரிதப்படுத்தலின் மூல ஊற்றுகள்

இந்த அம்சத்தை ஆராயும் முன், வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் துரிதப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும். எனவே அணிதிரட்ட வேண்டிய மூல ஊற்றுகளில் விஞ்ஞான, தொழில்நுட்ப, ஸ்தாபன, பொருளாதார அம்சங்கள் மீது மட்டுமின்றி, சமூக, அரசியல், ஆன்மீக அம்சங்கள் மீதும் கவனம் செலுத்த வேண்டும். இவை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்துதான் சோவியத் சமுதாயத்தை முன்னோக்கிய பாதையில் விரைவாக இட்டுச் செல்லும்.

நடைமுறை நோக்கில் இந்த எல்லா மூல ஊற்றுகளையும் இரண்டு முக்கியப் பிரிவுகளாகப் பிரிப்பது நல்லது. முதல் பிரிவில் உள்ளவற்றை, அதாவது ஏற்கெனவே உள்ள மூலாதாரங்கள், இயந்திரங்கள், உழைப்பு நேரத்தை இயன்ற அளவு சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும். இங்கே பெரும் வாய்ப்பு

கள் அடங்கியுள்ளன. அதிகச் செலவுகள் தேவைப்படாத, ஆனால் விரைவாக உருப்படியான பயன்களைத் தரவல்லவற்றிலிருந்து ஆரம்பிப்பது சிறப்பானதாயிருக்கும் என்று கட்சியின் 27ஆவது பேராயத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டது. ஸ்தாபன, பொருளாதார, சமூக மனவியல் காரணிகள், உற்பத்தி உள்ளாற்றலைச் சிறப்பாகப் பயன்படுத்துவது, உழைப்பு ஊக்குவிப்புகளின் பெரும் செயல்வன்மை, ஸ்தாபன அமைப்பையும் கட்டுப்பாட்டையும் வலுப்படுத்தல், நிர்வகிப்பை மேம்படுத்தல் ஆகியவை இங்கு குறிப்பிடப்படுகின்றன.

சாதாரணமாக இவற்றிற்குக் கூடுதல் நிதி பெருமளவில் தேவையில்லை. இங்கு முற்றிலும் வேறொன்று தேவை—மேலான நிர்வாகம் வேண்டும், ஸ்தாபன ஒழுங்கமைப்பையும் பொறுப்பையும் உயர்த்த வேண்டும், கட்டுப்பாட்டை வலுப்படுத்த வேண்டும், நன்கு சிந்தித்து அவரவர்க்கு ஏற்ற வேலைகளை வழங்க வேண்டும், புதிய சூழ்நிலையில் இயங்க முடியாதவர்களைத் தயக்கமின்றி மாற்ற வேண்டும்.

துரிதப்படுத்தலின் இந்த மூல ஊற்றுகளை அணிதிரட்டுவது முக்கியமான, உடனடிக் கடமையாகும். உள்ளதைச் சரிபடுத்தி ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்தாமல் முன்னோக்கிச் செல்ல முடியாது, குணாம்ச ரீதியாகப் புதிய கடமைகளை நிறைவேற்ற முடியாது. இத்தகைய வாய்ப்பு

கள் ஏராளமாக உள்ளன என்பது முக்கிய மாகக் குறிப்பிடப்பட வேண்டியதொரு அம்சமாகும். இவை ஒவ்வொரு துறையிலும் பிரதேசத்திலும் உழைப்பாளர் கூட்டிலும் உள்ளன.

இன்று தொழிற்துறையில் மட்டும் 10—15% உழைப்பு நேரம் இழக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. நிர்வகிப்பை மேம்படுத்தி, ஸ்தாபன ஒழுங்கமைப்பையும் கட்டுப்பாட்டையும் வலுப்படுத்தி அவற்றின் மூலம் இந்த இழப்பை அகற்றினால் அது உற்பத்தியளவையும் கணிசமாகக் கூட்டும், உழைப்பின் உற்பத்தித் திறனையும் உயர்த்தும். இக்கூடுதல் அதிகரிப்பு என்பது கணிசமானது. ஏனெனில் இன்று 1% தொழிற்துறைப் பொருட்களின் மதிப்பு மட்டும் கிட்டத்தட்ட 8 பில்லியன் ரூபிளாகும்.

விவசாயப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து இறுதி நுகர்வாளர்கள் வரை செல்லும் வழியில் ஏற்படும் இழப்பு மொத்த விவசாய உற்பத்தியில் சுமார் 1/5 பங்காகும். சாகுபடி செய்ததை முழுவதுமாகப் பேணிக்காத்து, விவேகமாக சேமித்து பதப்படுத்தி, இழப்பைத் தவிர்த்தால் உணவுப் பொருள், விவசாய மூலப்பொருள் உற்பத்தியை 20% உயர்த்த முடியும். இது 12ஆவது ஐந்தாண்டில் திட்டமிடப்பட்டுள்ள விவசாயப் பொருளின் உற்பத்தி அதிகரிப்பை விடக் கணிசமாகக் கூடுதலாகும்.

இவ்வளவு வாய்ப்புகள் இருக்கின்றன.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி இவற்றைப் பயன்படுத்துவது முதற் கடமையாகும். அதே சமயம், இந்த முதல் பிரிவு காரணி களைப் பயன்படுத்துவதன் முக்கியத்து வத்தைச் சற்றும் குறைக்காமல், இவற்றின் மட்டான தன்மையையும் கவனிக்க வேண் டும்.

முதலாவதாக, மேற்கூறியவை அனைத் தும் தம் தன்மையில் ஒரேயொரு முறை மட்டுமே பயன்படுத்தத் தக்கவை. எடுத்துக் காட்டாக, உழைப்பு நேர இழப்பு முழுவதை யும் தவிர்த்து குறிப்பிட்ட பயனைப் பெற்ற பின், இக்காரணி தீர்ந்து போகிறது. தொழில்நுட்பம், இயந்திரங்கள், உற்பத்திக் கட்டமைப்பு, ஊழியர்களின் தேர்ச்சி மட் டம் ஆகியவை மாற்றமின்றி அப்படியே இருந்தால் மேற்கொண்டு இதனால் எந்த விதப் பயனும் கிட்டாது. விவசாயப் பொருட்களின் இழப்பைத் தவிர்க்கும் விஷ யத்திலும் இதே மாதிரிதான்.

இரண்டாவதாக, முதல் பிரிவு காரணி களினால் அடையப்படும் கூடுதல் துரிதப் படுத்தல் எவ்வளவு முக்கியமானதாக இருந் தாலும், இதனால் தேசியப் பொருளா தாரத்தில் குணாம்ச ரீதியான அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த முடியாது; உயர் வான உலக மட்டங்களை அடைய முடி யாது; பெரும் சமூகக் கடமைகளை நிறை வேற்றவல்ல நல்ல செயல்வன்மையான பொருளாதாரத்திற்கு மாற முடியாது.

6*

ஆனால் துரிதப்படுத்தலின் கடமையே இது தானே. சமூக உழைப்பின் உற்பத்தித் திறனிலும், பொருட்களின் தரத்திலும், உற்பத்தியின் செயல்வன்மையிலும் உயரிய உலக மட்டத்தை அடைவதுதான் இறுதி நோக்கமாகும்.

இவ்வளவு பெரும் மாற்றங்களை அடைய, நிரந்தரமாக இயங்கவல்ல காரணிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பது தெளிவு. இவை தனிப்பட்ட அதிகரிப்பைத் தராமல், பொருளாதாரத்தைக் குணாம்ச ரீதியாகப் புதிய மட்டத்திற்குக் கொண்டு செல்ல வல்லவையாக இருக்கும். இக்காரணிகள் எல்லாம் சேர்ந்துதான் துரிதப்படுத்தலுக்கான மூல ஊற்றுகளின் இரண்டாம் பிரிவை ஏற்படுத்துகின்றன.

சமூக பொருளாதார துரிதப்படுத்தலுக்கான இக்காரணிகள் யாவை? உற்பத்திச் சக்திகளில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்த வல்ல விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சியிலிருந்து இவற்றின் பகுப்பாய்வை ஆரம்பிக்க வேண்டும். நம்மைச் சுற்றியுள்ள உலகமும் அதை அறியும் நிகழ்ச்சிப் போக்கும் எப்படி முடிவற்றதோ அதே போல் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றமும் தன் தன்மையில் முடிவற்றது. இந்த முன்னேற்றம் உற்பத்தியில் புரட்சிகரமான மாற்றங்களைச் செய்கிறது, சமூக உழைப்பின் பயன் தன்மையைப் பன்மடங்கு அதிகப்படுத்து

கிறது, அதன் மூலம் சோஷலிசத்தில் தனி நபரின் பன்முக வளர்ச்சிக்கான உள்ளாற்றல் தோற்றுவிக்கப்படுகிறது. எனவே விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைச் சரிவரத் திறமையாகப் பயன்படுத்துவதானது சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த வகை செய்கிறது.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆற்றும் பங்கைப் புரிந்து கொள்வதென்பது சமூக நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய மார்க்சிய-லெனினியப் பகுப்பாய்வின் பாரம்பரியமாகும். இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே லெனின் பின்வருமாறு எழுதினார்: ''பொருளாதார நிபுணர் எப்போதும் முன்னோக்கி, தொழில்நுட்ப முன்னேற்றத் திசையில் பார்க்க வேண்டும். இல்லாவிடில் அவர் பின்தங்கியவராவார், ஏனெனில் யாருக்கு முன்னோக்கிப் பார்க்க விருப்பமில்லையோ அவர் வரலாற்றில் பின்தங்கிப் போவார்; இதில் நடுநிலையே கிடையாது, இருக்கவும் முடியாது.''* இன்று முன்னோக்கிப் பார்ப்பது என்றால் உயரிய விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளைப் பார்ப்பது, விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் நவீன கட்டம் தோற்றுவிக்கும் வாய்ப்புகளைப் பார்ப்பது என்று பொருள்.

ஆனால் விஞ்ஞான தொழில்நுட்ப முன்

* V. I. Lenin, *Collected Works*, vol. 5, p. 142.

னேற்றம் என்பது மற்ற காரணிகளிலிருந்து பிரிந்து தனியாக நிற்கும் காரணியல்ல. இம் முன்னேற்றத்தின் வேகமும் செயல்வன்மையும் சமூக பொருளாதார பின்விளைவுகளும், பொருளாதார சூழ்நிலை, உறவுகள், நிர்வாகக் கட்டமைப்பு, ஜனநாயக அமைப்புகளின் வளர்ச்சி, நாட்டில் நிலவும் தார்மீக, மனோதத்துவச் சூழல், இன்னும் பலவற்றைப் பெரிதும் பொறுத்தவையாகும். சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் நன்கு சீரிசைவாக மேம்படுத்தும் பன்முக நடவடிக்கைகளால்தான் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் துரிதப் படுத்த முடியும், மொத்தத்தில் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோல முடியும்.

தொழில்நுட்ப, இயந்திர வளர்ச்சி மட்டம் சமமாயிருந்தாலும் முதலாளித்துவத்தை விட உயர்வான உழைப்பின் உற்பத்தித் திறனுக்கு வகை செய்யக் கூடிய வாய்ப்பு சோஷலிசத்திடம்தான் உள்ளது. உற்பத்தியை நவீனமயப்படுத்தி, இதன் செய்ல்வன்மையை உயர்த்தி, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தை வளர்க்க முதலாளித்துவத்தைத் தூண்டும் உந்து சக்திகளைக் குணாம்ச ரீதியில் விஞ்சக் கூடிய சக்திகள் சோஷலிசத்தின் வசம் உள்ளன. சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் வலிமை மிக்க, குன்றா மூல ஊற்றுகள் என்ற வகையில் இந்த சமூகச் சக்திகளை அதிகபட்சம் முழுமையாகவும் செயல்வன்

மையோடும் பயன்படுத்துவதுதான் இன்றுள்ள கடமையாகும்.

தொகுத்துப் பார்த்தால், பொருளாதாரத் துறையில் பொது சோஷலிசச் சொத்துடைமையால் தோற்றுவிக்கப்பட்டு, சோஷலிசத்தின் வரலாற்று மேம்பாடுகளாக விளங்கும் உந்து சக்திகள் இரண்டு சக்திகள்தான். முதல் சக்தி திட்டப் பொருளாதாரம், இரண்டாவது சக்தி உற்பத்தி மற்றும் நாட்டின் முழு எஜமானனாக மாறியுள்ள மனிதனுக்கு சமுதாயத்தில் உள்ள புதிய நிலை.

திட்டமிட்டப் பொருளாதாரம் இருந்தால்தான் சக்திகளைத் தங்கு தடையின்றி முக்கியத் திசைகளில் குவிக்க முடியும், நவீன விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகள் மற்றும் இடையறாது மாறி வரும் சமூகத் தேவைகளுக்கேற்ப மிகவும் நெளிவு சுழிவோடும் உடனுக்குடனும் உற்பத்தியை மாற்றியமைக்க முடியும். இதன் உதவியால்தான் பொது மக்களின் நலன்களை முதலிடத்தில் வைக்கலாம், சுயநலன்களை அகற்றி அதன் மூலம் சமூக முன்னேற்றப் பாதையில் உள்ள சமூகத் தடைகளை அகற்றலாம். இன்று முக்கியமானது என்னவெனில் இப்பொருளாதாரத்தின் ஆக்கபூர்வமான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதும் நிர்வாக முறையைக் காலத்தின் தேவைகளுக்கு ஏற்றபடி மாற்றியமைப்பதுமாகும்.

சோஷலிச சமுதாயத்தில் உழைப்பாளி நாட்டின் உண்மையான எஜமானனாக ஆகி

யுள்ளான். சமூக சக்திகளின் குன்றா மூல ஊற்றும், உயர்வான, அதிகபட்சம் விவேக மான, செயல்வன்மையுள்ள உழைப்பு மற்றும் உற்பத்தி ஒழுங்கமைப்பை அடைவதற்கான முன்தேவையும் மேற்கூறிய அம்சத்தில் தான் அடங்கியுள்ளன. மக்கள் தம் வேலைகளைப் பொறுப்போடு செய்வதை விட, தாம்தான் உண்மையான எஜமானர்கள் என்று உணருவதை விட, உழைப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் சிறந்த ஊக்குவிப்புகள் எதுவுமில்லை. இங்கும் முக்கியமானது என்னவெனில் மக்கள் திரளினரின் ஆக்க பூர்வமான ஆற்றலுக்கான முழு வாய்ப்பை ஏற்படுத்துவதாகும்.

எனவே விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம், நிர்வாக முறையை மேம்படுத்துவது, மானுடக் காரணியின் பங்கை அதிகப் படுத்துவது ஆகியவைதான் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நீண்டகால, சக்தி மிக்க காரணிகளாகும் என்று முடிவு செய்யலாம். இவை ஒவ்வொன்றையும் பற்றி பின்னால் தனித்தனியே விரிவாகப் பார்க்கலாம்.

இக்காரணிகள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று பரஸ்பரத் தொடர்புடையவை என்பதை மட்டும் இங்கே கோடிட்டுக் காட்ட வேண்டும். இவற்றில் ஒன்று கூடத் தனியாக எவ்விதப் பயனையும் தராது. எடுத்துக்காட்டாக, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதன் மீது மட்டும்

கவனம் செலுத்தி, நிர்வகிப்பு முறையை மேம்படுத்துவதன் மீதும் மக்கள் திரளினரின் சமூக செயலாக்கத்தைத் தீவிரப்படுத்துவதன் மீதும் கவனம் செலுத்தாமலிருக்க முடியாது. இப்படிப்பட்ட அணுகுமுறையில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதுடன் தொடர்புடைய பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடாது.

மாறாக, பிரச்சினையைப் பன்முக ரீதியில் அணுகும் போது—இதுதான் இன்றைய அணுகுமுறையின் சிறப்பியல்பாகும்—அது துரிதப்படுத்தலின் ஒவ்வொரு காரணியையும் செயல்வன்மையோடு பயன்படுத்த உதவுவதோடு கூட கூடுதல் விளைபயனையும் பெற உதவுகிறது.

இறுதியில், நாம் பின்பற்றி வந்த தர்க்கமே நம்மை இன்னொரு அடிப்படைப் பிரச்சினைக்கு, அதாவது, உழைப்பின் உற்பத்தித் திறனில் உயர் மட்டத்தை அடையும் பிரச்சினைக்கு இட்டு வந்துள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

### உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகபட்சம் உயர்த்துதல்

இது மிக முக்கியமான, அதே சமயம் சிக்கலான பிரச்சினை என்பதால் இதைச் சற்று விரிவாகப் பார்க்க வேண்டும், இது பற்றி மார்க்சிய-லெனினியத் தத்துவம் கூறும் அடிப்படைக் கருத்துநிலைகளைப் பார்ப்

போம். சமுதாய வளர்ச்சியில் உழைப்பின் உற்பத்தித் திறனுக்கு எவ்வளவு பெரிய பங்குள்ளது என்பது அதிலிருந்து தெளிவாகும்.

உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதானது, எல்லா வரலாற்று சகாப்தங்களுக்கும் உரித்தான, சர்வபொது விதியாகிய நேர சிக்கன விதியின் செயல்பாட்டைப் பிரதிபலிக்கிறது. மார்க்சின் கருத்துப்படி, நேர சிக்கன விதிதான் சோஷலிசத்திலும் முதல் பொருளாதார விதியாக, அதாவது சமுதாயத்தின் முன்னோக்கிய வளர்ச்சியையும் சமுதாய முன்னேற்றத்தின் வேகங்களையும் நிர்ணயிக்கும் விதியாக இருக்கும். ''...நேர சிக்கனமும் அதே போல் உற்பத்தியின் பல்வேறு துறைகளில் உழைப்பு நேரத்தைத் திட்டமிட்டு பகிர்ந்தளிப்பதும் தான் கூட்டு உற்பத்தியின் அடிப்படையிலான முதல் பொருளாதார விதியாக இருக்கும்'' என்று அவர் எழுதினார்.*

நேர சிக்கனமும் அதன் விளைவாக உழைப்பின் உற்பத்தித் திறனின் மட்டமும் மாற்றமும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் பொதுமைப்படுத்தப்பட்ட, திரட்டப்பட்ட வெளிப்பாடாகும். மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான பரஸ்பரச் செயலாக்கம், இயற்கைச் சக்திகளை மனி

---

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 28, Moscow, Progress Publishers, 1986, p. 109.

தன் எந்த அளவிற்கு அடக்கியாளுகிறான், தன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மனிதனால் இவற்றை எந்த அளவிற்குப் பயன்படுத்த முடியும் ஆகியவற்றை இவை காட்டுகின்றன. ஒரு குறிப்பிட்ட வளத்தை இயற்கையிலிருந்து எடுத்து, அதன் உதவியால் தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள எவ்வளவுக்கெவ்வளவு குறைவான நேரம் தேவைப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகம். சமூக உழைப்பின் உற்பத்தித் திறனில், உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் பொருள் மற்றும் தனிநபர் காரணிகளின் அளவும் தரமும் செயல்வன்மையும் பிரதிபலிக்கின்றன.

எந்த ஒரு நவீன தொழில்நுட்பமும் இயந்திர முறையும், எந்த ஒரு உற்பத்தி ஒழுங்கமைப்பும் நேரத்தைச் சிக்கனப்படுத்தினால் தான் முற்போக்கானவை. ''உண்மையான சிக்கனம் உழைப்பு நேரத்தைச் சிக்கனப் படுத்துவதில் (உற்பத்திச் செலவுகளின் குறைந்தபட்சம், உற்பத்திச் செலவுகளைக் குறைந்தபட்சமாக்குவது) அடங்கியுள்ளது. ஆனால் இந்தச் சிக்கனம், உற்பத்திச் சக்தியின் வளர்ச்சிக்கு சமமானது'' என்று மார்க்ஸ் எழுதினார்.*

சமுதாயம் முன்னோக்கி வளரும்

---

* K. Marx, *Grundrisse der Kritik der Politischen Ökonomie*, Moskau, 1939, S. 599.

பொழுது, பொருளாதார, சமூக, ஆன்மீக வளர்ச்சி நடைபெறும் பொழுது சமுதாய அமைப்புகளின் நியதியான மாற்றம் நடைபெறுகிறது. இந்த சமுதாய அமைப்புகள் ஒவ்வொன்றும் உயர்வான உழைப்பின் உற்பத்தித் திறனைத் தோற்றுவித்து அதற்கு முன்னிருந்த அமைப்பை வெற்றி கொண்டு அதை மாற்றுகிறது. கம்யூனிச சமுதாய அமைப்பும் இதன் முதல் கட்டமாகிய சோஷலிசமும் இந்த சமுதாய முன்னேற்றத்தின் பொது நியதிகளின் வரம்புகளில்தான் தோன்றி நிலைபெறுகின்றன.

மாபெரும் தொடக்கம் என்ற கட்டுரையில் லெனின் இந்த நியதியைப் பற்றித்தான் குறிப்பிடுகிறார். ''புதிய சமுதாய அமைப்பு வெற்றி பெற, இறுதியாய்ப் பார்க்குமிடத்து, உழைப்பின் உற்பத்தித் திறன் தான் மிக முக்கியமானது, தலைமையானது. உழைப்பின் உற்பத்தித் திறனில் பண்ணையடிமை முறை அறியாத உயர் நிலையை முதலாளித்துவம் உண்டாக்கிற்று. உழைப்பின் உற்பத்தித் திறனில் மேலும் மிக உயர்ந்த ஒரு புதிய நிலையை உண்டாக்குவதன் மூலம் சோஷலிசமானது முதலாளித்துவத்தை அடியோடு தோற்கடிக்க முடியும், தோற்கடிக்கவும் போகிறது.''*

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 9, பக்கங்கள் 322—323.

ஒரு சமுதாய அமைப்பு இன்னொன்றால் மாற்றப்படுவதுடன் விஷயம் முடிந்து விடவில்லை. இந்த சமுதாய அமைப்புகளினுள் ஒவ்வொன்றிலும் முன்னேற்றம், ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்தை நோக்கிய மாற்றம், இறுதியாகப் பார்க்குமிடத்து, உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் குணாம்ச ரீதியான மாற்றங்களினால், நேரம் எவ்வளவு சிக்கனப்படுத்தப்படுகிறது என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது.

எனவே, சோவியத் நாட்டின் உள்நாட்டுக் கடமைகள்தான் உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெரிதும் உயர்த்த வேண்டியதை அவசியமாக்குகின்றன. இந்த வழியில்தான் சோஷலிச அமைப்பின் மேம்பாடுகளையும் வாய்ப்புகளையும் முழுமையாகப் பயன்படுத்த முடியும், சோவியத் சமுதாயத்தை குணாம்ச ரீதியில் முற்றிலும் புதிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல முடியும். உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதானது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவசியமான பொருளாயதஅடித்தளத்தைத் தோற்றுவிக்கிறது, உழைப்பு நேரத்தைக் குறைத்து, ஓய்வு நேரத்தை அதிகப்படுத்த வழிகோலுகிறது, இதன் மூலம் தனிநபரின் சீரிசைவான, பன்முக வளர்ச்சிக்கு உதவுகிறது.

சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பில் ஜீவனுள்ள உழைப்பு மற்றும் பருவடிவாக்கப்பட்ட உழைப்பு இரண்டின்

சிக்கனமும் பிரதிபலிக்கிறது என்பது தெரிந் ததே. இது குறிப்பிட்ட பொருளின் உற் பத்திக்கு ஆகும் செலவுக் குறைவில் நேரடி யாகவும், குறிப்பிட்ட சமூகத் தேவையைப் பூர்த்தி செய்ய ஆகும் உழைப்பு குறையும் சிக்கலான வடிவிலும் வெளிப்படுகிறது. இப்படித் திட்டவட்டமாக வேறுபடுத்திப் பார்ப்பது தத்துவார்த்த ரீதியிலும் நடை முறை ரீதியிலும் பெரிதும் முக்கியமானது; அதுவும் உற்பத்தியின் கட்டமைப்பு விரை வாக மாறி வரும் பொழுது, உற்பத்திப் பொருட்கள் தீவிரமாகப் புதுப்பிக்கப்பட்டு வரும் பொழுது இது முக்கியம்.

வழக்கமான தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி ஒரு குறிப்பிட்ட அலகு வழக்க மான பொருளை உற்பத்தி செய்ய ஆகும் உழைப்பைக் குறைக்கக் குறிப்பிட்ட வரம்பு கள் உண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு கிலோவாட் மணி மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஆகும் நிலக்கரியையோ, ஒரு சட்டை யை உருவாக்க ஆகும் பஞ்சையோ முடி வின்றி குறைத்துக் கொண்டே போக முடி யாது. ஆனால் முற்றிலும் புதியதொரு தொழில்நுட்பத்திற்கு மாறுவதானது குறிப் பிட்ட சமூகத் தேவையைப் பூர்த்தி செய்ய ஆகும் செலவுகளைத் தொடர்ந்து குறைக்க உதவும்.

எனவே உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கு களை நவீனமயப்படுத்துவது, உழைப்பு

நேர இழப்பைக் குறைப்பது ஆகியவற்றோடு கூட முற்றிலும் புதிய இயந்திரங்கள், தொழில்நுட்பத்தைப் புகுத்துவது பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. இதே போல்தான் கடந்தகால, பருவடிவாக்கப்பட்ட உழைப்பைச் சிக்கனப்படுத்தும் விஷயத்திலும், மொத்தமாக மூலப்பொருள் சிக்கனத்திலும் நடைபெறுகிறது. இங்கே வழக்கமான நிகழ்ச்சிப் போக்குகளில் மூலப்பொருள் செலவழிப்பு குறைவதோடு கூட, முற்றிலும் புதிய பொருட்களையும் முற்றிலும் புதிய முறைகளையும் பயன்படுத்துவதும் மேன்மேலும் அதிகப் பங்காற்றத் தொடங்குகிறது.

நேர சிக்கனத்தின் தன்மை மற்றும் வடிவங்களைப் பற்றிய இந்தக் கருத்துகள் அனைத்தும் நடைமுறையுடன், சோவியத் நாட்டில் உற்பத்தியைப் பன்முக ரீதியில் தீவிரப்படுத்தும் திட்டத்தைத் தீட்டி செயல்படுத்துவதுடன், சமூக உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெரிதும் உயர்த்துவதுடன் நேரடியாகத் தொடர்புடையவை. கம்யூனிசத்தை நோக்கி சோவியத் நாடு செல்லும் பாதையில் இந்தக் கடைசி அம்சத்திற்குத் தீர்மானகரமான முக்கியத்துவம் உண்டு. அதுவும் உழைப்பின் உற்பத்தித் திறனில் உயர்வான உலக மட்டங்களை அடைவது வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் வரலாற்று வரம்புகளுக்குள் நடைபெற வேண்டும்.

ஒரு நீண்ட வரலாற்றுக் கட்டத்தின் புள்ளி விவரங்களை ஆராய்ந்தால்—வெவ் வேறு சமூக அமைப்புகளின் வாய்ப்புகளை ஒப்பிடும் போது இப்படிப்பட்ட அணுகு முறைதான் வேண்டும், ஏனெனில் இது குறு கிய கால வீழ்ச்சிகள், எழுச்சிகள் மீது பெரும் கவனம் செலுத்துவதில்லை — உழைப் பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் சோஷலிசத்தின் மேம்பாடுகள் நன்கு விளங் கும். சமூக உழைப்பின் உற்பத்தித் திறனின் ஆண்டு சராசரி அதிகரிப்பு 1951—1984இல் சோவியத் யூனியனில் 6% ஆகவும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 2.7% ஆகவும் இருந்தது.

ஒரு சில சோஷலிச நாடுகளிலும் முத லாளித்துவ நாடுகளிலும் தொழிற்துறையில் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு வேகங்களைப் பார்ப்போம் (1950ஆம் ஆண்டு=1).

இந்தப் புள்ளி விவரங்கள் சோஷலிசத் தின் மேம்பாடுகளுக்குத் திட்டவட்டமான நிரூபணமாகும். உறுதியோடும் நன்னம்பிக் கையோடும் எதிர்காலத்தைப் பார்க்க இப்புள்ளி விவரங்கள் வாய்ப்பளிக்கின்றன. அதே சமயம் முன்நிற்கும் சிக்கலான பிரச் சினைகள் நிம்மதிக்கு வாய்ப்பளிக்கவில்லை. இப்போதைக்கு, உயர் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உழைப்பின் உற் பத்தித் திறன் அதிகம், சில சமயங்களில் சோஷலிச நாடுகளில் உள்ளதை விடக் கணிசமாக அதிகம். அதுவும் சோஷலிசத்தின்

| | 1970 | 1984 |
|---|---|---|
| சோவியத் ஒன்றியம் | 3.4 | 6.0 |
| பல்கேரியா | 3.7 | 7.6 |
| ஹங்கேரி | 2.5 | 4.9 |
| ஜெர்மன் ஜனநாயக குடியரசு | 3.9 | 7.2 |
| போலந்து | 3.4 | 6.2 |
| ருமேனியா | 4.9 | 10.5 |
| செக்கோஸ்லொவாக்கியா | 3.1 | 5.5 |
| அமெரிக்க ஐக்கிய நாடு | 1.9 | 2.7 |
| கிரேட் பிரிட்டன் | 1.9 | 3.1* |
| இத்தாலி | 3.6 | 5.0* |
| கானடா | 2.2 | 2.7* |
| ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு | 2.9 | 4.3* |
| பிரான்ஸ் | 2.5 | 3.8* |
| ஜப்பான் | 7.1 | 11.0 |

* 1983இல்

மேம்பாடுகள் தாமாகவே செயல்படா. மேலே குறிப்பிட்ட சில முக்கியமான காரணங்களினால் 1970ஆம் ஆண்டுகளின் இறுதியில், 1980ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் சோவியத் நாட்டிலும் இன்னும் சில சோஷலிச நாடுகளிலும் உழைப்பின் · உற்பத்தித் திறன் குறைந்தது.

அத்தியாயம் மூன்று

# பொருளாதாரக் கொள்கையின் அடிப்படைப் பிரச்சினை

திட்டமிட்ட பொருளாதார, சமூக கடமைகள் அனைத்தையும் நிறைவேற்ற உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்கு விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடிப்படையிலேயே துரிதப்படுத்துவது ஒன்றுதான் வழி. இது சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படைப் பிரச்சினையாகும்.

1985 ஜூனில் நடந்த கட்சி தேத்திய கமிட்டியில் நடைபெற்ற கூட்டத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவது சம்பந்தமான கோட்பாட்டு வழிப்பட்ட திசையமைவுகள் ஆராயப்பட்டன. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவது என்பது நவீன பொருளாதாரச் செயல்திட்டத்தின் முக்கியத் திசையமைவு, தேசியப் பொருளாதாரத்தைத் தீவிரப்படுத்தி, இதன் செயல்வன்மையை உயர்த்துவதற்கான முக்கிய உந்துகோல், முக்கிய சமூக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பிரதான வழி என்று அக்கூட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்

டது. இம்முன்னேற்றத்தை அடைய பரவலான உடனடி மற்றும் எதிர்கால பொருளாதார, ஸ்தாபன அமைப்பு, சமூக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும், கலாசாரத் துறையையும் கல்வித் துறையையும் வளர்க்க வேண்டும், நிர்வாகத் துறையின் மேல்மட்டங்களிலும் தேசியப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் மாற்றங்களைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு உழைப்பாளர் கூட்டும், ஒவ்வொரு கம்யூனிஸ்டும், ஒவ்வொரு சோவியத் மனிதனும் இப்பணிகளுடன் சம்பந்தப்பட்டவராக இருப்பார்.

இன்று சோவியத் நாட்டில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப் படுத்துவது என்பது மிக முக்கியப் பொருளாதாரக் கடமை மட்டுமல்ல, இது ஒரு அடிப்படை அரசியல் கடமையுமாகும். நவீன விஞ்ஞான சாதனைகள் கம்யூனிசக் கட்டுமானத்திற்குச் சேவை புரியுமாறு செய்ய வேண்டும், வல்லமை பொருந்திய அதி நவீன இயந்திரங்கள் இப்பணிக்கு உதவ வேண்டும், இவ்வாறாக சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அடிப்படை வேலைத் திட்ட லட்சியங்களை நிறைவேற்றத் தேவையான உறுதியான பொருளாயத தளத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த அடிப்படையில்தான் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் குணாம்ச ரீதியாகப் புதிய மட்டத்திற்கு உயர்த்த முடியும்.

## விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றக் கொள்கை

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதன் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்த வேண்டும், சோவியத் சமுதாயத்தின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளம் முழுவதையும் மாற்றியமைக்க வேண்டும்.

பிரச்சினையின் தொழில்நுட்ப அம்சங்களை விரிவாகப் பார்ப்பது இந்நூலின் நோக்கமல்ல. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பாலான பொருளாதார, சமூக கோரிக்கைகள் நியதியாக அதிகரித்துள்ளன என்பதை மட்டும் இங்கு கோடிட்டுக் காட்ட வேண்டும். பொருளாதார நோக்கிலும் சமூக நோக்கிலும் செயல்வன்மை மிக்க தொழில்நுட்ப வளர்ச்சி வகைகளைத் தேர்ந்தெடுக்கும் அவசியத்தின் காரணமாகத்தான் மேற்கூறிய கோரிக்கைகள் கறாராகியுள்ளன.

சோஷலிசத்தில் புதிய இயந்திரங்களை எல்லையற்று பயன்படுத்தலாம் என்ற கருத்து ஒரு நேரத்தில் பரவியிருந்தது. இது கணிசமான கேடிழைத்தது. வெளிப்பார்வைக்குக் கவர்ச்சிகரமான இச்சூத்திரத்தின் அடிப்படையில் சில குறிப்பிட்ட நடைமுறை முடிவுகள் செய்யப்பட்டன; இவை எந்த ஒரு இயந்திரத்தையும்—அது எவ்வளவு

விலையுயர்ந்ததாக இருந்தாலும் சரி—பயன் படுத்துவதை நியாயப்படுத்தின, இது நபர் ஒருவருக்கான உற்பத்தியை, ஜீவனுள்ள உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தி னால் மட்டும் போதும் என்ற மனப்பாங்கை ஏற்படுத்தியது.

உண்மையில் சோஷலிசப் பொருளா தாரத்தில் புதிய தொழில்நுட்பத்தையும் இயந்திரங்களையும் பயன்படுத்த கறாரான கோரிக்கைகளும் வரம்புகளும் உண்டு. ஏனெ னில் இன்று தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏராளமான வகைகள் உண்டு. இவற்றில் அதிகபட்ச பொருளாதார, சமூக பயனைத் தரவல்லதைத்தான் தேர்ந்தெடுக்க வேண் டும்.

வழக்கமான சிந்தனைகள் எப்படிப் பட்டவை? முன்னேற்றம் என்றால் முன்னோக் கிய இயக்கம். புதிய இயந்திரம் அல்லது உபகரணம் ஏற்கெனவே உள்ளதை விடச் சிறந்தது என்றால் அது முன்னேற்றம். இன்று இத்தகைய அணுகுமுறை போதாது. புதிய இயந்திரம் ஏற்கெனவே உள்ளதை விடச் சிறந்ததாக இருந்தால் மட்டும் போதாது, அது நவீன விஞ்ஞான சாதனை களைத் தன்னுள் அடக்கியிருக்க வேண்டும், உயர்வான உலக மட்டங்களை நோக்கிச் சென்று, அவற்றை விஞ்சுவதை நோக்க மாகக் கொண்டிருக்க வேண்டும். ஒப்பிடு வதற்கு வேறு எந்த ஒரு கருத்தினத்தையும் தேர்ந்தெடுப்பது என்றால் அது தொழில்

நுட்ப ரீதியான பின்தங்கலுக்குத்தான் இட்டுச் செல்லும்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் உயர்வான வேகங்கள் மட்டும் புதிய நவீன கோரிக்கைகளுக்கும் அவற்றின் கறார் தன்மைக்கும் காரணமல்ல. குணாம்ச ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ள ஒரு புதிய சூழ்நிலையில்தான் பிரச்சினையை முன்வைப்பதே சாத்தியமாயிற்று. சோவியத் நாட்டில் இயந்திரங்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்த காலத்தில் இருந்த நிலை வேறு. இன்று சோவியத் ஒன்றியத்'தில் ஏராளமான இயந்திரங்களும் உபகரணங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ள போது இருக்கும் நிலை வேறு. இன்று நிபுணர்களின் கணக்கீட்டின் படி சோவியத் நாட்டில் உள்ள உலோகங்களைப் பதப்படுத்தும் இயந்திரங்களின் எண்ணிக்கை அமெரிக்க ஐக்கிய நாடு, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள இத்தகைய இயந்திரங்களின் மொத்த எண்ணிக்கையை விட அதிகம்.

இன்று இரண்டு திசைகளில் செயல்பட வேண்டும்: ஒரு புறம், உலக தரத்திற்கு ஒப்பான அல்லது அதை விஞ்சக் கூடிய நவீன இயந்திரங்களின் உற்பத்திக்குப் படிப்படியாக ஆனால் தொடர்ச்சியாக மாற வேண்டும். மறுபுறம், ஏற்கெனவே உள்ள இயந்திரங்களைச் சிறப்பாக, அதிக செயல்வன்மையோடு பயன்படுத்த வேண்டும். இந்த

இரு திசைகளும், சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது தொடர்பாக முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட இரண்டு மூல ஊற்றுகளுக்கு ஏற்றவை.

மேற்கூறிய பிரச்சினைகளை ஆராயும் பொழுது, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் இரண்டு வடிவங்களில்—பரிணாம வளர்ச்சிப் போக்கில் அல்லது புரட்சிப் போக்கில்—நடைபெறக் கூடும் என்பதைக் குறிப்பிட வேண்டும். முதல் போக்கில் மெதுவான, தனிப்பட்ட மேம்பாடுகள் மட்டுமே இருக்கும்; இங்கே ஏற்கெனவே அடையப்பட்ட மட்டத்துடன்தான் புதியது ஒப்பிடப்படும். இரண்டாவது போக்கில், குணாம்ச ரீதியான மாற்றங்கள் முக்கியத் திசையமைவுகளாக இருக்கும், உயர்வான உலக மட்டத்தை அடைவது நோக்கமாக இருக்கும்.

இன்றுள்ள நிலவரம் என்ன? பெரும்பாலான துறைகளில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் மெதுவாக நடைபெறுகிறது, சாராம்சத்தில் இது பரிணாம வளர்ச்சிப் போக்கில் நடைபெறுகிறது, பெரும்பாலும் ஏற்கெனவே உள்ள இயந்திரங்கள், உபகரணங்கள், தொழில்நுட்ப முறைகளை ஓரளவு நவீனமயப்படுத்தும் பாதையில் இது நடக்கிறது என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி ஏப்ரல் (1985) மாத முழுப் பேரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இந்நடவடிக்கை

களினால் குறிப்பிட்ட பயன் கிட்டினாலும் அது குறைவானது. புரட்சிகர மாற்றங்கள் தேவை—முற்றிலும் புதிய தொழில்நுட்ப முறைகளுக்கு, அதிகபட்ச செயல்வன்மையைத் தரவல்ல நவீன இயந்திரங்களுக்கு மாற வேண்டும். நவீன விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனைகளின் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளையும் நவீனப்படுத்துவதைப் பற்றி இங்கே குறிப்பிடப்படுகிறது.

கட்சியின் 27ஆவது பேராய ஆவணங்களில் இடம்பெற்றுள்ள துரிதப்படுத்தும் செயல்திட்டம் இத்தகைய புரட்சிகர மாற்றங்களைத்தான் குறிப்பிடுகிறது.

விஞ்ஞான மற்றும் விஞ்ஞான தொழில் நுட்ப உள்ளாற்றலைப் பெருக்கி, செயல் வன்மையோடு பயன்படுத்துவதும், விஞ்ஞானத்தை நேரடியான உற்பத்திச் சக்தியாக மாற்றுவதும் இதில் முக்கியமானவை. சோவியத் நாட்டில் உள்ள விஞ்ஞானப் பணியாளர்களின் எண்ணிக்கை, விஞ்ஞானத்திற்கு ஆகும் செலவுகள், தேசிய வருமானத்தில் இவற்றின் பங்கு ஆகியவற்றைப் பற்றிய விவரங்கள் சோவியத் நாட்டில் விஞ்ஞான உள்ளாற்றலின் வளர்ச்சியைப் பற்றி எடுத்துரைக்கின்றன.

சோவியத் நாட்டில் விஞ்ஞானப் பணியாளர்களின் எண்ணிக்கை 1940இல் 98,300இலிருந்து 1960இல் 3,54,200 வரையில் உயர்ந்து, 1985இல் 14,91,300ஐ எட்டி

யது. உலகில் உள்ள விஞ்ஞானப் பணியாளர்களில் நான்கில் ஒரு பங்கினர் இன்று சோவியத் நாட்டில் உள்ளனர். விஞ்ஞானத்திற்கு ஆகும் செலவுகளும் தேசிய வருமானத்தில் இவற்றின் பங்கும்—இது இன்று உலகிலேயே மிக உயர்வான குறியீடுகளில் ஒன்றாகும்—தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

**விஞ்ஞானத்திற்கு ஆகும் செலவுகளும் தேசிய வருமானத்தில் இவற்றின் பங்கும்**

| | 1970 | 1975 | 1980 | 1985 |
|---|---|---|---|---|
| அரசு பட்ஜெட், மற்ற வழிகளில் விஞ்ஞானத்திற்கு ஆகும் செலவுகள், பில்லியன் ரூபிள்களில் | 11.7 | 17.4 | 22.3 | 28.6 |
| நுகர்வு, சேமிப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட தேசிய வருமானத்தில் இவற்றின் பங்கு, % | 4.1 | 4.79 | 4.91 | 5.03 |

விஞ்ஞான உள்ளாற்றலை மேற்கொண்டு வளர்ப்பதன் மீதான கவனத்தைக் குறைக்காத அதே நேரத்தில் முக்கியமானது என்னவெனில், அதன் விளைபயனைக் கணிசமாக உயர்த்த வேண்டும், எல்லா இடங்களிலும்

உற்பத்தி, நிர்வகிப்பு, சேவை, வீட்டு வசதி ஆகிய துறைகளில் நவீன விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளைப் புகுத்த வேண்டும்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தில் புரட்சிகர வடிவங்களைத் தேர்ந்தெடுக்கும் போது, உயர்வான உலக மட்டங்களை நாடும் போது, அடிப்படை விஞ்ஞானத்தின் பங்கு அதிகரிப்பது இயல்பே. அடிப்படை ஆராய்ச்சிகள்தான் புதிய கருத்துகளைத் தோற்றுவிக்கின்றன, புதிய துறைகளில் புதிய வழிகளுக்குப் பாதையமைக்கின்றன, செயல்வன்மையில் புதிய மட்டத்திற்கு வழியமைக்கின்றன.

உற்பத்திக்கும் அடிப்படை விஞ்ஞானத்திற்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்த பல்துறை விஞ்ஞான தொழில்நுட்ப இணையங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இத்தகைய இணையங்களின் முன்மாதிரிகளில் ஒன்றுதான் உக்ரேனிய விஞ்ஞானப் பேரவையின் கீழுள்ள ஈ. ஓ. பத்தோன் மின்சார வெல்டிங் கேந்திரமாகும். இது சோவியத் நாட்டிலும் அயல்நாடுகளிலும் பிரபலமானது.

நவீன இயந்திரங்கள், தொழில்நுட்ப முறைகள், துணைப் பொருட்களைத் தோற்றுவித்து பயன்படுத்துவதும், இத்துறைகளில் உலக மட்டத்தை அடைவதும்தான் பல்துறை விஞ்ஞான தொழில்நுட்ப இணையங்களின் கடமையாகும். இத்தகைய இணையங்கள் புதிய கண்டுபிடிப்புகளை உடனடியாகப் பயன்படுத்த உதவுகின்றன, அடிப்

படை விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கும் இவற்றை நடைமுறையில் பரவலாகப் புகுத்தவும் இடையிலுள்ள காலக்கெடுவைக் குறைக்கின்றன.

இன்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி மற்றும் சோவியத் அமைச்சரவையின் தீர்மானத்தின்படி 16 இத்தகைய இணையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. விஞ்ஞான ஆராய்ச்சிக் கூட்டங்கள், வடிவமைப்பு-தொழில்நுட்ப ஸ்தாபனங்கள், பரிசோதனை உற்பத்திக் கூடங்கள், பரிசோதனைத் தொழிற்சாலைகள் ஆகியவை இவற்றில் அடங்கியுள்ளன. சாதாரணமாக இத்தகைய இணையங்களில் விஞ்ஞானப் பேரவைக் கூடங்கள் தலைமைப் பங்காற்றுகின்றன.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பொருளாதார அம்சம், புதிய இயந்திரங்களைப் பற்றிய திட்டவட்டமான கறாரான பொருளாதார, சமூக கோரிக்கைகள் ஆகியவற்றைப் பற்றி இப்போது பார்ப்போம்.

பிரச்சினையின் பாலான கோட்பாட்டு ரீதியான அணுகுமுறை தெளிவு. சோஷலிசத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் தனித்து நிற்கும் சுயேச்சையான நிகழ்ச்சிப் போக்கல்ல. இது சமூக உறவுகள், சார்புநிலைகளில் அங்கக ரீதியில் கலந்து நிற்கிறது, சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது சம்பந்தமான பொது திட்டத்தில் ஒரு அங்கமாகத் திகழுகிறது. எனவே இதை பொருளாதார,

சமூக நிகழ்ச்சிப் போக்குகளிலிருந்து பிரித்துப் பார்க்கக் கூடாது.

அடுத்த 15 ஆண்டுகளில் சோவியத் நாட்டில் தேசியப் பொருளாதாரத்தில் இதுவரையில்லா அளவில் நடத்தப்படும் தொழில்நுட்ப மாற்றங்கள் சிக்கனமானவையாக இல்லாவிடில் நாசம்தான் ஏற்படும். கலைக்காக கலை அல்லது உற்பத்திக்காக உற்பத்தி என்பது எப்படிப் பொருளற்றதோ அதே போல்தான் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்திற்காக மட்டுமே விஞ் ஞான தொழில்நுட்பத்தை வளர்ப்பதும் பொருளற்றது. இதன் நோக்கம் உழைப்பு நேரத்தைச் சிக்கனப்படுத்துவதாயும், இதன் செயல்வன்மையின் வரையளவு சமுதாயத் தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவதாயும் இருக்க வேண்டும்.

அதே சமயத்தில், நேரச் சிக்கனம் என் பது சோஷலிச உற்பத்தி வளர்ச்சியின் இறுதி லட்சியமல்ல என்பதையும் குறிப்பிட வேண்டும். இது சமூக கடமைகளை நிறை வேற்றவும், தனிநபரின் சீரிசைவான, பன் முக வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலைகளைத் தேற்றுவிக்கவும் ஒரு வழி மட்டுமே.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத் தின் செயல்வன்மையானது நேரச் சிக்கனத் தால் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி இங்கே குறிப்பிடப்படுகிறது. புதிய இயந்திரத்தைப் பயன்படுத்துவதால் சிக்கன மாகும் சமூக உழைப்பிற்கும், இந்த இயந்

திரத்தைத் தோற்றுவித்து பயன்படுத்த ஆகும் செலவுகளுக்கும் இடையிலான வேறு பாடுதான் இதன் வெளிப்பாட்டின் திட்ட வட்டமான வடிவமாகும். இரண்டாவது அம்சம் முதல் அம்சத்தை விட அதிகமாக இருந்தால் அக்குறிப்பிட்ட விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் நஷ்டகர மானது.

எனவே புதிய இயந்திரங்களின் ஒரு குறிப்பிட்ட அலகு வல்லமை, உழைப்பின் உற்பத்தித் திறன் அல்லது வேறு குறியீட் டிற்காகும் செலவைக் குறைக்கப் பார்ப்பது மிகவும் முக்கியமாகும். இப்படியிருக்கும் பட்சத்தில்தான் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் உற்பத்தியின் செயல் வன்மை கூடும், சமுதாயத்தில் பொருளா தார முன்னேற்றம் காணப்படும்.

இது தவிர புதிய இயந்திரங்களும் தொழில்நுட்பமும் வளச் சிக்கனத்திற்கு உதவ வேண்டும், ஒரு குறிப்பிட்ட அலகு இறுதிப் பொருளுக்குத் தேவைப்படும் உழைப்பு, மூலப்பொருள், எரிசக்திச் செலவு களைக் குறைக்க வேண்டும். அப்போது தான் சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் உண்மையில் உயரும், ஜீவனுள்ள உழைப் பும் பருவடிவாக்கப்பட்ட உழைப்பும் சிக் கனப்படும்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத் தை மதிப்பிட பொருளாதார அளவுகோல் களைத் தவிர சமூக அளவுகோல்களும்

உண்டு; இவை காலப்போக்கில் கறாராகி வருகின்றன. புதிய இயந்திரங்களும் தொழில் நுட்பமும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தி, பொருளாயத வளங்களைச் சிக்கனப்படுத்தி, பொருட்களின் தரத்தை உயர்த்தினால் மட்டும் போதா; இவை உழைப்பை எளிதாக்க வேண்டும், அதற்கு ஆக்கபூர்வமான, அறிவுத் துறை அம்சங்களை அளிக்க வேண்டும், உழைப்புச் சூழலை மேம்படுத்த வேண்டும். பாதகமான பின்விளைவுகள் ஏற்பட்டால் (குறிப்பாக, இவை குறிப்பிட்ட வரம்புகளை மீறினால்) சமூக நோக்கில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பயனுள்ளதாகக் கருத முடியாது.

புறச்சூழல் அம்சங்கள் மேற்கூறிய சமூக அளவுகோல்கள், வரம்புகளில் மிக முக்கியமானவையாகும். புறச்சூழலின் மீது விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் தாக்கம் பன்மடங்கு அதிகரித்துள்ள பொழுது இப்புறச்சூழல் அம்சத்தின் முக்கியத்துவம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவது இயல்பே. இன்று சோவியத் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் இடையில், மனிதனுக்கும் புறச்சூழலுக்கும் இடையில் நடைபெறும் சீரிசைவான பரஸ்பரச் செயலாக்கம் மேன்மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. எனவே இயற்கையைத் திட்டமிட்ட வகையில், கவனத்தோடு பயன்படுத்த

வேண்டும், மக்களுக்குப் புறச்சூழல் கல்வி புகட்டுவதை விரிவுபடுத்த வேண்டும்.

சோஷலிசத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விஷயத்தில் முன் வைக்கப்படும் பொருளாதார, சமூக கோரிக் கைகள் நலல் எதிர்காலமுள்ள, செயல்வன்மை மிக்க போக்குகளைத் தேர்ந்தெடுத்து அம்முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த உதவு கின்றன. எனவேதான் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் உற்பத்தியை சகலவிதங்களிலும் தீவிரப் படுத்தி, நவீனமயப்படுத்துவதற்கான போராட்டம், திட்டமிட்ட சோஷலிசப் பொருளாதார அமைப்பில், சோவியத் சமு தாயத்தின் மானுட லட்சியங்களின் நிறை வேற்றத்துடனும், முழு வேலைவாய்ப்புட னும், மக்களுடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் இடையறாது மேம்படுத்து வதுடனும் அங்கக ரீதியாகத் தொடர்புடை யது. கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் இப்படித்தான் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

உழைப்புச் சாதனங்களின் உற்பத்தி, இயந்திரக் கட்டுமானத்தின் வளர்ச்சிதான் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பொருளாயத அடிப்படையாகும். இதுதான் புதிய இயந்திரங்களைத் தோற்றுவிக்கிறது, தேசியப் பொருளாதாரம் முழுவதையும் தொழில்நுட்ப ரீதியில் புதுப்பிக்கிறது, சமூக உழைப்பின் உற்பத்தித் திறனின் மாற்றப் போக்கை முன்நிர்ணயிக்கிறது.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் உயரிய வேகங்களுக்கு ஏற்பாடு செய்வதிலும் சோவியத் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதிலும் இயந்திரக் கட்டுமானத்துக்கு பெரும் பங்குண்டு. இன்று சோவியத் நாட்டில் இத்துறையைக் குணாம்ச ரீதியில் மாற்றியமைப்பது ஒரு அரசியல் கடமையாகியுள்ளது. எனவேதான் இதன் வளர்ச்சி சம்பந்தமான முக்கியப் போக்குகள் கட்சியின் வேலைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

சோவியத் இயந்திரக் கட்டுமானத்தின் வளர்ச்சி வேகங்களைத் துரிதப்படுத்துவது என்பது ஒரு முக்கிய நீண்டகாலத் திட்டம், தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கும், நாட்டின் தற்காப்பு வல்லமையைப் பேணிக் காக்கவும் தேவையான அடிப்படை.

11ஆவது ஐந்தாண்டில் உற்பத்தித் துறைக்கான மொத்த முதலீட்டில் 5% மட்டுமே சிவில் இயந்திரக் கட்டுமானத்துக்கு ஒதுக்கப்பட்டது. எந்தத் துறைகளுக்காகக் கனரக இயந்திரங்களும் போக்குவரத்துத் துறை இயந்திரங்களும் தயாரிக்கப்பட்டனவோ அவற்றை விட 28 மடங்கு குறைவாகத் தான் கனரக மற்றும் போக்குவரத்துத் துறை இயந்திர உற்பத்திக்கு நிதி ஒதுக்கப்

பட்டது. மற்ற துறைகளிலும் இதே போன்ற நிலைதான்.

அந்தந்த இயந்திரக் கட்டுமானத் துறைகளுக்குப் பலனளிக்கும் வகையில் முதலீடுகளை மறுபங்கீடு செய்யும் அவசியம் ஏற்பட்டது. இன்று முதலீட்டுக் கொள்கையில் எற்படும் மாற்றங்களில் இது மிக முக்கிய அம்சமாகும்.

இயந்திரக் கட்டுமானத்திற்கான முதலீடுகளைக் கணிசமாக உயர்த்த (11ஆவது ஐந்தாண்டை விட 1.8 மடங்கு அதிகம்) 12ஆவது ஐந்தாண்டில் திட்டமிடப்பட்டது. இதனால் நிலையான உற்பத்திச் சொத்துகளின் தீவிர பகுதியை ஆண்டுதோறும் 10—12% வரை புதுப்பிக்க முடியும், இயந்திரக் கட்டுமானம், உலோகப் பதப்படுத்தல் ஆகியவற்றின் உற்பத்தியை 40—45% பெருக்க முடியும். புதிய இயந்திரங்களைத் தயாரித்து புகுத்த ஆகும் காலக்கெடுவைப் பெரிதும் குறைக்கவும் (3—4 மடங்கு) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இயந்திரக் கட்டுமானத்தையே ஒரு ஐக்கிய தேசியப் பொருளாதார இணையமாகக் கருதி வளர்ப்பதற்கு சோவியத் நாட்டின் சமூக உற்பத்தியைத் தொழில்நுட்பரீதியாக மாற்றியமைப்பதில் பெரும் முக்கியத்துவம் உண்டு. இது ஏதோ சம்பிரதாய நடவடிக்கையல்ல. ஒரு ஐக்கிய இணையம் என்ற வகையில் இயந்திரக் கட்டுமானத்தின் வளர்ச்சியானது உற்பத்தயின் பொதுமைப்படுத்

தல் மட்டத்தைக் கணிசமாக உயர்த்துவதை யும், தனித்துறைப்பாட்டை வளர்ப்பதை யும், நெருக்கமான கூட்டுறவுத் தொடர்பு களை ஏற்படுத்துவதையும், செயல்வன்மை மிக்க பல்துறை தொழில்களைத் தோற்று விப்பதையும் முன்னனுமானிக்கிறது. இயந் திரக் கட்டுமான இணையம் ஒரு முழுமை யான அங்கமாக திட்டமிடல், நிர்வாகத் தின் ஒரு ஐக்கிய உறுப்பாகிறது. இது சம் பந்தமாகத் தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சோவியத் அமைச்சரவையின் கீழ் இயந்திரக் கட்டுமான பியூரோ ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தேசியப் பொருளாதாரத்தைத் தொழில் நுட்ப ரீதியில் மாற்றியமைக்க முதலில் இயந்திரக் கட்டுமானத்தை மாற்றியமைக்க வேண்டும். இதில் கடைசல் இயந்திரத் தொழிற்துறைக்கும் உபகரணத் தொழிற் துறைக்கும், அதாவது ''இயந்திரங்களின் உதவியால் இயந்திரங்களை உற்பத்தி செய் வதற்கு'' உதவும் துறைகளுக்கு விசேஷ பங்குண்டு.

ஒரு ஐக்கிய இணையம் என்ற வகையில் இயந்திரக் கட்டுமானத்தின் வளர்ச்சியானது இதனுடைய எல்லாத் துறைகளின் ஒரே மாதிரியான வளர்ச்சியைக் குறிக்கவில்லை. இந்த இணையத்தின் முழுமையானது, இதை மாற்றியமைக்கவும் விசேஷ அக்கறை செலுத்துவதற்காக முக்கியத் துறைகளைப் பிரிக்கவும் உதவுகிறது. சோவியத் ஒன்றியக்

கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயத்தின் முடிவுகளுக்கேற்ப, விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு உண்மையிலேயே ஊக்கமளிக்கக் கூடிய துறைகள் மேற்கூறிய இணையத்தின் வரம்புகளுக்குள் முன்னுரிமையைப் பெறும். கடைசல் இயந்திர உற்பத்தி, மின்சார தொழில்நுட்பத் துறை, மைக்ரோ மின்னணுத் துறை, கணிப்பொறி மற்றும் உபகரண உற்பத்தி, தகவல் தொடர்புச் சாதனத் துறை ஆகியவை இவற்றிலடங்கும்.

கணிப்பொறிகள், மின்னணுத் துறையின் வளர்ச்சி பற்றி விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். இன்று இவையின்றி உற்பத்தியைத் தானியங்கிமயப்படுத்துவதைப் பற்றி சிந்திக்கக் கூட முடியாது. இதற்கேற்ப, 12ஆவது ஐந்தாண்டில் சூப்பர் கம்ப்யூட்டர்களிலிருந்து, பள்ளிக் கல்விக்கான தனிநபர் கம்ப்யூட்டர் வரை சகலவித கணிப்பொறிகளையும் உற்பத்தி செய்ய திட்டமிடப்படுகிறது. ஐந்தாண்டில் கணிப்பொறிகளின் உற்பத்தி 2.3 மடங்கு கூடும். அதே சமயம் மற்ற துறைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் இயந்திரங்கள், உபகரணங்களில் மின்னணு வசதிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்படுகிறது. மேற்கூறிய துறைகள் ஒவ்வொன்றிற்கும் திட்டவட்டமான கடமைகள், ‘‘1986—1990ஆம் ஆண்டுகளுக்கும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கும் சோவியத் நாட்டின் பொருளா

தார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசையமைவுகளில்'' அடங்கியுள்ளன.

மேன்மேலும் அதிகமான அளவில் ஒரு முழுமையான அமைப்பாகச் செயல்படும் இயந்திரக் கட்டுமானம் பொருளாதார இறுதி விளைபயனை, அதாவது சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். அதன் பொருள், சர்வீஸ் முறையையும் பழுதுபார்க்கும் பட்டறைகளையும் வளர்க்க வேண்டும், அவசியமான சந்தர்ப்பங்களில் தேர்ச்சி மிகு ஊழியர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதாகும்.

இயந்திரக் கட்டுமானத்தின் இறுதி விளைபயன்களில் ஒன்று, ஏற்றுமதிக்காக இது அளிக்கும் பொருட்களாகும். உற்பத்தியானது மேன்மேலும் சர்வதேசியத் தன்மையைப் பெற்று, சர்வதேச உழைப்புப் பிரிவினை தொடர்ந்தாற்போல் ஆழமடைந்து வருகையில் இந்த அம்சத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது.

சமீப ஆண்டுகளில் சோவியத் நாட்டில் இயந்திரங்கள், உபகரணங்களின் ஏற்றுமதி மெதுவாகத்தான் அதிகரித்தது, இதில் இயந்திரக் கட்டுமானத் துறையின் பங்கு தொடர்ந்தாற்போல் குறைந்து வந்தது (அதே சமயம் இறக்குமதியில் இதன் பங்கு அதிகரித்தது) என்பது தெரிந்ததே. ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களின் பங்கை ஒப்பிடுவோம் (%இல்):

| | 1960 | 1970 | 1980 | 1985 |
|---|---|---|---|---|
| ஏற்றுமதியில் | 20.7 | 21.5 | 15.8 | 13.6 |
| இறக்குமதியில் | 31.1 | 35.6 | 33.9 | 37.2 |

சோவியத் நாட்டில் தயாராகும் இயந்திரங்களின் தரத்தை மேம்படுத்தி, உலக சந்தையில் போட்டியிட வல்லதாக அத்தரத்தை மாற்றுவது, சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது, ஏற்றுமதிக்கான பொருள் உற்பத்திக்குப் பெரும் ஊக்கமளிப்பது ஆகியவற்றின் மூலம் தான் நிலையை மாற்ற முடியும்.

2000ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சில் உறுப்பு நாடுகளின் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பன்முக செயல்திட்டம் மேற்கூறிய கடமைகளின் நிறைவேற்றத்திற்குப் பரவலான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது; குறிப்பாக இதில் வரையறுக்கப்பட்டுள்ள முக்கியத் திசையமைவுகள், அதுவும் தேசியப் பொருளாதாரத்தில் மின்னணுத் துறையையும் தானியங்கி முறைகளையும் புகுத்தும் திட்டம் இதில் பெரிதும் உதவும். சர்வதேச விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் உற்பத்திக் கூட்டமைப்புகளின் தோற்றம், புதிய இயந்திரங்கள், தொழில்நுட்பம், துணைப் பொருட்களை உருவாக்கும் சர்வதேசப்

பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையங்களின் தோற்றம், ஊழியர்களைப் பயிற்றுவித்து, தேர்ச்சியை உயர்த்தும் மையங்களின் தோற்றம், மற்ற கூட்டுத் தொழில் நிறுவனங்கள், சர்வதேச விஞ்ஞான தொழில் நுட்பக் கூட்டுகள், சோதனைக் கூடங்களின் தோற்றம் ஆகியவை ஒவ்வொரு சோஷலிச நாட்டின் நலனுக்கும் மொத்தமாக சோஷலிச முகாமின் நலனுக்கும் ஏற்றவையாகும்.

சோவியத் நாட்டில் இயந்திரக் கட்டுமானத்தை மேற்கொண்டு வளர்ப்பதன் அடிப்படையில் தேசியப் பொருளாதார இணையங்கள் அனைத்திலும் குணாம்ச ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. எரிபொருள்-எரிசக்தி இணையத்தை மாற்றியமைப்பது சம்பந்தமான முக்கியத் திசையமைவுகள் எரிபொருள்-எரிசக்தி செயல்திட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எரிசக்தியைச் சிக்கனப்படுத்தும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது, திரவ எரிபொருளுக்குப் பதில் எரிவாயுவையும் நிலக்கரியையும் பயன்படுத்துவது ஆகியவற்றின் மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எரிபொருள்-எரிசக்தி இணையத்தின் தோண்டியெடுக்கும் துறைகளில் நவீன தொழில்நுட்ப முறைகள் பரவலாகப் புகுத்தப்படும். இரும்பு உலோகத் துறையைப் பரவலான அளவில் நவீனமயப்படுத்துவதால் உலோகப்

பொருட்களின் தரமும் கட்டமைவும் மேம் படும். இதனால் 12ஆவது ஐந்தாண்டில் ரோலிங் இரும்பு உலோக உற்பத்தியை 9% மட்டுமே உயர்த்துவதன் மூலம் தொழிற் துறை உற்பத்தியை 21—24%மும் இயந்திரக் கட்டுமானம், உலோகப் பதப்படுத்தல் ஆகியவற்றில் உற்பத்தியை 40—45%மும் அதிகரிக்க முடியும்.

விவசாயத் தொழிற்துறை இணையத் தின், குறிப்பாக விவசாய உற்பத்தியின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தை வலுப்படுத்தி, மேம்படுத்துவதில் இயந் திரக் கட்டுமானம் கணிசமான பங்காற்று கிறது. சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயத்தின் முடிவு களுக்கேற்ப, கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணைகளுக்குப் புதிய இயந்திரங்கள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவற்றை வழங்கியும், பாசன நிலப்பரப்பை அதிகப் படுத்தியும், இவற்றையெல்லாம் நன்கு பயன்படுத்தியும் எல்லா விவசாயப் பொருட் களின் உற்பத்தியையும் பெருக்கத் திட்ட மிடப்படுகிறது. தானிய உற்பத்தியை 250—255 மில்லியன் டன் வரையும் இறைச்சி உற்பத்தியை 21 மில்லியன் டன் வரையும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்குறி யீடுகளை அடைய தீவிர தொழில்நுட்பங் களைப் பரவலாகப் பயன்படுத்த வேண் டும், பயிர் விளைச்சலையும் கால்நடைத் துறையில் உற்பத்தித் திறனையும் உயர்த்த

வேண்டும். விவசாயத் தொழிற்துறையில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் முக்கியத் திசைகளில் நிதிகளையும் சாத னங்களையும் குவிக்க வேண்டும், பொருள் உற்பத்தி முதல் அது விற்பனை செய்யப் படுவது வரை எல்லா இடங்களிலும் உள்ள இடர்ப்பாடுகளைக் களைய வேண்டும்.

மக்கள் பரவலாகப் பயன்படுத்தும் தொழிற்துறை பண்டங்களை உற்பத்தி செய்யும் துறைகளில் தொழில்நுட்ப சீரமைப் பின் முக்கியத் திசையமைவுகள் நுகர்வுப் பொருள் உற்பத்தி மற்றும் சேவைத் துறை வளர்ச்சியின் பன்முக திட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இக்கடமைகளை நிறைவேற்றினால் அது, நுகர்வுப் பொருள் துறையையும் சேவைத் துறையையும் வர்த்தகத்தையும் நவீன தொழில்நுட்ப மட்டத்திற்கு உயர்த்த உதவும், இத்துறை களின் வளர்ச்சி வேகங்களைத் துரிதப்படுத் தவும் மக்களின் வளர்ந்து வரும் தேவை களை முழுமையாகப் பூர்த்தி செய்யவும் துணை புரியும்.

### சமூகக் கடமைகளின் நிறைவேற்றத்திற்கான திறவுகோல்

சோவியத் நாட்டில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பல்வேறு அம்சங்கள், உற் பத்தித் துறையில் ஏற்பட்டு வரும் குணாம்ச ரீதியான மாற்றங்கள் ஆகியவற்றின் இறுதி

நோக்கம் பொருளாதாரத்தின் செயல்வன்மையை உயர்த்துவதும் இதன் அடிப்படையில் சமூகக் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதுமே. தேசியப் பொருளாதாரத்தைத் தொழில்நுட்ப ரீதியில் மாற்றியமைக்கும் முயற்சிகளின் ஆழ்ந்த உட்பொருளும் உயரிய நோக்கமும் இதுதான்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் உழைப்பின் உற்பத்தித் திறனைப் பன்மடங்கு அதிகரிக்கிறது. இது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வலிமையான, குன்றா ஆற்றலாகும், எனவே இது சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சமூகக் கொள்கையின் நிறைவேற்றத்திற்கான நிபந்தனையாகும். கட்சி வேலைத் திட்டத்தின் புதிய பதிப்பில் இப்படித்தான் கூறப்பட்டுள்ளது. சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் புதிய மட்டத்திற்கு உயர்த்த வேண்டும், சீரிசைவாக வளர்ச்சியடைந்த, ஆன்மீக ரீதியில் செழுமையான தனிநபர் உருவாக உதவ வேண்டும் என்பதுதான் இதன் நோக்கமாகும்.

அடுத்த 15 ஆண்டுகளில் உற்பத்தியை அதிகப்படுத்தி, அதன் செயல்வன்மையை உயர்த்தி, அதன் அடிப்படையில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஒதுக்கப்படும் நிதியை இரு மடங்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நபர் ஒருவருக்கான உண்மை வருமானங்களை 1.6—1.8 மடங்கு கூட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. பிரம்

மாண்டமான அளவில் வீடு கட்டுமானத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியுள்ளது, உடல் நலப் பாதுகாப்பு, கல்வி, கலாசாரத் துறைகளின் பொருளாயத அடித்தளத்தை வலுப்படுத்த வேண்டியுள்ளது.

சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி கடமைகளை நிறைவேற்ற உழைப்பின் தன்மையிலும் சாரத்திலும் பெரும் மாற்றங்களைச் செய்தாக வேண்டும் என்று கட்சிப் பேராயத்தில் குறிப்பிடப்பட்டது. சோஷலிச சமுதாய உறுப்பினர்களின் பல்வேறு தேவைகளில் ஆக்கபூர்வமான உழைப்புத் தேவை மேன்மேலும் முக்கியத்துவத்தைப் பெற்று வருகிறது.

உற்பத்தி துரிதமாகப் புதுப்பிக்கப்பட்டு வருவது, உற்பத்தி இயந்திரமயப்படுத்தப் படுவது, அதில் மின்னணுத் துறை அதிகமாகப் புகுத்தப்படுவது, தொழில்நுட்ப ரீதியான நவீனமயப்படுத்தும் பணிகள் ஆகியவற்றின் நோக்கம் உழைப்புச் சூழ்நிலைகளை மேம்படுத்தி, உழைப்புச் சாரத்தைச் செழுமைப்படுத்துவதாகும். எனவே சமூக சூழ்நிலைகளை மேம்படுத்துவதில் இயந்திரக் கட்டுமானத்திற்கு ஒரு முக்கியப் பங்குண்டு.

இது ஒரே மாதிரி இயந்திரகதியான, கடினமான உடலுழைப்பையும், தேர்ச்சியற்ற உழைப்பையும் குறைத்து, இறுதியில் ஒழித்துக் கட்டும். இது ஆரோக்கியமான உழைப்புச் சூழ்நிலைகளை ஏற்படுத்த

வும், வேலையின் போது ஏற்படும் விபத்து களையும் நோய் நொடிகளையும் குறைக்க வும் உதவும்.

தேர்ச்சி குறைவான உடலுழைப்பைக் குறைக்கும் விஷயத்தில் 12ஆவது ஐந்தாண் டிலேயே ஒரு திருப்புமுனை ஏற்பட்டாக வேண்டும். இந்தக் கடினமான உடலுழைப் பைக் குறைக்கும் வேகத்தைக் குறைந்தபட் சம் 2—3 மடங்கு அதிகரித்தாக வேண்டும்.

வீட்டு வேலைகளில் உழைப்பைக் குறைக்கக் கூடிய இயந்திரங்களின் உற்பத்தி யையும் தீவிரமாக வளர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது. தனியார் தோட்டங்களிலும் கூட்டுறவு நிலங்களிலும் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் உற்பத்தி அதிகரிக்கப் படும்.

நவீன இயந்திரச் சாதனங்கள் மேன் மேலும் அன்றாட வாழ்வில் புகுந்து வரு கின்றன, நுகர்வின் கட்டமைவையும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் விதத்தையும் வழக்கமான விதத்திலிருந்து மாற்றுகின்றன. ஆனால் இயந்திரங்களுக்கும் மனிதனுக் கும் இடையிலான பரஸ்பரச் செயலாக்கம் பற்றிய பிரச்சினை நுகர்வுத் துறையுட னும் ஓய்வு நேரத்தை ஏற்பாடு செய்வதுட னும் முடிந்து விடுவதில்லை. விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி பரவி வரும் பொழுது இப்பரஸ்பரச் செயலாக்கத்தில் புதிய அம்சங்கள்—பல நேரங்களில் பெரி

தும் சிக்கலான பிரச்சினைகள்—தோன்று கின்றன.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் உழைப்பின் தன்மை மீது பெரும் தாக்கம் செலுத்தி, உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் மனிதனுக்குள்ள பங்கை மாற்றுகிறது, உழைப்பின் சாரத்தின்மீது தாக்கம் செலுத்து கிறது. இத்தாக்கத்தில் சமூக பொருளாதாரச் சூழ்நிலைகள் பெரும் பங்காற்று கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே சமூக பொருளாதாரச் சூழ்நிலைகளுடன் தொடர்புபடுத்தாமல் ஆராயப்படும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பின்விளைவுகளையும் ஒரு சோஷலிச சமுதாயத்தின் குறிப்பிட்ட சூழ்நிலைகளால் ஏற்படும் பின்விளைவுகளையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

இயந்திரங்களையும் அவை முதலாளித்துவ சமுதாயத்தில் பயன்படுத்தப்படும் சூழ்நிலைகளையும் பகுப்பாய்வு செய்த பொழுது கா. மார்க்ஸ் பயன்படுத்திய முறையியல் அணுகுமுறை இப்படிப்பட்ட வேறுபாட்டிற்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது. இயந்திரங்களை மட்டும் தனியே எடுத்துக் கொண்டால், அதாவது அவை பயன்படுத்தப்படும் சமூகச் சூழ்நிலைகளை விட்டுப் பார்த்தால், அவை உழைப்பு நேரத்தைக் குறைக்கின்றன, உழைப்பை இலகுவாக்குகின்றன, சமூக செல்வத்தை அதிகரிக்கின்றன. ஆனால் சாதாரணமாக முத

லாளித்துவத்தின் கீழ் இயந்திரங்கள் வேலை நாளை அதிகப்படுத்துகின்றன, உழைப்புச் சுமையை அதிகப்படுத்தி உழைப்பைத் தீவிரப்படுத்துகின்றன, சமுதாயத்தின் செல்வம் அல்ல, முதலாளி வர்க்கத்தின் செல்வம் பெருக உதவுகின்றன.*

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றமானது உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் மனிதனின் நிலையைக் கணிசமாக மாற்றுகிறது. எனினும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றமானது ஏதோ பொதுவில் மனிதனை உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கிலிருந்து வெளியேற்றும், மனிதனை உழைக்கும் அவசியத்திலிருந்து விடுவிக்கும் என்ற கூற்றுகளை இன்று யாரும் நம்புவதில்லை.

உண்மையில் நவீன இயந்திரங்கள், அதுவும் குறிப்பாக எதிர்கால இயந்திரங்கள் மனிதனைக் கடினமான உடலுழைப்பிலிருந்தும், இயந்திரகதியான, ஒரே மாதிரியான, ஆக்கபூர்வமான சாரமற்ற உழைப்பிலிருந்தும் விடுவிக்கும். இது உடலுழைப்பிற்கு மட்டுமின்றி மூளையுழைப்பிற்கும் பொருந்தி வரும், ஏனெனில் இதில் இன்னமும் ஒரே மாதிரியான பல நடவடிக்கைகள் அடங்கியுள்ளன.

அதே நேரத்தில் படைப்பாளி என்ற வகையில் மனிதனின் பங்கு அதிகரிக்கிறது, புதிய இயந்திரங்களை வடிவமைப்பது,

* K. Marx, *Capital*, vol. 1, p. 416 பார்க்க.

தொழில்நுட்பத் திட்டங்களைத் தீட்டுவது, புதிய தீர்வுகளைத் தேடுவது ஆகியவற்றுடன் தொடர்புடைய அவனுடைய பணிகளின் முக்கியத்துவம் கூடுகிறது. ''மானுடக் காரணி'' என்று குறிப்பிடுகின்றார்களே, அதன் மிகப்பெரும் ஆக்கபூர்வமான பங்கு புதிய விதத்தில் வெளிப்படுகிறது. சோஷலிச சமுதாயத்தில் மனிதனின் உண்மையான குறிக்கோள் அவனுடைய படைப்பு நடவடிக்கையாகும், அவன் புதிய கருத்துகளை முன்வைக்க வேண்டும், புதிய விஞ்ஞான தொழில்நுட்பத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டும் என்பது மேன்மேலும் தெளிவாகி வருகிறது. பல்லாயிரமாண்டுகளாக உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் அவன் செய்து வந்த மற்ற பல பணிகளை (இவற்றை கணிசமான அளவில் இன்னும் அவன் செய்கிறான்) ராபட்டுகளுக்கு, மற்ற இயந்திரங்களுக்கு அளிக்கலாம்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தில் அடங்கியுள்ள இப்போக்குகளை முழுமையாக நடைமுறையில் செயல்படுத்தும் பொழுது அது சில சிக்கலான, பெரிதும் முரண்பாடான பின்விளைவுகளை ஏற்படுத்துகிறது.

சோஷலிச சமுதாயம் வளர வளர, அதன் முதிர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க, உழைப்பு மனிதனின் தேவையாக மாறும் போக்கு வலுப்படுகிறது. இது சிக்கலான,

பன்முக நிகழ்ச்சிப் போக்காகும். உழைப்பை தேவையாக மாற்ற (தனி மனிதனுக்கல்ல, சமுதாய உறுப்பினர்கள் அனைவருக்கும்) பல்வேறு சமூக பொருளாதார நிபந்தனைகள் தேவை. இதில் பின்வரும் முக்கியமான சமூக மனவியல் அம்சம் அடங்கும், அதாவது உழைப்பு என்பது தனிப்பட்ட அக்கறைக்குரியதாக, சுயவளர்ச்சி, சுயவெளிப்பாட்டுக் காரணியாக மாற வேண்டும்.

சமூக பொருளாதார சூழ்நிலைகளில் முக்கியமானது உழைப்பின் சாரத்திலும் தன்மையிலும் ஏற்படும் மாற்றங்களாகும். வேறு எந்த ஒரு தேவையையும் போன்றே உழைப்புத் தேவையும் இதைப் பூர்த்தி செய்யும் சாதனங்களுடன் சேர்ந்து வளருகிறது. உழைப்பானது மனிதனின் தேவையாக மாற உழைப்பு நிகழ்ச்சிப் போக்கு அறிவுத் துறை சாரத்தைப் பெற்று செழுமையடைய வேண்டும். உழைப்பைச் சலிப்பேற்படுத்தி, ஒரே மாதிரி இயந்திரகதியானதாக்கும் அனைத்தும், உழைப்பைக் கடினமானதாக, சாரமற்றதாக ஆக்கும் அனைத்தும் அகற்றப்பட வேண்டும்.

சோவியத் நாட்டில் ஏராளமான இளைஞர்கள் உழைப்பாளிகளாகி வருகின்றனர்; இவர்களின் கல்வி மட்டம் உயர்வானது. எனவே உழைப்புச் சூழ்நிலைகள், உழைப்புத் தன்மையின் பாலான கோரிக்கைகள் அதிகரிக்கின்றன. ஆக்கபூர்வமான அம்சமற்ற, தேர்ச்சிக் குறைவான உழைப்பு

இன்றைய இளைஞர்களைக் கவருவதில்லை. உழைப்பு நடவடிக்கையில் ஆக்கபூர்வமான அம்சங்கள் குறைவதை அதிகமான ஊதியத்தால் சரிகட்டும் வாய்ப்பும் மேன்மேலும் குறைந்து வருகிறது.

அதே சமயம், உற்பத்தியை அதிகப்படுத்தி, உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் புறவயத் தேவையானது பல நேரங்களில் உழைப்பின் சாரம் குறைவதற்கு இட்டுச் செல்கிறது. இது யதார்த்தம். வழக்கமான விஞ்ஞான தொழில்நுட்பத் தீர்வுகளின் வரம்புகளுக்குள் வளர்ச்சி நடைபெறும் பொழுது இப்படி நடக்கிறது.

அதே நேரத்தில், சோஷலிச சமுதாயத்தில் பொருளாயத செல்வத்தின் அதிகரிப்பு என்பது இறுதி லட்சியமல்ல, தனிநபரின் பன்முக வளர்ச்சிக்கான ஒரு வழி மட்டுமே. தனிநபர் வளர்ச்சியில் சகலவிதமான ஒரு தலைப்பட்சத் தன்மையும் (ஆக்கபூர்வமான சாரமற்ற உழைப்பு இப்படிப்பட்டதுதான்) உயரிய மானுடத் தன்மையை உடைய சோவியத் சமுதாயத்திற்கு ஏற்புடையதல்ல.

மேற்கூறிய முரண்பாடுகளிலிருந்து விடுபட முற்றிலும் புதிய தொழில்நுட்பத் தீர்வுகளை அணுக வேண்டும். எடுத்துக்காட்டாக, உற்பத்தியில் ராபட்டுகளைப் பயன்படுத்தி உற்பத்தியை முழுக்க முழுக்கத் தானியங்கிமயப்படுத்துவது அவசியம்; அது உடலுழைப்பைத் தவிர்த்து, உழைப்பானது

மனிதனின் முதல் ஜீவாதாரத் தேவையாக மாற அவசியமான பொருளாயத முன்தேவைகளைத் தோற்றுவிக்கும்.

இத்தகைய அணுகுமுறையானது நவீன உற்பத்தியின் மிகக் கடுமையான முரண்பாடுகளில் ஒன்றை அகற்ற உதவுகிறது. அதாவது ஒரு புறம், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான நிபந்தனை என்ற வகையில் உழைப்பு நடவடிக்கைகளின் அதிகரித்து வரும் தனித்துறைப்பாட்டிற்கும் மறுபுறம் உழைப்பின் சாரத்தையும் ஆக்கபூர்வமான அம்சத்தையும் வலுப்படுத்தும் அவசியத்திற்கும் இடையிலான முரண்பாட்டை அகற்ற உதவுகிறது. இதன் மூலம், மானுடக் காரணியின் பங்கை அதிகப்படுத்தவும், மக்கள் திரளினரின் தொழில் நுட்ப, விஞ்ஞானப் படைப்பாற்றலை வளர்க்கவும் தேவையான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இது தன் பங்கிற்கு, நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதில் பெரும் பங்காற்றும்.

உற்பத்தியைத் தானியங்கிமயப்படுத்துவதன் மிக முக்கிய சமூகப் பின்விளைவுகளில் ஒன்று, பொருளாயத உற்பத்தித் துறையில் மூளையுழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையிலான வேறுபாடுகளை அகற்றுவதற்கான முன்தேவைகளைத் தோற்றுவிப்பதாகும். புராதனக் கூட்டுச் சமுதாயத்தைத் தவிர அதற்குப் பின் வந்த எல்லா சமூக பொருளாதார அமைப்புகளிலும் மூளை

யுழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையில் பகை முரண்பாடு நிலவியது; சோஷலிசம்தான் இப்பகை முரண்பாட்டை ஒழித்துக் கட்டுகிறது. என்றாலும் இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் சோஷலிசத்திலும் கணிசமான அளவு அப்படியே உள்ளன.

சில மறைமுக நடவடிக்கைகளால்—உழைப்பிற்கேற்ற வினியோக முறையை மேம்படுத்தல், கல்வி மட்டத்தில் உள்ள வேறுபாடுகளை அகற்றுதல், வீட்டு வாழ்க்கைச் சூழலைச் சமப்படுத்தல் போன்றவை—மேற்கூறிய வேறுபாடுகளைக் கணிசமாகக் குறைக்கலாம். ஆனால் இந்த வேறுபாடுகளின் சாரத்தை இவ்வழிகளால் அகற்ற முடியாது. இதற்கு உற்பத்தியின் தொழில்நுட்ப அடித்தளத்தையே அடியோடு மாற்றியமைக்க வேண்டும்; இதனால் ஆக்கத் தன்மையற்ற உடலுழைப்பே, ஒரு தனி வகையான உழைப்பு என்ற நிலையில் மறைந்து போக வேண்டும்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றமானது மனிதனின் வளர்ச்சி மீது, உற்பத்தியில் அவன் வகிக்கும் பங்கின் மீது, அவனுடைய பன்முக வளர்ச்சி மீது பெரும் தாக்கம் செலுத்துகிறது என்றால், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றமும் அதன் வேகங்களும் செயல்வன்மையும் மானுடக் காரணியைக் கணிசமான அளவு சார்ந்தவை. இச்சார்பு நிலையும் பன்முகத் தன்மை

யை உடையது; இது உழைப்பாளிகளின் தொழில் தேர்ச்சி, பொது கலாசாரம், புதிய முறையில் உழைக்க மனநிலை ரீதியில் உள்ள தயார் நிலை, மொத்த உழைப்புச் சக்தியின் கட்டமைப்பு மாற்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையது.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் உயர்வான வேகங்கள் உழைப்பின் தரம், உழைப்பாளிகளின் பொது கலாசாரம், விசேஷ பயிற்சி ஆகியவற்றில் மேன்மேலும் அதிகமான கோரிக்கைகளை முன்வைக்கின்றன; அடிக்கடி தேர்ச்சியை அதிகப்படுத்துவதும் விசேஷ பயிற்சிகளும் அவசியமாகின்றன. எனவே கல்வி முறை முழுவதையும் கருத்தாழத்தோடு குணாம்ச ரீதியில் மாற்றியமைப்பது அவசியமாகிறது.

இன்று சோவியத் நாட்டில் செகன்டரி கல்வி முறையில் செய்யப்பட்டு வரும் மாற்றங்கள் இந்தப் பொறுப்புள்ள, சிக்கலான பெரும் பணியின் ஒரு பகுதியாகும்.

விசேஷ செகன்டரி மற்றும் உயர் கல்வி முறையானது உற்பத்தி, விஞ்ஞானம், கலாசாரத்தின் தேவைகளுக்கு உடனுக்குடன் துல்லியமாகப் பதில் சொல்லியாக வேண்டும், தேசியப் பொருளாதாரத்திற்குத் தேவையான நிபுணர்களைப் பயிற்றுவிக்க வேண்டும், இந்த நிபுணர்கள் உயர்வான தொழில் பயிற்சியோடு சித்தாந்த அரசியல் முதிர்ச்சியையும், ஸ்தாபன அமைப்பு, நிர்வாகத் திறமையையும் பெற்றிருக்க உதவ

வேண்டும். தேர்ச்சியை உயர்த்தும் வகுப்புகளுக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தவிரவும் தபால் கல்வியும் மாலை நேர வகுப்புகளும் இருக்கும். இவை உழைப்பாளிகள் தம் கல்வியைத் தொடரவும், அவர்கள் தம் ஞானத்தை இடையறாது வளர்த்து புதுப்பித்துக் கொள்ளவும், பொது கலாசாரத்தையும் தொழில் பயிற்சியையும் வளர்க்கவும் அனுகூலமான வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன.

கல்வியின் தரம் உயருவதும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் கோரிக்கைகளுக்கேற்ப ஊழியர் பயிற்சியை மேம்படுத்துவதும் இதற்கான செலவுகளை அதிகரிக்கின்றன (1970இல் 19.8 பில்லியன் ரூபிள், 1975இல் 26.2 பில்லியன் ரூபிள், 1980இல் 31.1 பில்லியன் ரூபிள், 1985இல் 38.4 பில்லியன் ரூபிள்). இச்செலவுகள் சமூகக் கடமைகளின் நிறைவேற்றத்திற்கு நேரடியாகச் செல்கின்றன என்பது ஒரு புறமிருக்க (கல்வி வளர்ச்சி வாழ்க்கைத் தரத்தின் முக்கியக் குறியீடுகளில் ஒன்று, தனி நபரின் பன்முக வளர்ச்சிக்கான நிபந்தனை) கல்விக்கான செலவுகள் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி உழைப்பின் உற்பத்தித் திறனையும் தரத்தையும் உயர்த்த உதவும் செயல்வன்மை மிக்க முதலீடுகளாகும்.

நவீன செகன்டரி மற்றும் உயர் கல்விக் கூடங்களுக்கு நவீன இயந்திரங்கள், பரிசோ

தனைக் கூடச் சாதனங்கள், கணிப்பொறி இயந்திரங்கள் ஆகியவை தேவை. கல்வி முறையையே பெரிதும் புதுவிதமாக அணுக வேண்டும்; இதற்கு தொழிற்சாலைப் பிரிவு கள், சோதனைக் கூடங்கள், கூட்டுப் பண்ணை, அரசுப் பண்ணைப் பட்டறைகள், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களின் வசதி கள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண் டும். இம்முறை அரசு செலவுகளைச் சிக் கனப்படுத்த உதவுவதோடு, உற்பத்தியில் சந்திக்கப் போகும் யதார்த்தத்திற்கு ஏற்ற படி இளைஞர்களைத் தயார்படுத்தவும் துணை புரியும்.

மேற்கூறியவை அனைத்தும் மனிதத் திறமைகளின் வளர்ச்சியுடன், ''திறமைக் கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதி யம்'' என்ற அடிப்படை சோஷலிசக் கோட் பாட்டின் மிக முக்கியமான முதல் பகுதி யின் நிறைவேற்றத்தோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடையவை. இத்திறமைகள் பொது கலாசாரம், தொழில் பயிற்சியுடன் கூட உடல் நலம், உழைக்கும் திறமை, விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம் முன்வைக்கும் மன நிலை சூழலுக்குத் தயாராயிருப்பது ஆகிய வற்றை உள்ளடக்கியுள்ளன.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத் தைத் துரிதப்படுத்துவது சம்பந்தமான பல் வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, திட்டமிடலை, நிர்வாகத்தை, பொருளா தார இயந்திரம் முழுவதையும் மேம்படுத்த வேண்டும்.

## அத்தியாயம் நான்கு

# பொருளாதார நிர்வாகத்தைச் சீரமைத்தல்

சோவியத் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளில் பொருளாதார நிர்வாகத்தைச் சீரமைப்பதற்கு முக்கியப் பங்குண்டு. இதை இடையறாது மேம்படுத்துவதன் மூலம் உற்பத்தி உறவுகளும் அவற்றின் திட்டவட்டமான வடிவங்களும் சீரிசைவாக வளர்ந்து வரும் உற்பத்திச் சக்திகளுக்கு ஏற்றபடி இருக்க வகை செய்யப்படுகிறது. இவ்வாறாக, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்குத் தேவையான வாய்ப்பு, உற்பத்தியின் செயல்வன்மையை இடையறாது உயர்த்தி, அதன் அடிப்படையில் சமூக கடமைகளை நிறைவேற்றுவதற்கான சூழல் தோற்றுவிக்கப்படுகிறது.

சமுதாய வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தின் சிறப்பியல்புகள், பொருளாயத உற்பத்தியில் முதிர்ச்சியடைந்துள்ள மாற்றங்கள், திட்டவட்டமான வரலாற்று வளர்ச்சி அம்சங்கள் ஆகியவைதான் பொருளாதார நிர்வாகத்தில் ஏற்படும் மாற்றங்களின் போக்கையும் அளவையும் நிர்ணயிக்

கின்றன. திட்டமிடப்படும் மாற்றங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமானவையாயும் அளவில் பெரியவையாயும் உள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு பொருளாதார நிர்வாகத்தின் சீரமைப்பு ஆழமானதாய் இருக்க வேண்டும்.

கட்சியின் 27ஆவது பேராயம் சுட்டிக் காட்டியபடி இன்றுள்ள நிலையில், தனிப்பட்ட சில மாற்றங்களுடன் நின்றுவிட முடியாது, இன்று அடிப்படை சீர்திருத்தம் தேவைப்படுகிறது. அதாவது, உற்பத்தியானது சமூகத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டும், சோவியத் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும், செயல்வன்மையையும் தரத்தையும் உயர்த்த நிர்வாக முறை முடுக்கி விடப்பட வேண்டும், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த வேண்டும், உழைப்பாளிகளுக்குத் தம் உழைப்பின் விளைபயனில் உள்ள அக்கறையை உயர்த்த வேண்டும், தேசியப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு அங்கத்திலும், குறிப்பாக உழைப்பாளர் கூட்டுகளில் முன்முயற்சியை, சோஷலிச ஊக்கத்தை அதிகப்படுத்த வேண்டும்.

வி. இ. லெனினால் உருவாக்கப்பட்டு, வரலாற்றால் சரிபார்க்கப்பட்ட சோஷலிச நிர்வாகக் கோட்பாடுகள்தான் பொருளாதார நிர்வகிப்பை மேம்படுத்துவதில் வழிகாட்டிகளாகத் திகழ்ந்தன, திகழுகின்றன.

இக்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, இவற்றை ஆக்கபூர்வமாக வளர்த்து, சோவியத் நாட்டின் வளர்ச்சியில் இன்றைய காலகட்டத்தின் சிறப்பியல்புகளைக் கவனத்தில் கொர்ண்டு சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி பொருளாதார நிர்வாகத்தைச் சீரமைப்பதன் அடிப்படைத் திசையமைவுகளை நிர்ணயித்தது. இதன் நிறைவேற்றத்தில் பின்வரும் கடமைகள் முன்வைக்கப்படுகின்றன:

''—பொருளாதாரத்தின் மையத் தலைமையின் செயல்வன்மையை அதிகப்படுத்துவது, கட்சியின் நீண்ட கால பொருளாதாரக் கொள்கையின் முக்கிய லட்சியங்களை அடைவதிலும் தேசியப் பொருளாதார வளர்ச்சியின் வேகங்கள், விகிதங்கள், சீரிசைவை நிர்ணயிப்பதிலும் மையத்தின் பங்கை வலுப்படுத்தல்; அதே நேரத்தில், கீழ்மட்ட நிர்வாக உறுப்புகளின் அன்றாட நடவடிக்கையில் மையம் தலையிடும் வழக்கம் கைவிடப்பட வேண்டும்;

—தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் சுதந்திரத்தைவிரிவுபடுத்த வேண்டும், அதிகபட்ச இறுதி விளைபயன்களை அடைவதில் இவற்றின் பொறுப்பை அதிகப்படுத்த வேண்டும். இதற்கு இவற்றை உண்மையான அடக்கக் கணக்கீட்டு முறைக்கும் சுய

ஈடுகட்டும் முறைக்கும் சுயநிதியமைப்புக்கும் மாற்ற வேண்டும், உழைப்பாளர் கூட்டின் வருமானங்கள் செயல்வன்மையுள்ள உழைப்பை நேரடியாகச் சார்ந்திருக்குமாறு செய்ய வேண்டும்;

—தேசியப் பொருளாதாரத்தின் எல்லா மட்டங்களிலும் பொருளாதார நிர்வாக முறைகளுக்கு மாற வேண்டும்; இதற்கு பொருளாயத தொழில்நுட்ப சப்ளையை மாற்றியமைக்க வேண்டும், விலைகள் முறையையும் நிதி ஒதுக்கீடு, கடன் முறையையும் மேம்படுத்த வேண்டும், செலவு அதிகரிப்பைக் குறைக்க நல்ல வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்;

—உற்பத்திக் குவிப்பு, தனித்துறைப் பாடு, கூட்டுறவு ஆகிய போக்குகளைக் கவனத்தில் கொண்டு நிர்வகிப்பில் நவீன ஸ்தாபன கட்டமைப்புகளைப் புகுத்த வேண்டும். பரஸ்பரத் தொடர்புடைய துறைகளின் இணையங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப பல்துறை மையங்கள், பல்வேறு விதமான பொருளாதார கூட்டிணைப்புகள், பிரதேச உற்பத்தி அமைப்புகள் ஆகியவற்றைத் தோற்றுவிக்க வேண்டும்;

—பொருளாதார நிர்வகிப்பில் துறைகளின் மற்றும் பிரதேசங்களின் நிர்வகிப்பை சாலச்சிறந்த வகையில் இணைத்து, குடியரசுகள், பிரதேசங்களின் பன்முக பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு வகை செய்ய வேண்டும், பல்வேறு துறைகளுக்கிடையில்

விவேகமான தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும்;

—நிர்வாகத்தில் ஜனநாயக அம்சங்களைப் பரவலாகப் புகுத்த வேண்டும், இதில் உழைப்பாளர் கூட்டுகளின் பங்கை அதிகப்படுத்தி, கீழிருந்தான கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டும், நிர்வாக உறுப்புகள் அறிக்கை சமர்ப்பிக்கும் முறையையும் அவற்றின் ஒளிவுமறைவின்மையையும் அதிகப்படுத்த வேண்டும்.''*

சீரமைப்பு ஆரம்பமாகி விட்டது. முதலில் இது தொழிற்துறையில் நடைபெறுகிறது. வீட்டு சேவைத் துறை, கட்டுமானம், போக்குவரத்திலும் இதே திசையில் முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிர்வாகத்தின் மேல் மட்டங்களில் செயல் வன்மையுள்ள கட்டமைப்புகளின் தேட்டம் தொடருகிறது. சோவியத் அமைச்சரவையின் கீழ் இயந்திரக் கட்டுமான பியூரோ தோற்றுவிக்கப்பட்டதில் இது பிரதிபலிக்கிறது. விவசாயத் தொழிற்துறை இணையத்தின் ஸ்தாபன அமைப்புத் தலைமையை மாற்றியமைப்பது முடிவடைந்து வருகிறது; இது விவசாயத் துறைக்கும் இதனுடன் தொடர்புடைய தொழிற்துறை பிரிவுகளுக்கும் இடையில் யதார்த்தமான, செயல்வன்மையுள்ள ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்

---

* Mikhail Gorbachev, *Political Report...*, p. 41.

டும். விவசாயத் தொழிற்துறை கூட்டமைப்பு கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; கலைக்கப் பட்ட ஒரு சில அமைச்சகங்களின் அடிப் படையில் 1985 இறுதியில் சோவியத் அரசு விவசாயத் தொழிற்துறை கமிட்டி தோற்று விக்கப்பட்டது. ''நாட்டின் விவசாயத் தொழிற்துறை இணையத்தின் பொருளா தார நிர்வகிப்பு முறையை மேம்படுத்துவது'' சம்பந்தமான தீர்மானம் 1986 மார்ச்சில் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியாலும் சோவியத் அமைச் சரவையாலும் நிறைவேற்றப்பட்டது.

நிர்வாக முறையின் பன்முக வளர்ச்சிக் கான நடவடிக்கைகளைத் திட்டமிட்டு செயல்படுத்தவும், திட்டமிடல், பொருளா தார உந்துகோல்கள், ஊக்குவிப்புகள், ஸ்தாபன அமைப்புகளுக்கு இடையில் ஒற்று மையையும் செயல்வன்மையுள்ள பரஸ்பரச் செயலாக்கத்தையும் ஏற்படுத்தவும் சோவி யத் அமைச்சரவை ஒரு கமிஷனை தோற்று வித்தது. நிர்வாகம், திட்டமிடலை மேம் படுத்துவது சம்பந்தமான அக்கமிஷனில் ஒரு விஞ்ஞானப் பிரிவும் உருவாக்கப்பட் டது.

பெரும் பணி எதிர் நிற்கிறது, புதிய அணுகுமுறைகளை நிலைநாட்ட வேண் டும். புதிய தீர்வுகளைக் காண வேண்டும், பொருளாதாரக் கட்டமைப்புகளை மாற்றி யமைக்க வேண்டும்.

1987 ஜூனில் நடந்த கட்சி மத்தியக்

கமிட்டியின் முழுப் பேரவைக் கூட்டம் சீரமைப்பு எப்படி நடைபெறுகிறது என்பதை பாரபட்சமின்றி மதிப்பிட்டது, ஏற்கெனவே தொடங்கியுள்ள பணிகளின் ஒரு சில அரசியல் முடிவுகளைப் பரிசீலனை செய்தது, இன்றைய கட்டத்தில் இது சம்பந்தமான உடனடிக் கடமைகளை நிர்ணயித்தது. பொருளாதார நிர்வகிப்பை அடியோடு சீரமைப்பதன் அவசியத்தை முழுப் பேரவை சுட்டிக் காட்டியது. இதுதான் துரிதப்படுத்தல் கொள்கையின் வெற்றி முழுவதையும் நிர்ணயிக்கும் இன்றைய மத்திய கடமையாகும். உற்பத்தியின் முக்கிய அங்கமாகிய தொழில் நிறுவனங்களின் (கூட்டமைப்புகளின்) பொருளாதார நிர்வகிப்பை மாற்றியமைக்கும் பிரச்சினைகளும் இப்பேரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. அரசுத் தொழில் நிறுவனங்கள் (கூட்டமைப்புகள்) பற்றிய சட்டம் பொதுமக்களின் விவாதத்திற்குப் பின், சுப்ரீம் சோவியத் அமர்வின் முன் சட்டமியற்றப்படுவதற்காக முன்வைக்கப்பட்டது; இந்த அமர்வு இச்சட்டத்தையும் தேசியப் பொருளாதார நிர்வகிப்பை மாற்றியமைப்பது சம்பந்தமான மற்ற சட்டங்களையும் நிறைவேற்றியது. அரசுத் தொழில் நிறுவனங்களைப் பற்றிய சட்டம் 1988 ஜனவரி 1 முதல் அமலுக்கு வந்தது.

சோஷலிச நிர்வாக முறை பற்றிய லெனினியக் கோட்பாடுகள்தான் நிர்

வாகத்தை மாற்றியமைப்பது சம்பந்தமான சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கையில் வழிகாட்டிகளாகத் திகழுகின்றன.

இக்கோட்பாடுகளில் திட்டமிட்ட பொருளாதாரத்தின் அடிப்படைகள் அடங்கியுள்ளன; இந்த வழிகாட்டி அம்சங்களின் அடிப்படையில்தான் சோஷலிச சமுதாயத்தின் பொருளாதார நிர்வாகம் செயல்வன்மையோடு இயங்க வகை செய்ய முடியும். விஞ்ஞான பூர்வமான பொருளாதார நிர்வாகம், ஜனநாயக மத்தியத்துவம், உழைப்பு வரையளவிற்கும் நுகர்வு வரையளவிற்கும் இடையிலான ஒருமைப்பாடு, திட்டத்தையும் பொருளாதார நெம்புகோல்களையும், கூட்டுத் தலைமையையும் ஒரு நபர் நிர்வகிப்பையும், துறை ரீதியான அணுகுமுறையையும் பிரதேச அணுகுமுறையையும், பொருளாதார உறுப்புகளின் உரிமைகளையும் கடமைகளையும் விவேகமாக இணைத்தல்—இவைதான் நிர்வாக முறைக்குக் கண்டிப்பாகத் தேவைப்படும் கோரிக்கைகளாகும்.

ஆனால் எப்போதுமே, பொதுவானது தனிப்பட்ட அம்சத்திலும், கோட்பாட்டு ரீதியானது வரலாற்று ரீதியில் திட்டவட்டமானதிலும்தான் வெளிப்படும். சோஷலிச சமுதாய வளர்ச்சியில் ஒவ்வொரு பெரிய கட்டமும் சோஷலிச நிர்வாகக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதில் ஆக்கபூர்வமான அணுகுமுறையையும், அந்தந்த நிலவரத்

தின் சிறப்பு அம்சம், தீர்க்கப்படும் பிரச்சினை களின் தன்மை ஆகியவற்றிற்கேற்ப திட்ட வட்டமான செயல்வடிவங்களைத் தேடு வதையும் அவசியமாக்குகிறது. இந்த அம் சம் கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப் பில் விசேஷமாகக் கோடிட்டுக் காட்டப் பட்டுள்ளது.

பொருளாதார நிர்வாகத்தைச் சீரமைக் கும் நடவடிக்கையில், நிலைத்துப் போன கருத்துகள், அதுவும் மூடநம்பிக்கைகள் நம் மைத் தடுத்து நிறுத்தக் கூடாது என்று சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயத்தில் சுட்டிக் காட்டப் பட்டது. தொழில் நிறுவனங்கள், கூட் டமைப்புகளின் சுதந்திரம், முன்முயற்சி, பொறுப்பு, சோஷலிசப் பண்ட உற்பத்தி யாளர்கள் என்ற வகையில் இவற்றின் பங்கு ஆகியவற்றை உயர்த்தும் விஷயத்திலும் இதைக் குறிப்பிடலாம்.

பொருளாதார நிர்வாகத்தில் எந்த ஒரு மாற்றத்தைச் செய்தாலும் அது சோஷ லிசக் கோட்பாடுகளிலிருந்து விலகுவதாகச் சிலர் கருதுவதை கட்சியின் 27ஆவது பேரா யம் கண்டித்தது. சமூக பொருளாதாரத் துரிதப்படுத்தல்தான், நடைமுறையில் சோ ஷலிசத்தை வலுப்படுத்துவதுதான் நிர் வாகத்தையும், சோஷலிச உற்பத்தி உறவு களின் முறை முழுவதையும் மேம்படுத்துவ தன் உயர் அளவுகோலாகத் திகழ வேண்டும்

என்று இப்பேராயத்தில் சுட்டிக் காட்டப் பட்டது.

வெவ்வேறு வரலாற்றுக் கட்டங்களுக்கு ஒரே மாதிரியான சோஷலிசப் பொருளாதார நிர்வாகக் கோட்பாடுகள் திட்டவட்டமான பிரச்சினைகளுக்குக் கறாரான தீர்வுகளை முன்மொழியவில்லை. இக்கோட்பாடுகள் எப்போதுமே நெகிழ்வுத் தன்மைக்கு, நெளிவு சுழிவுகளுக்குப் பரவலான வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன; இவ்வாய்ப்புகள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை, வகைக்கு ஏற்ப பயன்படுத்தப்படுகின்றன.

பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்தும் பணி, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் அனைத்தையும் செயல்வன்மையை அதிகப்படுத்தும் அனைத்தையும் சகலவிதங்களிலும் வளர்க்க வேண்டும். மாறாக, பொருளாதாரத்தைத் தீவிரப்படுத்தும் பாதையில் தடையாக இருக்கும் எல்லா வடிவங்கள், முறைகள், தீர்வுகளையும் உறுதியோடு அகற்ற வேண்டும்.

சமீப ஆண்டுகளில் சோவியத் நாட்டில் பொருளாதார நிலவரம் அடியோடு மாறியுள்ளது. ''பல '' என்பது ''நல்லது'' என்று இருந்த நிலை மாறியது. இன்று முக்கியமானது என்னவெனில் பொருட்களின் தரம், அதன் தொழில்நுட்ப மட்டம், பொருட்களின் பட்டியல் புதுப்பிக்கப்படும் வேகம், வளங்கள் பயன்படுத்தப்படும் செயல் வன்மை ஆகியவையாகும். இதற்குத் திட்ட

மிடலிலும் பொருளாதார ஊக்குவிப்பு முறை களிலும், சோஷலிசப் போட்டியை ஒழுங் குமைப்பதிலும் பொருளாதாரச் சிந்தனை யிலும் புதிய அணுகுமுறைகள் தேவைப்படு வது இயற்கையே.

திட்ட நிர்வாக முறையை மேம்படுத்து வதில், ஜனநாயக மத்தியத்துவக் கோட் பாட்டைத் தொடர்ச்சியாகவும் கறாராக வும் கடைப்பிடிப்பதற்கு முக்கியப் பங் குண்டு. ''இன்று நம் முன்னுள்ள கடமை நிர்வாகத் துறையில் ஜனநாயக மத்தியத் துவக் கோட்பாட்டை அமல்படுத்துவது தான்...'' என்றார் வி. இ. லெனின். அவர் தொடர்ந்து கூறினார்: அதாவது, ''இருப்புப் பாதை, தபால் தந்தி துறை, மற்ற போக்குவரத்து துறைகள் போன்ற பல் வேறு பொருளாதாரத் துறைகள், நிறுவனங் களின் செயற்பாட்டில் முழுச் சீரிசைவிற் கும் ஒற்றுமைக்கும் வகை செய்ய வேண்டும். அதே நேரத்தில் உண்மையான ஜனநாயக பொருளில் மத்தியத்துவம் என்பது, ஸ்தல சிறப்பியல்புகளை மட்டுமின்றி ஸ்தல முன் முயற்சியையும் ஸ்தல தொடக்கங்களை யும், பொது லட்சியத்தை அடையும் பல் வேறு வழிகள், முறைகள், சாதனங்களையும் முழுமையாகவும் தங்குதடையின்றி வளர்க் கும் வாய்ப்பை—இவ்வாய்ப்பு வரலாற்றி லேயே முதன்முதலாகத் தோற்றுவிக்கப் பட்டுள்ளது—முன்னனுமானிக்கிறது.''*

* V. I. Lenin, *Collected Works*, vol. 27, p. 208.

சோஷலிச நிர்வாகத்தின் இந்த மிக முக்கியக் கோட்பாட்டை நிறைவேற்றும் போது இரண்டு கடைக்கோடி நிலைகளுக்கு எதிராக —இது அலுவலகச் சடங்கு மனப்பாங்குடனும் அராஜகவாதத்துடனும் கலந்து விடுவதற்கு எதிராக—போராட வேண்டியது அவசியம் என்றார் வி. இ. லெனின். ''நாம் ஜனநாயக மத்தியத்துவத்தை ஆதரிக்கின்றோம். இந்த ஜனநாயக மத்தியத்துவம் ஒரு புறம் அதிகார வர்க்க மத்தியத்துவத்திலிருந்தும் மறுபுறம் அராஜகவாதத்திலிருந்தும் எப்படி பெரிதும் மாறுபடுகிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்'' என்று அவர் எழுதினார்.*

ஜனநாயக மத்தியத்துவத்தைப் பற்றிய லெனினிய விளக்கம் ஆழ்ந்த இயக்கவியல் பொருளைக் கொண்டது. இதில் இரண்டு அம்சங்களையும் ஒரே நேரத்தில், பரஸ்பரம் வளர்க்க வேண்டியதன் அவசியம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது; அதாவது மையத் திட்டமிடலை வலுப்படுத்த வேண்டும், அதே சமயம் நிர்வகிப்பில் ஜனநாயக அடிப்படைகளை விரிவுபடுத்த வேண்டும்.

ஜனநாயக மத்தியத்துவத்தின் இரண்டு அம்சங்களையும் வளர்ப்பதானது ஒரு கொச்சை அணுகுமுறைக்கு நேர் மாறானது. இக்கொச்சை அணுகுமுறையின்படி, மத்தியத்துவத்தை வலுப்படுத்த எந்த ஒரு

---

* *Ibid.*, p. 207.

முயற்சியை மேற்கொண்டாலும் அது ஏதோ பொருளாதார உறுப்புகளின் சுதந்திரத்தை யும் உரிமைகளையும் சுருக்குமாம்; இந்த உறுப்புகளின் உரிமைகளை அதிகப்படுத்தி னாலோ அது ஏதோ மத்தியத்துவத்தைப் பெரிதும் பலவீனப்படுத்துமாம். இந்த இயந்திரகதியான அணுகுமுறையானது, நிர் வாகக் கடமைகளின் மொத்தம் மாற்ற மற்றது, நிலையானது என்ற கருத்தின் அடிப் படையிலானது. நிச்சயமாக, ஒரு கேக்கை வெட்டுவது போல் இந்த மொத்தத்தைக் கூறு போட்டால் உண்மையிலேயே ஒரு கூறு கூடும் பொழுது மற்றது குறையத்தான் செய்யும்.

மைய நிர்வாக உறுப்புகளால் தீர்க்கப் படும் பிரச்சினைகளை வெறுமனே இயந் திரகதியாக, எண்ணிக்கையளவில் பெருக் கினால் அது மத்தியத்துவத்தை வலுப்படுத் தாது, மாறாக வலுக்குன்றவே செய்யும் என்று அனுபவம் காட்டுகிறது. இதற்கு என்ன காரணம் என்பது வெள்ளிடை மலை. கடமைகள் கூடும் பொழுது அது சக்திகளை விரயமாக்கும்,மேற்போக்கான அணுகுமுறை யைத் தோற்றுவிக்கும், உண்மையிலேயே முக்கியமான, கோட்பாட்டு ரீதியான, பெரிய விஷயங்கள் தவிர்க்க இயலாதவாறு பின்னுக்குத் தள்ளப்படும். மேலும், உயர் மட்ட நிர்வாக உறுப்புகள் பரிசீலிக்க வேண் டிய விஷயங்கள் கூடும் பொழுது அது தேவை யற்ற சிறு விவகாரங்களில் தலையிடச்

செய்யும், ஏராளமான காகித மலை குவியும், அதிகார வர்க்க நிர்வாக முறைக்கான அடிப்படையை ஏற்படுத்தும்.

சோஷலிசம் வளர்ந்து முதிர்ச்சியடையும் பொழுது, ஒரு காலத்தில் ஜனநாயக மத்தியத்துவத்திற்கு இடையூறாக இருந்த தடைகள் படிப்படியாக மறையும் அதே நேரத்தில் சமூக முன்னேற்றக் கடமைகள் மேன்மேலும் சிக்கலாகி வருவதால், பிரதான பொருளாதாரப் பிரச்சினைகளின் தீர்விற்கு அதிகமான விஞ்ஞான அடிப்படையும், கூடுதலான தரமும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. பொதுவில், சோஷலிச சமுதாயம் வளர வளர, ஜனநாயக மத்தியத்துவத்தின் இரண்டு அம்சங்களையும் பரஸ்பரம் வலுப்படுத்தும் அவசியமும் அதிகரிக்கிறது.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில், பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்துவது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள கருத்துநிலைகள் மேற்கூறியதைப் புரிந்து கொண்டதன் அடிப்படையிலானவை. லெனினிய நிர்வாகக் கோட்பாடுகளை, எல்லாவற்றிற்கும் மேலாக ஜனநாயக மத்தியத்துவத்தைத் தொடர்ச்சியாக செயல்படுத்த வேண்டியதன் அவசியம் இதில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இந்த ஜனநாயக மத்தியத்துவம் இதன் இரண்டு அம்சங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. அதா

வது, மையத் தலைமையின் செயல்வன்மை யையும் அதிகப்படுத்த வேண்டும், தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் பொருளாதார சுதந்திரம், பொறுப்பையும் பெரிதும் உயர்த்த வேண்டும்.

நீண்ட காலமாக தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் சுதந்திரம் பற்றிய பிரச்சினை மையத் திட்டமிடல், நிர்வாகத்துடனான தொடர்பில் மட்டுமே பரிசீலிக்கப் பட்டது. இது மிக முக்கிய அம்சம் என்றாலும் பிரச்சினை இதனுடன் முடிந்து விடவில்லை. இன்று தேசியப் பொருளாதாரத்தின் முக்கிய உறுப்புகளின் உரிமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் இடையிலான தொடர்பு மேன்மேலும் முக்கியத்துவத்தைப் பெற்று வருகிறது.

தம் நடவடிக்கையின் இறுதி விளைபயன்களிலும் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்துவதிலும் தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் பொறுப்பைப் பெரிதும் உயர்த்துமாறு வாழ்க்கையே கோருகிறது. இது வெள்ளிடை மலை. அதே நேரத்தில் இப்பொறுப்பை உண்மையாக உயர்த்த இவற்றிற்குப் பரவலான உரிமைகளை அளித்து, சுதந்திரத்தை அதிகப் படுத்துவதை விட வேறு வழியில்லை என்பதும் தெளிவாக வேண்டும். யாருக்கு சுயமான முடிவுகளை எடுக்கும் உரிமை யில்லையோ அவரால் இம்முடிவுகளின் பின்

விளைவுகளுக்குப் பொறுப்பேற்கவும் முடியாது.

இத்திசையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஒரு புறமிருக்க, ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்ட வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்துவதும் பெரிதும் முக்கியமாகும். 1983இல் சோவியத் நாட்டில் நிறைவேற்றப்பட்ட உழைப்பாளர் கூட்டுகளைப் பற்றிய சட்டமும் தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்களின் நிர்வகிப்பில் இவற்றின் பங்கை அதிகரிப்பதும் இங்கே குறிப்பிடப்படும். பல நேரங்களில் இச்சட்டம் சம்பிரதாயத்திற்காக ஏனோதானோவென்று பின்பற்றப்படுகிறது, உழைப்பாளர் கூட்டுகளின் சமூக நடவடிக்கைகளில் கணிசமான அதிகரிப்பு இல்லை என்று நடைமுறை காட்டுகிறது.

இதன் தொடர்பாக, இச்சட்டத்தில் அடங்கியுள்ள ஜனநாயகக் கோட்பாடுகளையும் வரையளவுகளையும் அன்றாடப் பணியில் செயல்படுத்த உதவும் முறையை அடிப்படையிலேயே மேம்படுத்தும் கடமையைக் கட்சியின் 27ஆவது பேராயம் முன்வைத்தது. உழைப்பாளர் கூட்டுகள் இறுதி முடிவுகளை எடுக்கக் கூடிய பிரச்சினைகளின் பட்டியலைப் படிப்படியாக விரிவாக்க வேண்டும், தொழிலாளர்கள், ஊழியர்களின் பொதுக் கூட்டங்களின் பங்கை உயர்த்த வேண்டும், இக்கூட்டங்களின் முடிவுகளை நிறைவேற்றுவதில் இவற்றிற்கு உள்ள பொறுப்பை

அதிகப்படுத்த வேண்டும் என்று கட்சிப் பேராயத்திற்கு மத்திய கமிட்டி சமர்ப் பித்த அரசியல் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டது. பொதுக் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வேலைக் குழுக் களில் மட்டுமின்றி தொழில் நிறுவனங்களின் மட்டங்களிலும் உழைப்பாளர் கூட்டுக் கவுன்சில் ஒன்று செயல்பட்டால் நன்றா யிருக்கும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது; இதில் நிர்வாகப் பிரதிநிதிகள், கட்சி, தொழிற்சங்க , இளம் கம்யூனிஸ்டுகளின் ஸ்தாபனப் பிரதிநிதிகள், வேலைக் குழுக் கவுன்சில்களின் பிரதிநிதிகள், தொழிலாளர் கள், தொழில் நிபுணர்கள் ஆகியோர் இடம் பெறலாம்.

இச்சட்டத்தை அமல்படுத்துவதில் காணப்படும் குறைகளுக்கும் இதில் தென் படும் ஏனோதானோவென்ற போக்கிற்கும் சில காரணங்கள் உண்டு. உதாரணமாக, இச்சட்டத்திற்கேற்ப அடக்கக் கணக்கீட்டு முறை சீரமைக்கப்படவில்லை, தொழில் நிறுவனங்களின் நடவடிக்கையின் இறுதி முடிவுகளுக்கும் இவற்றில் பணி புரிபவர் களின் பொருளாயத நிலைக்கும் இடையில் நேரடியான, செயல்முனைப்பான தொடர்பு ஏற்படுத்தப்படவில்லை. வேறு வார்த்தை களில் சொன்னால், சட்ட வரையளவுகள் உண்மையான பொருளாதார உறவுகளி லிருந்து பிரிந்து நின்றன. இது இறுதி முடிவு களில் தேவையான அக்கறையையும் எனவே

பொறுப்பையும் ஏற்படுத்தவில்லை, நிர்வாக விஷயங்களில் மந்தத்தைத் தோற்றுவித்தது.

இதிலிருந்து வரும் முடிவு தெளிவு. யார் முடிவெடுக்கும் உரிமையைப் பெறுகின்றாரோ அவர் அதன் பின்விளைவுகளுக்கான பொறுப்பையும் ஏற்க வேண்டும். எனவே உழைப்பாளர் கூட்டுகளின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் விரிவுபடுத்துவதை இவற்றின் அடக்கக் கணக்கீட்டுப் பொறுப்பை வலுப்படுத்துவதுடன் அங்கக ரீதியாக இணைக்க வேண்டும். உழைப்பாளர் கூட்டும் ஒவ்வொரு உழைப்பாளியும், உயர் செயல் வன்மையுள்ள உழைப்பின் பயன்களையும் பொறுப்பின்மையின் விளைவுகளையும் உண்மையிலேயே நேரடியாக உணர வேண்டும். இது காரியத்தின் பால் உண்மையான பொறுப்புணர்வை வளர்க்கவும், அதன் மூலம் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் உதவும்.

இங்கே, பொருளாதார நிர்வாகத்தின் மிகச் சிக்கலான அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளில் ஒன்று தோன்றுகிறது. இந்த நிர்வாகத்தை மேம்படுத்துவது சம்பந்தமான திட்டவட்டமான பிரச்சினைகளைப் பார்க்கும் முன் இப்பிரச்சினையைத் தனியே பார்ப்போம். அதாவது சோஷலிச பொதுச் சொத்துடைமையின் வாய்ப்புகளை வெளிப்படுத்துவதிலும், இதன் மேம்பாடுகளை நடைமுறையில் கிரகிப்பதிலும்

அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால், இதைப் பொருளாதார ரீதியில் முழுமையாகப் பயன்படுத்துவதிலும் பொருளாதார நிர்வாகத்தின் பங்கைப் பற்றி இங்கே குறிப்பிடப்படுகிறது.

சோஷலிச பொதுச் சொத்துடைமை ஊர்ஜிதப்படும் பொழுது அது பொருளாதார வாழ்க்கை முழுவதையும் அடியோடு மாற்றுவதை வரலாற்று அனுபவம் காட்டுகிறது. சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் உற்பத்தியின் உயர் செயல்வன்மைக்கான போராட்டத்தை உண்மையான மானுடத் தன்மையுடன் அங்கக ரீதியில் இணைக்கவும் இதுவரை தெரியாத, புதிய வாய்ப்புகள் தோன்றுகின்றன. ஆனால் இந்த வாய்ப்புகள் தாமே நிறைவேறவில்லை என்பதையும் அதே அனுபவம் காட்டுகிறது.

உற்பத்திச் சாதனங்களின் உண்மையான எஜமானன் என்ற நிலையை நன்கு உணர்ந்து பழைய பழக்கங்களை விட்டொழிக்க நேரம் வேண்டும் என்பதுடன் மட்டும் விஷயம் முடிந்துவிடுவதில்லை. பொதுச் சொத்துடைமையை நிலைநாட்டுவதென்பது ஒரே தருணத்தில் முடிந்து விடும் செயல் அல்ல. இது ஒரு நீண்ட, சிக்கலான நிகழ்ச்சிப் போக்காகும். இப்போக்கில் இதைப் பொருளாதார ரீதியாக நிறைவேற்றும் பல்வேறு வடிவங்கள் உருவாவதும் மேம்படுவதும் அடங்கும்.

சோஷலிச நிர்மாணிப்பின் வளம் மிகு அனுபவ அடிப்படையில் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது பேராயம் இதன் தொடர்பில் கோட்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த தத்துவார்த்த முடிவுகளை எடுத்தது. சோஷலிசச் சொத்துடைமைக்கு வளம்மிகு சாரம் உண்டு, உற்பத்திச் சாதனங்கள் மற்றும் விளைபயன்களைப் பயன்படுத்துவதில் மனிதர்கள், உழைப்பாளர் கூட்டுகள், துறைகள், பிரதேசங்களுக்கு இடையிலான பன்முக உறவுமுறைகள் உண்டு, மிகப் பல்வேறான பொருளாதார நலன்கள் இதிலடங்கும் என்று பேராயத்திற்குக் கட்சி மத்திய கமிட்டி சமர்ப்பித்த அரசியல் அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது. இது சிக்கலான, இடையறா இயக்கத்திலும் மாற்றத்திலும் உள்ள உறவுகளின் தொகுப்பாகும். இதில் நடைபெறும் மாற்றங்களைத் தத்துவார்த்த ரீதியில் ஆழ்ந்து பரிசீலிக்காவிடில் சரியான நடைமுறைத் தீர்வுகளைக் கண்டுபிடிக்க முடியாது, எனவே சோஷலிசச் சொத்துடைமையின் பாலான உண்மையான எஜமான உணர்வை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள முடியாது.

மொத்தமாக சோஷலிச சமுதாயத்தின் நலன்களையும் இதன் எல்லா சமூகப் பிரிவுகள், குழுக்களின் நலன்களையும், ஒவ்வொரு உழைப்பாளர் கூட்டின், உழைப்பாளி

யின் நலன்களையும் ஒன்றாக இணைக்க வல்ல சொத்துடைமையின் பொருளாதார வடிவங்களைத் தோற்றுவித்து மேம்படுத்து வதற்கு விசேஷ முக்கியத்துவம் உண்டு. இதற்குக் குறிப்பிட்ட காலம் தேவை. அது வும் இந்த வடிவங்கள் மாற்றமின்றி இருக்கா. சமுதாயத்தின் முன்னேற்றப் போக்கில் (இம்முன்னேற்றத்தின் ஒரு அங்கம், அதற்கான நிபந்தனை என்ற வகையில்) சமூக வாழ்க்கை சிக்கலடைந்து செழுமை யடையும் பொழுது, நுகர்வு மற்றும் மதிப்பு களின் முறையில் மாற்றங்கள் ஏற்படும் பொழுது, மக்களின் கலாசாரம் பொதுவில் வளரும் பொழுது மேற்கூறிய பொருளா தார வடிவங்களும் வளர்ந்து மேம்படும்.

தீய போக்குகள்—உழைப்புக் கட்டுப் பாடு குறைவது, நிர்வாகத் திறமை யின்மை, பொறுப்பின்மை—தலைதூக்கும் பொழுது இதற்கான காரணங்களை வெளி யில் உள்ள, மேற்கட்டுமானப் புலப்பாடு களில் மட்டும் தேடக் கூடாது. இக்குறை களுக்கான வேர்கள் ஆழத்தில், பொதுச் சொத்துடைமையின் பொருளாதார வடிவங் களின் குறைகளிலும் ஒத்திசைவற்ற நலன் களிலும் அடங்கியுள்ளன. தீய போக்குகள் தலைதூக்குவதானது, பொருளாதார நிர் வாகத்தில் எங்கோ தவறு இருக்கிறது, இது மாறிய சூழ்நிலைகளுக்கு ஏற்றதாயில்லை என்பதைக் காட்டுகிறது.

பல்வேறு நலன்கள் ஒத்திசைந்து போகு

மாறு செய்வது பெரிதும் சிக்கலானது. உழைப்பிற்கான ஊதியம் வழங்குவதையும் லாபத்தைப் பகிர்ந்தளிப்பதையும் சரிசெய்தால் போதுமென்று கூறி இதை எளிமையாக்கக் கூடாது. பொருளாதார நலன்களை மட்டுமின்றி சமூக, அரசியல், ஆன்மீக அக்கறைகளை, உடனடி மற்றும் நீண்ட கால, தனிநபர் மற்றும் உழைப்பாளர் கூட்டுகளின் அக்கறைகள், நலன்களை ஒத்திசைவிக்கும் பல்வேறு பொருளாதார, சமூக காரணிகள் இதிலடங்கும். ஆனால் இங்கும் பொருளாதார நிர்வாகத்தை ஒழுங்கமைப்பதுதான் தீர்மானகரமானதாகும். எனவே, தனிநபரின் நலன்களும் உழைப்பாளர் கூட்டுகள், பல்வேறு சமூகக் குழுக்களின் நலன்களும் பொதுவான, அரசு நலன்களுடன் சாலச்சிறந்த வகையில் பொருந்தி வருமாறு செய்து அதன் மூலம் இவற்றைப் பொருளாதார வளர்ச்சியின் உந்து சக்திகளாகப் பயன்படுத்துவது நிர்வாக இயந்திரத்தை மேம்படுத்தும் மிக முக்கியக் கடமைகளில் ஒன்றாகும் என்று கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் கூறப்பட்டுள்ளது தற்செயலானதல்ல.

சோஷலிச சமுதாயத்தில் மற்ற வகையான நலன்களுக்குப் பங்கமேற்படுத்த தேசிய நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை, மாறாக உழைப்பாளர் கூட்டுகள் மற்றும் தனிநபர் நலன்களுக்கு ஊக்கமளித்து வளர்த்துதான் இது அடை

யப்படுகிறது. சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதில் ஒவ்வொரு உழைப்பாளர் கூட்டிற்கும் ஒவ்வொரு உழைப்பாளிக்கும் எவ்வளவுக்கெவ்வளவு அதிக அக்கறையுள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றிகரமாக இத்தேசியக் கடமை நிறைவேற்றப்படும். சோஷலிச நிர்வாகத்தின் மிக முக்கியக் கோட்பாடுகளில் ஒன்றாகிய நலன்களின் ஒற்றுமை பற்றிய கோட்பாடு இதில் வெளிப்படுகிறது.

மொத்தத்தில், சோவியத் சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் புதிய உந்து சக்திகளை அளிப்பது, சோஷலிசப் பொருளாதார விதிகளையும் சோஷலிசத்தின் மிகப்பெரும் ஆக்கபூர்வமான வாய்ப்புகளையும் மேம்பாடுகளையும் முழுமையாகப் பயன்படுத்துவது —இத்திசையில்தான் பொருளாதார நிர்வாகச் சீரமைப்பு செயல்படுகிறது. இந்தச் சிக்கலான, பன்முக நடவடிக்கையில் தன் பொருளாதாரக் கொள்கையை நிறைவேற்றும் கருவி என்ற வகையில் திட்டமிடலின் செயல்வன்மையை உயர்த்துவதற்குக் கட்சி முக்கியத்துவம் அளிக்கிறது.

## திட்டமிடலின் லட்சியங்கள்

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி திட்டமிடல் என்பது, சமூக பொருளாதார

வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் உற்பத்தியைத் தீவிரப்படுத்தவும், நவீன நிர்வாக முடிவுகளைச் செயல்படுத்தவும், சீரிசைவான, முறையான பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்யவும் சுறுசுறுப்பான உந்து சக்தியாகத் திகழ வேண்டும்.

இவைதான் திட்டமிடலை—மொத்தமாக பொருளாதார இயந்திரத்தைப் போலவே—மேம்படுத்துவதில் பொதுவான, கோட்பாட்டு ரீதியான நோக்கங்களாகும். இவை சோவியத் நாட்டின் தேசியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் குணாம்ச ரீதியான மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன, புதிய, தொடர்ச்சிகரமாகத் தீவிரமான பொருளாதார வளர்ச்சிக்கு மாறும் கடமைகளைப் பிரதிபலிக்கின்றன. இந்த நோக்கங்களை அடைய திட்டமிடலின் வடிவங்களையும் முறைகளையும் அடியோடு மாற்றியமைக்க வேண்டும்; இதன் நோக்கம் சமுதாய உற்பத்தியின் ஒழுங்கமைப்பில் புதிய, அதிக உயர்வான மட்டத்தை அடைய வேண்டும் என்பதாகும்.

தேசியப் பொருளாதாரம்தான் ஒரு முழுமை என்ற வகையில் திட்டமிடலுக்கு உட்படுத்தப்படுகிறது. தேசியப் பொருளாதாரத்தின் சீரிசைவுத் தன்மையைப் பற்றிய பிரச்சினைகள், கட்டமைப்பு மாற்றங்கள், உற்பத்திச் சக்திகளை விவேகமாகப் பகிர்ந்

தளிப்பது—இவை எல்லாம் பொருளாதார மையத்தின் மிக முக்கிய கடமைகளாகும். இதனால்தான் பல்வேறு திட்ட முறைகளைப் பயன்படுத்தி நாட்டின் தேசியப் பொருளாதாரத்தைச் செயல்வன்மையோடு நிர்வகிக்க முடியும், வளங்களைத் தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்க முடியும், ஆக்கபூர்வமான கட்டமைப்பு மற்றும் முதலீட்டுக் கொள்கையைப் பின்பற்ற முடியும்.

தேசியப் பொருளாதாரம் சீரிசைவாக, செயல்வன்மையோடு வளர வகை செய்வதில் சோவியத் அரசுத் திட்ட கமிஷனுக்கு விசேஷ பொறுப்புண்டு. இது அன்றாட நிர்வாகப் பிரச்சினைகளைப் பற்றிய கவலைகள் இல்லாத, நாட்டின் உண்மையான விஞ்ஞான பொருளாதாரத் தலைமைப் பீடமாகத் திகழ வேண்டும். தன் நடவடிக்கை புதிய கோரிக்கைகளுக்கு ஏற்றபடி இருக்குமாறு இது மாற்றியமைக்க வேண்டும், முக்கியக் கடமைகளின் நிறைவேற்றத்தின் பாலான பன்முக அணுகுமுறையை வலுப்படுத்த வேண்டும், பொருளாதாரத்தின் சீரிசைவான, செயல்வன்மையுள்ள வளர்ச்சிக்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்று கட்சியின் 27ஆவது பேராயத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. இந்த நிலையிலிருந்து சோவியத் அரசுத் திட்ட கமிஷனின் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும்; நீண்ட கால பொருளாதாரக் கடமைகளின் நிறைவேற்றத்தின் மீது, குறிப்பாக பொது

பொருளாதார விகிதாச்சாரங்களையும் பல்வேறு துறைகளுக்கு இடையிலான விகிதாச்சாரங்களையும் பல்வேறு பிரதேசங்களுக்கு இடையிலான விகிதாச்சாரங்களையும் உருவாக்குவதன் மீது இக்கமிஷனின் கவனம் முழுவதும் இருக்குமாறு செய்ய வேண்டும்.

ஆனால் திட்டமிடல் என்பது இத்துடன் நின்று விடுவதில்லை. இதனுடைய இரண்டாவது துறை அரசுத் திட்டக் கடமைகளை அடிமட்ட உற்பத்தி அங்கங்களாகிய தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகள் வரை எடுத்துச் செல்லும் வடிவங்களும் முறைகளுமாகும். இந்தத் துறையில் தான் ஆழ்ந்த, கோட்பாட்டு ரீதியான மாற்றங்கள் உடனடியாகத் தேவைப்பட்டன. மையத்திலிருந்து தரப்படும் திட்டக் குறியீடுகளைப் பெருமளவு குறைத்தல், ஒப்பந்த உறவுகளின் பங்கை வலுப்படுத்தல், நீண்ட காலத் தன்மையுடைய பொருளாதார வரையளவுகளின் உதவியால் உற்பத்தியை நிர்வகிப்பதற்கு மாறுதல்—இவைதான் இவற்றின் சாரமாகும்.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றமும் பொருளாதாரத்தைத் தீவிர வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவதும் உற்பத்தியின் திட்ட ஒழுங்கமைப்பின் பால் வெறுமனே அதிகமான கோரிக்கைகளை மட்டுமல்ல, பெரிதும் முரண்பாடான கோரிக்கைகளை வைக்கின்றன.

ஒரு புறம் இதற்கு ஸ்திரமான, நிலை

யான பொருளாதாரச் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க வேண்டும். நிலையான ஐந் தாண்டுத் திட்டங்களுக்கு மாற வேண்டி யது அவசியம்; இவை பொருளாதாரப் பார்வையின் எல்லைகளை விரிவுபடுத்தும், தொழில்நுட்ப நவீனமயப்படுத்தல், உற் பத்தித் தனித்துறைப்பாடு ஆகிய திட்டங் களில் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

மறுபுறம், உற்பத்தியைத் தீவிரமயப் படுத்துவதும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றமும் உயரிய வளர்ச்சி வேகத்தை உடையவை, இவை கறாரான திட்டக் கடமைகளுடன் பொருந்தி வராதவை. இவை நிலையாக உள்ள நிர்வாகத் தொடர்பு களில் இடையறா திருத்தங்களைச் செய் யும், உருவாகியுள்ள விகிதாச்சாரங்களை மாற்றக் கோரும், பொருளாதார நடவடிக் கைக்கான சுதந்திரத்தைக் கோரும்.

முற்றிலும் இயல்பான ஒரு கேள்வி பிறக் கிறது: இந்த யதார்த்தமான இயக்கவியல் முரண்பாட்டை எப்படித் தீர்ப்பது? இம் முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக மேற்கூறிய கோரிக்கைகளில் ஒன்றை மற்றொன்றிற் காகப் பலியிடத் தேவையில்லை. இயக்க வியல் முரண்பாடுகள் இயக்கத்தில், பரஸ் பரம் எதிரானவை என்று தோன்றும் அம் சங்களை இணைத்து, பரஸ்பரம் நிரப்பும் வடிவங்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் தீர்க்கப்படுகின்றன.

இத்தகைய வடிவங்களைக் கண்டு பிடித்து புகுத்துவதுதான் திட்ட முறைகளை

யும் அமைப்புகளையும் சீரமைக்கும் வழி களை நிர்ணயிக்கிறது. சாராம்சத்தில் பிரச் சினையை ஆராயப் புகும் முன் பொது சூழ் நிலைகள், முன்தேவைகளைப் பற்றிக் குறிப் பிட வேண்டும்; இவையின்றி செயல்வன்மை யுள்ள திட்ட, நிர்வாக முறைகளைப் புகுத்துவதைப் பற்றி யோசித்துக் கூடப் பார்க்க முடியாது. முழுமையான, நம்ப கரமான, சுறுசுறுப்பான பொருளாதாரச் சீரிசைவை ஏற்படுத்துவது இவற்றில் ஒன்றாகும்.

பொருளாதாரத்தின் சீரிசைவு என்றால், ஒரு புறம் உற்பத்தியின் அளவு, கட்டமைப் பிற்கும் மறுபுறம் சமூகத் தேவைகளின் அளவு, கட்டமைப்பிற்கும் இடையில் உள்ள பொருத்தமாகும். சோஷலிசப் பொருளா தாரத்திற்கும் முதலாளித்துவப் பொருளா தாரத்திற்கும் இடையிலான நியதியான வேறுபாடு, முன்னதன் சீரிசைவுத் தன்மை யாகும். ''நிலையான, உணர்வு பூர்வமாகப் பேணப்படும் சீரிசைவுத் தன்மை திட்டத் தன்மையைக் குறிக்கிறது'' என்றார் வி. இ. லெனின்.*

சோஷலிச நிர்மாணிப்பின் ஆரம்பக் கட்டங்களில் ஒரு சில வரலாற்றுக் காரணங் கள், மட்டுப்பாடுகளினால் (பொருளாதாரத் தின் வளர்ச்சியின்மை, முதலாளித்துவ முற் றுகை, யுத்தங்களால் ஏற்பட்ட அழிவுகள்) பொருளாதார வளர்ச்சி சீரிசைவின்மை

* V. I. Lenin, *Collected Works*, vol. 3, p. 617.

சூழலில் நடந்தது. இதனால் வளங்களைப் பகிர்ந்தளிப்பதில் கறாரான மையப்படுத்தல் வந்தது, இதையொட்டி ஒரு சில துறைகள் (குறிப்பாக சமூக உள்கட்டமைப்பு) தவிர்க்க இயலாதவாறு பின்தங்கின, இது ஓரளவிற்கு நியாயப்படுத்தக் கூடியதாயிருந்தது. ஆனால் சோஷலிசப் பொருளாதாரம் எவ்வளவுக்கெவ்வளவு முதிர்ச்சி அடைகிறதோ, ஐக்கிய தேசியப் பொருளாதார வரம்புகளுக்குள் தொடர்புகள் எவ்வளவுக்கெவ்வளவு சிக்கலானவையாகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு சீரிசைவின் எவ்விதச் சீர்குலைவும் பொறுக்க இயலாததாகும்.

தீவிர வகை சார்ந்த பொருளாதார வளர்ச்சியானது சீரிசைவின்மைகள் நிலவுவதுடன் பொருந்தி வராதது. சோஷலிச சூழ்நிலையில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் உயர்வான வேகங்களை அடையவும், உற்பத்தியின் பொருளாதார மற்றும் சமூக செயல்வன்மையை உயர்த்தவும் மேற்கூறிய சீரிசைவின்மைகளை அகற்றுவது முழுக்க முழுக்க அவசியமான, கண்டிப்பான நிபந்தனையாகும்.

முழுமையான, நம்பகரமான திட்டச் சீரிசைவுகள் ஆக்கபூர்வமான கட்டமைப்புக் கொள்கையைப் பின்பற்றவும் உற்பத்தி வளர்ச்சியில் முன்னுரிமையுள்ள திசைகளைப் பிரித்துக் காட்டவும் முரண்பாடானவையாக இல்லை. மாறாக, இது ஒரு முன்தேவையாகும்; பொருளாதார வளர்ச்சியின்

ஸ்திர நிலையையும் சீரிசைவையும் இணைக்க சாத்தியமான பொதுப் பின்னணியாகவும் விளங்குகிறது. அதுவும் திட்டமானது, கட்டமைப்புச் சீரமைப்பின் முக்கிய அம்சம் தான்.

இப்படிப்பட்ட சீரமைப்பிற்கு உற்பத்தியும் தேவைகளும் வெறுமனே எண்ணிக்கை அளவில் பொருந்தி இருக்குமாறு செய்தால் மட்டும் போதாது; இதற்கு நிர்வாகத்தின் எல்லா அங்கங்களிலும் தேவையான உற்பத்தி, நிதி சேம இருப்புகளைத் தோற்றுவிக்கவும் வேண்டும்.

கடந்த காலத்தில் இப்படிப்பட்ட சேம இருப்புகள் இல்லாததானது பொருளாதாரத்திற்குத் தேவையான நெகிழ்வுத் தன்மையைத் தரவில்லை, நவீன விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகள், மாறி வரும் சமூகத் தேவைகளுக்கேற்ப உற்பத்தியைச் சீரமைக்கத் தடையாக விளங்கியது. எனவே உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்க மிகக் குறுகிய காலகட்டத்தில் நம்பகரமான உற்பத்தி, நிதி சேம இருப்புகளைத் தோற்றுவிக்க வேண்டும். நம்பகரமான, நன்கு சீரிசைவான பொருளாதாரத்தை ஏற்படுத்தும் பணியில் இவையெல்லாம் அடங்கும். இது உற்பத்தி தீவிரமயப்படுத்தப்படும் போதும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் போக்கிலும் தோன்றும் முரண்பாடான கோரிக்கைகளை வெற்றிகரமாக ஒத்திசைவிக்கும் நிபந்தனையாகும்.

நவீன திட்டத்தில், அதாவது பொருளாதார, சமூக வளர்ச்சியின் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ற ஒரு திட்டத்தில் வெறுமனே கடமைகள் பட்டியலிடப்பட்டு கூறப்பட்டிருந்தால் மட்டும் போதாது (இப்படிப்பட்ட திட்டம், வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் ஸ்திரமானதாயிருக்காது); இது பொருளாதார நடவடிக்கையின் முக்கியத் திசையமைவுகளையும் குறியீடுகளையும் நிர்ணயிக்கவும் வேண்டும். பரஸ்பரத் தொடர்புடைய பொருளாதார வரையளவுகள் இப்படிப்பட்ட திட்டங்களின் அடிப்படையாகத் திகழ வேண்டும்; இவ்வரையளவுகளை ஐந்தாண்டிற்கு நிலையானவையாக்க வேண்டும். இப்படிப்பட்ட திட்டம்தான் உண்மையிலேயே பொருளாதார நடவடிக்கையின் எல்லைகளை விரிவுபடுத்தும், பல்வேறு நடவடிக்கைகளுக்கு போதுமான வாய்ப்பேற்படுத்தி, அதே நேரத்தில் முக்கிய தேசியப் பொருளாதார விகிதாச்சாரங்கள் பின்பற்றப்பட உத்தரவாதமளித்து, பொருளாதார நடவடிக்கையின் சூழ்நிலைகள் ஸ்திரப்பட உதவும்.

இவ்வாறாக, நிலையான பொருளாதார சூழ்நிலைகளை ஏற்படுத்துவதானது—இது திட்டப் பணி மேம்படுவதைப் பெரிதும் பொறுத்தது—உற்பத்தியின் சீரிசைவிற்கும் அதன் உயர்வான செயல்வன்மைக்கும் நிபந்தனையாக விளங்குகிறது.

வரையளவு முறைகளைப் பரவலாகப்

பயன்படுத்துவதும் இதே திசையில் தொடர்ந்து செயல்படும். பொருளாதார வரையளவுகள் நல்ல எதிர்கால வாய்ப் புள்ள திட்டத் தலைமையின் கருவியாகும். இவற்றில் பின்வரும் அம்சங்கள் நெகிழ்வுத் தன்மையில் இணைந்து காணப்படுகின்றன: பொருளாதார நிர்வாகத்தில் மையத் தலை மையும், பண்ட-பண உறவுகளும் மதிப்பு விதியும் பயன்படுத்தப்படுவதும் இணைந் துள்ளன; மையப்படுத்தலின் மேம்பாடு களும் தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்பு களின் சுதந்திரம், முன்மொழிவுகள் விரி வடைவதும் இணைந்துள்ளன; அரசின் பொது நலன்களும் உழைப்பாளர் கூட்டு கள், தனிநபர் நலன்களும் இணைந் துள்ளன; திட்டங்கள் நெகிழ்வுத் தன்மையை உடையவையாக உள்ள அதே நேரத்தில் ஸ்திரத் தன்மையையும் கொண்டவையாக விளங்குகின்றன.

பொருளாதார வரையளவுகள் இன் றைய வடிவத்தில் பொருளாதார, சமூக வளர்ச்சி திட்டம் என்ற பல அடுக்கு கட்டி டத்தைக் கட்டும் செங்கற்களாகும். இந்தக் கட்டிடம் எப்படியிருக்கும், அதில் மக்கள் எப்படி வாழுவார்கள் என்பது அச்செங்கற் களின் உறுதியையும் நம்பகரத் தன்மையை யும் பொறுத்தது.

பொருளாதார வரையளவுகள் ஸ்திர மாக இருந்தால்தான் அவற்றால் தம் பணி யை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

கட்சியின் 27ஆவது பேராயத்தில் சுட்டிக் காட்டப்பட்டபடி, துரதிர்ஷ்டவசமாக வரையளவுகளின் ஸ்திரத் தன்மை மீறப்படுகிறது. இது அடக்கக் கணக்கீட்டு முறையின் முக்கிய அடிப்படைகளைக் குலைக்கிறது, எனவே இதற்கெதிராக உறுதியோடு போராட வேண்டும்.

திட்டமிடலை மேம்படுத்துவதன் பால் வைக்கப்படும் மிக முக்கிய கோரிக்கைகளில் ஒன்று அது இறுதி தேசியப் பொருளாதார விளைபயன்களை நோக்கமாகக் கொண்டிருக்குமாறு செய்ய வேண்டும்; இதன் தொடர்பில், திட்டங்களின் சமூகத் திசையமைவை வலுப்படுத்த வேண்டும். கோட்பாட்டு ரீதியான முக்கியத்துவமுடைய இப்பிரச்சினையை சற்று விரிவாகப் பார்ப்போம்; முதலில் இதன் அரசியல் பொருளாதார சாராம்சத்திலிருந்து ஆரம்பிப்போம்.

சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் சோஷலிச உற்பத்தியின் இறுதி லட்சியம், எனவே இறுதி விளைபயனாகும். கறாராகச் சொன்னால் நுகர்வுதான் எந்த ஒரு உற்பத்திக்கும் இறுதி லட்சியமாகும், ஏனெனில் கா. மார்க்ஸ் எழுதியபடி, ''நுகர்வின்றி உற்பத்தி கிடையாது; அப்படியிருந்தால் உற்பத்திக்கு லட்சியமே இருக்காது''.* ஆனால் பூர்ஷ்வா சமுதாயத்தில் மூலதனத்

* K. Marx, *A Contribution to the Critique of Political Economy*, Moscow, Progress Publishers, 1977, p. 197.

தின் சுய வளர்ச்சியும் லாப அதிகரிப்பும் தான் உற்பத்தியின் நேரடி நோக்கமும் உந்து சக்தியுமாகத் திகழுகின்றன. உற்பத்தியின் இறுதி லட்சியத்திற்கும் அதன் நேரடி நோக்கத்திற்கும் இடையில் கடும் முரண் பாடு நிலவுகிறது; இம்முரண்பாடு பல நேரங் களில், அதுவும் குறிப்பாகப் பொருளாதார நெருக்கடிகளின் பொழுது பகை முரண் பாட்டு வடிவங்களைப் பெறுகிறது.

உற்பத்திச் சாதனங்களின் மீது பொதுச் சொத்துடைமையை நிலைநாட்டிய சோஷ லிசம் இம்முரண்பாட்டை அகற்றுகிறது. உற்பத்தியின் இறுதி லட்சியத்திற்கும் உட னடி நோக்கத்திற்கும் இடையில் ஒற்றுமை ஏற்படுத்தப்படுகிறது. சமூகத் தேவைகள் எந்த அளவிற்குப் பூர்த்தி செய்யப்படு கின்றன என்பது எல்லா மட்டங்களிலும்—தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகள், தொழில் துறைகள், பிரதேச உற்பத்தி இணையங்கள், பிராந்தியங்கள், யூனியன் குடியரசுகள் விஷயத்தில்—பொருளாதார நடவடிக்கையின் முக்கியத் திசையமைவாக், தர மதிப்பீட்டிற்கான காரணியாக மாறு கிறது.

சோஷலிச சமுதாயம் வளர வளர, சோஷலிசத்தின் பொருளாதார விதிகளின் செயல்பாட்டிற்கான வாய்ப்புகள் அதிகரிக்க அதிகரிக்க, சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சோஷலிச உற்பத்தியின் நோக்கம் மேன்மேலும் அதிகமாக வெளிப்படுகிறது.

இறுதி தேசியப் பொருளாதார விளை பயன்களைப் பற்றி கூறும் பொழுது, உற்பத்தியின் செயல்வன்மை அதிகரிப்பதுடனும், உழைப்பு, பொருளாயத, இயற்கை மற்றும் நிதி வளங்களை விவேகமாகப் பயன்படுத்துவதுடனும் மேற்கூறிய விளைபயன்கள் இடையறாத் தொடர்புடையவை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உண்மையாகப் பார்த்தால், இவை ஒரே பிரச்சினையின் இரண்டு பக்கங்களாகும்: வளங்கள் எவ்வளவுக்கெவ்வளவு செயல்வன்மையோடு பயன்படுத்தப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்; தேவைகளை மேன்மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்வதானது உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்தும், பொருளாதாரத்தின் மீதான மானுடக் காரணியின் தாக்கத்தை வலுப்படுத்தும்.

இப்பிரச்சினைகள் சம்பந்தமான கோட்பாட்டு ரீதியான கொள்கை கட்சி வேலைத் திட்டத்தின் புதிய பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சோஷலிச சமுதாயத்தின் இறுதி லட்சியத்தை (சகலவித வளங்களையும் குறைவாகச் செலவழித்து, சமுதாயத்தின் தேவைகளை அதிகபட்சம் பூர்த்தி செய்வது) அடைவதில் ஒவ்வொரு அங்கத்தின் பங்கையும் அதிகப்படுத்துவதுதான் நிர்வாக முறை முழுவதன் நோக்கமாக இருக்க வேண்டும் என்று கட்சி வேலைத்திட்டத்தின் புதிய

பதிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது தான் சோஷலிச நிர்வாகத்தின் அடிப்படை விதி, தொழில் துறைகள், கூட்டமைப்புகள், தொழில் நிறுவனங்களின் நடவடிக்கைகளை மதிப்பிடுவதற்கான முக்கிய அளவுகோலாகும்.

பொருளாதாரமும் திட்ட முறையும் இறுதி விளைபயன்களைப் பொறுத்து அமையுமாறு மாற்றியமைக்கும் பொழுது, செயல்வன்மை மிக்க திட்டக் குறியீடுகளைத் தேர்ந்தெடுக்கும் அவசியம் தோன்றுகிறது. இன்று முற்றிலும் அளவுநிலைக் குறியீடுகளுக்கும் இறுதி தேசியப் பொருளாதார விளைபயன் குறியீடுகளுக்கும் இடையில் கணிசமான வித்தியாசம் இருக்கிறது. இவற்றில் இரண்டாவதாக குறிப்பிடப்பட்டவைதான் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்துவதையும் பொருளாதார நடவடிக்கையின் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டவை.

சமூக நோக்கில் பார்க்கையில், இறுதி விளைபயன்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமானவையோ அவ்வளவுக்கவ்வளவு அந்த குறிப்பிட்ட அங்கம் சிறப்பாகச் செயல்படுகிறது. இந்த விளைபயன்கள் குறைந்த அளவுநிலைக் குறியீடுகளுடன் (மில்லியன் ரூபிள்களில் உற்பத்திப் பொருளின் அளவு, நிலையான உற்பத்திச் சொத்துகளின் அளவு, பயன்படுத்தப்பட்ட வளங்களின் அளவு,

இன்ன பிற) அடையப்பட்டால், அதுவும் அக்குறிப்பிட்ட அங்கத்தின் பணி எவ்வளவு செயல்வன்மை மிக்கது என்பதற்குச் சான்று பகர்கிறது. மொத்தமாக தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் உற்பத்தியின் சமூக விளைபயன்கள் மற்றும் செயல்வன்மையை மதிப்பிட இந்த அணுகுமுறையைப் பயன் படுத்தலாம். இது முழுக்க முழுக்க நவீன, தீவிர வகை பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதாய் உள்ளது.

திட்டமிடலை மேம்படுத்துவதைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது மையத்திலிருந்து நிலைநாட்டப்படும் திட்டக் குறியீடுகளின் எண்ணிக்கை பற்றிய பிரச்சினையைக் குறிப் பிடாமலிருக்க முடியாது. பொதுவில், இத் தகைய குறியீடுகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். ஏனெனில் மேலிருந்து நிலைநாட்டப்படும் குறியீடுகளின் எண்ணிக் கை அதிகமாயிருந்தால், அது தொழில் நிறு வனங்கள், கூட்டமைப்புகளின் சுதந்திரம், முன்மொழிவைக் கட்டுப்படுத்தும். ஆனால் விஷயம், குறியீடுகளின் எண்ணிக்கையுடன் முடிந்து விடுவதில்லை. அவற்றின் சாரம், திசையமைவு, குறிப்பிட்ட சமூக பொருளா தார லட்சியங்களை அடைய அவை எவ் வளவு உதவுகின்றன என்பதும் சற்றும் குறையா முக்கியத்துவம் வாய்ந்தவையா கும்.

திட்டக் குறியீடுகள், உந்துகோல்களின் முறையை மேம்படுத்துவதும், பொருளா

தார நலன்களுடன் இவற்றிற்கு உள்ள பரஸ் பரத் தொடர்புகளை வலுப்படுத்துவதும் அடக்கக் கணக்கீட்டு முறையை வளர்த்து வலுப்படுத்துவதுடன் அங்கக ரீதியில் தொடர்புடையவை.

## முழு அடக்கக் கணக்கீட்டு முறையை நோக்கி

அடக்கக் கணக்கீட்டு முறையை மேற் கொண்டு வளர்த்து, அதன் செயல்வன் மையை உயர்த்துவதும் தொழில் நிறுவனங் கள், கூட்டமைப்புகளை முழுமையான அடக்கக் கணக்கீட்டு முறைக்கு மாற்றுவதும் இன்று சோவியத் நாட்டில் பொருளா தாரத்தைச் சீரமைப்பதன் முக்கியமான போக்குகளில் அடங்கும்; இது நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்து வதற்கான முக்கிய நிபந்தனையுமாகும்.

அடக்கக் கணக்கீட்டு முறை சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டுகளில், பொருளா தார உந்துகோல்களின் தீவிர உதவியால் தொழில் நிறுவனங்கள், டிரஸ்டுகளைத் திட்டமிட்ட வகையில் நிர்வகிக்கும் முறை யாகத் தோன்றியது. வி. இ. லெனின் இதை சோஷலிச நிர்வாக முறை என்றார். இம் முறை செலவுகளையும் இறுதி விளைபயன் களையும் பண வடிவில் ஒப்பிடுகிறது, உயர் செயல்வன்மையுள்ள, லாபகரமான பணியை முன்னனுமானிக்கிறது, வளங்கள் பயன் படுத்தப்படுவதைப் பொறுத்தும், இறுதி

முடிவுகளை மேம்படுத்துவதைப் பொறுத்தும் கண்டிப்பான கூடுதல் பொருளாயத ஊக்குவிப்பை அளிக்கிறது. இம்முறையின் முக்கிய அம்சம், தொழில் நிறுவனங்கள் அல்லது கூட்டமைப்புகளின் முன் அரசு வைத்துள்ள கடமைகளைக் குறைந்தபட்ச செலவில் நிறைவேற்றி, மிகச் சிறந்த பொருளாதாரக் குறியீடுகளை அடைய வேண்டும் என்பதாகும்.

அடக்கக் கணக்கீட்டு முறையில் பின் வரும் கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றன: அன்றாடப் பொருளாதார நடவடிக்கைகளில் சுயமாக முடிவுகளை எடுத்தல், செலவுகள் சுயமாக ஈடுகட்டப்படுதல், லாபம், பொருளாயத அக்கறையும் பொறுப்பும், பணக் கட்டுப்பாடு.

அடக்கக் கணக்கீட்டுத் தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்களுக்கு எல்லா அவசியமான உற்பத்திச் சாதனங்களும் (நிலையான மற்றும் சுழல் சொத்துகள்), குறிப்பிட்ட எண்ணிக்கையில் உழைப்பாளிகளும், ஊதிய நிதியும் வழங்கப்படும். இவற்றின் பொருளாதார நடவடிக்கை மையத் திட்டக் குறியீடுகள் மற்றும் பொருளாதார வரையளவுகளின் உதவியால் ஒழுங்கமைக்கப்படுகிறது. அரசுத் திட்டக் கடமைகளின் அடிப்படையில் அடக்கக் கணக்கீட்டுத் தொழில் நிறுவனங்கள், பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தையும் உழைப்பு வளங்களையும் பயன்படுத்தி, தம் உற்பத்தி, தொழில்

நுட்ப நடவடிக்கையைத் தாமே திட்டமிடு கின்றன, இதன் சாலச்சிறந்த வகையைத் தாமே தேர்ந்தெடுக்கின்றன, வளங்களைத் தம் விருப்பப்படி மாற்றியமைத்து பயன் படுத்துகின்றன, மூலப்பொருளை வாங்கு வது முதல் தயாரான பொருளை விற்பது வரை தாமே எல்லாவற்றையும் செய் கின்றன. இத்தொழில் நிறுவனங்களுக்கு சகல வித சட்ட உரிமைகளும் உண்டு.

அக்கறை மற்றும் பொறுப்பிற்கு இடை யிலான ஒற்றுமைதான் நிர்வாக முறை என்ற வகையில் அடக்கக் கணக்கீட்டு முறை யின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இத னால் சமுதாயத்திற்கு அனுகூலமானது (உற்பத்தியின் செயல்வன்மை அதிகரிப்பு) ஒவ்வொரு உழைப்பாளர் கூட்டிற்கும் அனு கூலமானதாகிறது, சமுதாயத்திற்கு அனு கூலமற்றதன் மீது அதற்கு எவ்வித அக்கறை யும் வருவதில்லை.

பொருளாதாரத்தில் தோன்றிய பல் வேறு இடர்ப்பாடுகள், தீய போக்குகள், திட்ட நிர்வாக இயந்திரம் போதுமான அளவு செயல்வன்மையற்று இருந்தது ஆகியவை அடக்கக் கணக்கீட்டு முறை பலவீன மடைந்ததுடனும், இதன் கோட்பாடுகள் ஏனோதானோவென்று பின்பற்றப்பட்ட துடனும் பிரிக்க இயலாதபடி தொடர்புடை யவை. சோஷலிச நிர்வாக முறை முழுவதன் வரலாற்று அனுபவத்தையும் கடந்த பத் தாண்டுகளின் நடைமுறையையும் கவன

மாகப் பரிசீலித்ததிலிருந்து இது தெரிகிறது. அடக்கக் கணக்கீட்டு முறையை நன்கு வலுப் படுத்தாமல், விலைகள், நிதி மற்றும் கடன் வசதிகள், பொருளாதார ஊக்குவிப்புகள் போன்ற உந்துகோல்களின் செயல்வன் மையை உயர்த்தவோ, அதன் மூலம் நிர்வாக இயந்திரத்தைப் பன்முக ரீதியில் மேம் படுத்தவோ முடியாது என்றும் அனுபவம் காட்டுகிறது.

அதே சமயம், பொருளாதாரத்தின் மீதான நிதி மற்றும் கடன் வசதிகளின் தாக் கம் குறைவதானது அடக்கக் கணக்கீட்டு முறையின் வளர்ச்சியைப் பாதிக்கிறது, அதன் செயல்வன்மையைக் குறைக்கிறது. கட்சியின் 27ஆவது பேராயத்திற்கு மத்திய கமிட்டி சமர்ப்பித்த அரசியல் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள படி, நிதி முறையானது பொருளாதாரத் தின் செயல்வன்மையை உயர்த்துவதன் மீது போதுமான தாக்கம் செலுத்துவதில்லை. வருமானங்களைப் பகிர்ந்தளிக்கும் தவறான பழக்கம் பெரிதும் பரவியது: பின்தங்கிய தொழில் நிறுவனங்கள், அமைச்சகங்கள், பிராந்தியங்களின் இழப்புகள் நன்கு லாபகர மாக இயங்குபவற்றால் சமன் செய்யப் பட்டன. கடன் வசதி தன் உண்மையான முக்கியத்துவத்தை இழந்தது. இவையெல் லாம் சேர்ந்து அடக்கக் கணக்கீட்டு முறையை ஆட்டங்காண வைத்தன, ஒட்டுண்ணித் தனத்தைத் தோற்றுவித்தன, மையத்தி

லிருந்து உதவி வேண்டும் என்ற கோரிக்கைகள் முடிவற்று வந்தன.

சமீப ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகள் அடக்கக் கணக்கீட்டு முறை வளர்ந்து வலுப்படுவதுடன் பிரிக்க இயலாதபடி தொடர்புடையவை. அதே நேரத்தில் இப்பாதையில் தொடர்ந்து முன்னேற அடக்கக் கணக்கீட்டு முறை சம்பந்தமான பிரச்சினைகளில் தத்துவார்த்த, அரசியல் பொருளாதார தெளிவு வேண்டும். பின்வரும் கோட்பாட்டு நிலைகளுக்கு விசேஷ முக்கியத்துவம் உண்டு.

முதலாவது கோட்பாடு. சோஷலிசப் பொருளாதார ஒழுங்கமைப்பில் அடக்கக் கணக்கீட்டு முறையின் தவிர்க்க இயலாமை. இம்முறையின் கோட்பாடுகளைத் தொடர்ச்சியாக நிறைவேற்றாவிடில் சோஷலிசப் பொருளாதாரத்தை விவேகமாக ஒழுங்கமைத்து செயல்வன்மையோடு இயங்கும்படி செய்ய முடியாது. தவிர்க்க இயலா சூழலில் மட்டும்தான் (உதாரணமாக, யுத்த காலத்தில்) இக்கோட்பாடுகளிலிருந்து விலகுவதை நியாயப்படுத்த முடியும். சோஷலிசப் பொருளாதாரத்தில் அடக்கக் கணக்கீட்டு முறை தவிர்க்க இயலாததைப் பற்றிய முடிவு வரலாற்று அனுபவத்தால் மெய்ப்பிக்கப்பட்டது, சோவியத் அரசியல் சாசனத்தில் இது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. இதில் அடக்கக் கணக்கீட்டு முறையைத் தீவிரமாகப்

பயன்படுத்துவதானது (லாபம், அடக்க விலை, மற்ற பொருளாதார உந்து சக்திகள், ஊக்குவிப்புகளுடன் சேர்ந்து) சோஷலிசப் பொருளாதாரத்தின் திட்ட வழிகாட்டுதலில் அவசியமான, கண்டிப்பான அம்சமாகக் கருதப்படுகிறது.

இந்த அணுகுமுறைக்கேற்ப சோஷலிச உற்பத்தி உறவுகளை வளர்த்து மேம்படுத்துவதில் அடக்கக் கணக்கீட்டு முறையை வலுப்படுத்துவதும் அங்கக ரீதியாக இணைந்துள்ளது. குறிப்பிட்ட அளவிற்கு இதன் வளர்ச்சி மற்றும் இதை எவ்வளவு முழுமையாகப் பயன்படுத்துவது என்பவற்றை வைத்து, மொத்தமாக சோஷலிச உற்பத்தி உறவுகளின் முதிர்ச்சியைப் பற்றியும், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சித் தேவைகளுக்கு இவை பொருந்தி வருவதைப் பற்றியும் முடிவு செய்யலாம்.

இன்று, முழுமையான அடக்கக் கணக்கீட்டு முறைக்கு மாறுவதானது உற்பத்தி உறவுகளைத் திட்டமிட்ட வகையில் பன்முக ரீதியில் மேம்படுத்துவதன் முக்கிய அங்கமாகத் திகழுகிறது.

இரண்டாவது அம்சம். ஒரு புறம் அடிப்படை உற்பத்தி அங்கமாகிய தொழில் நிறுவனம் அல்லது கூட்டமைப்பின் நிலைமை மற்றும் பாத்திரத்திற்கும் மறுபுறம் அடக்கக் கணக்கீட்டு முறைக்கும் இடையிலான பிரிக்க இயலா தொடர்பு. இந்த முறையின் அவசியமே தேசியப் பொருளாதாரத்தின் அடிப்

படை அங்கத்தில் காணப்படும் சோஷலிசப் புனருற்பத்தியின் விசேஷ அம்சங்களால் தோன்றுகிறது.

சோஷலிசச் சொத்துடைமையின் கீழ் ஐக்கிய தேசியப் பொருளாதார உறுப்பின் பிரிக்க இயலா அங்கமாகத் திகழும் தொழில் நிறுவனம் தன் பொருளாதார நடவடிக்கையில் ஒப்பீட்டளவில் சுயமானது. இதன் சாதனங்கள் ஒப்பீட்டளவில் சுயமானவை, இதன் செலவுகள் சமூக செலவுகளிலிருந்து பிரிக்கப்படுகின்றன, இவை பொருளின் அடக்க விலை வடிவத்தைப் பெறுகின்றன. தொழில் நிறுவனத்திற்கு என்று விசேஷப் பொருளாதார அக்கறைகள் உள்ளதால், இவற்றை மொத்தமாக சோஷலிச சமுதாயத்தின் அக்கறைகளுடன் ஒத்திசைவிக்க ஒரு விசேஷ முறை வேண்டும்; பொருளாயத ஊக்குவிப்புகளும் பொறுப்பும் திறமையாக இணைக்கப்பட வேண்டும்.

அடக்கக் கணக்கீட்டு முறையானது சோஷலிசத்தில் பண்ட-பண உறவுகள் நிலவுவதுடன் பிரிக்க இயலாதபடி தொடர்புடையது. இந்தத் தொடர்பு பன்முக ரீதியில் வெளிப்படுகிறது, பண்ட-பண உறவுகளைக் குறைத்து மதிப்பிடுவது தவிர்க்க இயலாதவாறு அடக்கக் கணக்கீட்டு முறையைப் பலவீனப்படுத்தும், இதை ஏனோதானோவென்று பயன்படுத்த இட்டுச் செல்லும்.

கட்சியின் 27ஆவது பேராயத்திற்குக் கட்சியின் மத்திய கமிட்டி சமர்ப்பித்த

அரசியல் அறிக்கையில் பண்ட-பண உறவு கள் பற்றிய நிலை தெட்டந்தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது: "**பண்ட-பண உறவுகள்** சம்பந்தமான மூட நம்பிக்கைகளை யும் திட்ட பொருளாதார வழிகாட்டு தலில் இந்த உறவுகளைக் குறைத்து மதிப் பிடுவதையும் கைவிடும் தருணம் வந்து விட்டது. மக்களின் அக்கறையை அதிகரிப் பதிலும் உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்துவதிலும் இவற்றின் தீவிர தாக்கத் தின் முக்கியத்துவத்தை மறுப்பது அடக்கக் கணக்கீட்டு முறையைப் பலவீனப்படுத்து கிறது, வேறு தீய போக்குகளை உண்டாக்கு கிறது. மாறாக, சோஷலிச அடிப்படையில் பண்ட-பண உறவுகள் ஆரோக்கியமாகச் செயல்படுவதானது நல்ல நிர்வாகச் சூழலைத் தோற்றுவிக்கும்; இச்சூழலில் பொருளாதார நடவடிக்கையின் இறுதி விளைபயன்கள் உழைப்பாளர் கூட்டின் வேலையின் தரத்தை, நிர்வாகிகளின் திறமையை, முன்மொழிவை முழுமையாகச் சார்ந்திருக்கும்."*

அடக்கக் கணக்கீட்டு முறை என்பது பண்ட-பணக் கருத்தினங்களைப் பயன்படுத் துவதுடன் முடிந்து விடுவதில்லை என்பது சொல்லாமலே விளங்கும். தேசியப் பொரு ளாதாரத்தின் அடிப்படை அங்கத்தில் புன

---

* Mikhail Gorbachev, *Political Report...*, pp. 49—50.

ருற்பத்திச் சூழ்நிலைகளின் சிறப்பு அம்சங்களை நிர்ணயிக்கும் உற்பத்தி உறவுகளின் முறை முழுவதும், சோஷலிசத்தின் பொருளாதார விதிகளின் முறை முழுவதும் அடக்கக் கணக்கீட்டு முறையில்தான் வெளிப்படுகிறது. ஆயினும், இம்முறையின் வடிவமும், இதை ஒழுங்கமைக்கும் போது பயன்படுத்தப்படும் பொருளாதார உந்துகோல்களும் பண்ட-பண உறவுகளுடன் பிரிக்க இயலாதபடி தொடர்புடையவை என்னும் அம்சத்தை மேற்கூறியது மறுக்கவில்லை.

அடிப்படை உற்பத்தி அங்கத்தின் (தொழில் நிறுவனத்தின்) பங்கை உயர்த்துவது, இதன் உருவத்தை மாற்றுவது (உற்பத்தி மற்றும் விஞ்ஞான உற்பத்தி கூட்டமைப்புகளின் வளர்ச்சியில் இது வெளிப்படுகிறது), இதன் சுதந்திரத்தையும் பொறுப்பையும் விரிவுபடுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட நவீன கொள்கையானது அடக்கக் கணக்கீட்டு முறையை வலுப்படுத்தும்படி நியதியாகக் கோருகிறது. அடக்கக் கணக்கீட்டு முறைக்கு முழுமையாக மாறாமல் இக்கொள்கையை நடைமுறையில் நிறைவேற்ற முடியாது. இது இல்லாமல் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதும் சாத்தியமில்லை.

மூன்றாவது அம்சம். அடக்கக் கணக்கீட்டு முறையை வளர்த்து வலுப்படுத்துவது என்பது ஒரு சுயமான போக்கல்ல, இது பொருளாதார நிர்வாக அமைப்பை மேம்

படுத்துவதன் ஒரு அங்கமாகும். அடக்கக் கணக்கீட்டு முறை என்பது புறவய ரீதியான பொருளாதார கருத்தினம் (உற்பத்தி உறவுகளின் குறிப்பிட்ட துணை அமைப்பின் வெளிப்பாடு என்ற வகையில்), அதே பொழுது இது சோஷலிச நிர்வாக முறை என்ற கருத்து சோஷலிசத்தின் அரசியல் பொருளாதாரத்தில் நிலைபெற்றுள்ளது.

எல்லா நிர்வாக முறைகளும் வடிவங்களும் தனித்தனியே நிலவுவதில்லை. இவை ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகப் பின்னிப் பிணைந்து மொத்தத்தில் சோஷலிச சமுதாயத்தின் பொருளாதார இயந்திரத்தை ஏற்படுத்துகின்றன. அடக்கக் கணக்கீட்டு முறையை வளர்த்து மேம்படுத்தும் வழிகளைத் தேடுவதானது, உண்மையிலேயே விஞ்ஞான ரீதியான இந்த அணுகுமுறையின் அடிப்படையிலானது.

திட்டமிடலையும் அடக்கக் கணக்கீட்டு முறையையும் சரி, பொருளாதார இயந்திரத்தின் மற்ற அங்கங்களையும் சரி ஒன்றிற்கொன்று எதிராக வைக்கக் கூடாது. இவை (எந்த ஒரு முழுமையான அமைப்பின் அங்கங்களையும் போலவே) ஒன்றையொன்று பரஸ்பரம் இட்டு நிரப்பக் கூடியவை; ஒவ்வொன்றதும் மற்றதன் பன்முக வளர்ச்சிக்கான நிபந்தனையும், அத்தகைய வளர்ச்சியின் விளைபயனுமாகும். திட்டமிடலின் செயல்வன்மையானது, அடக்கக் கணக்கீட்டு முறையின்படி தொழில் நிறு

வனங்களுக்கு உள்ள அக்கறையும் அவற்றின் பொறுப்பும் எப்படி ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன என்பதைப் பொறுத்தது. இது இல்லாமல் திட்டக் கட்டுப்பாட்டை வலுப் படுத்த முடியாது, உண்மையிலேயே தீவிர மான திட்டங்களைத் தீட்ட முடியாது.

அதே போல் திட்டமிடலை மேம்படுத் தாமல், அதன் சீரிசைவை ஏற்படுத்தாமல், நீண்ட கால பொருளாதார வரையளவு களைப் பரவலாகப் பயன்படுத்தாமல் அடக்கக் கணக்கீட்டு முறைக்கு முழுமையாக மாற முடியாது. திட்டக் கடமைகளுக்கு இடையில் சரியான ஒத்திசைவின்மை, இவற் றில் அடிக்கடி திருத்தங்கள் செய்வது, தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்பு களில் தோற்றுவிக்கப்படும் பொருளாதார ஊக்குவிப்பு நிதிகளைப் பயன்படுத்த இயலாமை ஆகியவை அடக்கக் கணக் கீட்டு முறையைப் பலவீனப்படுத்துகின்றன, இதைச் சம்பிரதாயமானதாக மாற்று கின்றன.

முழுமையான அடக்கக் கணக்கீட்டு முறை என்றால் இதன் கோட்பாடுகள் முழு மையாக, தொடர்ச்சியாக்ப் பயன்படுத்தப் படுதல், இதன் சாரம் வெளிப்படுவதைத் தடுக்கும் சகலவித மட்டுப்பாடுகளையும் அகற்றுதல் என்று பொருள். அடக்கக் கணக்கீட்டு முறையின் தன்மை, பொருளா தாரத்தின் அடிப்படை அங்கத்தில் புனருற் பத்தி சிறப்பு அம்சங்களிலிருந்து இது

தோன்றியது ஆகியவற்றை வைத்துப் பார்க்கையில் தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் நடவடிக்கையில்தான் இதை முழுமையாகப் பயன்படுத்த முடியும் என்ற அம்சத்தைக் கோடிட்டுக் காட்டுவதும் முக்கியம். மற்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் (தொழில் நிறுவனங்களின் உள்ளே, பல்வேறு நிர்வாகக் கட்டமைப்புகளில்) இம்முறையின் கோட்பாடுகளை ஓரளவிற்குத்தான் பயன்படுத்தலாம். இது முற்றிலும் இயல்பானதே, ஏனெனில் முக்கியமான ஒரு அம்சம்—இழப்பீட்டு அடிப்படையிலான புனருற்பத்தி—இங்கு இல்லை.

உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைந்து, சமூக உழைப்புப் பிரிவினை ஆழமடையும் பொழுது அடிப்படை பொருளாதார அங்கத்தின் தோற்றம் மாறுகிறது. எனவே எந்த அங்கங்கள் உற்பத்தியின் சமூகமயமாக்கலுக்கு முழுமையாக ஏற்றபடி உள்ளனவோ அந்த அங்கங்களில்தான் அடக்கக் கணக்கீட்டு முறையின் முழுமை சாத்தியம்.

முழுமையான அடக்கக் கணக்கீட்டு முறைக்கு அவசியமானதொரு நிபந்தனை, இதன் கோட்பாடுகளை சகலவித பொருளாதார நடவடிக்கைகளுக்கும், புனருற்பத்திச் சுழற்சியின் எல்லாக் கட்டங்களுக்கும் (புதிய பொருளைத் திட்டமிடுவதிலிருந்து அதன் உற்பத்தி, விற்பனை வரை, எளிய மற்றும் விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தி, நவீனமயப்படுத்தல், தொழில்நுட்ப சீர

மைப்பு உட்பட) பரப்ப வேண்டும் என்பதாகும். உற்பத்தி மற்றும் விஞ்ஞான உற்பத்தி கூட்டமைப்புகளின் வடிவத்தில் உள்ள பெரிய பொருளாதார இணையங்களின் விஷயத்தில் மேற்கூறிய கோரிக்கைகளைப் பின்பற்ற வேண்டியது பெரிதும் முக்கியமாகும்.

முன்னர் நடந்தது போல் அன்றாட பொருளாதார நடவடிக்கையில் மட்டும் அடக்கக் கணக்கீட்டு முறையைக் கொண்டு வருவதானது தவிர்க்க இயலாதவாறு மட்டுப்பாடுகளுக்கு இட்டுச் செல்லும். இன்றைய சூழ்நிலையில் பிரச்சினை வேறுவிதமாய் முன்நிற்கிறது. தொழில்நுட்ப மட்டம், உற்பத்தியின் செயல்வன்மை, பொருட்களின் தரம் ஆகியவற்றை உயர்த்துவதில் தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் பொறுப்பை உயர்த்தும் அதே சமயத்தில், இதற்கான நிதியைத் தாமே சம்பாதித்து, அதைத் தம் விருப்பப்படி செலவு செய்யும் வாய்ப்பை அளிக்க வேண்டும்; வளர்ச்சி நிதிகள், தேய்மான ஒதுக்கீடுகள், கூடுதல் லாபம், கடன் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் உள்ள உரிமைகளை அதிகப்படுத்த வேண்டும். பிரச்சினையை இப்படி முன்வைப்பதானது அடக்கக் கணக்கீட்டு முறையின் வளர்ச்சி சம்பந்தமான லெனினிய அணுகுமுறைக்கு முற்றிலும் ஏற்றதாயுள்ளது (இதை அவர் விஷயத்தை வர்த்தக ரீதியில் முன்வைப்பது என்ற கட்டுரையில்

குறிப்பிட்டார்). இதன்படி உற்பத்தியின் நடப்புச் செலவுகள் ஈடுகட்டப்படுவதோடு கூட சேமிப்பிற்கும் வாய்ப்பேற்படும்.*

எளிய புனருற்பத்தியை மட்டுமின்றி விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியையும் (உற்பத்தியைச் சீரமைப்பது, தொழில்நுட்ப ரீதியான புதுப்பிப்பு உட்பட) அடக்கக் கணக்கீட்டு முறைக்குள் கொண்டு வர சுய நிதியமைப்பிற்கு மாற வேண்டும். சுயநிதியமைப்பிற்கும் சுய ஈடுகட்டும் முறைக்கும் உள்ள முக்கிய வேறுபாடு இதில்தான் அடங்கியுள்ளது; சுய ஈடுகட்டும் முறை தொழில் நிறுவனங்களின், கூட்டமைப்புகளின் அன்றாட பொருளாதார நடவடிக்கையில் மட்டும் உள்ளது, இது எளிய புனருற்பத்திக்கு மட்டுமே சேவை புரிகிறது. தேய்மான ஒதுக்கீடுகள், லாபம், வங்கி கடன் ஆகியவை தான் சுயநிதியமைப்பிற்கான மூல ஊற்றுகளாகத் திகழுகின்றன.

தல்யாட்டி நகர உழைப்பாளிகளைச் சந்தித்து உரையாடிய பொழுது மி. செ. கர்பச்சோவ், வோல்கா கார் தொழிற்சாலை மற்றும் சூம்ஸ்கி இயந்திரக் கட்டுமானக் கூட்டமைப்பின்—இவை இரண்டும் சுய நிதியமைப்பிற்கு மாறியுள்ளன—உழைப்பாளர் கூட்டுகளின் முன்மொழிவுகள் எவ்வளவு முக்கியமானவை என்று குறிப்பிட்டார். சூம்ஸ்கி இயந்திரக் கட்டுமானத்

* V. I. Lenin, *Collected Works*, vol. 42, pp. 357—358 பார்க்க.

துறையினர் புதிய முறைக்கு மாறியதை யடுத்து 1985இல் உழைப்பின் உற்பத்தித் திறனை 13%க்கும் கூடுதலாக உயர்த்தினர், லாபத்தை 32% அதிகப்படுத்தினர். உயரிய இறுதி விளைபயன்களை அடைவதில் உழைப்பாளர்களின் அக்கறையும் பங்கேற்பும் கூடின. ஏனெனில் லாபம் அதிகரிக்க அதிகரிக்க—எல்லாப் பொருளாதாரக் குறியீடுகளையும் மேம்படுத்துவதன் மூலம்தான் இதை அடைய முடியும்—உழைப்பாளர்களின் சமூக பிரச்சினைகளுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கும் என்று அவர்களுக்குத் தெரியும்.

சுயநிதியமைப்பானது, உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உழைப்பாளர் கூட்டின் நடவடிக்கையின் இறுதி விளைபயன்களுக்கும் உற்பத்தி வளர்ச்சி நிதியின் அளவு, ஊதிய அளவு, பொருளாயத ஊக்குவிப்பு, சமூக கடமைகளின் நிறைவேற்றம் ஆகியவற்றிற்கும் இடையில் நேரடியான சார்பு நிலையை ஏற்படுத்துகிறது. இம்முறையின் முக்கிய மேம்பாடு இதுதான்.

இன்று புதிய தொழில் நிறுவனங்கள் அதிகம் கட்டப்படுவதில்லை; ஏற்கெனவே இயங்கும் நிறுவனங்களை நவீனமயப்படுத்தி தொழில்நுட்ப ரீதியாகச் சீரமைப்பதன் மீதுதான் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியில் அடக்கக் கணக்கீட்டு முறையைப் பரப்புவதானது இதனுடன் தொடர்புடையது.

இதற்காகக் கணிசமான நிதி ஒதுக்கப் படுகிறது. 1984இல் உற்பத்தி வளர்ச்சி நிதியிலிருந்து சுமார் 7.8 பில்லியன் ரூபிள் களைத் தொழிற்துறை நிறுவனங்கள் பயன் படுத்தின. அதே ஆண்டில் நிலையான உற் பத்திச் சொத்துகளை மாற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட தேய்மான ஒதுக்கீடுகளின் அளவு 32 பில்லியன் ரூபிள்களுக்கும் அதிகமானதாயிருந்தது. இந்த நிதிகளைத் திறமையாக, சிக்கனமாகப் பயன்படுத்த இரண்டு நிபந்தனைகள் வேண்டும்.

முதலாவதாக, சீரமைப்பிற்காகவும் தொழில்நுட்ப ரீதியில் நவீனமயப்படுத்த வும் ஒதுக்கப்படும் நிதிகளைத் தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் பொரு ளாதார நடவடிக்கையின் இறுதி விளைபயன் களோடு நெருக்கமாகத் தொடர்புபடுத்த வேண்டும், அதாவது இவற்றை அடக்கக் கணக்கீட்டு முறையினுள் கொண்டு வர வேண்டும்.

ஆனால் நிதியை ''சம்பாதித்துப் பெற் றால்'' மட்டும் போதாது. நிதி சேமிப்பு களை யதார்த்தத்தில் கடைசல் இயந்திரங் களாக, உபகரணங்களாக, புதிய கன்வேயர் களாக மாற்றுவதும் சற்றும் குறையா முக் கியத்துவம் வாய்ந்தது. எனவே நிதி மூல ஊற்றுகளுக்கும் பொருளாயத தொழில் நுட்பச் சூழ்நிலைக்கும் இடையில் நம்பகர மான சீரிசைவை ஏற்படுத்துவது அவசியம். அப்போதுதான் அடக்கக் கணக்கீட்டு முறை

யின் புதிய கோட்பாடுகள் நல்ல பலன் தரு மென்று எதிர்பார்க்கலாம்.

அடக்கக் கணக்கீட்டு முறைக்கு முழு மையாக மாற, இதனுடன் பிரிக்க இயலாத படி தொடர்புடைய சகலவித பொருளா தார உந்துகோல்கள், ஊக்குவிப்புகளையும் தீவிரமாகப் பயன்படுத்த வேண்டும். ஏனெ னில் அடக்கக் கணக்கீட்டு முறை ஒரு பன் முக, தொகுப்பு முறையாகும். இதன் ஒழுங் கமைப்பின் மூலம்தான் விலைகள், லாபம், நிதி மற்றும் கடன் உந்துகோல்கள் (பல் வேறு விதமான வரிகள், வட்டிகள் உட்பட), பொருளாயத ஊக்குவிப்பு வடிவங்கள் போன்றவை உற்பத்தியின் வளர்ச்சி மீதும், அதன் செயல்வன்மை அதிகரிப்பதன் மீதும் தாக்கம் செலுத்துகின்றன. அடக்கக் கணக் கீட்டு முறைக்கு வெளியே இவற்றால் தம் ஊக்குவிப்புப் பணியைச் செய்ய முடியாது.

லாபத்தையும் கைம்முதல் வரியையும் (இவைதான் சோஷலிச சமுதாயத்தில் உபரி உற்பத்திப் பொருளின் அடிப்படை வடிவங் களாகும், நாட்டின் தேசிய வருமானத்தில் கிட்டத்தட்ட பாதிப் பகுதி இவற்றிலிருந்து கிட்டுகிறது) அடக்கக் கணக்கீட்டு முறை யினுள் அங்கக ரீதியில் இணைப்பது பெரி தும் முக்கியமாகும். 1984இல் தொழில் நிறுவனங்கள், பொருளாதார ஸ்தாபனங் களின் லாபம் 159.4 பில்லியன் ரூபிளா யிருந்தது; 102.7 பில்லியன் ரூபிள் கைம் முதல் வரி கிட்டியது; தோற்றுவிக்கப்பட்ட

தேசிய வருமானத்தின் மதிப்பு நடப்பு விலைகளில் 569.6 பில்லியன் ரூபிளாயிருந்தது. தொழில் நிறுவனங்களின் லாபத்தில் 42% அவற்றின் வசமே தங்கியது.

ஆனால் அடக்கக் கணக்கீட்டு முறையைச் செயல்வன்மையோடு ஒழுங்கமைக்க வெறும் மொத்த தொகைகளோ பங்குகளோ அவசியமில்லை. இதற்குப் பொருளாதார நடவடிக்கையின் இறுதி விளைபயன்களைத் தொழில் நிறுவனங்கள், அவற்றின் உழைப்பாளர் கூட்டுகளின் பொருளாயத வாய்ப்புகளோடு இணைக்கக் கூடிய யதார்த்தமான பொருளாதார சூழ்நிலைதான் வேண்டும்.

இத்துறையில் கடமைகளை நிர்ணயித்த கட்சி லெனினியக் கருத்தைப் பின்பற்றி நடந்தது. ''நிதிக் கொள்கையில் வெற்றி கிட்டாவிடில் நம்முடைய தீவிர சீர்திருத்தங்கள் எதுவாயிருந்தாலும் தோல்வியுறும்'' என்றார் அவர்.* இதன் அடிப்படையில் நிதி மற்றும் கடன் உறுப்புகளின் சாரம், ஒழுங்கமைப்பு, முறைகளை முற்றிலும் மாற்றும்படி கட்சியின் 27ஆவது பேராயம் கோரியது. தொழில் நிறுவனங்களின் நடவடிக்கையைச் சில்லறைத்தனமாக ஒழுங்குபடுத்துவது இந்த உறுப்புகளின் கடமையல்ல; பொருளாதார ஊக்குவிப்பை அளிப்பதும், பணப் புழக்கத்தையும் அடக்கக் கணக்கீட்டு

* V. I. Lenin, *Collected Works*, vol. 27, p. 383.

முறையையும் (இதுதான் மிகச் சிறந்த கண் காணிப்பு) வலுப்படுத்துவதுதான் இவற்றின் முக்கியக் கடமையாகும் என்று கட்சிப் பேராயத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. எல்லாம் இறுதி விளைபயன்களைச் சார்ந் திருக்குமாறு செய்ய வேண்டும்.

மொத்தத்தில் அடக்கக் கணக்கீட்டு முறையை வளர்த்து வலுப்படுத்துவதும், அதன் செயல்வன்மையை உயர்த்துவதும் பொதுச் சொத்துடைமையை ஆக்கபூர்வ மாக வளர்க்கவும், உழைப்பின் பால் விவே கமான அணுகுமுறையைத் தோற்றுவிக்கவும் உதவ வேண்டும். இது பற்றி கட்சியின் 27ஆவது பேராயத்தில் மி. செ. கர்பச் சோவ் கூறினார்: ''தொழில் நிறுவனங் களும் கூட்டமைப்புகளும் தம் பணி நஷ்ட மின்றி இயங்க முழுப் பொறுப்பேற்க வகை செய்யும் கோட்பாட்டை சற்றும் வழுவா மல் பின்பற்ற வேண்டும். அவற்றின் உறுதி மொழிகளின் நிறைவேற்றத்திற்கு அரசு பொறுப்பேற்கக் கூடாது. அடக்கக் கணக் கீட்டு முறையின் சாரம் இதில்தான் அடங்கி யுள்ளது. தன் தொழிற்சாலையில், கூட்டுப் பண்ணையில், தான் வேலை செய்யும் இடத் தில் உண்மையான எஜமானனாக இல்லாமல் நாட்டின் எஜமானனாக இருக்க முடியாது. உழைப்பாளர் கூட்டு எல்லாவற்றிற்கும் பொறுப்பேற்க வேண்டும், சமூகச் செல்வத் தைப் பெருக்குவதன் மீது அக்கறை செலுத்த வேண்டும். இச்செல்வத்தைப் பெருக்கு

வதும் சரி, இதன் இழப்பும் சரி, இரண்டுமே உழைப்பாளர் கூட்டில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரின் வருமான மட்டத்தின் மீது தாக்கம் செலுத்த வேண்டும்.''*

இதனால் அரசுச் சொத்துடைமை பலவீனமடைவதாக, அது மங்குவதாக, சோஷலிச அரசின் பொருளாதாரப் பங்கேற்பிற்குப் பங்கமேற்படுவதாகப் பொருளாகாதா? இல்லை, அப்படிப் பொருளாகாது. அடக்கக் கணக்கீட்டு முறையின் பாலான மேற்கூறிய அணுகுமுறை இதைப் பற்றிய லெனினியக் கருத்துடன் முழுக்கப் பொருந்தி வருகிறது. ''டிரஸ்டுகளும் தொழில் நிறுவனங்களும் தத்தம் பணி நஷ்டமற்று நடக்க முழுக்கப் பொறுப்பேற்க வேண்டும் என்பதற்காகத் தான் அவை அடக்கக் கணக்கீட்டு முறைக்கு மாற்றப்படுகின்றன'' என்று ஆணித்தரமாகக் கூறினார் வி. இ. லெனின்.**

ஒவ்வொரு தொழில் நிறுவனத்தின் பொருளாதார நடவடிக்கையின் இறுதி விளைவுகளுக்கான பொறுப்பை அரசின் மீது —இறுதியில் பார்க்குமிடத்து சமுதாயத்தின் மீது—சுமத்தும் முயற்சிகளை ஏற்க முடியாது. இந்நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நடவடிக்கையும் ஒட்டுண்ணித்தனத்தையும் பொறுப்பின்மையையும்

* Mikhail Gorbachev, *Political Report...*, pp. 48—49.

** V. I. Lenin, *Collected Works*, vol. 35, p. 546.

தான் தோற்றுவிக்கும். ஒரு நுகர்வாளனுக்குக் குறிப்பிட்ட பொருள் வந்து சேருவதில் தாமதமேற்பட்டால், அவனுக்கு சப்ளை செய்யும் நிறுவனம் அவனுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் மீறப்பட்டால், அதற்கான ஈட்டுத் தொகையை அந்த நுகர்வாளன் அச்சப்ளை நிறுவனத்திடம்தான் பெற வேண்டுமேயொழிய அரசிடமிருந்து அல்ல.

உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளன் என்ற பணியை மக்களின் சார்பில் நிறைவேற்றும் சோஷலிச அரசு, இச்சொத்துடைமையை நடைமுறையில் பயன்படுத்துவதற்கான அதிக செயல்வன்மையுள்ள வடிவங்களையும் கண்டுபிடிக்கிறது. இந்த வடிவங்களிலேயே தலைசிறந்த வடிவம் அடக்கக் கணக்கீட்டு முறைதான் என்று வாழ்க்கை காட்டுகிறது. இம்முறைதான் சமுதாயம், உழைப்பாளர் கூட்டு மற்றும் உழைப்பாளியின் பொருளாதார நலன்களை நம்பகரமாக இணைக்கிறது.

இதனால் உழைப்பாளர் கூட்டின் பொருளாதார நலன்கள் உழைப்பிற்கான ஊதியத்துடன் நின்று விடுவதாகப் பொருளாகாது. இந்த நலன்கள் பரவலானவை; உற்பத்தியின் வளர்ச்சி, இதைத் தொழில்நுட்ப ரீதியில் நவீனமயப்படுத்துவது, உழைப்புச் சூழலை மேம்படுத்துவது, இன்னும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளின் தீர்வு ஆகியவற்றோடு தொடர்புடைய விஷயங்களும்

இவற்றிலடங்கும். இன்றைய அடக்கக் கணக்கீட்டு முறை நெம்புகோல்கள், ஊக்கு விப்புகளின் நோக்கம், இந்த நலன்கள் தீவிர மாக்கப்பட்டு சமுதாயத்தின் நலன்களுடன் ஒத்து வருமாறு செய்வதாகும், அதாவது உயரிய இறுதி விளைபயன்களை அடை வதாகும். உற்பத்தி வளர்ச்சி, உழைப்பிற் கான ஊதியம் மற்றும் சமூகக் கடமைகளின் நிறைவேற்றத்திற்காகத் தொழில் நிறுவனங் களும் கூட்டமைப்புகளும் பெறும் நிதியின் அளவு அவற்றின் பொருளாதார நடவடிக் கையின் இறுதி விளைபயன்களைக் கறா ராகச் சார்ந்திருக்குமாறு செய்ய வேண்டும். இதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் தேவை:

—சகலவிதமான ஊதியங்களும் பொரு ளாயத ஊக்குவிப்புகளும் (போனஸ்கள் மட்டுமின்றி ஊதிய நிதியை ஏற்படுத்துவ தும்) அடக்கக் கணக்கீட்டு முறை தொடர்பு களுடன் இன்னமும் நெருங்கியிருக்குமாறு செய்ய வேண்டும். இதனால் சம்பிரதாய இடர்ப்பாடுகளை அகற்றலாம்; இல்லா விடில், இச்சம்பிரதாயத்தின்படி ஊதிய நிதி யில் பெரும் பகுதி பொருளாதார நடவடிக் கையின் இறுதி விளைபயன்களோடு தொடர் பற்று இருக்கும்;

—உற்பத்தியை நவீனமயப்படுத்துவது, உழைப்பாளர் கூட்டின் சமூகக் கடமை களின் நிறைவேற்றம் ஆகியவற்றிற்கான பொருளாதார ஊக்க நிதிகள் தோன்றும் முறையையும், அவற்றைப் பயன்படுத்தும்

முறையையும் மேம்படுத்த வேண்டும்; இவற்றிற்கும் இறுதி விளைபயன்களுக்கும், வளங்களை செயல்வன்மையோடு பயன்படுத்துவதை அதிகப்படுத்துவதற்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்த வேண்டும். இந்நோக்கத்திற்கு வரையளவு முறைகளை அதிகம் பயன்படுத்த வேண்டும், நிதி மற்றும் கடன் உந்து சக்திகளின் பங்கை அதிகப்படுத்த வேண்டும். பொருளாதார ஊக்க நிதிகள் தோன்றுவதைக் கறாராக்கும் அதே நேரத்தில் இவற்றைப் பயன்படுத்தத் தொழில் நிறுவனங்களுக்கும் கூட்டமைப்புகளுக்கும் உள்ள உரிமைகளையும் விரிவுபடுத்த வேண்டும்;

—விலைகள் உருவாகும் முறையைக் கணிசமாக மாற்றியமைக்க வேண்டும், பொருட்களின் தரம், செயல்வன்மை, சமூக ரீதியில் அவசியமான (தனி உழைப்பில் அல்ல) செலவுகள் ஆகியவற்றை இந்த விலைகள் இன்னமும் முழுமையாகப் பிரதிபலிக்க வேண்டும்; பல்வேறு வகையான விலைகள், தள்ளுபடிகள், உதவித் தொகைகள் போன்றவற்றைப் பரவலாகப் பயன்படுத்த வேண்டும். இது விலைகளை அடக்கக் கணக்கீட்டு முறையினுள் அங்கக ரீதியில் இணைக்கவும், உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டத்தையும் பொருட்களின் தரத்தையும் உயர்த்தவும் மற்றும் பொருள் பட்டியலை முறைப்படி புதுப்பிக்கவும் இவற்றைப் பயன்படுத்தவும் உதவும்.

மேற்கூறியவை ஒவ்வொன்றும் தனித் தனி நடவடிக்கைகள் அல்ல. இவற்றின் பரஸ்பர ஒத்திசைவிற்கு வகை செய்வதும், மொத்தமாகப் பொருளாதாரத்தை மேம் படுத்தும் பொதுக் கோட்பாட்டிற்கு இவை ஏற்றபடி இருக்குமாறு செய்வதும் மிக முக் கியமாகும். எடுத்துக்காட்டாக, விலைகளின் மாதிரியைப் பற்றிய பிரச்சினையைச் சுய மாகப் பார்க்கக் கூடாது; அதாவது, திட்டக் குறியீடுகளின் சாலச்சிறந்த முறையைத் தேர்ந்தெடுப்பதுடனும், பொருளாதார ஊக்க நிதிகள் உருவாகும் முறையை மேம் படுத்துவதுடனும் தொடர்பற்று இந்த மாதிரியைத் தோற்றுவிக்கும் பிரச்சினையை ஆராயக் கூடாது.

பொருளாதாரம் தீவிரப்படும் பொழுது, பொருளாதார நடவடிக்கையின் செலவுகள் மற்றும் இறுதி விளைபயன்களின் செயல் வன்மையை நம்பகரமாக அளவிட உதவும் காரணி, விஞ்ஞான தொழில்நுட்ப முன் னேற்றத்தையும் பொருட்களின் தர உயர் வையும் ஊக்குவிக்கும் தீவிர காரணி என்ற வகையில் விலைகளின் பங்கு அதிகரிக்கிறது. விலைகளை உருவாக்கும் முறையை மேம் படுத்துவது சம்பந்தமான பொதுக் கொள் கையைக் கட்சியின் 27ஆவது பேராயம் சுட்டிக் காட்டியது. அடக்கக் கணக்கீட்டு முறையை மேம்படுத்துவதற்காக, மக்களின் உண்மை வருமானங்களை உயர்த்தும் நோக் கத்துடன் மொத்தமாக விலைகளின் முறை

யைத் திட்டமிட்ட வகையில் மாற்றியமைப் பதுதான் இதன் நோக்கமாகும். விலைகளுக்கு அதிக நெளிவு சுழிவை அளிக்க வேண்டும், இவற்றைச் செலவுகளுடன் மட்டுமின்றி பண்டங்களின் பயன் தன்மையுடனும் செயல்வன்மையுடனும், உற்பத்திப் பொருளுக்கும் சமூகத் தேவைகள் மற்றும் மக்களின் தேவைக்கும் இடையிலான சீரிசைவுடனும் இணைக்க வேண்டும்.

விலைகளின் உச்ச வரம்புகளைப் பயன்படுத்துவதானது, குறிப்பாக அதிகபட்ச வரம்பை நிலைநாட்டுவதானது, நெளிவு சுழிவான விலைகளின் முறையை தேவையற்ற விலையுயர்வின் மீதான அரசுக் கட்டுப்பாட்டுடன் இணைக்க உதவும். ஒப்பந்த விலைகள் பெரும் மாற்றங்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன; ஒரு குறிப்பிட்ட பொருளுக்கான தனிப்பட்ட ஆர்டர்களின் நிறைவேற்றத்தில் இவற்றைத் தீவிரமாகப் பயன்படுத்தலாம்.

விலைகளை மேம்படுத்துவது சம்பந்தமாக மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் இத்துறையில் ஏற்கெனவே கிட்டிய அனுபவம் மற்றும் பல சோஷலிச நாடுகளின் நடைமுறை ஆகியவற்றின் அடிப்படையிலானவை. பெரிதும் விரும்பப்படும் புதிய பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும் பொழுது தொழிற்துறைக்கும் வர்த்தகத் துறைக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்புகளில் ஒப்பந்த விலைகள் சோவி

யத் நாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. சமீப ஆண்டுகளில், அந்தந்த பருவக் காலங்களில் குறைவான (50% வரை) விலைகளில் நடக்கும் விற்பனை பரவியுள்ளது, இது நல்ல பயனைத் தருகிறது.

இதுவரை கிட்டியுள்ள அனுபவமானது, இப்போதுள்ள முறையை மேம்படுத்தவும், விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஊக்குவித்தல், பொருட்களின் தரத்தை உயர்த்தல், அடக்கக் கணக்கீட்டு முறையை வலுப்படுத்தல் ஆகியவற்றிற்காக விலைகளின் நெளிவு சுழிவுத் தன்மையைப் பயன்படுத்தவும் உதவுகிறது.

அடக்கக் கணக்கீட்டு முறையைப் பற்றிய பேச்சை முடிக்கும் பொழுது, அதன் பொருளாதாரப் பணிகளை பற்றி மட்டுமின்றி, சமூகப் பணிகளைப் பற்றியும் சுருக்கமாகவாவது குறிப்பிட வேண்டும். நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அடக்கக் கணக்கீட்டு முறை காரியத்தின் பால், உழைப்பின் பால், அதன் பயன்களின் பால் கவனம், அக்கறை, கட்டுப்பாட்டை வளர்க்கும் சாதனமாகும். மாறாக, இதை ஒழுங்கமைப்பதில் காணப்படும் ஏனோதானோவென்ற மனப்போக்கும் பொருளாதார நலன்களை ஒத்திசைவிக்காமலிருப்பதும் சகலவித வளர்ப்புப் பணியின் பயன்களையும் குறைக்கும்.

அடக்கக் கணக்கீட்டு முறையானது, நிர்வாகிகளின் நிர்வாகப் பண்புகளையும் ஸ்தாபன அமைப்புத் திறமைகளையும் வெளிப்

படுத்தி பாரபட்சமின்றி மதிப்பிடவும் சோஷலிச முன்முயற்சிகளை வளர்க்கவும் உதவும். தம் வசம் உள்ள வாய்ப்புகளைக் கண்டு பிடித்து செயல்படுத்தவும், செயல்வன்மையை உயர்த்தி, நல்ல இறுதி விளைபயன்களை அடையவும் நிர்வாகிகளுக்கு உள்ள திறமையானது அவர்களின் பதவி உயர்விற்கான நம்பகரமான தகவல்களை அளிக்கிறது.

இறுதியில் அடக்கக் கணக்கீட்டு முறைக்கு முழுக்க மாறுவதானது, திட்டமிடலிலும் நிர்வகிப்பிலும் அலுவலக சடங்கு மனப்பாங்கிற்கு எதிராகத் தீவிரமாகப் போராட உதவும். இந்த அடிப்படையில்தான் ''தான் தோன்றித்தனமான'' நிர்வாக முறைகளைக் களைந்தெறியலாம், பொருளாதார முறைகளுக்கு முக்கியப் பங்களிக்கலாம், திட்ட நிர்வகிப்பு முறை முழுவதையும் ஜனநாயகப் படுத்த உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்தலாம்.

எனவே சோவியத் நாட்டில் பொருளாதார நிர்வாகத்தைச் சீரமைக்கும் பல்வேறு நடவடிக்கைகளின் பொது நோக்கம் ஒன்றுதான். சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த அதிகபட்சம் உதவ வேண்டும் என்பதுதான் அந்நோக்கமாகும். இப்பணியின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்துவதன் மூலம் உற்பத்தி உறவுகளுக்கும் இடையறாமல் வளரும் உற்

பத்திச் சக்திகளின் மட்டத்திற்கும் இடையில் சீரிசைவான பொருத்தம் ஏற்படுத்தப் படுகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைப் பெரிதும் துரிதப்படுத்தல், தேசியப் பொருளாதாரக் கட்டமைப்பின் சீரமைப்பு, தேசியப் பொருளாதாரத்தின் செயல்வன்மையை உயர்த்தல் ஆகியவற்றிற்கான அடிப்படை மேற்கூறிய பொருத்தத்தில்தான் உள்ளது. சோஷலிச அமைப்பின் வரலாற்று மேம்பாடுகளை மேலும் முழுமையாகப் பயன்படுத்துவதும் பொருளாதார நிர்வாகத்தை நவீனமயப்படுத்துவதையே பெரிதும் பொறுத்துள்ளது.

## அத்தியாயம் ஐந்து

# அனைத்து மக்களின் லட்சியம்

சோவியத் நாட்டில் தீட்டப்பட்ட துரிதப் படுத்தல் கொள்கை சோவியத் மக்களின் அடிப்படை நலன்களைப் பிரதிபலிக்கிறது. நாட்டின் பொருளாதார வல்லமையை வலுப்படுத்துவது, நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப சாதனைகளைப் பயன் படுத்துவது, உழைப்பாளிகளின் நலன் கருதி புதிய அமைப்பின் மாபெரும் ஆக்கபூர்வ மான வாய்ப்புகளை முழுமையாகப் பயன் படுத்துவது—இவைதான் மேற்கூறிய கொள் கையின் நோக்கங்களாகும். இக்கொள்கை யின் லட்சியங்கள் உயர்வானவை, புனித மானவை, மானுடத் தன்மையை உடை யவை.

தீட்டப்பட்ட கொள்கையின் சிக்கலான தன்மையையும் பெரும் அளவையும் வைத்துப் பார்க்கும் பொழுது இதை செயல் படுத்துவது சாதாரணக் காரியமல்ல. இங்கே கோடானுகோடி மக்களின் உறுதியான, சுயநலமற்ற உழைப்பும், மக்கள் திரளினரின் ஆற்றல் மற்றும் முன்முயற்சியின் எழுச்சி யும், லட்சியப் பாதையில் தோன்றும் எல்லா இடர்ப்பாடுகளையும் அகற்றும் அசைக்க இயலா உறுதியும் தேவை.

சமூக முன்னேற்றத்திற்கென்று மாற்ற முடியாத, புறவய ரீதியான விதிகள் உண்டென்றாலும் இவை மக்கள் திரளின் பங்கேற்பின்றி எப்போதுமே தாமே நிறைவேறா. மக்கள் திரளினர்தான் வரலாற்றின் படைப்பாளிகளாக இருந்தனர், இருக்கின்றனர். இந்த மார்க்சியக் கருத்தின் ஆழமும் உண்மையும் முன்னெப்போதையும் விட தெட்டந்தெளிவாக இப்போது வெளிப்படுகின்றன. எனவே சோவியத் சமுதாயத்தின் எதிர்காலம், சோவியத் மக்கள் அதை எப்படிப்பட்டதாகப் படைக்கப் போகின்றார்கள் என்பதைப் பொறுத்தது.

### மானுடக் காரணியின் முக்கியத்துவம்

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி எப்போதுமே மக்கள் திரளினரை ஆதாரமாகக் கொண்டு செயல்படுகிறது. அரசியல் என்பது தனிநபர்களின் நடவடிக்கையோ குறுகிய வட்டத்தின் செயற்பாடோ அல்ல, மாறாக அது கோடானுகோடி மக்களின் படைப்புச் செயல் என்று கட்சி கருதுகிறது. ''...அரசியல் கொள்கை லட்சோபலட்சம் மக்கள் உள்ள இடத்திலிருந்தே துவங்குகிறது; ஆயிரவர் அல்ல, லட்சக்கணக்கான மக்கள் இருக்கும் இடத்திலிருந்து உண்மையான அரசியல் கொள்கை துவங்குகிறது...''*

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 7, பக்கம் 232.

நாட்டின் முன் நிற்கும் கடமைகள் எவ்வளவுக்கெவ்வளவு சிக்கலானவையோ, பெரியவையோ அவ்வளவுக்கவ்வளவு வரலாற்று நடவடிக்கையில் மக்கள் திரளினரை ஈடுபடுத்த வேண்டியது முக்கியம். ''திட்டங்களின் மீது மக்களுக்கு அக்கறையில்லாவிடில், மக்கள் திரளினரின் உழைப்பு, சமூக முன்முயற்சியையும் ஆற்றலையும் நம்மால் தட்டியெழுப்ப முடியாவிடில், அத்திட்டங்கள் காற்றில் தொங்கும். புதிய கடமைகளை நோக்கி சமுதாயத்தைத் திருப்புவது, மக்களின், ஒவ்வொரு உழைப்பாளர் கூட்டின் படைப்பாற்றலை இக்கடமைகளின் நிறைவேற்றத்திற்காகப் பயன்படுத்துவது—இதுதான் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கான அடிப்படை நிபந்தனையாகும்.''*

இப்பிரச்சினையின் பாலான அணுகுமுறை சமூக வளர்ச்சி பற்றி மார்க்சிய-லெனினியத் தத்துவம் முன்வைத்த அடிப்படை நியதிகளை ஆதாரமாகக் கொண்டது. இங்கே மார்க்சின் கருத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். ''மானுடச் சாராம்சம் என்பது ஒவ்வொரு தனிநபரிடமும் உள்ளார்ந்து கிடக்கும் கருத்தியல் அல்ல. அதன் யதார்த்த நிலையில் அது சமுதாய

* Mikhail Gorbachev, *Political Report...*, p. 106.

உறவுகளின் பொதுத் தோற்றமாகும்.''*

இதிலிருந்து பின்வரும் கோட்பாட்டு ரீதியான முடிவு பிறக்கிறது. மனிதர்களின் பங்கேற்பை அதிகப்படுத்த, சமூக உறவுகளை, குறிப்பாக பொருளாதார உறவுகளைச் செயல்முனைப்போடு, திட்டமிட்ட வகையில், பன்முக ரீதியில் மேம்படுத்த வேண்டும். சமூக பொருளாதார வளர்ச்சியைச் துரிதப்படுத்துவதற்காகத் தீட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளில் இந்த அம்சம் தான் மைய இடத்தை வகிக்கின்றது.

எனவே மனிதர்களின் பங்கேற்பை அதிகப்படுத்துவதை சமுதாய உறவுகளை மேம்படுத்துவதிலிருந்து பிரித்து ஒரு தனியான நிகழ்ச்சிப் போக்காகப் பார்க்கக் கூடாது. இவை இரண்டு வெவ்வேறான கடமைகள் அல்ல. இவை சோவியத் சமுதாயத்தின் சமூக பொருளாதார முன்னேற்றம் என்ற ஒரே ஐக்கிய கடமையின் இரண்டு பக்கங்களாகும்.

உற்பத்திச் சாதனங்களின் மீது பொதுச் சொத்துடைமையைத் தோற்றுவிக்கும் சோஷலிசம், வரலாறு இது வரை காணாத, உழைப்பாளியின் முற்றிலும் புதிய மானுடப் பண்பைத் தோற்றுவிக்கிறது. உழைப்பாளி

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1982, பக்கங்கள் 9—10.

கள் நாட்டின், உற்பத்தியின் எஜமானர்களாகின்றனர். சோஷலிசத்தின் மகத்தான மேம்பாடு, இதன் ஆற்றலின், வெல்லற்கரிய தன்மையின் மூல ஊற்று இதில்தான் அடங்கியுள்ளது.

சோஷலிச சமுதாயத்தில் உழைப்பாளியின் புதிய நிலை, முற்றிலும் புதிய வகையான உழைப்புக் கட்டுப்பாட்டைத் தோற்றுவிக்கிறது. எனவே உற்பத்தியில் ஏதோ சாதாரணமான கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதுடன் விஷயம் முடிந்து விடுவதில்லை. விஷயம் இன்னமும் பரவலானது—புதிய வகையான சமூக உழைப்புக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி எல்லா இடங்களிலும் நிலை பெறச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு உற்பத்தி முறையும் தனக்கேற்ற உழைப்புக் கட்டுப்பாட்டைத் தோற்றுவித்தது என்பது தெரிந்ததே. நிலப்பிரபுத்துவத்தில் (பண்ணையடிமை முறையில்) இது பொருளாதாரத்தோடு தொடர்பற்ற நிர்ப்பந்தமாகும், அல்லது சாதாரண வார்த்தைகளில் சொன்னால் குண்டாந்தடி நிர்ப்பந்தமாகும். இக்கட்டுப்பாடு அந்தக் காலத்திற்குப் போதுமானதாயிருந்தது. முதலாளித்துவம், இதை விட அதிகத் தந்திரமான கட்டுப்பாட்டைத் தோற்றுவித்தது; இது பட்டினியின் அடிப்படையிலானது, எங்கே வேலை போய், வாழும் வழியின்றி போய் விடுமோ என்ற நிரந்தர அச்சத்தின் அடிப்படையிலானது. இது மக்கள் திரளினரை

மூலதனம் என்னும் சக்கரத்துடன் கட்டிப் போடுகிறது, மூலதனத் திரட்சியின் நலன் களுக்குச் சேவை புரிகிறது; இதுதான் இக் கட்டுப்பாட்டின் மானுட விரோத சாரம், வர்க்க உட்பொருள். ஆனாலும், உழைப்புப் போக்கில் இது ஒரு ஒழுங்குமுறையை, உற்பத்திச் சுழற்சியில் ஒத்திசைவிப்பைத் தோற்றுவிக்கிறது என்பதை மறுக்க முடி யாது.

சோஷலிசம் இதை விட உயர்வான, அதே சமயம் அதிக மானுடத் தன்மையுள்ள, செயல்வன்மை மிக்க உழைப்புக் கட்டுப் பாட்டைத் தோற்றுவிக்க வேண்டும். தன் உழைப்பின் சாரத்தையும் பங்கையும் நன்கு புரிந்து கொண்டு, தன் உழைப்பின் விளை பயன்களுக்கான பொறுப்பை உணர்ந்த ஒரு கட்டுப்பாடாக இது திகழ வேண்டும். வேறு மாதிரியான உயரிய சமூகக் கட்டுப் பாடு இல்லை, இருக்கவும் முடியாது.

இப்படிப்பட்ட கட்டுப்பாட்டை உரு வாக்கி எல்லா இடங்களிலும் அமல்படுத்து வது உழைப்பு மற்றும் சமூகச் செல்வத்தின் பாலான உண்மையான சோஷலிச அணுகு முறையை வளர்ப்பதற்கு ஒப்பானது; இது தான் பொருளாதார, சமூக, அரசியல், ஆன்மீக உறவுகளை மொத்தமாக மேம் படுத்துவதில் முக்கிய அம்சமாகும்; மனிதப் பங்கேற்பை அதிகப்படுத்துவதில் இதற்கு முக்கிய இடமுண்டு.

வளர்ச்சியடைந்த சமூகத் தேவைகளைக்

கொண்டிராத, அதே சமயம் சீரிசைவாக வளர்ச்சியுற்ற ஒரு சோஷலிச தனிநபரை கற்பனை செய்து பார்க்க முடியாது. இப் படிப்பட்ட தனிநபரை உருவாக்குவதுதான் மனிதப் பங்கேற்பிற்கு மேன்மேலும் அதிக முக்கியத்துவம் அளிக்கும் நிகழ்ச்சிப் போக் காகும்.

மனிதனின் சமூகப் பண்புகளை வளர்க்கக் குறிப்பிட்ட பொருளாயத முன்தேவை கள் வேண்டும். நீண்ட கால நோக்கில் பார்த் தால், சமூக முதலீடுகள்தான், அதாவது மனித வளர்ச்சிக்கான முதலீடுகள்தான் செயல்வன்மை மிக்கவையாகும். வீடு கட்டு மானம், உடல்நலப் பாதுகாப்பு, உடற்பயிற்சி, விளையாட்டு, கல்வி, விஞ்ஞானம், கலை, கலாசாரம் ஆகியவற்றிற்கான செலவுகள் இவற்றிலடங்கும்.

சமூக நோக்கங்களுக்கான செலவுகள் எதிர்கால வளர்ச்சியுடன் நெருக்கமாகத் தொடர்புடையவை, இவைதான் சோவியத் நாட்டின் சமூக முன்னேற்றம் முழுவதையும் முன்நிர்ணயிக்கின்றன. இத்துறையில் காணப் படும் கவனக் குறைவும், பொருளாதார, சமூகக் கடமைகளை நிறைவேற்றுவதில் பன்முகத் தன்மை இல்லாததும் வன்மை யாகக் கண்டிக்கப்படுகின்றன. இதற்கான செலவுகள் இடையறாது அதிகரித்து வரு கின்றன.

இப்பிரச்சினையைத் தீர்க்க எவ்வளவு பெரும் கவனம் செலுத்தப்படுகிறது என்

பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. 12ஆவது ஐந்தாண்டில் ஆள்பல அதிகரிப்பு கணிசமாகக் குறைந்து 3.2 மில்லியன் நபர்களாக இருக்கும் என்று தெரிந்ததும் கிட்டத்தட்ட கூடுதல் ஆள்பலம் முழுவதையும் கல்வி, உடல் நலப் பாதுகாப்பு, மற்ற சமூக, கலாசாரத் துறைகளுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது. முந்தைய ஐந்தாண்டில் ஆள்பல அதிகரிப்பு உற்பத்தித் துறைக்கும் உற்பத்தியல்லாத் துறைக்கும் இடையில் கிட்டத்தட்ட சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

''1986 — 1990ஆம் ஆண்டுகளுக்கும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கும் சோவியத் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் முக்கியத் திசையமைவுகளில்'' பின்வரும் அம்சங்கள் அடங்கியுள்ளன. இவை உடனடி பிரச்சினைகளின் தீர்விற்குப் பெரிதும் முக்கியமானவை:

—ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தனி வசிப்பிடம் அல்லது வீடு வழங்குவது என்ற முக்கிய சமூகக் கடமையைத் தொடர்ச்சியாக நிறைவேற்றுவது;

—உடல்நலப் பாதுகாப்புக் கூடங்கள், ஆரோக்கிய இல்லங்கள், ஓய்வில்லங்கள், சுற்றுலா பயண அமைப்புகள் ஆகியவற்றைத் துரிதமாக வளர்த்தல், இவற்றின் தரத்தை உயர்த்தல். விளையாட்டும் உடற்பயிற்சியும் பெருமளவில் வளர ஊக்கமளித்தல், இவற்றை எல்லா இடங்களிலும் அன்றாட வாழ்க்கையில் புகுத்துதல்;

—மக்களின் கல்வி, கலாசார மட்டத்தை உயர்த்தி, அவர்களின் தேவைகளை மேன்மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்ய வகை செய்ய வேண்டும்.

மானுடக் காரணியின் பங்கை அதிகப் படுத்த, பொருளாதார நிர்வாகத்தை மேம் படுத்தி, சமூகத் துறையின் பொருளாயத அடிப்படையை வலுப்படுத்தினால் மட்டும் போதாது. அரசியல், சமூக, சித்தாந்த நிறுவனங்கள் முழுவதையும் சுறுசுறுப்பாக்குவது, நிர்வாகத்தில் ஜனநாயக அடிப்படைகளை வலுப்படுத்துவது, சமூக உணர்வை சீரமைப்பது ஆகியவற்றைப் பொறுத்து பல விஷயங்கள் இருக்கும்.

## நிர்வாகத்தில் மக்கள் திரளினரின் பங்கேற்பு

சோவியத் ஒன்றியம், மற்ற சோஷலிச நாடுகளின் வரலாற்று அனுபவம் காட்டும்படி, நிர்வாகத்தில் பங்கேற்பதை விட காரியத்தின் பாலான சோஷலிச உறவு முறையை, சிவில் உணர்வை வளர்க்க வேறு நம்பகரமான வழி கிடையாது. இப்பங்கேற்பின் மூலமாகத்தான் உண்மையான—வேடமல்ல—சுறுசுறுப்பு வளரும், திட்ட நிர்வாகத்தின் ஜனநாயக அடிப்படைகள் வலுப்படும். நிர்வகிக்கக் கற்றுக் கொள்ள, தீர்வுகளை உருவாக்கி ஏற்கும் நிகழ்ச்சிப் போக்கில் பங்கேற்க வேண்டும், பொறுப்பை உணர வேண்டும்.

நிர்வாகத்தில் உழைப்பாளிகளின் பெரும் பங்கேற்பும் சுறுசுறுப்பும் உற்பத்திச் சாதனங்களின் மீதான சோஷலிசச் சொத்துடைமையின் நிறைவேற்றத்தின் வளர்ச்சியையும் முழுமையையும் காட்டும் முக்கியக் குறியீடுகளாகும். நிர்வகிப்பு நிகழ்ச்சிப் போக்கில்தான் காரியத்தின் பாலான, உழைப்பின், அதன் விளைபயன்களின் பாலான எஜமான உணர்வு முழுமையாக வெளிப்படும். இதனால் மனிதன் அன்னியமயப்பட்டு இருப்பது அகற்றப்படுகிறது, சமூகச் செல்வத்தின் பாலான கவனமின்மை மறைகிறது.

பொருளாதார நிர்வகிப்பை மேம்படுத்தும் பணியில் பின்வரும் கொள்கை தொடர்ச்சிகரமாகப் பின்பற்றப்படும் என்று கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது: உழைப்பாளிகளின் ஆக்கபூர்வமான முன்மொழிவுகள் வளர்க்கப்படும், உற்பத்தி நிர்வகிப்பில் அவர்கள் மேன்மேலும் ஈடுபடுத்தப்படுவார்கள், திட்டங்களைத் தீட்டுவதிலும் நிர்வாக முடிவுகளை எடுப்பதிலும், தொழில் நிறுவனங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் உற்பத்தி வளர்ச்சிக்கான உள் ஆற்றல்களைக் கண்டுபிடித்து அணிதிரட்டுவதிலும் உழைப்பாளர் கூட்டுகளின் பங்கு உயர்த்தப்படும்.

நிர்வகிப்பில் மக்கள் திரளினரின் பங்கேற்பு சம்பந்தமான ஜனநாயகப் பாரம்

பரியங்களைப் பயன்படுத்தி பன்முக ரீதியில் வளர்ப்பதிலும் அவர்களின் சமூக சுறுசுறுப்பைத் தொடர்ச்சியாக உயர்த்துவதிலும் சம்பிரதாயப் போக்கையும் டாம்பீகத்தையும் அகற்றப் பெரிதும் பாடுபட வேண்டும். இதற்கு வளம் மிகு வரலாற்று நடைமுறையைக் கவனமாக ஆராய வேண்டும், சோதர நாடுகளின் கூட்டு அனுபவத்தைப் பொதுமைப்படுத்த வேண்டும், லெனினியத் தத்துவார்த்த செல்வத்தைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

இப்பணி அனைத்தும் சோவியத் ஜனநாயகத்தை மேம்படுத்துவதன் முக்கிய திசையமைவுகளுடன், அதாவது சோஷலிச சுயநிர்வாகம் முழுமையாக நிறைவேற்றப்படுவதுடனும், அரசு மற்றும் சமூகக் கடமைகளின் நிறைவேற்றத்தில் உழைப்பாளிகள், உழைப்பாளர் கூட்டுகள், ஸ்தாபனங்களின் உண்மையான பங்கேற்புடனும் நேரடியாகத் தொடர்புடையது.

இன்று ஜனநாயகத்தின் சகல வடிவங்களையும் — பிரதிநிதித்துவ வடிவங்கள், நேரடி முறைகள் இரண்டையும்—வளர்க்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் பணியைச் சுறுசுறுப்பாக்குவது இங்கு மிக முக்கியம். உழைப்பாளிகளின் புரட்சிகரப் படைப்பாற்றலில் பிறந்த இவை காலத்தின் சோதனையைக் கடந்து வந்துள்ளன, தம் வல்லமையையும், மக்களின் முழு ஆட்சியைச் செயல்படுத்துவதி

லும் மக்கள் திரளினரை ஒன்று கூட்டி அணி திரட்டுவதிலும் தம் பெரும் வாய்ப்புகளையும் மெய்ப்பித்துள்ளன. சோவியத் பிரதிநிதித்துவ உறுப்புகளின் இந்த வாய்ப்புகளை அதிகபட்சம் பயன்படுத்த வேண்டும் என்று சோஷலிச ஜனநாயக வளர்ச்சியின் தர்க்கமே கட்டளையிடுகிறது.

இன்று நாட்டின் உயர்மட்ட சுப்ரீம் சோவியத் முதல் கிராம சோவியத் வரை எல்லா மட்டங்களிலும் சோவியத்துகளுக்கு 2.3 மில்லியனுக்கும் கூடுதலான உழைப்பாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சோவியத் சமுதாயத்தின் எல்லா சமூகப் பிரிவுகள், குழுக்களையும் எல்லா தேசிய இனங்கள், மக்களினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். சுப்ரீம் சோவியத்தில் உள்ள 1,500 உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் தொழிலாளர்களும் கூட்டுப்பண்ணை உறுப்பினர்களுமாவார்கள்; விஞ்ஞானத் துறையினர், கலைஞர்கள், இலக்கியத் துறையினர், கல்வி, உடல்நலப் பாதுகாப்புத் துறையினர், தொழில் நிறுவன நிர்வாகிகள், நிபுணர்கள், கட்சி, அரசுப் பணியாளர்கள், தொழிற்சங்க, இளம் கம்யூனிஸ்டு சங்க உறுப்புகளில் பணி புரிபவர்கள் ஆகியோரும் பரவலாக உள்ளனர்.

மக்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளில் உள்ள தத்தம் பிரதிநிதிகளின் மூலம்

உழைப்பாளிகள் நாட்டை நிர்வகிக்கின்றனர். இந்த உண்மையான மக்கள் ஜனநாயக அமைப்பு முழுவதையும் இன்னமும் வளர்க்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

அதே பொழுது, தம் பிரதிநிதிகளின் மூலமாக மட்டுமின்றி நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கேற்கவும், விவாதிக்க மட்டுமின்றி முடிவுகளை எடுக்கவும் உழைப்பாளிகளுக்கு வாய்ப்புகள் இருக்க வேண்டும். இது இல்லாவிடில் மக்களின் உண்மையான சோஷலிச சுயநிர்வாகம் என்பது இருக்க முடியாது.

நாட்டு வாழ்க்கையின் முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாயும், உள்ளூர் சோவியத்துகளின் தீர்மான நகல்கள் குறித்தும் பொது விவாதம் நடத்தவும் வாக்கெடுப்பு நடத்தவும் சோவியத் அரசியல் சாசனம் வகை செய்கிறது. ''கூட்டங்கள், வாக்காளர்களின் கட்டளைகள், உழைப்பாளிகளின் கடிதங்கள், பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சி, பொதுமக்களின் கருத்துகளை வெளிப்படுத்தி, மக்கள் திரளினரின் மனநிலை, தேவைகளை உடனுக்குடன் புரிந்து செயல்படுத்தும் முறைகள் அனைத்தையும்—இவையெல்லாம் நேரடி ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கு உதவும் நம்பகரமான வழிகளாகும்—நாம் இன்னமும் நன்றாகப் பயன்படுத்த வேண்டும்'' என்று கட்சியின் 27ஆவது பேராயத்திற்கு மத்திய கமிட்டி

சமர்ப்பித்த அரசியல் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.*

சோஷலிச சுயநிர்வாகம் என்றால் உழைப்பாளர் மக்கள் திரளினருக்கான நிர்வாகம் என்று மட்டும் பொருளாகாது, மக்கள் திரளினர் தாமே நடத்தும் நிர்வாகம் என்றும் இதற்குப் பொருள்படும். கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பு இந்த அடிப்படைப் பிரச்சினையின் மீது கவனம் செலுத்துகிறது. ''சமுதாய, அரசு நிர்வாகத்தில் மக்களின் சோஷலிச சுயநிர்வாகக் கோட்பாடுகள் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட வேண்டும் என்பதன் மீது கட்சி அக்கறை செலுத்துகிறது. அதாவது உழைப்பாளிகளின் நலன் கருதி நிர்வாகம் நடந்தால் மட்டும் போதாது, இது, லெனினின் வார்த்தைகளில் சொன்னால், தம் சொந்த கூட்டாட்சியைத் தவிர வேறொரு ஆட்சியையும் அறியாத உழைப்பாளிகளின் நேரடியான காரியமாயும் மேன்மேலும் அதிகமாக, நியதியாக மாறவும் வேண்டும்'' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

நிர்வாகத்தில் மக்கள் திரளினரின் பங்கேற்பு பற்றிய கருத்தை முன்வைத்த பொழுது வி. இ. லெனின் தொலை நோக்குப் பார்வையைக் கொண்டிருந்தார் என்பது இன்று மேன்மேலும் தெளிவாகி வருகிறது.

* Mikhail Gorbachev, *Political Report...*, p. 74.

** *The Programme of the Communist Party of the Soviet Union. A New Edition*, p. 49.

அவருடைய எண்ணங்களும் கருத்துகளும் இன்றும் தம் முக்கியத்துவத்தை இழக்க வில்லை, சோஷலிச சமுதாயம் வளர வளர அவை இன்னமும் முழுமையாக வெளிப்படு கின்றன. நிர்வாகத்தில் மக்கள் திரளினரின் சர்வாம்ச பங்கேற்பு, பரவலான திறந்த மனப்பாங்கின் அவசியம், நிர்வாக உறுப்பு களின் நடவடிக்கை மீதான ஜனநாயகக் கண்காணிப்பு வடிவங்களை வளர்த்தல் போன்றவற்றைக் குறித்த லெனினியக் கருத்துகளின் முக்கியத்துவம் இன்று கூடு கிறது.

லெனினியக் கருத்துகளில் சிலவற்றின் மீது மட்டும் கவனம் செலுத்தி, மற்றவற்றை நிராகரிக்கும் ஒருதலைப்பட்சப் போக்கு கூடாது. எடுத்துக்காட்டாக, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல், மக்கள் திரளினருக்கு இவர்கள் பதில் சொல்ல வேண்டியதன் அவசியம், ஒரே தலைமை பற்றி லெனின் கூறிய கருத்தின் விஷயத்தில் இப்படித்தான் நடந்தது. வி. இ. லெனின் தெட்டந்தெளி வாக, இரு பொருளற்று கூறினார்: ''பொறுப் புள்ள நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்கள் திரளினருக்கு வேண்டும். இவர்களை மாற்றும் உரிமை மக்கள் திர ளினருக்கு வேண்டும், இவர்களுடைய ஒவ் வொரு சிறு நடவடிக்கையையும் அறிந்து, சரிபார்க்கும் உரிமையும் மக்கள் திரளின ருக்கு வேண்டும்.''* ஆனால் இதனால்,

* V. I. Lenin, *Collected Works*, vol. 27, p. 212.

கூட்டு உழைப்பு என்ற நிகழ்ச்சிப் போக்கால் ஏதோ குறிப்பிட்ட தலைமையின்றி, நிர்வாகியின் ஒருமைப்பாட்டால் தோற்றுவிக்கும் கறாரான ஒழுங்குமுறையின்றி நிலவ முடியும் என்று பொருளாகாது என்றும் லெனின் தொடர்ந்து கூறினார்.

லெனினியக் கருத்து, மக்கள்தான் வரலாற்றின் படைப்பாளி என்ற அடிப்படை மார்க்சியக் கருத்துநிலையை ஆதாரமாகக் கொண்டது. விஞ்ஞான சோஷலிசத்தின் பார்வையில் மக்கள் திரளினர் அல்லது உழைக்கும் மாமக்கள் என்றால் வெறும் கும்பலாகாது. இவர்கள் மிகப் பெரும் இயந்திர உற்பத்தியால் அணிதிரட்டப்பட்டு, போராட்ட அனுபவத்தால் புடம் போட்டு எடுக்கப்பட்டு அறிவூட்டப்படுகின்றனர். சோஷலிசத்தில் இந்த மக்கள் திரளினர் தம் மத்தியிலிருந்து நிர்வாகிகளை முன் கொண்டு வருகின்றனர், அவர்களுக்கு நிர்வாகப் பணியை அளித்து, அப்பணியை இடையறாது கண்காணிக்கின்றனர்.

மேற்கூறிய கருத்துநிலைகள், உற்பத்தி நிர்வகிப்பில் உழைப்பாளிகளின் மேன்மேலும் அதிகரித்து வரும் பங்கேற்புடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிப் போக்குகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான அடிப்படையாகும். இப்பங்கேற்பு உழைப்புக் குழு, உழைப்பாளர் கூட்டிலிருந்து மொத்தமாக தேசியப் பொருளாதாரம் வரை பல்

வேறு மட்டங்களில் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது.

இன்று உழைப்பாளர் கூட்டுகளின் பங்கை வலுப்படுத்துவதன் மீது விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. இது தர்க்க ரீதியானது, நியதியானது. உழைப்பாளர் கூட்டு என்பது தேசியப் பொருளாதாரத்தின் அடிப்படை அங்கத்தில் உருவாகிறது. இங்குதான் எல்லாப் பொருளாயதச் செல்வமும், அவசிய உற்பத்திப் பொருளும் உபரி உற்பத்திப் பொருளும் தோற்றுவிக்கப்படுகின்றன, பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான அடித்தளம் இடப்படுகிறது. இங்கே கூட்டு உழைப்புப் போக்கில் தனி நபர் உருவாக்கம் நடைபெறுகிறது, அவருடைய ஆன்மீக மதிப்புகளும் தார்மீகப் பண்புகளும் உருவாகின்றன. உழைப்பாளர் கூட்டு, மக்களின் சோஷலிச சுயநிர்வாகத்தின் அடிப்படை அங்கமாக வாழ்க்கையின் தாக்கமே உதவுகிறது.

உற்பத்தி நிறுவனங்களின் (கூட்டமைப்புகளின்) முன்மொழிவையும் சுதந்திரத்தையும் வளர்ப்பது, பொருளாதார நடவடிக்கையின் இறுதி விளைபயன்களில் இவற்றின் பொறுப்பை வலுப்படுத்துவது சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட கடமைகளே உழைப்பாளர் கூட்டின் பங்கு அதிகரிக்க உதவுகின்றன. இன்று உழைப்பாளர் கூட்டு, நிர்வாகத்திலும் அரசு மற்றும் சமூக வாழ்க்கையின் பல்வேறு பிரச்சினைகளை விவாதித்து

தீர்ப்பதிலும் அன்றாட மற்றும் உண்மை யான பங்கேற்பின் முக்கியக் களமாக மாறி வருகிறது.

உழைப்பாளர் கூட்டுகளையும், தொழில் நிறுவனங்கள், ஸ்தாபனங்களின் நிர்வகிப் பில் இவற்றின் பங்கேற்பை உயர்த்துவதை யும் பற்றிய சட்டம் நிர்வகிப்பில் உழைப் பாளிகளின் பங்கேற்பிற்கான பரந்த வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. இச்சட்டத் தின்படி:

—உழைப்பாளர் கூட்டின் நிர்வகிப்பின் கீழ் மேன்மேலும் அதிகமான உற்பத்தி, சமூக, ஆன்மீக வளர்ச்சி அம்சங்கள் வரு கின்றன;

—பல்வேறு பிரச்சினைகளில் சுயமாக முடிவெடுக்கும் உரிமை அளிக்கப்படுகிறது, இம்முடிவுகள் கட்டாயமாக நிறைவேற்றப் பட வேண்டும்;

—உழைப்பாளர் கூட்டுகளின் அதிகாரங் களை நிறைவேற்றும் வடிவங்களும் முறை களும் மேம்படுகின்றன; ஐக்கிய தேசியப் பொருளாதாரத்தின் அங்கங்கள் என்ற வகையில் தொழில் நிறுவனங்கள், ஸ்தாப னங்களின் நிர்வகிப்பில் இவற்றின் நேரடிப் பங்கேற்பு அதிகரிக்கிறது.

உழைப்பாளர் கூட்டுகளின் பங்கை உயர்த்துவது எவ்வளவுதான் முக்கியமான தாய் இருந்தாலும் உற்பத்தி நிர்வகிப்பில் மக்கள் திரளினரின் பங்கேற்பு அத்துடன் முடிந்துவிடுவதில்லை. சோஷலிச சமுதாயத்

தில் உழைப்பாளியின் உலகக் கண்ணோட்டம் தொழிற்சாலையின் வேலிக்குள்ளாகக் குறுகி விடக் கூடாது. உழைப்பாளிகள்தான் சமுதாய உற்பத்தி முழுவதன் எஜமானர்களாவார்கள். எனவே வி. இ. லெனின் சுட்டிக் காட்டியபடி, ''வர்க்க உணர்வுள்ள தொழிலாளி தன் தொழிற்சாலையில் தான் எஜமானன் என்பதை உணர்ந்தால் மட்டும் போதாது, தான்தான் நாட்டின் பிரதிநிதி என்பதையும் அவன் உணர வேண்டும், தன் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை அவன் உணர வேண்டும். வர்க்க உணர்வுள்ள தொழிலாளி, தான் வர்க்கத்தின் பிரதிநிதி என்பதை அறிந்திருக்க வேண்டும்.''*

பரந்த நோக்கோடு, அரசின் கண்ணோட்டத்தில் சிந்திப்பது, பரவலான தேசியப் பொருளாதார நோக்கில் பிரச்சினைகளை அணுகுவது—இதுதான் உயர்வான அரசியல் முதிர்ச்சியையும் காரியத்தின் பாலான பொறுப்புள்ள அணுகுமுறையையும் காட்டும் அடையாளங்களாகும்.

ஆனால் இவையெல்லாம் தாமாக நடக்காது. அரசு அக்கறையின் அடிப்படையிலான அணுகுமுறையை உருவாக்குவது, தன் நாட்டின், தான் வேலை செய்யும் இடத்தின் எஜமானன் என்ற உணர்வு வளருவது, உரிய நடத்தை வளருவது—இவையெல்லாம் அரசு மற்றும் பொருளா

---

* *Ibid.*, p. 403.

தார நிர்வாகத்தை ஜனநாயகமயப்படுத்தும் நிகழ்ச்சிப் போக்கின் விளைவும் அதன் அங்கமும் ஆகும். கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: "நிர்வகிப்பையும், அரசு முடிவுகளை உருவாக்கி ஏற்கும் நிகழ்ச்சிப் போக்கையும் மேன்மேலும் ஜனநாயகமயப்படுத்தும் கொள்கையைக் கட்சி இடையறாது பின்பற்றும்; இக்கொள்கை சாலச்சிறந்த முடிவுகளை எடுக்கவும், உழைப்பாளிகளின் பல்வேறு கருத்துகள், முன்மொழிவுகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு ஒப்பிடவும் உதவும். உழைப்பாளர் கூட்டுகள், சோவியத்துகளின் நிரந்தர கமிஷன்கள், தொழிற்சங்கங்கள், இளம் கம்யூனிஸ்டுகளின் சங்கங்கள், மற்ற பொது ஸ்தாபனங்களில் விவாதங்கள் நடந்த பின் தான் முடிவெடுக்க வேண்டிய பிரச்சினைகளின் பட்டியல் விரிவாக்கப்படும்."*

நிர்வாகத்தில் ஜனநாயக அம்சங்களை மேன்மேலும் புகுத்தவும், இதில் பரவலான மக்கள் திரளினரைத் தீவிரமாக ஈடுபடுத்தவும் அவசியமான நிபந்தனை ஒளிவுமறைவின்மையும், அரசு மற்றும் நிர்வாக உறுப்புகளின் நடவடிக்கைகளை ஜனநாயக ரீதியில் கண்காணிக்கும் வடிவங்களை வளர்ப்பதும் ஆகும். ஒளிவுமறைவின்மை, அதாவது அடைந்த சாதனைகளையும் செய்த தவறு

---

* *The Programme of the Communist Party of the Soviet Union. A New Edition*, p. 51.

களையும் உள்ளது உள்ளபடியே சொல்வதானது ஒரு புறம் நிர்வகிப்பில் சம்பிரதாயத் தன்மையையும் அகவயவாதத்தையும் எதிர்த்து முறியடிக்க நம்பகரமான சாதனமாகத் திகழும்; மறுபுறம் மக்கள் திரளினரின் உழைப்பு மற்றும் சமூக நடவடிக்கைக்கான ஊக்குவிப்பாக விளங்கும்.

ஒளிவுமறைவின்மையை விரிவுபடுத்தும் பிரச்சினையைக் கட்சியின் 27ஆவது பேராயம் கோட்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் பிரச்சினை என்றது. ஒளிவுமறைவின்மை இல்லாவிடில் ஜனநாயகத் தன்மைக்கோ, மக்கள் திரளினரின் அரசியல் படைப்பாற்றலுக்கோ, நிர்வகிப்பில் அவர்களின் பங்கேற்பிற்கோ இடமேயில்லை என்று கட்சிப் பேராயத்திற்கு மத்திய கமிட்டி சமர்ப்பித்த அரசியல் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இதுதான் ஊழியர்களின் மனநிலையில் ஏற்பட வேண்டிய சீரமைப்பிற்கான அடித்தளம்.

பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற வெகுஜன தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி பொதுமக்கள் கண்காணிக்கும் பொழுது அது சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் பல்வேறு வழிகளை வெளிப்படுத்தி பயன்படுத்த உதவும். ஒரு நிர்வாகி எந்த மட்டத்தில் இருந்தாலும் சரி, அவர் தன் பணி, தன் வெற்றி, தோல்விகளைப் பற்றித் தனக்குக் கீழுள்ளவர்கள் முன்

அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குச் சரிவரத் தீர்வு காணப் படாவிடில் யார் அதற்குக் காரணம் என் பது சமுதாயத்திற்கு, உழைப்பாளர் கூட் டிற்குத் திட்டவட்டமாகத் தெரிய வேண் டும்; அப்போது தீர்வு காணப்படாத பிரச் சினைகளின் எண்ணிக்கையும் குறையும், காரியமும் வெற்றிகரமாக நடக்கும்.

பழைய முறைகளை அகற்றாமல், மக் களின் சோஷலிச சுயநிர்வாகக் கோட்பாடு களை உறுதியோடும் தொடர்ச்சியோடும் பின்பற்றாமல் மேற்கூறியவற்றை ஒரே நாளில் செய்து முடிக்க முடியாது. ஆனால் கடமை கடினமானது என்பதால் அதைக் குறைத்து மதிப்பிடவும் கூடாது; இக்கடி னத்தைக் காரணம் காட்டி அதன் நிறை வேற்றத்தை நாளைய தினத்திற்குத் தள்ளிப் போடவும் கூடாது. முன்நிற்கும் கடமைகளின் அளவு, சிக்கல், முக்கியத்துவத்தைத் தெட்டந் தெளிவாகப் புரிந்து கொள்வதானது சக்திகளுக்கு வலுவூட்டும், ஆற்றலையும் உறுதியையும் அணிதிரட்ட உதவும். இன்று நிர்வாகத்தில் ஜனநாயக அம்சங்களைப் புகுத்துவது சம்பந்தமான ஒவ்வொரு நட வடிக்கையும் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் பாதையில் முன்னெடுத்து வைக்கப்படும் அடியாகும்.

நிர்வாகத்தில் மக்கள் திரளினர் பங் கேற்பதற்கான மிக முக்கிய, செயல்முனைப் பான வடிவங்களில் ஒன்று சோஷலிசப்

போட்டியாகும். இது உழைப்பாளிகளின் படைப்பாற்றல் வெளிப்படும் மிக முக்கியத் துறையாகும்; தனிநபரின் சுயதிருப்திக்கும் சமூக அங்கீகாரத்திற்குமான முக்கிய வழி களில் ஒன்றாகும்.

வி. இ. லெனின் முன்வைத்த கோட்பாடு கள்தான் சோஷலிசப் போட்டியின் அடிப் படைகளாகத் திகழுகின்றன. அவையாவன: ஒளிவுமறைவின்மை, அதாவது போட்டியில் கலந்து கொள்பவர்களில் ஒவ்வொருவரின் உண்மையான நிலையையும் பற்றி யதார்த் தமாக அறிவிக்க வேண்டும்; விளைபயன் களை ஒப்பிடுதல், யார் சிறப்பாக, நேர்மை யாக உழைத்தாரோ, யார் தன் உழைப் பால் அதிகபட்ச சமூகச் செயல்வன்மையை அடைந்துள்ளாரோ அவருடன் வெளிப்படை யாக, நேரிடையாக, உணர்வு பூர்வமாக ஒப்பிட வேண்டும்; அனுபவத்தை நடை முறையில் மீண்டும் பயன்படுத்தும் வாய்ப்பு, அதாவது போட்டியில் கலந்து கொள்பவர் கள் முன்வைத்த சிறந்த முறைகளை, நல்ல உழைப்பு ஒழுங்கமைப்பு வடிவங்களைப் பயன்படுத்த எல்லோருக்கும் வாய்ப்பு வேண் டும். சோவியத் பொருளாதார வளர்ச்சியின் எல்லாக் கட்டங்களிலும் சோஷலிசப் போட்டி என்பது மந்தம், சம்பிரதாயங்கள், சடத்துவம் ஆகியவற்றை அகற்றுவதில் ஒரு முக்கியக் காரணியாக இருந்து வந்துள்ளது. நம் நாட்களில் இதன் முக்கியத்துவம் கூடு

கிறது, எதிர்காலத்தில் இம்முக்கியத்துவம் இன்னமும் அதிகரிக்கும்.

போட்டியின் வெற்றியானது, கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் முக்கிய லட்சியங்களை நிறைவேற்ற அது எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பெரிதும் பொறுத்தது. நாட்டின் பொருளாதாரம் தீவிரப் பாதைக்கு மாறி வரும் பொழுது, திட்டவட்டமான உழைப்பு முறை, ஒப்பந்தக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுவது, பொருட்களின் உயர்வான தரம், நவீன இயந்திரங்களைக் கண்டுபிடித்து புகுத்துவது, ஒவ்வொரு நிமிடத்தையும், ஒவ்வொரு டன் மூலப்பொருளையும், ஒவ்வொரு ரூபிளையும் கவனமாகச் செலவழித்தல் ஆகியவை சோஷலிசப் போட்டியின் முக்கிய லட்சியங்களாகின்றன.

சோஷலிசப் போட்டியையும் பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்துவதையும் அங்கக ரீதியாக இணைக்க வேண்டும். இது போட்டியின் முடிவுகளை மதிப்பிடுவதையும் பொருளாதார நடவடிக்கையின் இறுதி விளைபயன்களை மதிப்பிடுவதையும் ஒன்றாக இணைக்க உதவும், குறைந்த செலவில் சமூகத் தேவைகளை மேன்மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்யும் உழைப்பாளிகளுக்கும் உழைப்பாளர் கூட்டுகளுக்கும் உண்மையாக ஊக்குவிப்பை உயர்த்த வழிகோலும்.

மக்கள் திரளினரின் படைப்பாற்றலின்

சகலவித வடிவங்களையும் வளர்ப்பதும் மனிதப் பங்கேற்பை அதிகப்படுத்துவதும் சமூக உணர்வில் ஏற்படும் குணாம்ச ரீதியான மாற்றங்களுடனும் நவீன பொருளாதார சிந்தனையை வளர்ப்பதுடனும் பெரிதும் தொடர்புடையவை. துரிதப்படுத்தல் என்ற நீண்ட காலக் கொள்கையின் மாபெரும் உந்து சக்திகளில் ஒன்று இதில்தான் அடங்கி யுள்ளது.

## நவீன சிந்தனை

பொருளாதார சிந்தனை என்பது, ஆதிக்கம் செலுத்தும் பொருளாதார கண்ணோட்டங்கள், கருத்துகளின் ஒட்டு மொத்தமாகும். இவை வெவ்வேறு பிரச்சினைகளின் பாலான அணுகுமுறையையும் மொத்தத்தில் மக்களின் பொருளாதார நடவடிக்கையில் அவர்களின் நடத்தையையும் நிர்ணயிக்கின்றன. புறவயச் சூழலின் தாக்கத்தால் உருவாகி வளரும் பொருளாதார சிந்தனை ஓரளவு சுயமானது, தேசியப் பொருளாதார வளர்ச்சியின் மீது இது தீவிர தாக்கம் செலுத்துகிறது. இது சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம் அல்லது அதைத் தாமதப்படுத்தி அவசியமான மாற்றங்களுக்குத் தடை போடலாம். சோவியத் ஒன்றியம் வரலாற்று வளர்ச்சியின் புதிய கட்டத்தில் நுழைந்துள்ளதும் உற்பத்தியில்

ஆழ்ந்த குணாம்ச ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டு வருவதும் சமூக உணர்வு முழுவதையும் சீரமைக்கக் கட்டளையிடுகின்றன. வழக்கமான பழைய மாதிரிகளுக்குப் பதில் புதிய வகையான பொருளாதார சிந்தனை வருகிறது.

இன்று பழைய சிந்தனா முறைகளை அகற்றாமல், பொருளாதாரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகள் மற்றும் தீர்க்கப்படும் பிரச்சினைகளின் தன்மை பற்றிய ஆக்கபூர்வமான, உண்மையிலேயே நவீனமான கருத்தை உருவாக்காமல் நிர்வாக அமைப்பு, முறைகளை அடியோடு மேம்படுத்துவது என்பது இயலாதது.

சமூக பொருளாதார மாற்றங்களின் வரலாற்று அனுபவத்தைப் பொதுமைப்படுத்திய கட்சியின் 27ஆவது பேராயம், கோட்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த முடிவிற்கு வந்தது: பொருளாதார நிர்வாகத்தின் சீரமைப்பு உணர்வில் ஏற்படும் சீரமைப்பிலிருந்து, வழக்கமான சிந்தனா மாதிரிகள், நடைமுறைகளைக் கைவிடுவதிலிருந்து, புதிய கடமைகளைத் தெட்டந்தெளிவாகப் புரிந்து கொள்வதிலிருந்து துவங்க வேண்டும். இது முதலில் எல்லா மட்டங்களிலும் உள்ள நிர்வாக ஊழியர்களுக்குப் பொருந்தும். இங்கே விஞ்ஞானத்தின் பொறுப்பும் அதிகம்; வாழ்க்கையின் தேவைகளுக்கேற்ப இது சில தத்துவார்த்த கருத்தமைப்புகளைப் புதிய விதத்தில் பார்க்க வேண்டும்,

விதண்டாவாதத்தையும் எளிய முறைகளையும் விட்டொழிக்க வேண்டும்.

புதிய, நவீன பொருளாதார சிந்தனையைத் தோற்றுவிப்பது என்பது காரிய உணர்வு, பொறுப்புணர்வு, சோஷலிச முன் முயற்சி ஆகியவற்றை வளர்ப்பதுடன் பிரிக்க இயலாதபடி தொடர்புடையது. இது ஊழியர் பயிற்சியின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். பழையதை உடைக்காமல் (அதிலுள்ள நல்லம்சங்களைத் தக்க வைத்து) புதியதை உருவாக்க முடியாது. இது எந்த ஒரு முன்னேற்றத்திற்கும் உரித்தான விதி. நவீன பொருளாதார சிந்தனையை உருவாக்குவதற்கும் இது பொருந்தும்; சடத்துவத்தையும் பழைய சிந்தனா மாதிரிகளையும் அகற்றுவது இதன் நோக்கங்களில் ஒன்றாகும். முற்றிலும் புதிய சூழ்நிலையில் நேற்றைய அனுபவத்தைக் கொண்டு வந்து புகுத்துவதன் மூலம் இந்தப் பழைய மாதிரிகள் முற்போக்கு மாற்றங்களின் பாதையில் தடையாக நிற்கின்றன.

புதிய, நவீன பொருளாதார சிந்தனை, புறவயச் சூழ்நிலைகள் மாறுவதால் தானாகவே தோன்றாது. இதைத் தீவிரமாக உருவாக்க வேண்டும். இது தவிர, இந்தப் புறவயச் சூழ்நிலைகள் மாறும் முன் அவற்றின் அவசியம் புரிந்து கொள்ளப்பட வேண்டும், இது நடைமுறைச் செயல்திட்டமாக வேண்டும். சோஷலிச சமுதாயத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் உற்பத்தி உறவு

கள் மேம்படுவதும் வேறு வழியில் நடை பெறுவதில்லை.

எனவே நவீன பொருளாதார சிந்தனையை உருவாக்குவது என்பது சமுதாய முன்னேற்றத்தின் விளைவு மட்டுமல்ல, பெரும்பாலும் இதன் ஆரம்பப் புள்ளி, இதற்கான நிபந்தனை ஆகும்.

விஞ்ஞானத்தின், அதிலும் குறிப்பாக அரசியல் பொருளாதாரத்தின் முடிவுகள், கருத்துநிலைகள், சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார சிந்தனை தான் நவீன சிந்தனையாக இருக்க முடியும். எடுத்துக்காட்டாக, சோஷலிசத்தின் புறவயப் பொருளாதார விதிகளை முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் கவனத்தில் கொள்வது என்பது சமுதாய உற்பத்தியைத் திட்டமிடுவதிலும் நிர்வகிப்பதிலும் விஞ்ஞான ரீதியான அணுகுமுறைக்கு அவசிய நிபந்தனையாகும். இவற்றைக் குறைத்து மதிப்பிடுவதும் அதுவும் அலட்சியப்படுத்தலும் அகநிலைவாதமும் எங்குமே அனுமதிக்கப்பட முடியாதவை; குறிப்பாக இன்று உற்பத்தியளவு பெருகி, அதன் கட்டமைப்பு சிக்கலாகி, பொருளாதார மற்றும் சமூக நிகழ்ச்சிப் போக்குகளுக்கு இடையிலான தொடர்பு வலுப்படும் பொழுது, புறவயப் பொருளாதார விதிகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாததால், நடைமுறை நடவடிக்கையில் இவற்றைச் சரிவரக் கவனத்தில் கொள்ளாததால் அல்லது தவறாகக் கவனத்தில்

கொள்வதால் ஏற்படும் இழப்பு அதிகரிக்கிறது.

நவீன பொருளாதார சிந்தனை என்பது செயல்வன்மை, தீவிரப்படுத்தல், தரம், புதுப்பித்தல் ஆகிய கருத்தினங்களின் அடிப்படையிலான சிந்தனை, தேசியப் பொருளாதாரத்தின் இறுதி விளைபயன்களை அடைவதை நோக்கமாகக் கொண்ட சிந்தனை.

உற்பத்தி இன்று சமூகமயப்படுத்தப்பட்டுள்ள அளவில் எந்த ஒரு பொருளாதாரப் பிரச்சினையையும் பரவலான தேசியப் பொருளாதார நோக்கிலிருந்து, ஒரு முழுமை என்ற வகையில் சமூக உற்பத்தியின் வளர்ச்சி நோக்கிலிருந்து அணுகும் அவசியம் கூடுகிறது. பன்முக நோக்கில் சிந்திக்கும் திறமை, முழுமையை அதன் பகுதிகளுக்கு மேலாக வைத்துப் பார்க்கும் திறமை உண்மையான நவீன பொருளாதார சிந்தனைக்கே உரித்தான பண்பாகும். இந்த அணுகுமுறையானது, இலாக்கா மனப்பாங்கு, குறுகிய நோக்கம், உள்ளூர் பிரச்சினைகளை மிகைப்படுத்தல், தனிப்பட்ட துறை, பிராந்தியம் அல்லது தொழில் நிறுவனத்தின் அக்கறைகள், நோக்கிலிருந்து தேசியப் பொருளாதாரத்தைப் பார்க்கும் பழக்கம் ஆகியவற்றுடன் இயல்பாகவே பொருந்தி வராதது.

இறுதியில், நவீன பொருளாதார சிந்தனையை உருவாக்குவதானது, நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்

படுத்தும் சாரம், வழிகள், சாதனங்களை ஆழ்ந்து புரிந்து கொள்வதுடனும் இந்த நீண்ட காலக் கொள்கையைச் செயல்படுத்தும் கலையைக் கிரகிப்பதுடனும் பிரிக்க இயலாதபடி தொடர்புடையது.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் நவீன பொருளாதார சிந்தனை உருவாகும் இரண்டு வழிகளைச் சுட்டிக் காட்டலாம். முதல் வழி, பரவலான பொருளில் பொருளாதாரக் கல்வி முறையை , (நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளியில் பொருளாதாரக் கல்வி, ஊழியர்களின் மேற்பயிற்சி, வெகுஜனப் பொருளாதாரக் கல்வி உட்பட) குணாம்ச ரீதியில் மேம்படுத்துவதுடன் தொடர்புடையது.

ஊழியர்களுக்குப் பொருளாதாரக் கல்வி போதிக்கும் ஒரு விவேகமான முறையை ஏற்படுத்த வேண்டியது அவசியம்; அப்போதுதான் அவர்கள் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப முடிவுகளைத் திறமையோடு, ஞானத்தோடு மதிப்பிட முடியும் என்று கட்சியின் 27ஆவது பேராயத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. உயர் கல்வி உட்பட சகலவிதக் கல்வியின் தன்மையையும் சாரத்தையும் மறுபரிசீலனை செய்யும் அவசியமும் நிர்வாகத்தின் எல்லா மட்டங்களிலும் ஊழியர்களுக்குப் பொருளாதாரத் துறையில் மறுபயிற்சியளிக்கும் ஒரு நல்ல முறையைத் தோற்றுவிக்கும் அவசியமும் இதிலிருந்துதான் பிறக்கின்றன.

உற்பத்தியை நிர்வகிப்பவர்கள் முன் நவீன பொருளாதாரம் உயர்வான கோரிக்கைகளை வைக்கிறது. நவீன நிர்வாகி உயர்வான தொழில் திறமை, சோஷலிச முன் முயற்சி, தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்; அவர் அதே பொழுது உழைப்பாளர் கூட்டில் நல்ல ஆசிரியராயும், ஸ்தாபன அமைப்பாளராயும் திகழ வேண்டும்.

இந்த நிர்வாகிகளின் அரசியல் பொருளாதாரப் பயிற்சிக்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொருவரையும் பொருளாதார நிபுணராக்க முடியாது, இதற்கு முயலுவதும் அவசியமில்லை; ஆனால் ஒவ்வொரு நிர்வாகியும், ஒவ்வொரு சோவியத் உழைப்பாளியும் பொருளாதார வளர்ச்சியின் நியதிகளைத் தெட்டந்தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும், இதுதான் காலத்தின் கோரிக்கையாகும். இந்த அடிப்படையில்தான் சரியான, பொருளாதர்ர ரீதியிலான நிர்வாக அணுகுமுறைகள் தோன்றும்; இதுதான் செயல்வன்மையை உயர்த்தும் வழிகளைத் தேடி கண்டுபிடிக்க உதவும்.

பொருளாதார சிந்தனை என்பது எப்படி அறிவின் ஒட்டுமொத்தமாகாதோ அதே போல் அது உருவாவது என்பதும் கல்வியை மேம்படுத்துவதோடு முடிந்து விடுவதில்லை. பொருளாதார சிந்தனையைச் சீரமைக்க, மனிதர்களின் பொருளாதார சூழ்நிலைகளை மாற்ற வேண்டும், அதாவது பழைய

முறையில் மனிதர்களால் சிந்திக்க இயலாத சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க வேண்டும். சமுதாய வளர்ச்சிப் போக்குகளின் மீதான பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது இந்த அணுகுமுறை மட்டுமே சரியானது. செயல்வன்மை, தரத்தின் நோக்கிலிருந்து மக்கள் சிந்தித்து செயல்பட, ஒவ்வொரு உழைப்பாளர் கூட்டிற்கும் ஒவ்வொரு உழைப்பாளிக்கும் ஊக்குவிப்பை அளிக்க வேண்டும்; பழைய இயந்திரங்கள், முறைகளைப் பயன்படுத்துவது அனுகூலமற்றது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். பொருளாதார இயந்திரம் முழுவதும் தீவிர வளர்ச்சிக்கு ஏற்றதாயிருக்க வேண்டும்.

பொருளாதாரத் துறையில் மட்டும் பொருளாதார சிந்தனை உருவாவது நடைபெறவில்லை. சமூக உணர்வின் மற்ற பிரிவுகளுடனான பரஸ்பரத் தொடர்பிலும் இது நடைபெறுகிறது. சிந்தனா முறையை மேம்படுத்துவது, நவீன பிரச்சினைகளையும், அவற்றின் மூல வேர்களையும் பின்விளைவுகளையும் உண்மையான வரலாற்று நோக்கில் பார்ப்பது, பொருளாதார, சமூக, விஞ்ஞான தொழில்நுட்ப நிகழ்ச்சிப் போக்குகளுக்கு இடையிலான பரஸ்பரத் தொடர்பைத் தெட்டந்தெளிவாகப் புரிந்து கொள்வது ஆகியவற்றைப் பொறுத்து இங்கே பல விஷயங்கள் அமையும். சமூக உணர்வும் மொத்தமாகப் பார்க்கும் பொழுது பொரு

ளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கத்தால் மட்டுமின்றி நாட்டின் சமூக அரசியல் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கத்தாலும் வளருகின்றது. எனவே நவீன பொருளாதார சிந்தனையை உருவாக்குவது என்பது சமுதாய வாழ்க்கையின் எல்லாத் துறைகளுடனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடைய, அத்துறைகளில் ஏற்படும் குணாம்ச ரீதியான மாற்றங்களைப் பொறுத்த ஒரு சிக்கலான நிகழ்ச்சிப் போக்காகும்.

நம் விவாதத்தைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம். மனிதப் பங்கேற்பை அதிகப்படுத்துவதன் மூலம் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம், அதன் மூலம் சோவியத் சமுதாயத்தின் வளர்ச்சியில் குணாம்ச ரீதியாகப் புதிய மட்டத்தை அடையலாம்.

இவ்வாறாக, துரிதப்படுத்தல் என்ற நீண்ட கால கொள்கைக்கு சோவியத் சமுதாய வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தீவிர மாற்றங்கள் தேவை. இதன் ஆரம்பமும் முடிவும், இதன் துவக்கப் புள்ளியும் இறுதி விளைபயனும் சோவியத் நாட்டில் உள்ள ஒவ்வொருவரின் திட்டவட்டமான நடைமுறை நடவடிக்கைகளாகும். தல்யாட்டி நகர உழைப்பாளிகளைச் சந்தித்து உரையாடிய பொழுது மி. செ. கர்பச்சோவ் குறிப்பிட்டபடி, இன்றுள்ள முக்கியக் கடமை

சிந்தனை ஆற்றலைச் செயலாற்றலாக மாற்ற வேண்டும் என்பதாகும்.

தெட்டந்தெளிவான லட்சியங்கள், மக்கள் திரளினரின் நெஞ்சுறுதி, ஆற்றல்—இவைதான் சமூக முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் மகத்தான காரணிகளாகும், இவைதான் திட்டங்களின் யதார்த்தத்திற்கான முக்கிய உத்தரவாதம்.

## கடினமான ஆனால் யதார்த்தமான பாதை (முடிவுரைக்குப் பதிலாக)

துரிதப்படுத்தல் என்ற நீண்ட காலக் கொள்கை வரலாற்று முக்கியத்துவமுடைய, ஊக்க மிகு கடமைகளை முன்வைக்கிறது. ஒப்பீட்டளவில் குறுகிய காலகட்டத்தில், இன்றைய தலைமுறையின் வாழ்நாளிலேயே நாட்டின் உற்பத்தி இயந்திரத்தை குணாம்ச ரீதியில் புதுப்பிக்க வேண்டும், உழைப்பின் உற்பத்தித் திறனை அடியோடு அதிகரிக்க வேண்டும், வாழ்க்கைத் தரத்தைக் கணிசமான அளவு உயர்த்த வேண்டும், சமூக கலாசாரத் துறையை மாற்றியமைக்க வேண்டும்.

இவையெல்லாம் எதிர்காலத் திட்டங்கள். இவை யதார்த்தமானவையா? வரலாற்று அளவில் குறுகிய காலகட்டத்தில் இத்தகைய அடிப்படை மாற்றங்களைச் செய்ய முடியுமா? இக்கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் தப்பிக்க முயலுவது தவறு. இவற்றிற்குக் கறாரான பகுப்பாய்வு, அனுபவத்தின் அடிப்படையில் திட்டவட்டமாக, தெட்டந்தெளிவாகப் பதில் சொல்லியாக வேண்டும்.

துரிதப்படுத்தல் கொள்கையின் நிறைவேற்றத்தில் கிட்டிய முதல் அனுபவத்தி

லிருந்து என்ன தெரிகிறது? துரிதப்படுத்தல் திசையில் முதல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக ஆரம்பமாகி விட்டன. பொருளாதார, சமூக வளர்ச்சி வேகங்கள் கணிசமாகக் கூடியுள்ளன, உற்பத்தியைத் தொழில்நுட்ப ரீதியில் நவீனமயப்படுத்துவதற்கான உறுதியான அடித்தளம் இடப்பட்டுள்ளது; நீண்ட காலமாகப் பின்தங்கியிருந்த துறைகள் உட்பட (விவசாயத் துறை, கட்டுமானம், இருப்புப் பாதை போக்குவரத்து) தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் மாற்றங்கள் நடைபெறுகின்றன. மிக முக்கியமானது என்னவெனில் மக்கள் திரளினரின் சமூக சுறுசுறுப்பு, உழைப்பாளர் கூட்டுக் காரியங்களில் இவர்களின் பங்கேற்பு, நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிய பொறுப்பு கூடியுள்ளது என்பதாகும்.

பாதை எளிதாயிருக்காது என்பதையும் முதல் அனுபவம் காட்டியது. இது எதிர்பார்த்ததுதான். எல்லா இடங்களிலும் சீரமைப்பு சுலபமாக நடைபெறவில்லை; சடத்துவப் போக்கும், துரிதப்படுத்தலுடன் தொடர்புடைய பிரச்சினைகள், கவலைகளிலிருந்து தப்பித்து ஒதுங்கும் மனப்பாங்கும் வெளிப்படுகின்றன. எனவே தொடர்ந்து முயற்சிகளை அணிதிரட்டி உறுதியோடு முன்னோக்கி நடைபோட வேண்டும்.

துரிதப்படுத்தல் பாதை, சோவியத் சமுதாயத்தின் குணாம்ச ரீதியாகப் புதிய

நிலையை நோக்கிய பாதை, கடினமான ஆனால் முற்றிலும் யதார்த்தமான பாதை.

சோவியத் மக்களின் நன்னம்பிக்கை, அடுத்த ஐந்தாண்டிற்கும் 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கும் திட்டமிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவோம் என்ற உறுதி எதன் அடிப்படையிலானது? திட்டமிடப்பட்டுள்ள கொள்கை பன்முக ரீதியான, ஆழ்ந்த விஞ்ஞானத் தன்மையை உடையது என்பது இதற்கு முதல் காரணமாகும். திட்டக் கடப்பாடுகள், சமூக லட்சியங்களில் உள்ள ஒவ்வொரு புள்ளி விவரமும் ஒவ்வொரு அம்சமும் நன்கு கறாராகப் பரிசோதித்து மதிப்பிடப்பட்டது. இன்றுள்ள ஆற்றல்கள், அவற்றைப் புதுப்பிக்கும் வாய்ப்புகள், உழைப்பு மற்றும் பொருளாயத வளங்கள், அடையப்பட்டுள்ள விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகள், புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தும் வாய்ப்புகள் ஆகியவை நன்கு சீர்தூக்கிப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இவை தவிர, திட்ட நிர்வாகத்தில் முற்போக்கான மாற்றங்கள் வரையறுக்கப்பட்டு, இவற்றில் சில ஏற்கெனவே செயல்படுத்தப் படுகின்றன; இம்மாற்றங்கள் பொருளாதார, சமூக முன்னேற்றத்தைக் கணிசமாகத் துரிதப்படுத்த வல்லவை, உற்பத்தியின் செயல்வன்மையையும் பொருட்களின் தரத்தையும் பெரிதும் உயர்த்த வல்லவை.

இப்படிப்பட்ட சிக்கலான, பன்முக சமூக

மாற்றங்களில் தொழில்நுட்பமும் பொருளாயத வளங்களும் நிர்வாகக் கட்டமைப்பும் மட்டும் வெற்றியை நிர்ணயிப்பதில்லை; இதில் முக்கியப் பங்கு மனிதர்களையே சாரும். இது ஏதோ ஏட்டளவில் எடுக்கப்பட்ட முடிவல்ல. வரலாற்று அனுபவமும் சோஷலிச மாற்றங்களின் நடைமுறை முழுவதும் இதில் தொகுத்து தரப்பட்டுள்ளது.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தீட்டிய துரிதப்படுத்தும் கொள்கையை சோவியத் மக்கள், தம்முடைய அடிப்படை நலன்கள் மற்றும் அபிலாஷைகளின் வெளிப்பாடாகக் கருதுகின்றனர். சமூக உணர்வில் முதிர்ச்சியடைந்து வந்ததை, உடனடி அவசியமானதை இது அரசியல் ரீதியில் பிரதிபலிக்கிறது. எனவேதான் இக்கொள்கையை மக்கள் அனைவரும் ஆதரிக்கின்றனர், திட்டங்களைச் செயல்படுத்துவதன் மீதும் துரிதப்படுத்தலுக்கான புதிய, கூடுதல் ஊற்றுகளைக் கண்டுபிடிப்பதன் மீதும் மக்கள் மேன்மேலும் அதிக அக்கறை செலுத்துகின்றனர்.

நாளைய தினத்தின் மீது சோவியத் மக்களுக்கு உள்ள உறுதிக்கும், சீரமைப்புத் திட்டத்தின் யதார்த்தத் தன்மைக்கும் இதுவும் ஒரு காரணமாகும்.

இன்னுமொரு நிபந்தனையையும் இங்கு குறிப்பிட வேண்டும். நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது என்பது சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக்

கட்சியின் நீண்ட காலக் கொள்கை என்பது நூலின் துவக்கத்திலேயே விவரமாக எடுத்துரைக்கப்பட்டது. இதன் நிறைவேற்றம், தான் துவங்கிய காரியத்தை இறுதி வரை எடுத்துச் செல்லவும் தன் அரசியல் கொள்கையை நிறைவேற்றவும் கட்சி எவ்வளவு உறுதி பூண்டுள்ளது, அதற்கான திறமை கட்சியிடம் எந்த அளவிற்கு உள்ளது என்பதைப் பெருமளவில் பொறுத்துள்ளது. சமுதாயத்தின் தேக்கங்களைத் துணிவோடு வெளிப்படுத்தி, அவற்றின் காரணங்களைச் சுட்டிக் காட்டி, பொருளாதார, சமூக முன்னேற்றத்தின் நீண்ட காலத் திசையமைவுகளைச் சுட்டிக் காட்டிய சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி சொல்லும் செயலும் வேறுபடாமலிருக்க அயராது பாடுபடுகிறது.

சமீப காலமாக, அதுவும் குறிப்பாக ஏப்ரல் மாத (1985) முழுப் பேரவைக் கூட்டத்திற்குப் பின் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டி செயல்படும் முறை மாறியுள்ளது அனைவரும் அறிந்ததே. பிரச்சினைகளைத் துணிவோடு முன்வைத்தல், இவற்றிற்கு உடனுக்குடன் தீர்வு காணுதல்,ஒளிவுமறைவின்மை, உயரிய ஸ்தாபன ஒழுங்கமைப்பு, விடா முயற்சி ஆகியவைதான் இன்று இம்முறையில் குறிப்பிடத் தக்க அம்சங்களாகும். சோஷலிச சமுதாயத்தில் ஆளும் கட்சியாக உள்ள ஒரு கட்சிக்கு இவையெல்லாம் எவ்வளவு முக்

கியம் என்பதை சொல்லத் தேவையே இல்லை.

சோஷலிச அரசியல் அமைப்பின் உட்கருவாகத் திகழும் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கையுடன் சோவியத் மக்கள் தம் எதிர்பார்ப்புகளை, நாளைய தினத்தின் மீதான நம்பிக்கையைத் தொடர்புபடுத்துகின்றனர். சமுதாயத்தை நவீனமயப்படுத்துவது, பொருளாதார, சமூக முன்னேற்ற வேகங்களைத் துரிதப்படுத்துவது சம்பந்தமான திட்டங்களின் நிறைவேற்றத்திற்கான முக்கிய உத்தரவாதத்தைக் கட்சியில்தான் மக்கள் காணுகின்றனர்.

துரிதப்படுத்தும் பாதையில் சோவியத் மக்கள் உறுதியோடு நடைபோடுகின்றனர். சோவியத் மக்கள் இப்பாதையிலிருந்து விலகவோ, நடுவழியில் நின்றுவிடவோ மாட்டார்கள். இப்போது துவங்கியுள்ள குணாம்ச ரீதியான மாற்றப் போக்கை யாராலும் பின்னோக்கித் திருப்ப முடியாது.

*பிற்சேர்க்கை*²

## சோவியத்-இந்திய ஒத்துழைப்பில் புதிய அம்சங்கள்*

சீரமைப்பு செயல்திட்டத்தை முன்வைத்த சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரஸ் பல உலக நிகழ்ச்சிப் போக்குகள், புலப்பாடுகளின் பாலான புதிய அணுகுமுறைகளை முன்மொழிந்தது, சர்வ பொது உலகப் பாதுகாப்பை ஏற்படுத்தும் புதிய கருத்தமைப்பை முன்வைத்தது.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி தீட்டிய புதிய அரசியல் சிந்தனை வெற்றிடத்தில் தோன்றவில்லை. வேறுபட்ட அரசியல் அமைப்புகளையுடைய அரசுகளின் சமாதான சகவாழ்வு பற்றிய லெனினியக் கருத்தின் முக்கியச் சாரங்களை இது தன்னுள் அடக்கியிருந்தது. உலகம் பன்முகமயமானது, அதன் வளர்ச்சியில் பல வகைகள் உண்டு, சோஷலிசத்தின் தலைவிதி உலக முன்னேற்றத்தின் வரலாற்றுப் பாதைகளிலிருந்து பிரிக்க முடியாதது என்பதையெல்லாம் ஒப்புக்கொள்ளுதல், வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசுகளுக்கு இடையில் சமாதான உறவுகள் நிலவுதல், இந்நாடுகளுக்கு இடையில் பரவலான அரசியல்,வர்த்

---

* கிளேப் இவாஷென்த்சோவால் எழுதப்பட்டது.

தக, பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப, கலாசார, இன்ன பிற தொடர்புகளின் வளர்ச்சி ஆகியவை லெனினியக் கருத்தி லடங்கும். அதே நேரத்தில் 20ஆம் நூற்றாண் டின் இறுதியில் நிலவும் புறவய எதார்த் தங்களையும் புதிய சிந்தனை கவனத்தில் கொள்கிறது. இன்று ஒரு புறம் மனிதகுலத் தின் அறிவு மற்றும் பொருளாயத உள்ளாற் றல் பிரம்மாண்டமாக வளர்ச்சியடைந்து புதுப்புது சாதனைகளை அடைய இது வரையில்லா வாய்ப்புகளை ஏற்படுத்தியுள் ளது; மறுபுறமோ இந்த வளர்ச்சி உலக மக்கள் அனைவரின் முன்னும் புதிய அபா யங்களைத் தோற்றுவித்துள்ளது. இதுதான் அணு-விண்வெளி சகாப்தத்தின், விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் எதார்த்த மாகும்.

கட்சியின் 27ஆவது காங்கிரசில் சுட்டிக் காட்டப்பட்டபடி எல்லா நாடுகள், மக்களி னங்களின் முன்னும் ஒரு மிக முக்கியமான கடமை நிற்கிறது. சமூக, அரசியல், சித் தாந்த முரண்பாடுகளைக் கண்டு கண் மூடாத அதே நேரத்தில் சர்வதேச அரங் கில் ஒருவருடன் ஒருவர் ஒத்துழைத்து, பொறுமையாக, கவனமாக, துல்லியமாக, நாகரிகமாகச் செயல்படும் கலையை எல் லோரும் இன்று கற்றாக வேண்டும். இதற்கு விவேகமான வேறு மாற்றே கிடை யாது; இன்று யுத்தம் என்பது பைத்தியக் கார நடவடிக்கையாகும். புதிய சிந்தனை

என்றால் நவீன உலகின் பரஸ்பரச் சார்பு நிலையையும் முழுமையையும் புரிந்துகொள்வதாகும் (இந்த உலகின் பாதுகாப்பை கூறுபோட முடியாது); அதாவது, முன்னர் வரலாற்றளவில் தவறுகளைச் செய்தால் அவற்றை திருத்தும் வாய்ப்பு (பெரும் விலை கொடுத்து என்றாலும்) இருந்தது என்றால், இன்று மனிதகுலம் அணு ஆயுத யுத்தத்தை அனுமதித்தால், பின்னர் தவறை திருத்தவே முடியாது, ஏன் இதைச் செய்ய யாருமே எஞ்ச மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்வதாகும். புதிய சிந்தனை என்பது அடிப்படை மானுட உரிமையாகிய வாழும் உரிமைக்கு வகை செய்வதாகும். புதிய சிந்தனை என்பது மற்றெல்லாவற்றையும் விட மானுட மதிப்புகள்தான் மேலானவை என்று ஒப்புக்கொள்வதாகும். புதியசிந்தனை என்பது ஆயுத பலத்தை நாடுவதை அறவே தவிர்க்கும் ஒரு தார்மீகச் சூழலை ஏற்படுத்துவதாகும்.

உலக அரசியலில் புதிய சிந்தனையின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் பல சோவியத் ஒன்றியத்திற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளில் முதன்முதலாகத் தோன்றின. இந்த உறவுகள் ஆரம்பம் முதலே நம்பிக்கை, சமத்துவம், பரஸ்பர மதிப்பு, பரஸ்பர நலன்களைக் கவனத்தில் கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தன. இரண்டு மாபெரும் மக்களினங்களின் வரலாற்று மற்றும் ஆன்மீக நெருக்

கம்தான் மேற்கூறியவற்றின் அஸ்திவாரமாகும். இந்நெருக்கம் மனிதகுலத்தின் சமூக வளர்ச்சியின் புறவயப் போக்கால் முன் நிர்ணயிக்கப்பட்டது. 1917ஆம் ஆண்டிற்கும் 1947ஆம் ஆண்டிற்கும் இடையில், மாபெரும் அக்டோபர் புரட்சிக்கும் இந்திய சுதந்திரத்திற்கும் இடையில் பிரிக்க இயலா அங்கக ரீதியான தொடர்பு நிலவுகிறது. சோஷலிசப் புரட்சி நடந்த ருஷ்யாவிலும் சரி, தேசிய விடுதலைப் புரட்சி நடந்த இந்தியாவிலும் சரி, இரண்டு நாடுகளிலும் சுதந்திரமான மக்களின் சுதந்திரமான ஒத்துழைப்பைப் பறைசாற்றிய புதிய உலகம், வரலாற்றால் பின்னுக்குத் தள்ளப்பட்ட, சமூக மற்றும் தேசிய இன ஒடுக்குமுறை, அரசியல் ஆதிக்கம், ஆக்கிரமிப்பு யுத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலிருந்த பழைய உலகை எதிர்த்து நின்றது.

இரண்டு மாபெரும் மக்களினங்களின் வரலாற்றுத் தலைவிதியாயிருந்த பொது அம்சங்களை ருஷ்ய, இந்திய அறிஞர்கள் நன்கு உணர்ந்தனர். சோவியத் அரசின் ஸ்தாபகராகிய வி. இ. லெனின் இந்தியத் தேசிய விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியை இடைவிடா அக்கறையுடன் கவனித்தார், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகப் போராட்டத்தில் இது ஒரு முக்கிய அங்கம் என்று கருதினார். இப்போராட்டத்தின் முடிவு ''ருஷ்யா, இந்தியா, சீனா போன்ற நாடுகள் மிகப் பெரும்பான்மையான மக்

களைக் கொண்டிருக்கின்றன என்னும் அம் சத்தால் இறுதியாக நிர்ணயிக்கப்படுகிறது'' என்று சுட்டிக் காட்டிய வி. இ. லெனின் கீழைய நாடுகளின் தேசிய விடுதலைக்காகப் போராடும் வீரர்களை ''நெருங்கி வந்து அவர்களுடன் ஒன்று கலக்குமாறு'' ருஷ்யப் புரட்சிவீரர்களுக்கு அறைகூவல் விடுத்தார். புதிய இந்தியாவின் சிற்பி ஜவகர்லால் நேரு மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியை ஒரு சகாப்த முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகக் கருதினார், ''இப்புரட்சி எந்த ஒரு புதிய நாகரிகத்தை நோக்கி உலகத்தால் முன்னேற முடியுமோ அந்த நாகரிகத்திற்கு அடித்தளமிட்டது'' என்றார்.

நவீன பொருளாதாரத்தை ஏற்படுத்தி, நாட்டைத் தொழிற்துறைமயப்படுத்தும் கடமை இளம் இந்தியக் குடியரசின் முன் நின்ற பொழுது சோவியத் ஒன்றியம் தன்னால் இயன்ற உதவியைச் செய்தது: தன் உபகரணங்கள், இயந்திரங்களை வழங்கியது, கடனுதவி அளித்தது, நிபுணர்களை அனுப்பியது, தேசிய ஊழியர்களைப் பயிற்றுவித்தது. காலப் போக்கில் அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் பல துறைகளில் பரவலான அனுகூலமான தொடர்புகள் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டன.

1971ஆம் ஆண்டு ஆகஸ்டு 9ஆம் தேதி இரண்டு நாடுகளுக்கும் இடையில் சமா

தானம், நட்புறவு, ஒத்துழைப்பு பற்றிய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இத்தருணத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் சேர்ந்த நல்ல, பரஸ்பர பயனுடைய அம்சங்கள் அனைத்தும் இதில் உருக் கொண்டிருந்தன. இந்த ஒப்பந்தம் இரண்டு மாபெரும் மக்களினங்களின் நம்பிக்கைகள், அபிலாஷைகள், உலக எதிர்காலம் பற்றிய கணிப்பு ஆகியவற்றைப் பிரதிபலித்தது. ஒப்பந்தத்தின் பெயரில் ''சமாதானம்'', ''நட்புறவு'', ''ஒத்துழைப்பு'' ஆகிய வார்த்தைகள் இடம் பெற்றிருப்பதானது, இரு நாடுகளுக்கு இடையிலான உறவிலும் மொத்தமாக சர்வதேச அரங்கிலும் சோவியத் ஒன்றியமும் இந்தியாவும் முன்வைக்கும் லட்சியங்களைச் சுட்டிக் காட்டுகிறது. இரண்டு நாடுகளும் கூட்டாகவும் தனித்தனியாயும் பல பத்தாண்டுகளாக, உலக விவகாரங்களில் நல்ல ஒரு போக்கை நோக்கிய அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த—மனிதகுலத்தின் முன் நிற்கும் அணு ஆயுத அபாயத்தை அகற்ற, சச்சரவுகளைத் தீர்க்க, சர்வதேசப் பொருளாதார உறவுகளில் சமத்துவம், நீதியை ஏற்படுத்த, இன்றைய தலைமுறையினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் சமாதானம், பாதுகாப்பு, வளர்ச்சிக்கு வழிகோல—இயன்ற அனைத்தையும் செய்கின்றன.

சோவியத் ஒன்றியமும் இந்தியாவும் இந்த உயரிய கோட்பாடுகளைப் பின்பற்றி

நடப்பது டெல்லி பிரகடனத்தில் நன்கு பிரதிபலிக்கிறது. சோவியத் தலைவர் மிகையில் கர்பச்சோவ் 1986 நவம்பரில் இந்தியா சென்றிருந்த போது அணு ஆயுதமற்ற, வன்முறையற்ற உலகின் கோட்பாடுகள் பற்றிய இந்த டெல்லி பிரகடனம் கையெழுத்தாகியது. மிகையில் கர்பச்சோவும் ராஜீவ் காந்தியும் இதில் கையெழுத்திட்டனர்.

1985—1987ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சோவியத்-இந்திய உயர்மட்ட சந்திப்புகள், அரசியல் துறையில் மட்டுமின்றி வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலாசாரம் ஆகிய துறைகளிலும் சோவியத்-இந்திய ஒத்துழைப்பைக் குணாம்ச ரீதியாகப் புதிய மட்டத்திற்கு உயர்த்த அனுகூலமான சூழலை ஏற்படுத்தின.

வளர்முக நாடுகளிலேயே இந்தியாதான் சோவியத் ஒன்றியத்தின் மிகப் பெரும் வர்த்தகக் கூட்டாளியாகும். சோவியத் ஒன்றியம் நன்கு வளர்ச்சியடைந்த வர்த்தக உறவுகளை வைத்துள்ள, சோஷலிச நாடுகள் அல்லாத ஆறு நாடுகளில் இந்தியாவும் ஒன்று. சோவியத்-இந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு சமத்துவம், பரஸ்பர அனுகூலத்தின் அடிப்படையிலானது; இரண்டு நாடுகளின் நீண்டகாலப் பொருளாதார முன்னுரிமைகளைக் கவனத்தில் கொள்ளும் இது, புதிய சர்வதேசப் பொருளாதார முறையின்

அம்சங்கள் பலவற்றைத் தன்னுள் அடக்கி யுள்ளது.

ஒரு முக்கிய விஷயத்தை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும். தொழிற்துறை ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளில் சில நவீன தொழில்நுட்பம் வளர்முக நாடுகளுக்குக் கிட்டாதவாறு செய்ய முயலுகின்றன, இந் நாடுகள் உலகச் சந்தைகளில் தமக்குக் கீழ்ப்பட்டு நடக்குமாறு செய்கின்றன. கடந்த காலத்தைப் போன்றே இன்றும் ஏகாதிபத்தி யம், பொருளாதார வளர்ச்சியில் பின்தங் கிய மக்களினங்களிடமிருந்து பெறும் ''கப் பத்தால்'' தன் வாழ்வைக் கணிசமான அளவு ஈடு கட்டுகிறது; இது வட்டி வடிவத் திலும் சமமற்ற பரிவர்த்தனை வடிவத்தி லும் நடைபெறுகிறது. உலக முதலாளித் துவப் பொருளாதாரத்தின் உற்பத்திக் கட் டமைப்பில் வேறு சில மாற்றங்களும் மேன் மேலும் தெரிகின்றன; புறச்சூழல் ரீதியில் ''அசுத்தமான'' உற்பத்திகளை மலிவான உழைப்புச் சக்தி கிட்டும் நாடுகளுக்கு அனுப்ப ஏகபோகங்கள் முயலுகின்றன. ஏகாதி பத்திய ''மையங்களோ'', விஞ்ஞானம் பெரிதும் தேவைப்படும் சிக்கலான பொருட் களை உற்பத்தி செய்வதன் மீது, குறிப்பாக அறிவு உற்பத்தி, அதி நவீன தொழில்நுட்ப உருவாக்கம் ஆகியவற்றில் தன் கவனத்தை ஒருமுகப்படுத்துகின்றன. ''தொழில்நுட்ப ஏகாதிபத்தியம்'' என்ற கொள்கை இங்கே கண்கூடாகத் தெரிகிறது. நவீன காலனி

யாதிக்கச் சுரண்டலுக்குப் புதிய பொருளா யத, தத்துவார்த்த அடித்தளத்தை அளிப் பதே இதன் நோக்கமாகும்.

இம்மாதிரியான முறைகள் சோவியத் நாட்டிற்கு முற்றிலும் அன்னியமானவை. சோவியத் ஒன்றியம் இந்தியாவை ஓர் எதிர் காலப் போட்டி நாடாகப் பார்க்கவில்லை, மாறாக மனிதகுலத்தின் முன்னேற்றத்திற் கான பொது சமூக பொருளாதார பிரச்சினை களின் தீர்வில் ஒரு சம உரிமையுள்ள கூட்டாளியாகப் பார்க்கிறது.

1955இலிருந்து இன்று வரை இந்தியா வில் சோவியத் உதவியுடன் 70க்கும் மேற் பட்ட தொழில் நிறுவனங்களும் மற்ற அமைப்புகளும் கட்டப்பட்டுள்ளன. இவை இன்று நாட்டின் மொத்த வார்ப்பிரும்பு உற்பத்தியில் 36%யும், அலுமினிய உற்பத்தி யில் 32%யும், உலோகத் துறை உபகரண உற்பத்தியில் 77%யும், எரிசக்தித் துறை உபகரண உற்பத்தியில் 47%யும், சுரங்கத் தொழிற்துறை உபகரண உற்பத்தியில் 43%யும், மின் உற்பத்தியில் 10%யும் தரு கின்றன. இன்னும் 40 நிறுவனங்கள் கட்டப் படுகின்றன அல்லது கட்டப்பட்டு உள்ளன. சோவியத்-இந்திய ஒத்துழைப்பு, இந்தியா வின் பொருளாதார சுதந்திரத்தை வலுப் படுத்த உதவுகிறது, பன்னாட்டு கார்ப ரேஷன்கள், வங்கிகளின் விரிவாக்கம், நிர்ப் பந்தத்தை எதிர்த்து சமாளிக்க உதவுகிறது.

இந்தியாவின் சீரிசைவான பொருளா

தார வளர்ச்சிக்கு முதலில் நாட்டின் எரிபொருள்-எரிசக்தித் தளத்தை விரிவுபடுத்த வேண்டும், நவீன விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளைப் புகுத்துவதன் மூலம் தொழிற்துறையை நவீனமயப்படுத்த வேண்டும். இதற்கு வழக்கமான துறைகளில்—இரும்பு கலந்த உலோகத் துறை மற்றும் இயந்திரக் கட்டுமானம்—நிலவும் தொடர்புகளோடு கூட மின்சக்தி, நிலக்கரி மற்றும் எண்ணெய் தொழிற்துறைகளில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் தொடர்புகள் வளர்ந்து வருகின்றன. 1986 நவம்பரில் சோவியத் தலைவர் மிகையில் கர்பச்சோவ் இந்தியா வந்திருந்த பொழுது சோவியத்-இந்திய உறவுகளின் வரலாற்றிலேயே மிகப் பெரிய ஒரு பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி தெர்ரியில் ஒரு நீர்மின்சக்தி இணையத்தைக் கட்டவும், பொக்காரோ உலோகத் தொழிற்சாலையை நவீனமயப்படுத்தி சீரமைக்கவும், ஜாரியாவில் 4 நிலக்கரிச் சுரங்கங்களை அமைக்கவும், மேற்கு வங்கத்தில் எண்ணெயையும் எரிவாயுவையும் தேடவும் சோவியத் ஒன்றியம் இந்தியாவிற்கு உதவும். இந்த உடன்படிக்கையும் சமீப ஆண்டுகளில் செய்து கொள்ளப்பட்ட மற்ற உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுவதானது இந்தியாவின் எரிபொருள் பிரச்சினையைக் கணிசமாகத் தீர்க்க உதவும். ஏழாவது ஐந்தாண்டுத்

திட்டத்தில் (இது 1990இல் முடிவடையும்) சோவியத்-இந்திய ஒத்துழைப்பு அமைப்புகளை இயக்கி வைப்பதன் மூலம் நிலக்கரி உற்பத்தி அதிகரிப்பில் 40%க்கும், மின்சக்தி உற்பத்தி அதிகரிப்பில் சுமார் 10%க்கும், இரும்பு கலந்த உலோகத் துறை உற்பத்தி அதிகரிப்பில் 100%க்கும் வழியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தன் பங்கிற்கு சோவியத் ஒன்றியம், எந்தத் துறைகளில் எல்லாம் இந்தியா உயர்வான சர்வதேச மட்டத்தை அடைந்துள்ளதோ அவற்றில் இந்தியாவின் அனுபவத்தைப் பரவலாகப் பயன்படுத்தும். இந்தியத் தேசியத் தொழிற்துறையின் பொருட்களுக்கு சோவியத் நாடு எவ்வித சுங்கத் தடைகளையும் விதிக்கவில்லை, இந்தியத் தொழில்நுட்பத்தை வாங்க சோவியத் நாடு தயார்.

சமீப ஆண்டுகளில் செய்து கொள்ளப்பட்ட சோவியத்-இந்திய உடன்படிக்கைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பில் தீவிர கட்டமைப்பு மாற்றங்களுக்கும், அதன் புதிய, நவீன வடிவங்களைத் தேடவும்—இவை சோவியத் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் இந்தியப் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தவும் உதவும்—பாதையமைக்கின்றன.

அடுத்த 5—7 ஆண்டுகளில் பரஸ்பர வர்த்தகத்தை 2.5 மடங்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது ஒரு பெரும்

கடமையாகும், ஏனெனில் இன்று இந்த வர்த்தகம் 40 பில்லியன் ரூபாய்களை எட்டியுள்ளது. இன்று சோவியத் நாட்டின் வெளிப் பொருளாதாரத் தொடர்புகளிலும் வெளிநாட்டு வர்த்தகத் துறையிலும் நடைபெறும் ஆழ்ந்த மாற்றங்களைக் கவனத்தில் கொண்டு பார்க்கையில் இது ஓர் எதார்த்தமான கடமையாகும். சோவியத் நாட்டில் ஏராளமான தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளுக்குச் சுயமாக வெளிநாட்டு வர்த்தகத்தில் இறங்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும்.

இது தவிர வெளிப் பொருளாதாரத் தொடர்புகளின் தன்மையும் மாறும். வெறும் வர்த்தகத் தொடர்புகளுக்குப் பதில் புதிய ஒத்துழைப்பு வடிவங்கள் வரும். கூட்டுறவு அல்லது நேரடித் தொடர்புகள், சோவியத் ஒன்றியம், இந்தியா, மற்ற நாடுகளில் தோற்றுவிக்கப்படும் கூட்டு தொழில் நிறுவனங்கள் ஆகியவை இவற்றிலடங்கும்.

கூட்டு தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிப்பதையும் கூட்டுறவுத் தொடர்புகளை வளர்ப்பதையும் சர்வதேச வர்த்தகம் மற்றும் சர்வதேச உழைப்புப் பிரிவினையில் நன்கு பங்கேற்கும் ஒரு வழியாக சோவியத் நாட்டில் கருதுகின்றனர். அதாவது சோவியத் நாட்டில் கூட்டு தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதன் மூலமும் சோவியத் தொழில் நிறுவனங்களுடன் உள்ள

கூட்டுறவுத் தொடர்புகளை வளர்ப்பதன் மூலமும் இந்திய கம்பெனிகளும்—மற்ற நாடுகளின் கம்பெனிகளைப் போலவே—சோவியத் சந்தையில் நுழையும் வாய்ப்பை மேன்மேலும் பெறும். சோவியத் தொழில் நுட்பவியல், பண்டங்களுக்கான தேவை இந்தியாவில் அதிகரிக்கும், குறிப்பாகத் தனியார் துறை—இது தற்போதைக்கு சோவியத் நாட்டிலிருந்து குறைவாகவே இறக்குமதி செய்கிறது—இதில் அதிக அக்கறை காட்டும் என்று சோவியத் நாட்டில் எதிர்பார்க்கின்றனர்.

பல ஆண்டுகளாக சோவியத்-இந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு பெரும்பாலும் அரசுத் துறையின் அடிப்படை பிரிவுகளைத்தான் ஆதாரமாகக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் இந்தியத் தனியார் கம்பெனிகளிடமிருந்து சோவியத் ஸ்தாபனங்கள் நிறைய பண்டங்களை வாங்கின. இந்த இரண்டு அம்சங்களும் எதிர்காலத்தில் தொடர்ந்து வளரும். அதே பொழுது சிறிய, நடுத்தர மற்றும் பெரிய இந்தியத் தனியார் கம்பெனிகளுடன் உள்ள தொடர்புகளை நீண்டகால அடிப்படையில் விரிவுபடுத்தி அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகைய ஒத்துழைப்பில் ஒரு போக்கு சோவியத்-இந்திய ஒத்துழைப்பு அமைப்புகளில் பணி புரியவும் அவற்றை நவீனமயப்படுத்தவும் தனிப்பட்ட ஒப்பந்தங்களை

ஆரம்பம் முதல் இறுதி வரை முழுமையாக நிறைவேற்றவும் இந்தியத் தனியார் கம் பெனிகளைப் பயன்படுத்துவதாகும் (அர சாங்க உடன்படிக்கைகளின் நிறைவேற்ற வரம்புகளுக்குள்ளாக). இதற்கு பல உதார ணங்களைக் கூறலாம். வடக்கு காம்பேயி லும் காவிரி ஆற்றுப் படுகையிலும் சோவியத் ஸ்தாபனம் ''டெஹ்னோ எக்ஸ்போர்ட்'' நடத்தும் ஹைட்ரோ கார்பன் தேட்டத்தில் ''பிர்லா இன்ஜினியரிங் செர்வீசஸ் கோ.'' பங்கேற்கிறது. ''பக்ரேஷ்வர்'' அனல் மின் நிலையம் மற்றும் பல அமைப்புகளின் கட்டு மானத் திட்டங்களைத் தீட்டுவதில் ''டெஹ் னோ புரோம் எக்ஸ்போர்ட்'' என்னும் சோவி யத் ஸ்தாபனத்துடன் சேர்ந்து ''பிர்லா டெக்னிக்கல் செர்வீசஸ்'' பணியாற்று கிறது. சோவியத் நாட்டில் பல அமைப்பு களைக் கட்ட, உதாரணமாக ஹோட்டல் கட்டுமானத்திற்கு இந்தியத் தனியார் கம் பெனிகளை அழைக்க சோவியத் நாடு திட்ட மிட்டுள்ளது. இது இந்திய வர்த்தகத் துறை யினரின் மத்தியில் கணிசமான ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. டாட்டா கம்பெனியும் ''லார்சன் அன்ட் டியூப்ரோ'' கம்பெனியும் தாஷ்கன்ட், சாமர்கன்ட், புகாராவில் நவீன ஹோட்டல்களைக் கட்டத் துவங்கியுள்ளன. சோவியத் நாட்டில் மொத்தமாக 1990க்குள் 10 ஹோட்டல்களைக் கட்ட முடியும் என் றும், இன்னமும் எதிர்காலத்தில் 30 ஹோட் டல்களைக் கட்டத் தயார் என்றும் இந்

தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. சோவியத் நாட்டின் பரப்பில் கூட்டு தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிப்பதிலும் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யும் பண்டங்களை உற்பத்தி செய்வதில் காப்பீட்டு அடிப்படையில் ஒத்துழைப்பதிலும் இந்தியத் தனியார் கம்பெனிகள் பங்கேற்கக் கூடும்.

இவ்வாறாக, சோவியத் சந்தையின் மகத்தான உள்ளாற்றலைப் பயன்படுத்துவதில் உண்மையாக இறங்கும் எதார்த்தமான வாய்ப்பு சோஷலிச நாடுகள் அல்லாத நாடுகளின் (தொழிற்துறை ரீதியில் வளர்ச்சியடைந்த மற்றும் வளர்முக நாடுகளின்) தொழிற்துறையின் முன் முதன்முதலாக நிற்கிறது. அதே நேரத்தில் இது உலக சந்தையின் அளவு கணிசமாக விரிவடைவதைக் குறிக்கிறது, அதன் இன்றைய எல்லைகளைப் பெருக்குகிறது.

சோவியத்-இந்திய வர்த்தகப் பரிவர்த்தனையை 2.5 மடங்கு அதிகரிக்க வர்த்தகக் கட்டமைப்பில் கணிசமான மாற்றங்களைச் செய்ய வேண்டும்; முதலாவதாக பதப்படுத்தும் துறைகளின் பொருட்களை பரஸ்பரம் சப்ளை செய்வதை அதிகரிக்க வேண்டும், ஏனெனில் தர்க்க ரீதியில் பார்த்தால் இவற்றின் உற்பத்தி அதிகரிப்பு மூலப்பொருட்களின் சப்ளை அதிகரிப்பை விஞ்ச வேண்டும். சோவியத் இயந்திரத் துறை தன் பண்டங்களைத் தனியார் துறைக்கு அனுப்பும் பொழுது கடன்கள் பரவலாகப் பயன்

படுத்தப்படும், சோவியத் அயல் வர்த்தக வங்கி இதில் ஈடுபடுத்தப்படும்.

பண்ட பரிவர்த்தனையை அதிகரிக்கும் இன்னொரு வழி உற்பத்திக் கூட்டுறவை வளர்ப்பதாகும். சோவியத் பிரதமர் நி.இ. ரிஷ்கோவ் 1987 நவம்பரில் இந்தியாவிற்கு அதிகாரப் பூர்வமாக வருகை தந்த போது புதிய ஒத்துழைப்பு வடிவங்களைப் பற்றிய உடன்படிக்கை கையெழுத்தாகியது. அதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன் மாஸ்கோவில் உற்பத்திக் கூட்டுறவு பற்றிய ஒரு நீண்ட கால செயல்திட்டம் கையெழுத்தாகி யது. சோவியத்-இந்தியப் பொருளாதாரத் தொடர்புகளின் வளர்ச்சியில் இந்த இரண்டு ஆவணங்களும் பெரும் பங்காற்றும். அதி காரப் பூர்வமான சோவியத் மதிப்பீடுகளின் படி, 1987இல் 300 மில்லியன் ரூபாய்களாக உள்ள கூட்டுறவுப் பொருட்களின் பரஸ்பர சப்ளையை 1995ஆம் ஆண்டு வாக்கில் ஒவ் வொரு தரப்பிலும் 8—10 பில்லியன் ரூபாய் களாக உயர்த்துவது முற்றிலும் சாத்திய மாகும்.

கூட்டு தொழில் நிறுவனங்களைத் தோற் றுவிப்பதைப் பொறுத்தமட்டில் இரு தரப்பு களுமே இப்பாதையின் ஆரம்பத்தில்தான் நிற்கின்றன. இப்போதைக்கு ஒரேயொரு அத்தகைய கூட்டமைப்பு மட்டுமே—மாஸ் கோவில் உள்ள ''டெல்லி'' உணவு விடுதி —தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இத்துறை யில் நல்ல எதிர்கால வாய்ப்புகள் உள்ளன,

இந்திய வர்த்தகத் துறையினர் இதில் மேன் மேலும் தீவிரப் பங்கேற்பர் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இன்று சோவியத் நாட்டில், ஏற்கெனவே கிட்டிய அனுபவத்தின் அடிப்படையில், கூட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு ஒரு சில கூடுதல் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, தாம் அறிவித்த லாபத்தை எட்டிய தருணத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு அவற்றிற்கு வரி விலக்களிக் கப்படும். அவற்றின் பொருளாயத தொழில் நுட்ப சப்ளை மற்றும் விற்பனைக்கு அனுகூலமான சூழ்நிலைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

சோவியத் நாட்டில் வர்த்தக, தொழிற் துறை சம்மேளனத்தின் கீழ் பொருளாதார ஒத்துழைப்பு சம்பந்தமான சோவியத்-இந் திய கமிட்டி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு சோவியத் அமைச்சகங்கள், வெளிச் சந்தைக்கு நேரடியாகச் செல்லும் உரிமை பெற்ற பல்வேறு ஸ்தாபனங்கள், தொழில் நிறுவனங்களைப் பிரதிபலிக்கிறது. விஞ்ஞானம், தொழில்நுட்பம், வர்த்தகம், நிதி, வங்கி, சேவைத் துறை, சுற்றுலா, விளம்பரம் ஆகிய துறைகளில் இந்திய கம் பெனிகள், ஸ்தாபனங்களுடன் உள்ள ஒத் துழைப்பைக் கணிசமாக விரிவுபடுத்த சோவியத் நாடு தயார். கூட்டாக விஞ்ஞான ஆராய்ச்சி ஸ்தாபனங்கள், வடிவமைப்பு மற்றும் பொறியியல் ஸ்தாபனங்கள் தோற்று

விக்கப்படலாம். மூன்றாம் நாடுகளில் கூட்டுத் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதன் மூலம் அச்சந்தைகளில் பங்கேற்கும் வாய்ப்புகளும் உள்ளன.

சோவியத்-இந்தியக் கூட்டு விஞ்ஞான தொழில்நுட்பத் திட்டங்கள் நடைமுறை மருத்துவத்திலிருந்து விண்வெளி ஆராய்ச்சி வரை பல்வேறு துறைகள் மீது கவனம் செலுத்துகின்றன. சமீப ஆண்டுகளில் எரி சக்தித் துறை, பவுடர் உலோகத் துறை, தட்பவெப்பநிலை ஆராய்ச்சி, கிரியா ஊக்கி, லாசர் போன்றவற்றில் திட்டவட்டமான பயன்கள் கிட்டியுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையில் 1987 ஜூலையில் விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்பின் பன்முக நீண்டகாலச் செயல்திட்டம் கையெழுத்தாகியது; நல்ல எதிர்காலமுள்ள துறைகளில் சோவியத் மற்றும் இந்திய நிபுணர்கள் கூட்டாகச் செயல்பட இது பாதையமைக்கிறது.

நீண்டகால பன்முக செயல்திட்டங்களை நிறைவேற்றுவதும் இரு நாடுகளின் பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்ப உள்ளாற்றல்களை ஒத்திசைவிப்பதும் சோவியத் நாட்டிலும் இந்தியாவிலும் உள்நாட்டு பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதோடு கூட, சர்வதேச உழைப்புப் பிரிவினையில் பங்கேற்கும் வாய்ப்பையும், மூன்றாம் நாடுகளுக்கு நவீன தொழில்நுட்பம், மற்ற உதவிகளை வழங்குவதையும் அதிகப்

படுத்தும். இது ''தொழில்நுட்ப ஏகாதிபத்தியத்தின்'' ஆதிக்க மண்டலத்தைக் கணிசமாகக் குறுக்கும், பல்வேறு நாடுகளின் வளர்ச்சியின்மையை அகற்றவும், வளர்முக நாடுகளின் பெரும் கடன் சுமையை ஒழித்துக் கட்டவும், சர்வதேசப் பொருளாதாரத் தொடர்புகளில் சமத்துவம், நீதியை ஏற்படுத்தவும் உதவும்.

ஒரு புறம் இரண்டு நாடுகளின் தலைவர்களும் அடிக்கடி சந்திக்கின்றனர், உச்ச நிலை சந்திப்புகள் முறைப்படி நடக்கின்றன, இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையில் உறவுகள் வளர்ந்து வருகின்றன. மறுபுறமோ இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் வலுப்பட்டு வருகின்றன. சோவியத் நாட்டில் நடைபெறும் இந்தியக் கலைவிழாவும் இந்தியாவில் நடைபெறும் சோவியத் கலைவிழாவும் இதற்குச் சான்று. சர்வதேச உறவுகளில் இது மாதிரியான அளவில் இதற்கு முன் கலைவிழாக்கள் நடந்ததேயில்லை. இவ்விழாக்களின் போது இரு நாட்டு மக்களும் பரஸ்பரம் தம் கலாசார சாதனைகளை ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்வதோடு கூட ஒவ்வொருவரின் பிரச்சினைகள், அன்றாட நடப்புகளையும் நன்கறிகின்றனர்.

பரவலான சோவியத்-இந்திய பரஸ்பரச் செயலாக்கம், ஒத்துழைப்பின் அனுபவம் இன்றையச் சூழ்நிலையில் பெரிதும் முக்கியமானது. சோவியத்-இந்திய உறவுகளின்

நெருக்கம், பயன்மிகு அரசியல் கலந்தாலோசனைகள், அனுகூலமான பொருளாதாரத் தொடர்புகள், பரவலான கலாசாரப் பரிவர்த்தனை ஆகியவை சோவியத், இந்திய மக்களின் நலன்களுக்கு மட்டுமின்றி உலக மக்கள் அனைவரின் நலன்களுக்கும் ஏற்றதாயிருக்கும். இது சமாதான சகவாழ்விற்கு ஒரு எடுத்துக்காட்டாயும் ஒரு புதிய, நீதியான, ஜனநாயக உலக முறையை நிலைநாட்டும் காரணியாயும் திகழுகிறது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

## விற்பனையாளர்கள்
## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

### தலைமை அலுவலகம்

*41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை—600098*

### ஷோ-ரூம்

*136, அண்ணாசாலை, சென்னை—600002*

### கிளைகள்

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001*
*3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்நூர்—641018*
*42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008*
*செர்ரி ரோடு, சேலம்—636001*

### விற்பனை நிலையங்கள்

*3—22—75—D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்—627001*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்*
*சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001*
*நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001*

## முன்னேற்றப் பதிப்பகத்தின் புதிய வெளியீட்டை படித்து விட்டீர்களா?

ப. பிலிஷேவ்ஸ்கி

### சோவியத் பொருளாதாரத்தின் சீரமைப்பு

சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டுக் கட்சியின் 27ஆவது காங்கிரஸ், உற்பத்தியை சர்வாம்ச ரீதியில் தீவிரப்படுத்துவதைக் கட்சியினுடைய நீண்ட கால பொருளாதாரக் கொள்கையின் மைய அம்சமாக நர்ணயித்தது.

இப்பிரச்சினையின் எல்லா அம்சங்களையும் கடந்த ஐந்தாண்டின் முடிவுகளையும் இந்நூலில் ஆசிரியர் பகுப்பாய்வு செய்கிறார்.

## முன்னேற்றப் பதிப்பகத்தின் புதிய வெளியீட்டை படித்து விட்டீர்களா?

எஃப். வோல்கவ், தி. வோல்கவா

### உபரி மதிப்பு என்றால் என்ன?
(சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை)

உபரி மதிப்பின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முக்கிய வழிகள் யாவை? உபரி மதிப்பு எப்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது? வெவ்வேறு முதலாளிகள் இதை எப்படி அபகரிக்கின்றனர்? வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளிகள் சுரண்டப்படுவது வலுப்பட்டு வருவதில் ஏகபோகங்களும் நிதி மூலதனமும் ஆற்றும் பங்கென்ன? விடுதலையடைந்த நாடுகளின் உழைப்பாளிகளை சர்வதேச ஏகபோகங்கள் எத்தகைய நவீன காலனியாதிக்க வடிவங்களில் கொள்ளையடிக்கின்றன? இக் கேள்விகளுக்கெல்லாம் நூலாசிரியர்கள் சுவாரசியமாக, புரியும்படி இந்நூலில் பதிலளிக்கின்றனர்.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.

## முன்னேற்றப் பதிப்பகத்தின் புதிய வெளியீட்டை படித்து விட்டீர்களா?

அ. புசுயெவ்

**முதலாளித்துவம் என்றால் என்ன?**
(சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை)

நவீன முதலாளித்துவத்தின் முக்கியப் பிரச்சினைகள் இந்நூலில் எளிமையாக விளக்கப்படுகின்றன.

பொருளாதார கருத்தினம் என்ற வகையில் மூலதனத்தின் சாரம் என்ன? முதலாளித்துவ சுரண்டலின் அடிப்படை வடிவங்கள் யாவை? முதலாளித்துவ சொத்துடைமை என்றால் என்ன? அழுகி மடிந்து வரும் முதலாளித்துவமாகிய ஏகாதிபத்தியத்தின் முக்கியத் தன்மைகள் யாவை? முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி என்றால் என்ன, இது எதில் வெளிப்படுகிறது? ஏன் முதலாளித்துவத்திற்கு எதிர்காலம் இல்லை? இக்கேள்விகளுக்கும் இன்னும் பல கேள்விகளுக்கும் எளிய, புரியக் கூடிய பதில்களை வாசகர்கள் இந்நூலில் காணலாம்.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது.

## அச்சுப்பிழைகள்

5ஆவது பக்கத்தில் கடைசி வரியின் முதல் வார்த்தையைப் பின்வருமாறு படிக்க வேண்டும்:

பழக்கப்பட்டவர்கள்.

31ஆவது பக்கத்தில் 12ஆவது வரியின் கடைசி வார்த்தைகளைப் பின்வருமாறு படிக்க வேண்டும்:

தொழில்நுட்ப முன்

# எல். இ. அபால்கின்



பேராசிரியர் லியோனித் அபால்கின் பொருளாதார விஞ்ஞானத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர், சோவியத் விஞ்ஞானப் பேரவையின் உறுப்பினர். 1986 ஜூன் முதல் சோவியத் விஞ்ஞானப் பேரவையின் கீழுள்ள பொருளாதார ஆராய்ச்சி நிலைய இயக்குநர்.

லியோனித் அபால்கின் சோஷலிசப் பொருளாதாரம், திட்டமிட்ட நிர்வாகம் சம்பந்தமாக பல விஞ்ஞானக் கட்டுரைகள், நூல்களை எழுதியுள்ளார், சோவியத், அயல்நாட்டுப் பத்திரிகைகளில் அடிக்கடி எழுதுகிறார். சோவியத் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சிப் பிரச்சினைகள் பற்றிய அரசு மற்றும் பொது மக்கள் கமிஷன்களின் பணிகளில் பங்கேற்கிறார்.

ISBN 5—01—001475—0